Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# சாதி நெறியும் நீதி நெறியும்

மு. இராமசாமி. இராசிபுரம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# சாதி நெறியும் நீதி நெறியும்

DONATION

8281

8281

"Forwarded free of cost, and with the compliments of the Department of Education, Govt. of India, New Delhi."

"ஸ்ரீ வைணவச் செல்வம்"
"சிந்தாமணிச் செம்மல்"
புலவர். மு. இராமசாமி, எம்.ஏ.,பி.எட்.,
இராசிபுரம்.

திருவரங்கம் பதிப்பகம்
இராசிபுரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதற்பதிப்பு 22—6—92

உரிமை ஆசிரியர்க்கு

வெளியீடு

இடம்:

28-ம் ஆண்டு இராசிபுரம்
கைலாசநாதர் ஆலயத்தில்
நடைபெற்ற கம்பன் விழாவில்
வெளியிடப்பட்டது.

திருவரங்கம் பதிப்பகம் நூல்-28

விலை ரூ. 30-00

நூல் கிடைக்குமிடம் :

திருவரங்கம் பதிப்பகம்
7, எல்லப்பச் செட்டியார் குடியிருப்பு
இராசிபுரம்-637 408.

அச்சிட்டோர் :

சன்-மூன் பிரிண்டர்ஸ்
17, குண்டு பிள்ளையார் கோவில் தெரு,
அம்மாப்பேட்டை, சேலம்-3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# புத்தக விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சாதிநெறியும், நீதிநெறியும், |
| ஆசிரியர் | : | மு. இராமசாமி. எம்.ஏ.,பி.எட்., |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| ஆண்டு | : | 22—6—92 |
| மொழி | : | தமிழ் |
| உரிமை | : | ஆசிரியர் மு. இராமசாமி |
| தாள் | : | டெம்மி 7.3 |
| அளவு | : | 1 x 10 |
| பக்கம் | : | 284 |
| எழுத்து | : | 12, 14, 18 |
| கட்டு | : | மேல் அட்டை லேமினேசன் |
| படிகள் | : | 1000 |
| விலை | : | 30-00 |
| அச்சிட்டோர் | : | சன்-மூன் பிரிண்டர்ஸ்<br>17, குண்டுப்பிள்ளையார் கோவில் தெரு<br>அம்மாப்பேட்டை, சேலம்-3. |


CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | தோற்றுவாய் | 2 |
| 2 | அறிமுகம் | 26 |
| 3 | உணர்வுகள் இரண்டும் ஒன்றிய இடம் | 45 |
| 4 | சகோதரர் மாற்றம் | 64 |
| 5 | வீடணன் அடைக்கலம் | 74 |
| 6 | உறங்கிய தம்பியும் உறங்காத அண்ணனும் | 104 |
| 7 | களப்போரில் உளப்போர் | 140 |
| 8 | கும்பகருணன் போர்ச் செயல்கள் | 203 |
| 9 | கும்பகருணன் விண்ணப்பம் | 227 |
| 10 | நிறைவு | 237 |


CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# முன்னுரை :

"சாதி இரண்டொழிய வேறில்லை" யென்றே
தமிழ்மகன் சொல்லியசொல் அமிழ்தம் என்போம்;
நீதிநெறி யினின்று பிறர்க்கு உதவும்
நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர்."

என்பது செந்தமிழ்க் கவி பாரதியாரின் அமுதத் திருவாக்கு.

தொழிலின் அடிப்படையில் தோன்றிய சாதிப் பிரிவுகள், நாளடைவில் பிறப்பின் அடிப்படையில் பெருகி வளரலாயின. 'இந்த வளர்ச்சிப் பெருக்கம், சமுதாயத்தின் வளமான வாழ்வுக்கு உதவுவதாக அமையவில்லை. உதவாதது மட்டுமல்ல! தடையாகவும் அமைந்துவிட்டன' என்பதை நன்கு உணர்ந்தவர் புரட்சிக் கவி பாரதியார்.

அதனால்தான், மனிதப் பண்பாட்டை அடித்தளமாக்கிக் கொண்டு, சாதியை இரண்டே பிரிவில் அடக்கிக்காட்டிய ஔவைப் பிராட்டியின் சொல், அமிழ்தமாக இனிக்கிறது, சமுதாய நலம் காணத்துடிக்கும் பாரதியாருக்கு.

"சமுதாய மேம்பாட்டுக்கு உதவுவது நீதிநெறி. அது, சாதி நெறியைக் கடந்தது. இதை வாழ்க்கையில் கடைப் பிடிப்பவரே மேலோர். இதனைப் பின்பற்றாதவர் கீழோராகத்தான் கருதப்படுவர், என்பது பாரதியாரின் திருவுளக் கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
பிறப்பால் ஏற்பட்ட சாதியின் நெறி முறைகள், தாம் கொண்ட கொள்கைக்குத் தடையாகயிருக்குமானால், அதனை உதறித் தள்ளுவதே மேலோர்களின் இயல்பு. இத்தகைய நல்லியல்பினர், சமுதாய வளர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்பவர்க்கு. எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர்.

**பெரியாழ்வார் :**

'விஷ்ணு சித்தர்' என்ற இயற் பெயரினராக இருந்த ஒருவர், 'பெரியாழ்வாராக' உயர்ந்தது, சாதி நெறிமுறையை ஒதுக்கியதால்தான். இவர் பிறப்பால் உயர் சாதி எனப்படும். பிராமண குலத்தவர்.

இந்தப் பிறப்பினர்க்கு வேதம் ஓதுதலும், ஓதுவித்தலும் தான் சாதி நெறிமுறைகள் ஆகும். தொழில் வளத்துக்குரிய உழவுக் கருவிகள் முதலியவற்றைக் கையால் தீண்டுதலும் சாதி, நெறிக்கு அப்பாற்பட்டதாகக் கருதப்படும்.

ஆனால் இவர், சாதி நெறிமுறைக்கு அப்பாற்பட்ட செயலையே மேற்கொண்டார்: அதனையே பெருமையாகவும் கருதினார். ஏன்?

ஸ்ரீ வில்லிபுத்தூரில் தோன்றிய அவர் அங்கு எழுந்தருளியுள்ள ஆலிலைப் பெருமானுக்கு மலர் மாலை அணிவித்து மகிழும் பக்தி நெறியில் ஈடுபட்டார். அதனால், மலர் உற்பத்திக்குரிய நந்தவனம் அமைக்க வேண்டியதாயிற்று, மலர்களை வழங்கும் நந்தவன வளர்ச்சிக்கு மண்ணைப் பண்படுத்தல் வேண்டும். இதற்குக் கருவிகளின் உதவி வேண்டுமே!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உழவுக் கருவிகளின் உதவியால் மண்ணைப் பண்படுத்துதல் மூலமாக தமது மனதைப் பண்படுத்திக்கொண்டு விட்டார் இவர். என்ன மனப் பண்பாடு? பண்டைக் குலத்தைத் தவிர்த்தது: சாதி நெறியைவிட்டு நீதி நெறியில் நின்றது.

'வம்மின் புலவீர்: நும் மெய் வருத்திக் கை செய்து உய்ம்மினோ, என்ற தெய்விக அழைப்பை ஏற்றுக் கொண்டார்'. வாழ்வில் ஏற்றம் (உயர்வு) கண்டார். ஆழ்வாராக உயர்வு பெற்றார்.

மேலோராக மதிக்கப்படுதற்கு, பண்டைக் குலம் (சாதி நெறி முறை) தவிர்க்கப்பட்டேயாக வேண்டும். என்பதற்கு எடுத்துக்காட்டு பெரியாழ்வாரின் நெறிமுறை.

**ஆளவந்தார் :**

வைணவ ஆசாரியப் பெருமக்களுள் ஒருவர் ஆளவந்தார். ஆழ்வாரின் நெறிமுறையைத் தமது வாழ்க்கையில் கடைப்பிடித்துக் காட்டியவர் இந்த ஆசாரியார்.

இவரும் உயர்ந்த சாதியாகக் கருதப்படும் பிராமண குலத்தைச் சார்ந்தவர். இந்த சாதி நெறி முறைகளில் ஒன்று, தாழ்ந்த சாதியினரைப் பார்த்தல், அவரோடு பேசுதல், அவருடன் பழகுதல் தகாதது என்று விதிக்கப்பட்டதாகும்.

அந்த விதியை மீறியவர் ஆளவந்தார். எதற்காக மீறினார்? 'தீது இல் நன்னெறியாகிய' வைணவ சமயக் கொள்கையை உலகில் பரப்புவதற்காக.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'மாறன் நேரி நம்பி' என்ற திருப்பெயர் கொண்ட வைணவ பக்தர் ஒருவர், மக்களால் தாழ்ந்த சாதி என்று கருதப்படும் குலத்தில் தோன்றியவர். இவரது வைணவப் பக்தியின் ஆழத்தைக் கண்டார் ஆளவந்தார். உடனே, தமது சீடர்களுள் ஒருவராக சேர்த்துக் கொண்டார் அவரை. தமக்கு, அணுக்கத் தொண்டு செய்யும் நெருக்கமான சீடராக்கிக் கொண்டார் ஆளவந்தார். அதனால், ஆசாரியரின் பண்டைக் குலமும் (உயர் சாதி) தவிர்க்கப்பட்டது. சீடரின் பண்டைக் குலமும் (தாழ்ந்த சாதி) தவிர்க்கப்பட்டது.

இது மட்டுமல்ல! இந்த தாழ்ந்த குலப் பிறப்பினராய மாறன் நேரி நம்பியின் இறுதிக் காரியமும் (சரம கைங்கர்யமும்) ஒரு பிராமணக் குலத்தவரால்தான் செய்யப்பட்டது. இதனைச் செய்தவர் 'பெரிய நம்பி' என்ற திருப்பெயர் கொண்ட திருவரங்கத்துப்பிராமணர். இவர் ஆளவந்தாருடைய சீடர்களுள் ஒருவர்.

ஆசாரியர் இட்ட கட்டளையைத் தலைமேற் கொண்டு, தாழ்ந்த குலப் பிறப்பினர்க்கு, மனமகிழ்வோடு சரம கைங்கர்யம் செய்தார் பெரிய நம்பிகள்.

இந்த ஆசாரியர்கள் மேற்கொண்ட நெறி முறைகள் எதனைக் காட்டுகின்றன? சமுதாய வளர்ச்சிக்குப் பாடுபட முன் வருபவர்கள், தமது பிறப்புச் சாதி நெறி முறைகளை விட்டொழித் தேயாக வேண்டும் என்பதைக் காட்டுகின்ற தல்லவா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

**இராமானுசர் :**

வைணவ ஆசாரியப் பெருமக்களுள் தலைசிறந்து நிற்பவர் இராமானுசர். இவரும். ஆழ்வார், ஆசாரியர்களைப் போன்று பண்டைக் குலத்தைத் (சாதி நெறி) தவிர்த்தவர்.

ஸ்ரீ பெரும்புதூரில் அவதரித்த இவரும் உயர் சாதியாகிய பிராமண குலத்தவர். இந்தக் குல நெறிப்படி, தமது குலத்தினரிடம் தான், உபதேசம் பெற வேண்டும். அவரைத்தான் ஆசாரியராக ஏற்றுக் கொள்ள வேண்டும். பிராமணச் சாதி நெறி முறைகளுள் இதுவும் ஒன்று.

இத்தகைய சாதி நெறியை ஒதுக்கித் தள்ளினார் இந்த ஆசாரியார். எப்படி? காஞ்சீபுரத்தில் பெரும் வைணவ சீலப் பெருமகனாராக வாழ்ந்து வந்த 'திருக் கச்சி நம்பி' என்ற பெரியவரை ஆசாரியராக ஏற்றுக் கொண்டார் இராமானுசர்.

'திருக்கச்சி நம்பிகள்' வணிக குலப் பிறப்பினர் (செட்டியார்) இவரிடம் உபதேசம் பெற்றார். இவரை ஆசாரியராகவும் ஏற்றுக் கொண்டார் உயர் சாதிப் பிறப்பினராய இராமானுசர்.

'எம்பெருமானார் இராமானுசர்' என்று போற்றப்படும் இந்த ஆசாரியப் பெருமகனாரும் தமது உயர்ந்த குறிக்கோளுக்குத் தடையாக நிற்கும் சாதி நெறியைத் தள்ளினார். பண்டைக் குலத்தைத் தவிர்த்தார்.

பிறப்பால் வந்த சாதி நெறி முறைகளை அகற்றி விட்டு, சமுதாய வளர்ச்சிக்காக வாழ்ந்தவர்கள் தான் இவ்வுலகில் வாழ்ந்தவராவர்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
இவர்களே மேலோர் எனப்படுவர். இவ்வாறு. மேலான நல் வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாக அமைந்து, வழி காட்டியாகவும் விளங்குகின்றனர் நம் நாட்டுப் பண்டைய சான்றோர்கள்.

இவர்கள் காட்டிய வழியில் சென்றால். செல்பவரும் உயரலாம்; சமுதாயத்தையும். உயர்த்தலாம். நாட்டு நலன் நாடும் நல்லோர் பின்பற்ற வேண்டியது, நீதிநெறியே. இதுவே சான்றோர் காட்டும் வழி.

இது இவ்வாறு இருக்க இன்று சிலர், பிறப்புச் சாதியினரை ஒன்று திரட்டிக் கொண்டும், தம்மை அக்கூட்டத்துக்குத் தலைவராக்கிக் கொண்டும் 'நாட்டுக்கு நல்லது செய்ய வந்திருக்கின்றோம்' என்று கூறிக்கொள்கின்றனர். இவர்கள் பின்பற்றுவது சாதி நெறி. தமது கொள்கையை நியாயப்படுத்திக் காட்டுதலிலும் முனைந்துள்ளார்கள் இவர்கள்.

இப்படி ஒவ்வொரு சாதியினரும் பிரிந்து நின்று கூட்டம் சேர்த்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தால், நாடு நலம் பெறுமா? வளம் பெறுமா? வாழ்வு பெறுமா? பெறாது: பெறாது: எதுவும் பெறாது என்பதுதான் பதிலாக அமையும்.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்களைச் சிந்திக்க வைக்க வேண்டும். எப்படிச் சிந்திக்க வைப்பது? சிந்தித்தேன்.

'தெய்வப் புலமைக் கம்ப நாட்டு ஆழ்வார் பதத்தைத் சிந்திப்பவர்க்கு யாதும் அரியது அன்றே' என்ற தொடர் என் சிந்தனைக்கு வந்தது.
CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதனைக் கூறியவர், கம்பராமாயணத்தை நன்கு கற்றுணர்ந்து தெளிந்தரசிகப் பெருமகனார்.

அதனால், கவிச் சக்கரவர்த்தி படைத்தருளிய காப்பியத்துள் நுழைந்தேன்: கண்டேன் விடை; கொண்டேன் தெளிவு.

தமது காப்பியத்துள் பல்வேறு இயல்பினராய மாந்தர்களை நடமாட வைத்துள்ளார் கவிச் சக்கரவர்த்தி. அவர் கம்ப நாடுடைய வள்ளல் அல்லவா.

அந்த இயல்பினருள். சாதிநெறி இயல்பினன் ஒருவன். நீதி நெறி இயல்பினன் ஒருவன். இந்த இரண்டு பாத்திரங்களின் மூலமாக, சாதிநெறியின் புன்மையையும், நீதிநெறியின் மேன்மையையும் விளக்கமாக்கியுள்ளார் கம்பர்.

இருவரும் ஒரே மரபினர். ஒரே குலத்தினர்: ஒரு குடும்பச் சகோதரர்கள். ஆயினும், ஒருவன் அழுத்தமாகப் பிடிவாதமாகப் பின்பற்றியது சாதிநெறி; மற்றொருவன் துணிந்து பின்பற்றியது நீதிநெறி.

கும்பகருணனும் வீடணனும் இந்த இரு நெறியினர். தமது நடைமுறையின் மூலம், சிறு நெறி எது? நெடுந்தரும நெறி எது? என்பதை உலகுக்கு உணர்த்தி உள்ளனர் இந்த இருவரும்.

அதனால், இந்த இருவரின் செயல் திறன்களைக் கம்பராமாயணக் காப்பிய வழி நின்று காட்டினால் இன்றைய காலப் போக்குக்குப் பயன்படும் என எண்ணினேன். அந்த எண்ணத்தின் விளைவே இந்நூலின் தோற்றம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்நூலுக்கு அரியதொரு சிறப்புரை நல்கிய செந்தமிழ்ச்செல்வர். அருட்கவி, கவிக்கடல்' கம்பன் வழிக்கவிஞர் முதலியபட்டங்களைப் பெற்ற பெருமகனாவார். 'காந்தியம்' முதலிய அரிய பலகவிதை நூல்களைப் படைத்தவர்: 'கடவுள் வரலாறு' முதலிய ஆத்மீகத்தொடர்பான உரைநடை நூல்கள் பலவற்றை உருவாக்கியவர்; பழம்பெரும் செய்யுள் நூல்கள் பலவற்றுக்கு உரைகண்ட நல்ல உரையாசிரியர்: அண்ணாமலை ரெட்டியார் 'காவடிச் சிந்து' போன்ற பலநூல்களைப் பதிப்பித்த சிறந்தபதிப்பாசிரியர்: இன்னும் நூல்கள் பலவற்றை உருவாக்கியும், பதிப்பித்தும் இலக்கியத் தொண்டாற்றிக் கொண்டிருக்கும் உயர்பெருஞ்சீலர். எல்லாவற்றுக்கும் மேலாக வைணவப் பெருஞ் சமயத்தை வாழ்க்கையில் கடைப்பிடித்து நடக்கும் நற்பெருங்குணத்தர். இத்தகைய சால்புடைப் பெருமகனார் இந்நூலுக்குச் சிறப்பானதொரு உரைநல்கியதைப் பெருமையாகக் கருதுகின்றேன்

சிறப்புரைநல்கிய நற்பெருஞ்சீலரை என்றும் மறவேன். என்றும் நினைத்து மகிழும் நெஞ்சுடையேன். எனது உளநிறைவான நன்றியை, திரு.அரங்கசீனிவாசன் அவர்களுக்கு உரித்தாக்குகின்றேன்.

இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய சேலம் சன்-மூன் அச்சக உரிமையாளர் திரு. எஸ். சண்முகம் அவர்களுக்கு நல்வாழ்த்து. நன்றி.

இராசிபுரம்
11—6—92

அன்புள்ள,
பு. இராமசாமி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# சிறப்புரை

## அருட்கவி. அரங்க. சீனிவாசன்

இராம காதைக்கு உள்ள சிறப்பு, பாத்திரப் படைப்பே என்பர்.

எந்தப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டாலும் அது. நாம் அன்றாடும் காணும் யாரையாவது நினைவூட்டுவதாக - ஒப்புமையாக – அமைவதைக் காணலாம்.

நாம் அன்றாடம் காண்பவரை இருவகையினராகப் பிரிக்கலாம். இந்தப் பிரிவு, உணர்வின் அடிப்படையிலானது. 'இருவேறு உலகத்து இயற்கை' என்ற குறள் இவ்வுண்மையையே, ஒருவாறு விளக்க எழுந்தது எனலாம்.

மக்கள் ஒவ்வொருவரும் தாம்தாம் கருதுவதும் பேசுவதும் செய்வதும் சரியானவையே என்று நம்புகின்றனர்.

அவர்கள் செயலில் அமைந்த உயர்வு-தாழ்வு. நன்மை-தீமைகளைப் பிறர் கணிப்பதுதான் சரியாக இருக்கும்.

"ரவி எருகனி சோட்டகவி எருகுணு" என்ற பழமொழிப்படி, சாதாரண மக்களின் கணிப்பைவிடக் கவிஞன் கணிப்பு, ஆப்தவாசகமாக (நம்பத் தகுந்ததாக) இருக்கும்.

இராவணன், கும்பகருணன், வீடணன் மூவரும் ஒருதாய் மக்கள், கல்வியிலும் வீரத்திலும் ஒப்போர். அரசியலிலும் குறை காண இயலாத இயல்பினர். நோற்று வரம் பெற்றதிலும் மாற்றுக் குறையாதவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்த மூவரிலும் இராவணன் உணர்வு மட்டும் மாறுபட்டது. சாதிச் சிறுநெறி தழுவி, நீதிநெறியை நழுவ விட்டான். பின்னர், தன் ஆணவத்தால் சாதி நெறிக்கும் இழுக்குத் தேடிக்கொண்டான். பிறர்மனை நோக்கும் பேதைமை பூண்டான்.

கும்பகர்ணனிடம் சிறுமைகள் ஏதும் இல்லை. நீதிநெறியில் நிலை பெறாவிட்டாலும், அது உயர்ந்தது என்று கருதியவன். அண்ணன் செய்த பிழையைச் சுட்டிக் காட்டியவன். ஆனாலும், நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிது நாள் வளர்த்த இராவணன் செயலில் நன்மை - தீமை ஆயாமல் அவனுக்கு உதவுவதே-உயிர் தருவதே கடன் என்ற உறுதியுடையவன்.

''கருத்திலா இறைவன் தீமை
கருதினால், அதனைக் காத்துத்
திருத்தலாம் ஆகின் அன்றோ
திருத்தலாம். தீரா தாயின்
பொருத்துறு பொருள்உண் டாமோ?
பொருதொழிற்கு உரியர் ஆகி
ஒருத்தரின் முன்னம் சாதல்
உண்டவர்க்கு உரியது அம்மா!''

என்று கும்பன் இயல்பைத் தெளிவுபடுத்தி உள்ளான் கம்பன்.

நீதியால் வந்த நெடுந்தரும நெறியெல்லாம் அறிந்திருந்தாலும், சாதியால் வந்த சிறுநெறியை வெறுக்காமல் அந்நெறிக்குரிய மான உணர்வில் மண்டியவன் கும்பன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உறங்கியவனை எழுப்பி, இராவணன் "போருக்குப்போ" என்றபோது கும்பகருணன் உள்ளத்தில் ஒரு பட்டிமண்டபமே நடக்கின்றது. 'கடைப்பிடிக்க வேண்டியது நீதியா? சாதியா?' என்பதே தலைப்பாயிருக்கலாம்.

பட்டிமண்டபத் தலைவரில் பெரும்பாலோர், தீர்ப்புரை வழங்கும்போது, முதலில் தள்ள வேண்டிய கட்சியின் வாதத்தை எடுத்து அலசுவர். அதற்குச் சாதகமான பகுதியை நன்கு விளக்குவர். அக்கட்சிதான் வெல்லும் போலும் என்று சுவைப் போரை மலைக்கவைப்பர்.

இறுதியில், ஆனால், என்ற பீடிகையுடன் மறுகட்சி வாதத்தை விளக்கி, அக்காட்சியே வென்றதாகத் தீர்ப்பு அளிப்பர்.

இதைப் போன்றுதான், கும்பன் மனத்தில் நடந்த நீதியா? சாதியா?என்ற பட்டிமண்டபத்திலும், நீதிக் கட்சிதான் வெல்லும் என்ற தோற்றத்தைக் கம்பன் நிறுவுகின்றான்.

இராவணன் கும்பனிடம்,

"வான ரப்பெருந் தானையர் மானிடர்
கோந கர்ப்புறம் சுற்றினர், கொற்றமும்,
ஏனை உற்றனர். நீ அவர் இன்னுயிர்
போன கத்தொழில் முற்றுதி போ" என்று

போர்க்கோலம் செய்து அனுப்புகின்றான். அப்போதுதான் கும்பன் மனம் தீர்ப்புரை கூறத் தொடங்குகின்றது. முதலில் நீதிக்கட்சியை எடுத்து, அதன் உயர்வைப் பேசுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கொடுத்தனை இந்திரற்கு உலகும் கொற்றமும்
கெடுத்தனை நின்பெருங் கிளையும் நின்னையும்
படுத்தனை பலவகை அமரர் தங்களை
விடுத்தனை! வேறுஇனி வீடும் இல்லையால்.'

'அறம்உனக்கு அஞ்சிஇன்று ஒளித்த தால்அதன்
திறம் உனக்கு அளித்தது.அங் கதனை நீக்கி, நீ
இறமுன் அங்கு யார்உனை எடுத்து நாட்டுவார்'

'தேவியை நயந்துசிறை வைத்தல் செயல் நன்றோ'

'ஒருத்தன் மனைஉற்றாள் பொன்னடி தொழத்தொழ
மறுத்தல் புகழோ!'

'புன்தொழிலி னால்இசை பொறுத்தல்புல மைந்தோ!
வன்தொழிலி னாய்! மறை துறந்துசிறை வைத்தாய்!
அன்று ஒழிவ தாயின அரக்கர்புகழ்'

'பேசுவதும் மானம்! இடை பேணுவது காமம்!'

'சிட்டர்செயல் குலச்சிறுமை செய்தாய்!'

'தீயினை நயப்புறுதல் செய்தனை'

திட்டிவிடம் என்ற பாம்பு கண்ணால் பார்த்தாலே போதும். உயிர் போய்விடும். அத்தகைய கற்புச் செல்வி சீதை! தீது என்று எடுத்துக் காட்டிய பின்பும், இந்தத் தீய செயலை நன்று எனக் கொண்டாய்! விதி விளையாடுகின்றது. உன்மேல் வைத்த பாசத்தால் ஒன்று உணர்த்துவேன். நன்று எனக் கருதினால், அழிவைத் தடுக்கலாம்.

'தையலை விட்டு அவன் சரணம் தாழ்ந்து நின்
ஐயறு தம்பியொடு அளவ ளாவுதல்
உய்திறம்'

'தருமம் அன்று இது தான்இதால்
வரும் நமக்கு உயிர் மாய்வு'

என்று கும்பன் இது காறும் கூறியவை யாவும் நீதிக்கட்சிக்குச் சார்பாகவே உள்ளன. நீதி நெறியே, கும்பன் சார்பினால் வெல்லப் போகின்றது என்ற நம்பிக்கை துளிர்க்கின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உடனே நீதிக்கட்சி நழுவுகின்றது. சாதிநெறி கும்பனைத் தழுவுகின்றது.

'சீதையை விட்டிடுது மேல் எளியம் ஆதும்'

என்றுதன் பேச்சைத் தலைகீழாக மாற்றுகின்றான்.

'ஊறுபடை ஊறுவதன் முன்னம் ஒரு நாளே
வேறுபெய ராதவகை வேரொடும் அடங்க
நூறுவது வேகருமம்.'

'பந்தியில் பந்தியில் படையை விட்டு அவை
சிந்துதல் கண்டு நீ இருந்து தேம்புதல்
மந்திரம் அன்று, நம் வலிஎல் லாம்உடன்
உந்துதல் கருமம்.'

என்பது கும்பகர்ணன் உள்ளத்தில் நிகழ்ந்த பட்டிமன்றத்தின் தீர்ப்பு, ஆம் சாதிநெறிக்கே வெற்றி. நீதிநெறி நெகிழ்ந்து பின் வாங்கியது.

தம்பி வீடணனும் இராவணனுக்கு அறிவுரை-அறவுரைகூறுகின்றான். பெரும்பாலும் கும்பகருணன் பேசிய நீதிக்கட்சியின் வாதமே. அவன் உரையின் சாரமாக அமைகின்றது.

'எந்தைநீ! யாயும்நீ! எம்முன்நீ! தவ
வந்தனைத் தெய்வமும் மற்றும் முற்றும்நீ
இந்திரப் பெரும்பதம் இழக்கின் றாய் என
நொந்தனன் ஆதலின் நுவல்வ தாயினேன்'

என்ற முன்னுரையுடன் வீடணன் நீதியுரை தொடங்குகின்றது.

'இசையும் செல்வமும் உயர்குலத்து இயற்கையும் எஞ்ச
வசையும் கீழ்மையும் மீக்கொளக் கிளையொடும் மடியாது
அசைவில் கற்பின்அவ் வணங்கைவிட் டருளுதி இதன்மேல்
விசையம் இல்எனச் சொல்லினென் அறிஞரின் மிக்கான்.'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சீதையைக் கும்பன் 'தீ' என்றான். வீடணன் 'கற்புத்தீ' என்றான். கும்பன் தீ என்பதற்கு விளக்கமாகவே கற்புத்தீயை வீடணன் குறிப்பிட்டான்.

வீடணன் நீதிநெறியின் வாதத்துடன் நின்றுகொண்டான். ஏனெனில் நீதி நெறிக்கு அப்பால், நல்லன வேறில்லை என்பது அவன் துணிவு. கும்பன் நீதிக்கட்சி வாதத்துடன் நில்லாமல் சாதிக்கட்சிக்குத்தாவி விட்டான்.

'மாயாப் புண்ணியம் பொருந்தியது புலத்தியன் மரபு, என்பது கும்பன் கருத்து. பேசுவதோடு நிற்பதல்ல குலத்து மானம். பேணுவதும் அதுவாக இருத்தல் வேண்டும். சாதிப்பெருமையும் மானமும் காக்க உயிர் தருவது கடன் என்பதும் அவன் கொள்கை. அதனாலேயே, முதலில் ஒன்றுபட்ட கருத்தினராக இருந்த இருவரில் ஒருவன் மாறுபட்டுப் பேசத் தொடங்குகின்றான்.

சிந்தாமணிச் செல்வர். ஸ்ரீ வைணவச் செம்மல். புலவர். மு. இராமசாமி அவர்கள், இந்த இரு வேறு பாத்திரங்களின் ஒன்று பட்ட கருத்து, மாறுபட்ட நுணுக்கத்தைக் கம்பன் உள்ளம் உணர்ந்து இந்நூலாக விரித்துள்ளார்.

வீடணன் இராமனைச் சேர்ந்தது இலங்கை அரசை விரும்பித்தான் என்று சிலர் இன்னும் வாதிடக் காண்கின்றோம். வீட்டரசு விரும்பித்தான் சேர்ந்தான் என்று மறுக்க இயலாத சான்றுகளுடன் நிறுவுகின்றது இந் நூல், மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியாரின் கருத்து இதையே வலியுறுத்து வதைக் காணும் போது நம் ஐயம் விலகுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரதனும் வீடணனும் இரு வேறு குலத்தினர் ஆனால் இருவரையும் ஆழ்வார் என்று உலகு அழைக்கின்றது. குலம்தரும் என்ற மங்கை மன்னன் வாக்குப் படி பண்டைகுலம் தவிர்ந்து தொண்டக் குலம் ஆயினமையே, அவ் விருவரும் சரிநிகர் ஆவதற்குக் காரணம், வீடணன், அறச்சுடராகிய மணிதான். ஆயினும், அரக்கர் குலமாகிய அழுக்கு அம்மணியை மூடியிருக்கும். அந்தப் பண்டைக் குல அழுக்கைக்கழுவும் தீர்த்தம் இராமபிரானே ஆவதால், அவனைக் கம்பன் தீர்த்தன் என்கின்றான் என்ற விளக்கம் நம் சிந்தனையையும் தீர்த்தமாட்டுகின்றதே!

'அஞ்சினை! வெறுவிது உன் வீரம்' என்று இராவணன் கும்பனை இகழ்கின்றான். அடுத்த பாடலில் 'மறம்கிளர் செருவினுக்கு உரிமை மாண்டனை' என வருகின்றது. மேலே கண்ட தொடர்தரும் பொருளையே இத்தொடர்க்கும் உரையாசிரியர் பொருள் கொண்டுள்ளனர் அவ்வாறு கூறுவது கூறியது கூறல் என்னும் குற்றமாகாதா? என்று வினா எழுப்பி, உரிமை என்பதற்குச்சொந்தம் என்றும், மாண்டனை என்பதற்கு மாட்சிமையுற்றாய் என்றும் பொருள் காண்பது ஏற்றமாகவும், கம்பன் கவிக்கு ஊற்றமாகவும் அமைகின்றது அன்றோ! இந்த ஏற்றமும் ஊற்றமும் கண்டு காட்டிய புலவர். மு. ரா வின் நுண் மாண் நிழைபுலம் பாராட்டுக்கு உரியதன்றோ?

மற்றோரிடத்தில் 'உளைய' என்ற சொல் கும்பன் அகத்தையும் இராவணன் அகத்தையும் திறந்து காட்டும் திறவு கோலாக உள்ளது என்ற தொடர் இதயத்துக்கு இனிமை தரவில்லையா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அயோத்திச் சகோதரர்கள் அகத் தோற்றப் பொலிவினர். இலங்கைச் சகோதரர்கள் புறத்தோற்றப் பெருமையர். புறத்தோற்றம் மங்கும்: அழியும்: கண்டாரை நடுங்கச் செய்யும். அகத் தோற்றம் பொங்கும்: பொலியும்; வெல்லும்; அன்பால் அனைவரையும் அரவணைத்துக் கொள்ளும்.

இதனைப் போன்ற தத்துவக் கருத்துக்கள் புரட்டிய பக்கந்தோறும் திரட்டிய தேனாக இனிக்கிறது.

'இறங்கிய கண்முகிழ்த்து இரவும் எல்லியும்
உறுங்குதி போய்என உளையக் கூறினான்.'

இராவணனின் இந்த மாற்றம் கும்பனைப் பம்பரம் போலச் சுழற்றுகின்றது. சுழற்றும் கயிறு எது? அதுதான் உறவு என்னும் பாசக்கயிறு.

இத்தகைய உவமையணிகள் உரைநடைக்கு அழகு சேர்க்கின்றன.

சாதிநெறி குடும்பப் பாசத்தில் அடங்கிவிடுவது. அப்பாசம் அநீதிக்கும் துணைபோகத் தூண்டும். இராவணன் செய்தது தவறு என அறியினும் கும்பனுக்கு அவனிடம் உள்ள பாசம் குறையவில்லை.

'உம்பர் மந்திரிக்கு மேலா ஒரு முழம் உயர்ந்த ஞானத்தம்பியாகிய வீடணன் இராமனைச் சரணடைந்து உய்ந்து போனான் என அறிந்து, கும்பன் அவன்பால் பேரன்பு காட்டுவதற்குக் காரணமும் குடும்பப் பாசமே'.!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
'கையினால் எள் நீர் நல்கிக் கடன்கழிப்பதற்கு வீடணன் ஒருவனாவது மிஞ்சுவானே' என்று கும்பன் கொள்ளும் உவகைக்குக் காரணமும் சாதிப்பாசமே!

வீடணன் 'எனக்கு இராமன் தந்த செல்வத்து இலங்கையும் அரசும் எல்லாம் நினக்கு நான் தருவென்' என்று கூறியபோது, அதை மறுக்கச் செய்தது சாதிநெறி ஊட்டிய மான உணர்வே.

சாதிநெறி நிரந்தரமானதன்று. அது சிறுநெறி. காலம் நேரும் போது அதனை வீடணன் போல் உதறித் தள்ளவும் நேரலாம்.

தாதை சொல்லால் பரசுராமன் தாயையும் சிவன் தன்தந்தையாகிய பிரமன் தலையையும் கொய்ய நேர்ந்த வரலாறு, சாதிநெறி நிரந்தரமானதல்ல என்பதற்கு எடுத்துக்காட்டு.

பரசுராமன், சிவன் செயல்களை உலகம் பாவமாகக் கருதவில்லை. நீதிநெறி என்றே கொண்டு அவர்களைப் பாராட்டுவதைக் காண்கின்றோம் என்று பல சான்றுகளை அடுக்கியும், கும்பனின் சாதிநெறி அசைந்து கொடுக்கவில்லை. அவ்வளவு ஆழமாக அது, அவன் மனத்தில் வேரூன்றியிருந்தது.

நீதிநெறி அல்ல என்று அறிந்தே, சாதிநெறிக்காக உயிர் தருகின்றான் கும்பன். சாதிநெறிக்கு உரம் தருவது மானஉணர்வு. சாதிநெறியைக் காக்கப்பாசம் உந்துகின்றது. மானம் முந்துகின்றது. ஆயினும் கும்பன் நீதிநெறியை முற்றும் புறக்கணித்து விட்டதாகக் கொள்ளமுடியாது.
CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நீலனுடன் போரிடுகையில், அவன் வெறுங் கையனாய் நின்ற நிலை கண்டு, அவன் மேல் சூலத்தை ஏவாமல், அப்பால் போனது நீதிநெறி உணர்ந்தமையால்தான்.

'வீடணன் சோதரன் நீ, ஆதலால் உன்னைக் கொல்லேன் உய்ந்து போ' என்று பரிவு காட்டுகின்றான் இராமன். ஆனால் கும்பனின் மான உணர்வு, இராமனின் பரிவினை ஏற்கவில்லை.

இறுதியில் மூக்கிழந்து, காதிழந்து, காலிழந்து, கையிழந்து இராமன் எதிர் கிடக்கின்றான். அப்போது இராமனிடம் சிறு விண்ணப்பம் ஒன்று தருகின்றான்.

அந்த விண்ணப்பமும், தான் உயிர்பெறுவதற்கோ முக்தி பெறுவதற்கோ அன்று. கற்பகத்தைச் சேர்ந்து காஞ்சிரங்காய் கேட்பது போல் அமைகின்றது அந்த விண்ணப்பம்.

அந்த விண்ணப்பத்தின் முதற்பகுதி, நீதி நெறியைத் தழுவியுள்ளது. மறுபகுதி, சாதியையும் மானத்தையும் தழுவியுள்ளது.

'உன்னைச் சரண் அடைந்த என் தம்பியைக் காத்தருளுக! ஏனெனில், அவன் சாதியால் வந்தசிறு நெறி அறியான், நீதியால் வந்த நெடுந்தருமநெறி மட்டுமே அறிந்தவன் என்னும் விண்ணப்பத்தின் முதற்பகுதி, அவன் உள்ளத்தில் ஊற்றெடுத்த நீதி நெறியைக் காட்டுகின்றது.' ஆனால் பாசஉணர்வு அதனுள் ஊடுருவியுள்ளது.

'என் அண்ணன் இராவணன் ஒல்லுமாறு இயலுமேல், உடன் பிறப்பின் பயன் ஓரான், கொல்வான். ஆதலால் வீடணனைக் குறிக்கொள்க!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'உம்பியையும் உன்னையும் அனுமனையும் ஒரு காலும் பிரியாதிருக்குமாறு வீடணனை ஆட்கொள்க!' இதுகாறும் விண்ணப்பத்தின் முதற்பகுதி நீளுகிறது. சாதிநெறியில் தலைப்பட்டவன் அச்சிறு நெறியை மறப்பனோ?

'மூக்கிலா முகம் என்று நோக்குவார் நோக்காமல் என்கழுத்தை நீக்குவாய்! என் தலையைக் கடலுட் போக்குவாய்.' இதுதான் விண்ணப்பத்தின் இறுதிப் பகுதி.

கும்பன் இராமனைத் தரிசிக்கும் பேறு பெற்றான். முத்தினைப் பேற்றினை எளிதாகப் பெற்றிருக்கலாம். பெற்றிருந்தால், அது தன்னலம் என்று ஏசப்பெறலாம்.

தனக்கு இயலாத நீதிநெறியில் ஈடுபட்ட வீடணனைக் காக்குமாறு வேண்டியதன் மூலம் கும்பனிடம் நீதிநெறி சற்றே வெளிப் பட்டாலும். தம்பி என்ற பாசமே மேலோங்கியிருப்பதைக் காணலாம்.

'மூக்கிலா முகத்தைக் கடலில் போக்குவாய்' என்ற வேண்டுகோள், கும்பனின் மான உணர்வை முழுமையாகக் காட்டுகின்றது.

நீதிநெறியும் சாதிச்சிறு நெறியும் முறையே கடைப்பிடித்த இருவேறு பாத்திரங்களைப் படைத்து, அப்பாத்திரங்களின் உளப்போரை நுட்பமாக விளக்கியுள்ளான் கம்பன்.

இருவேறு இயற்கை அமைந்த இப்பாத்திரங்கள் இரண்டாலும், தன் காவியப் படைப்பின் முதன்மையான குறிக்கோளை வெளியிட்டுள்ளான் மகாகவி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
கும்பகர்ணன் கொண்ட சாதிச் சிறுநெறி, பாசத்தையும் மானத்தையும் துணையாகக் கொண்டது. அது தாழ்ந்தது; இழிந்தது. அபரநிலை (தாழ்ந்தது) என்றுகண்ணன் கீதை குறிப்பிடுவது இதைத்தான்.

சாதிநெறி ஒரு சிற்றெல்லைக்குள் வாழ்வை அடக்கிவிடும். மேலே பரவவிடாமல் மானமும் பாசமும் தடுத்துவிடும். வீடணன் மேற்கொண்ட நீதி நெறி பரநிலை (உயர்ந்தது). அதனைப் பின்பற்று வோர் தாமும் உய்வர்; உலகையும் உய்விப்பர்.

கம்பன் இருநெறிகளுக்கும் உள்ள வேற்று மையை இருபாத்திரங்களாக உலாவவிட்டு நமக்கு உணர்த்தியுள்ளான். நமக்கு ஏற்ற நெறி தேர்ந் தெடுப்பது நம்வசமே உள்ளது.

இராம காதையில் அனுமானை ஆசாரியனாக உருவகப்படுத்து வதுண்டு. இராவணன் சபையில் அனுமன், இராமன் புகழைப் பலவாறு விளக்கினான்.

இராவணன், கும்பன், வீடணன் மூவரும் கேட்டனர். கடலில் விழுந்த மழைத்துளி, கடல் நீரோடு கலந்து உவர்ப்பேறி வீணாகிவிடும் அதுபோல் இராவணன் காதில் பட்ட உபதேசம் பயன் இன்றிப் போனது.

அதே மழைத்துளி முத்துச் சிப்பியில் விழுந்தால், ஆணிமுத்தாகத் திரள்கிறது. அதுபோல் வீடணன் காதில் பட்ட உபதேசம் நீதிநெறி என்ற முத்தாக உருப்பெற்றது.
CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதே மழைத்துளி, தாமரை இலையில் பட்டது. அது முத்தின் வடிவம் காட்டியது. இலையிலேயே தங்குவதா? நீரில் கலப்பதா? என்று ஊசலாடியது. ஊசலாடி ஓய்ந்த பின்னர், நீரில் கலந்து உருமாறி உதவாமல் போனது.

இந்த நிலைதான் கும்பனது. நீதிநெறியைச் சார வேண்டும் என்னும் அவா ஒருபுறமும் சாதிநெறி ஒருபுறமும் இழுக்கின்றன. இடையில் தத்தளித்து. இறுதியில் சாதிநெறியை ஏற்று அழிவு தேடிக் கொண்டான்.

கும்பன் ஆலோசனைக் கூட்டத்தில் அண்ணனைக் கண்டித்துப் பேசியதுதான் வீடணன் அறிவான், பின்பு உறங்கப் போய் விட்டான் கும்பன்.

மறுமுறை அண்ணனிடம் பேசியதும், போருக்குப் புறப்பட்டதும் வீடணன் அறிய வாய்ப்பே இல்லை, ஏனெனில் அவன் இராவணனை விட்டுப்புறப்பட்டு விட்டானே!

'மறுத்த தம்முனை வாய்மையால்
ஒறுத்தும் ஆவது உணர்த்தினான்
வெறுத்து மாள்வது மெய்என
இறுத்து நின்எதிர் எய்தினான்.'

என்கின்றானே வீடணன். வீடணன் ஒற்றர் மூலம் அறிந்தான் என்பதற்கும் காவியத்தில் இடம் இல்லையே!

கம்பன் தவறு செய்து விட்டான் போலும் என்ற ஐயம் சிலர் கொள்ள வாய்ப்புண்டு. கம்பன் காவியத்தில் குறைகாண இயலுமா? குறை இருப்பின் அவன் உலக மகாகவி ஆவது எப்படி?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கம்பன் ஓரிடத்தில் திறக்க இயலாத பூட்டை அமைத்திருப்பான். வேறோரிடத்தில் (ஞாபகம் என்னும் உத்தியால்) மறவாமல் திறவு கோல் வைத்திருப்பான். பின்னர், 'கல்விக் கண் மிக்கோன்' என்று வீடணனைக் குறிப்பதே அத்திறவு கோல். கல்வி (ஞான)க் கண் பெற்ற வீடணன், காலம், இடம் கடந்து காணும் ஆற்றல் பெற்றவன் என்பதில் தடை ஏது?

சஞ்சயன் பாரதப் போரை நேரில் காணாமலே விளக்கவில்லையா? என்று இந்நூலாசிரியர் நிறுவும்போது மறுக்க இயலவில்லையே!

'ஆளியைக் காண்பரியாய்' எனத் தொடங்கும் திருவாய் மொழிப் பாசுரம் காட்டும் இலங்கையின் ஆதிவரலாறு, புலவர் பெருமான் விளக்கும் போது வியப்படைகின்றோம்.

இந்நூலின் தோற்றுவாயே அறிவின் ஊற்றுவாயாக உள்ளது.

எல்லையுள்ள பொருளை உய்த்துணர்வதே நம்போலியர்க்கு எளிதன்று. எல்லை யொன்றின்மை எனும் பொருளதனைக் கம்பனுக்கும் குறிகளால் காட்ட இயலவில்லை. காட்டத்தான் முயன்றான்.

அத்தகைய அரிய பொருள்களில் சிலவற்றை உணர்ந்து நமக்குத் தெளிவித்த சிந்தாமணிச் செல்வரின் சிந்தனை வளத்தின் புகழைச் சுமக்கச் சொற்களுக்கு வலுவுண்டா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
தொடங்கினால் இடையில் நிறுத்த இயலா வகையில், இனிய நுட்பங்கள் நம்மை ஈர்த்துச் செல்கின்றன.

இந்நூல் எழுப்பும் இலக்கியப்பசி, கம்பன் காவியம் முழுவதும் சுவைத்தால் அன்றித் தீராது 'வீதிக்கொரு சாதி: சாதிக்கொரு நீதி' என்று பெருகி வரும் நிலையில், இந்நூல் நீதிச் சுடர்ச் சோதியாக உதயமாகிறது.

இந்த உதயம் எண்ணற்ற இதயங்களின் இருளைப் போக்கும் என்பது உறுதி.

சைல மலையில் தோன்றி, கலங்கல் நீராக வந்த வெள்ளம், தோத வத்திச் சங்கணி துறையில் துகில் வண்ணத் தெண்ணீராகி, ஆற்றின் அடித்தளப் பொருள்களையும் தெளிவாகக் காட்டுவது போல, பலர் பல விதமாகப் பொருள் கூறி மயக்கமுறச் செய்த கம்பன் கவிகளின் ஆழ் பொருளைத் தெளிவாக விளக்கும் புலமைச் செல்வரின் தொண்டு போற்றுதற்குரியது.

இன்னும் இது போன்ற நுட்பமான கருத்துக்களை, நூல் வடிவில் தர வேண்டும் என்று விண்ணப்பம் செய்து கொள்வோம்.

**அரங்க. சீனிவாசன்**

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



# சாதி நெறியும்
# நீதி நெறியும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீ :

நீதியால் வந்ததொரு
நெடுந்தரும நெறிஅல்லால்,
சாதியால் வந்தசிறு
நெறிஅறியான் என்தம்பி
ஆதியாய்! உனைஅடைந்தான்
அரசர்உருக் கொண்டமைந்த
வேதியா! இன்னும்உனக்கு
அடைக்கலம்யான் வேண்டினேன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# 1

# தோற்றுவாய்

நிலைப்பது:

" மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே"

என்பது புறநானூற்றுப் பொன்மொழி. இதனை வழங்கியவர்: 'பெருந்தலைச் சாத்தனார்' என்ற சங்க காலச் சான்றோர்.

எது பொன்மொழி? உலக இயல்பை நன்கு உணர்ந்து தெளிந்த அறிஞர் பெருமக்கள் வழங்கும் நன்மொழியே, பொன்மொழியாகும்.

அது, உலக மக்களின் நல்வாழ்விற்காகவே வழங்கப்படுவது, அதனால், அந்த நன்மொழி, எந்தக் காலத்திலும் பொன்மொழியாகவே, நின்று திகழ்கின்றது.

மண்ணுலகில் தோன்றிய மக்களின் வாழ்வு, எதனை நோக்கியதாக இருக்க வேண்டும்? அந்நோக்கம் நிறைவேற அவர்கள் எவ்வாறு செயல் பட வேண்டும்? என்ற நற்சிந்தனையிலேயே ஈடுபடுபவர்கள் சான்றோர்கள், அவர்கள் உலகத்தைத் தமது இருகண்களாலும் நன்கு காண்கின்றார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


உலகை நோக்கும் இருகண்கள் எவை? முகக்கண் ஒன்று அகக்கண் ஒன்று. முகக்கண்ணால் காணப்படுவது புறஉலகக் காட்சி. அகக்கண்ணால் நோக்கப் படுவது புற உலகப் பொருளை இயக்கிக் கொண்டிருக்கும் அக உலகின் இயல்பு.

புற உலகம் என்றும் நில்லாதது: அழிவது. அக உலகம் என்றும் நிலைத்து நிற்பது: அழியாதது.

நில்லாதது, நிலைப்பது: இவ்வாறு முரணாக அமைந்தது இந்த உலகம். இதன் இயல்பினை உணர்ந்த சான்றோர்கள் மக்களுக்கு வழிகாட்டு கின்றார்கள்.

மக்களின் தோற்றம் அமைவது இந்த மன்னா (நிலையில்லாத) உலகத்தில்தான். அரிது! அரிது! மானிடராய்ப் பிறத்தல். இத்தகைய அரிய பிறப்பினைப் பெற்றவர்கள், அரிய பொருளைப் பெற்றுத்தானே வாழவேண்டும்? இல்லை என்றால் அழிய வேண்டும்.

அந்த அரியது எது? அழியும் உலகத்தில் பிறந்தாலும், அழியாத வாழ்வினராக நிலைக்கச் செய்வது எதுவோ அதுதான் அரியது.

அதற்குப் 'புகழ்' என்று பெயர். மன்னுவது (நிலைத்து நிற்பது) புகழ்: மன்னாதது (நிலைக் காதது) புறஉலகம்.

மன்னா (நிலைக்காத) உலகத்தில் தோன்றி னாலும், தமது புகழால் மன்னுபவர்களாக (நிலைப் பவர்களாக) ஆகலாம். இதுவே மண்ணுலகில் தோன் றியதன் வாழ்க்கைப் பயன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



'தோன்றின் புகழொடு தோன்றுக' என்பது தானே வள்ளுவர்காட்டும் வாழ்க்கைநெறி!

எதுபுகழ்? பிறரால் செய்து காட்டுவதற்கு அரிய செயலுக்கு உரியதாக அமைவது எதுவோ, அது மக்களால் புகழப்படுதற்கு உரியதாக அமையும். அது, என்றும் நின்று திகழும். அதுவே புகழ்.

**அரியதும் எளியதும்:**

செய்வதற்கு அரியது புகழ்க்குரிய செயல். அதனைச் செய்பவரையே 'பெரியர்' என்று பேசும் வள்ளுவம். பெரியர் அல்லாதார் சிறியர் தானே! இவரது செயல் என்ன? செய்வதற்கு எளியதைச் செய்வர்.

'அரியது செய்பவர் பெரியர்: எளியது செய்பவர் சிறியர்'. என்று, மக்களை அவர்களது வாழ்க்கையின் அடிப்படைச் செயல்களை அளவு கருவியாகக் கொண்டு இரண்டு வகையாகப் பிரிக்கின்றார் வள்ளுவப் பெருந்தகையார். மக்களில் சிலர், அரியது செய்வதும், பலர் எளியது செய்வதும் ஏன்? எல்லோரும் அரிய செயலைச் செய்தே, புகழ் பெற்று பெரியவராக நிலைத்து நிற்கலாமே.

இதற்குத் தடையாக இருப்பது எது?

மக்களின் செயல்கள் நிகழ்காலத்தைப் பற்றியதும் எதிர்காலத்தைப் பற்றியதுமாக அமைந்துள்ளன. நிகழ் காலச் செயல்கள் புறத்தோற்றத்துக்குரிய உடல் வாழ்க்கையைப் பற்றியது. எதிர் காலச் செயல், அந்த உடல் இயக்கத்துக்குக் காரணமாக அமைந்துள்ள ஆன்ம வளர்ச்சியைப் பற்றியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


உடல், புறக்கண்களுக்குத் தெரிவது: ஆன்மா, அறிவால் உணரப்படுவது. உணரப்படும் ஆன்மாவைக் காட்டிலும் தெரியப்படும் உடலுக்கு, மக்களில் பலர் முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

அழியும் உடல் வாழ்க்கைக்கு முக்கியத்துவம் சிறப்பு கொடுக்கப்படுவதே, அரிய செயலுக்குத் தடையாகின்றது.

எளியது நிகழ்காலச் செயல். இதனால் வருவது மகிழ்ச்சி, அரியது எதிர்காலச் செயல். இதனால் கிடைப்பது புகழ்ச்சி.

**பெரியரும் சிறியரும் :**

"செயற்குஅரிய செய்வார் பெரியர்: சிறியர்
செயற்குஅரிய செய்கலா தார்" (26)

என்பது, பெரியவர் எவர்? சிறியவர் எவர்? என்று மக்களை இனம்பிரித்துக்காட்ட எழுந்த திருக்குறள்.

'ஒத்த பிறப்பினராய மக்களுள். செய்தற்கு எளியவற்றைச் செய்யாது, அரியவற்றைச் செய்வார் பெரியர்: அவ்வெளியவற்றைச் செய்து, அரியவற்றைச் செய்யமாட்டாதார் சிறியர்'' என்று இந்தக் குறளுக்குப் பொருள் கூறிய பரிமேலழகர் எளியது அரியது என்பதை மேலும் விளக்குகின்றார்.

"செயற்கு எளியவாவன, மனம் வேண்டியவாறே, அதனைப் பொறிவழிகளால் புலன்களில் செலுத்துதலும், வெஃகலும் வெகுடலும் முதலாயின. செயற்கு அரியவாவன இயமம் நியமம் முதலாய எண்வகை யோக உறுப்புக்கள்." இது ஆன்மாவைப் பற்றியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இந்தக்குறளும் இதன் விளக்கமும் எதனைக் காட்டுகின்றது? உடல் இன்பத்துக்காகச் செயலாற்றுவது எளியது, அதனைச் செய்பவர் சிறியர். ஆன்ம வளர்ச்சிக்காகச் செயலாற்றுவது அரியது. அதனைச்செய்பவர் பெரியர்.

உடலுக்கு உரியது எளியது. அது நிகழ்கால மகிச்சியைத் தருவது. ஆன்மாவுக்கு உரிய செயல் அரியது. அது எதிர்காலப் புகழ்ச்சியை நல்குவது.

நிகழ்கால மகிழ்ச்சிக்காகச் செயலாற்றுபவர் சிறியர்: எதிர்காலப் புகழ்ச்சிக்கு உரிய செயலில் ஈடுபடுபவர் பெரியர். இந்த இருவகை வாழ்க்கையினரையும் தாங்கி நிற்பது இந்த மன்னா (நிலையற்ற) உலகம்தான்.

**நிகழ்ச்சியும் மகிழ்ச்சியும்:**

சிறியாரின் வாழ்க்கையில் நடக்கும் நிகழ்ச்சிகள் தனை அடிப்படையாகக் கொண்டவை? பெரியாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் எதனை நோக்கமாகக் கொண்டவை? இரண்டு நிகழ்ச்சிகளும் மகிழ்ச்சிக் குரியனவே! சிறியாரின் நிகழ்ச்சி உடலுக்கு இன்பம் தருவதால் மகிழ்ச்சிக்குரியதாகிறது. பெரியாரின் நிகழ்ச்சி, ஆன்மாவுக்கு எது நலம் பயக்கக் கூடியதோ, அதனைத் தருவதால், மகிழ்ச்சிக்குரியதாகிறது. ஆனால், இரண்டுக்கும் வேறுபாடு உண்டு.

உடல் அழியும் இயல்பினது. அதனால், அந்த இன்பத்தால் வரும் மகிழ்ச்சியும் அத்தோடு அழிந்து ஒழிந்துவிடும். ஆன்மா, என்றும் அழியாதது. ஆகவே, அது நலம்பெறவந்த நிகழ்ச்சியால் ஏற்படும் மகிழ்ச்சியும், அழியாது: என்றும் நிலைத்து நிற்பது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


அழியும் மகிழ்ச்சிக்காகச் செயலாற்றும் சிறியவர்கள் பெரியவர்களாக வளரமுடியாதா? முடிவதும் முடியாததும் அவரவர் இயல்புகளைப் பொறுத் தனவாகும்: ஏன்?

ஒவ்வொரு மனிதனிடமும் பலவிதமான ஆற்றல்கள் நிறைந்துள்ளன. அந்த ஆற்றல்களை வெளிப்படுத்துவித்து செயலாற்றச்செய்வன, அவன் உள்ளத்தில் அடங்கிக்கிடக்கும் உணர்வுகள். உள்ளத்து உணர்வுதான், வெளிச்செயலுக்கு வலிமை சேர்ப்பது.

அந்தச்செயலால் அவனுக்கு வெற்றிகிடைக்கு மானால், மகிழ்ச்சி அடைகின்றான். நிகழ்ச்சி, மகிழ்ச்சியைக்கொடுத்துக் கொண்டிருக்குமானால், வேறு ஒரு அரிய நிகழ்ச்சிக்கு ஏன் செல்ல வேண்டும்? என்பது சிறியாரின் உள்ளத்தில் எழும்கேள்வி.

**நல்லுணர்வும் அல்லுணர்வும்:**

மனித உள்ளத்தில் தோன்றும் உணர்வுகள் பல்வேறு பட்டனவாகும், அவைகள் நன்மைதருவன வாகவும் இருக்கலாம். தீமையைக் கொடுப் பனவாகவும் இருக்கலாம், அன்பு, அருள், அடக்கம், ஈகை, வாய்மை முதலியவைகள், நல்லுணர்வு வரிசையில் இடம் பெற்றவைகள்.

பொறாமை, பொய், புறங்கூறுதல், ஆணவம் சினம், காமம் முதலியவைகள் தீமையைக் கொடுக்கக் கூடிய அல்லுணர்வு வரிசையில் ஒன்றி நிற்பவைகள். இந்த இருவகையான உணர்வுகளும் எல்லா மனித உள்ளங்களிலும் குடி கொண்டிருப்பவைகள் தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



நல்லனவும் அல்லனவும் உள்ளத்தில் கலந்து கிடத்தலால், புறத்தில் ஒரு செயல் நிகழயிருக்கும் போது, அகத்தில் ஒரு பெரும் போராட்டம் நிகழ்கின்றது.

நல்லுணர்வுக்கும் அல்லுணர்வுக்கும் நடக்கும் போராட்டத்தில், எது வெல்கின்றதோ அதற்கேற்ப வெளியில் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. நல்லுணர்வு வெற்றிபெற்று, அதனால் செயல் நிகழுமானால், அச்செயலுக்குரியவர் பெரியார் என்று புகழப் படுவார்.

அல்லுணர்வு, நல்லுணர்வை அடக்கிவைத்து விட்டு, தான் தலை நிமிர்ந்து நிற்குமானால், அதனால் செயல் நிகழும்போது. அச்செயலுக்குரியவர் சிறியார் என்று இகழப் படுவார்.

நல்லுணர்வுகள் ஆன்மாவைப் பற்றியவைகள், அல்லுணர்வுகள் அழியும் உடலைப் பற்றியவைகள். அழியும் உடல் இன்பத்துக்காகச் செயல்படும் நிகழ்ச்சிகள் அனைத்தும், தன்னலம் பற்றியவை. ஆன்மநலத்துக்குச் செயல்படும் நிகழ்ச்சிகள் அனைத்தும் பிறர்நலம் பற்றியவை.

நல்லுணர்வுகளால் உந்தப்பட்டுச் செயல்படும் நிகழ்ச்சிகள் தான், மனிதனை, 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக' வாழும் பெரியோனாக உயர்த்துவிக்கும். அல்லுணர்வு, தன்னலத்தின் அடிப்படையில் செயல்படுவதால், மனிதனை, பிறர் முன்னிலையில் சிறியோனாக நிற்கச் செய்யும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


சிறியோனாக நின்றாலும் பரவாயில்லை, அப்போதைக்குக் கிட்டும் உடல் தொடர்பு மகிழ்ச்சியே போதுமானது என்று மனிதனை எண்ணவைத்து விடுகின்றது அவனது அல்லுணர்வு.

"ஆன்ம நலத்தை நாடி, அருஞ்செயல்கள் புரிந்து; பிறரால் புகழ்ந்து போற்றப்படக் கூடிய பெரியோனாக வாழ்வதுதான் நல்லது: அதுதான் வாழ்க்கைப்பயன்" என்று தெளிவாக உணர்ந்திருந் தாலும், அத்தகைய உயர்ந்த வாழ்க்கையைக் கடைப் பிடிப்பதற்கு, அவனை விடுவதில்லை அவன் உள்ளத்து அல்லுணர்வு.

அத்தகைய ஆற்றல் பெற்றவைகள், ஆணவம் அடங்காமை முதலிய அல்லுணர்வுகள். அதனால் தான், உலகவாழ்வில், சிறியார், பெரியோராக உயர முடிவதில்லை.

## நல்லுணர்வுப் போராட்டம்:

நன்மைபயக்கும் உணர்வுகளுக்கிடையிலும் சிலசமயங்களில் போராட்டம் நிகழ்வது உண்டு. இந்தப் போராட்டம், மனிதனை, உலகத்தார், முன் எவ்வாறு நிறுத்திக்காட்டும்? சிலரை வீட்டுக் குரியவராகவும், சிலரை நாட்டுக்குரியவராகவும் நிறுத்திவைக்கும்.

நல்லுணர்வுப் போராட்டத்தில் எது வென்றாலும். மனிதனை நன்னெறியில் சென்றவ னாகத்தான் உலகத்தார் முன் காட்டும். நாடு நலம்பெற வாழ்பவனும், வீடுவளம் பெற வாழ்பவனும் நன்னெறியைப் பின்பற்றியவர்களே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அன்பும் அருளும் நல்லுணர்வுகளே. இதில் ஐயம் இல்லை, இரண்டும் உள்ளத்தில் போராடுமானால், அன்பு எளிதாக, அருளை வென்றுவிடும். வென்ற அன்பு உணர்வு, மனிதனை வீட்டுக்குரியவனாக அடக்கிவைத்து விடுகின்றது.

ஏன்? அன்பு, உடல் உறவுத்தொடர்பு உடையார் மாட்டு நிகழும் உணர்வு. வீட்டார் எல்லாம் உடல் உறவினர்தானே! அதனால், மனிதனை. வீட்டுவளம் நாடும் நிலையினனாக வாழச்செய்து விடுகின்றது அன்பு உணர்வு.

அருள், எந்த விதமான உடல் உறவு தொடர்பு பற்றாது, அனைத்து உயிர்கள் மேலும் செல்லும் நல்லுணர்வு. அதனால், இது, மனிதனை, வீட்டுக்கு அப்பாற்பட்டவனாக்கி, நாடு நலம்பெற வாழ் பவனாக்குகின்றது, ஏன்? உலகமனிதனாகவே உயர்த்துவது அருள் உணர்வு.

உள்ளத்தில் அன்புக்கும் அருளுக்கும் போராட்டம் நடக்கும் சூழ்நிலை மனித வாழ்க்கையில் ஏற்படலாம். அப்போது எது வெல்கின்றதோ, அதனை வைத்துதான், மனிதன் உலகத்தாரால் மதிப்பிடப்படுகின்றான்.

அன்புக்கு ஆட்பட்டவன் பாசவலையில் சிக்கிய தனி மனிதனாகின்றான். அருள் உணர்வால் கவரப் பட்டவன், பாசவலையை அறுத்தெறிந்த பொது மனிதனாகின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


தனிமனிதன், வீட்டாரால் புகழப்படுவான்: பொதுமனிதன் நாட்டாரால் புகழப்படுவான். ஏன்? உலகத்தாராலேயே போற்றப்படுவான். தனி மனிதவரலாறு வீட்டில் அடங்கும் பொது மனித வரலாறு, நாட்டுவரலாற்றில் இடம் பெற்றுத்திகழும்? உலகவரலாற்றுக்கும் உயரும்.

உள்ளத்தில் நல்லுணர்வுகளே மிகுந்திருந் தாலும், அவைகளுள் எது மிக்க ஆற்றல் பெற்றதாக இருக்கிறதோ. அதுதான் மனிதனை இயக்கிக் கொண்டிருக்கும். மற்ற நல்லுணர்வுகள் அதற்குத் துணையாக நிற்கும். அவ்வளவே, அதனால் அன்பு உணர்வு தலைமை தாங்க நின்றவன் **வீட்டுக்குள்** தான் அடங்குவான். அதுவே, அவனுக்குப் பெருமை தருவதும், புகழ் சேர்ப்பதுமாகும்.

அருள் உணர்வினன், வீட்டளவில் நிற்க மாட்டான், வீட்டுவாழ்க்கை அவனுக்குத் தடையாகத் தான் இருக்கும், வீட்டை விட்டு வெளியேறினால் தான், அவனது அருள் உணர்வு சுதந்திரமாகச் செயல்படும். இதுதான் இவனுக்குப் பெருமை தருவதும் புகழ் சேர்ப்பதுமாகும்.

**அளவு கோல் :**

இருவரது நெறிகளும் நன்னெறிகள்தான். இருப்பினும், இவைகளின் பெருமை சிறுமைகளை அளந்து பார்க்க முடியும். அந்த அளவுகருவி எது? அதனை வாழ்க்கைப் பயணத்துக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கும் வள்ளுவப் பெருந்தகையார் நமக்குத்தந்துள்ளாரே!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'அரியது, எளியது' என்பன அளவுகோல்கள். அரியது பெருமைக்குரியது: எளியது சிறுமைக் குரியது. உடல் உறவு பற்றியது எளியது: உடல் உறவுக்கு அப்பாற்பட்டது அரியது. அன்பு உணர்வால் தோன்றும் நெறி, நன்னெறி, அது எளியது. தனிமனித வாழ்க்கைக்குரியது.

ஆனால், அருள் உணர்வால் தோன்றும் நெறி, நன்னெறி மட்டுமல்ல! அது, தீதுஇல் நன்னெறி யாகும், அரியது: பொது மனித வாழ்க்கைக்குரியது. அறவாழ்வினனாக ஆக்குவது, அனைவரது புகழ்ச்சிக்கும் உரியது.

**"தீதுஇல் நன்னெறி நிற்க, அல்லாதுசெய்**
**நீதியாரொடும் கூடுவது இல்லை, யான்."**
(திவ். 672)

என்று குலசேகராழ்வார் கூறுகின்றார்.

"உலகத்தார் உடல் உறவுத்தொடர்பால், அல்லாது செய்கின்றனர். அதுவே அவர்க்கு நீதியாகவும் ஆகின்றது. நான், தீது இல் நன்னெறியைப் பின் பற்றியதனால், அவரோடு கூட மாட்டேன்" என்று ஆழ்வார் உறுதி கூறுகின்றார்.

இதனால், "தீது இல் நன்னெறியாகிய அரிய செயலைப் பின்பற்றும் பெரியவர்கள், எந்தக்காரணம் கொண்டும், உடல் உறவுத் தொடர்புக்குரிய எளிய செயலைச் செய்பவர்களோடு சேரமாட்டார்கள்'' என்பதை அறியலாம். அருள் உணர்வுச்செயல், தீது இல் நன்னெறி என்றால், அன்பு உணர்வுச் செயல் நன்னெறி, தீது உடையதா? ஆம், ஆராய்ந்து பார்த்தால் உண்மையை உணரலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அன்பு உணர்வு உடல் உறவை வளர்ப்பது. தன் அன்புக்குரிய உறவினர் துன்பத்திற்கு உட்பட்டுவிட்டால், அவர்களைத் துன்பத்தினின்றும் மீட்பதற்கு மனிதனைச் செயல் படத்தூண்டுவது அன்பு உணர்வு. அந்த உறவினன், செய்யத்தகாத காரியத்தைச் செய்து, அதனால் துன்பத்துக்கு உள்ளாகியிருந்தாலும், அதிலிருந்து அவனை மீட்பதையே தனது கடமையாக எண்ணச் செய்வது அன்பு உணர்வு.

அன்பு உணர்வு. உறவினன் குற்றத்தைப் பார்க்காது: துன்பத்தை மட்டுமே பார்க்கும். அதனால், துன்பத்தைத் துடைப்பதற்கே மனிதனைத் தூண்டிக் கொண்டிருக்கும்.

ஆகவே, சமுதாயக் குற்றவாளிக்குத் துணை போகும் பவச்செயலுக்குத்தனி மனிதனைத் தள்ளி விடுகின்றது, அதனால், 'தீது உடை நன்னெறி' என்றுதானே அன்பு உணர்வைச் சொல்ல வேண்டும்.

**தொகுப்பு :**

நல்லனவாகயிருந்தாலும், ஒன்றனோடு வேறு ஒன்றை ஒப்பிட்டுக்காணும் போதுதான், குறைவு நிறைவு விளங்கும்: சிறுமை பெருமை தெரியும். இது வரை கண்டதைத் தொகுத்துப் பார்த்தால் வாழ்க்கை உண்மை ஒன்றை உணரலாம்.

உலகம் நிலையற்றது. புகழ் நிலையானது. நிலையற்ற உலகில் வாழப்பிறந்த மனிதன், தனது அருஞ் செயலால் புகழை நிலை நாட்டிக் கொள்வதே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


முறையானது: நிறைவானது. இந்த அரிய செயலைச் செய்பவரே பெரியவர்: எளிய செயலைச் செய்பவர் சிறியவர். எளிய செயல் என்பது உடல் இன்பத்துக்காகச் செய்யப்படுவது. இது நிகழ்காலத்துக் குரியது. புகழ்ச் செயல் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டது.

இரண்டிலும் மகிழ்ச்சி உண்டு. ஆனால், ஒன்று அழியும். மற்றொன்று அழியாதது. அழிவது. உடலைப் பற்றியது: அழியாதது ஆன்மாவைப் பற்றியது எல்லாச் செயல்களுக்கும் தூண்டுதலாக அமைவது உணர்வுகள், அவைகள் நல்லுணர்வுகள் அல்லுணர்வுகள். இவைகளுக்கிடையில் போராட்டம். நல்லுணர்வுகளுக் கிடையிலும் போராட்டம். இப் போராட்டத்தால், சிலர் வீட்டினராகவே அடங்கலாம். சிலர் நாட்டு வாழ்வினராக உயரலாம்.

அன்பும் நல்லுணர்வுதான்: அருளும் நல்லுணர்வு தான். இரண்டையும் ஒப்பிட்டுப்பார்க்கும் போது தான், சிறுமை பெருமை விளங்குகின்றது. சிறுமை, குறைவுடையதுதான்: பெருமை நிறைவுக்குரியது தான்.

**அவலம் :**

நிறைவான வாழ்க்கை, தக்கது: குறைவான வாழ்க்கை தகாதது. செய்யத்தக்கது இது தான் என்று உணர்ந்த பிறகும், அந்த நிறைவான வாழ்வைப் பின்பற்ற முடியாமல் போகின்றது சிலரால். இதுதான் மிகவும் பரிதாபத்துக் குரியது. அவலத்துக்குரியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


அத்தகைய பரிதாபநிலைக்கு, சிலர் உரியவராதற்குக் காரணம் என்ன? இதனை நன்கு ஆராய்ந்து எடுத்துக் காட்டின் மூலம் விளக்கினால், வாழ்க்கை திருத்தத்துக்கு மிக்க பயனளிப்பதாக அமையும். நிலையான புகழைப் பெற்று பெரியோராக வாழ்வதற்கேற்ற சூழ்நிலை கிடைத்த பிறகும், அதனைத்தவற விட்டு விட்டு, குறைவான வாழ்க்கையையே, ஒருவன் மனம் விரும்பி மேற்கொள்வானானால், அது எவ்வளவு அவலத்துக்குரியதாகும்!

அவலநிலைக்கு உள்ளான பிறகு வருவது என்ன! அழுகைதான். அழுகை, அவனைமட்டும் அடைவதில்லை, அவனைக்காண்பார், வரலாற்றைக் கேட்பார் அனைவரையும் அழவைக்கும் அந்த அவலச்சூழ்நிலை.

தனக்குச் சமமான ஒருவன் நிறைவான வாழ்வில் நிமிர்ந்து நின்று ஆனந்தம் அனுபவித்துக் கொண்டிருக்கும் போது, தான் ஏன் இந்த அவல நிலைக்கு உள்ளாக வேண்டும் என்று தனிமனிதன் நினைத்துப் பார்த்தால் அழுகை மேலும் மேலும் மிகுதியாகும்.

ஆனால், அவனிடம் மேலோங்கி நிற்கும் பாச உணர்வு, அந்த எண்ணத்துக்குத் தடையாக அமைந்து விடுகின்றது, தனது நிலைமையிலேயே மகிழ்ச்சி கொள்ளச் செய்கின்றது. அதனை புகழாகவும் கருதச் செய்கின்றது. அவலம், மனிதனைச் சிந்திக்கவைக்கின்றது: திருந்திய வாழ்க்கைக்குத் தூண்டுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

**வாழ்க்கைத் தத்துவம் :**

தத்தம் செயல்பாடுகளால் சிலர் பெரியராக வாழ்வதையும், சிலர் சிறியராகத் தாழ்வதையும் உலக நடை முறையில் காண்கின்றோம். பொதுவாக, பெரியவர் போற்றப் படுவார்: சிறியவர் தூற்றப் படுவார். ஆனால், ஒரு பேரறிஞர், "நான் பெரியோரை மதிப்பதும் இல்லை: சிறியோரை இகழ்வதும் இல்லை" என்று சொல்கின்றார்.

"பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தலும் அதனினும் இலமே."
(புறம் 192)

என்பது, அந்தப் பேரறிஞரின் அனுபவக் கூற்று.

"உலக இயல்புக்கு மாறாக அமைகின்றதே உங்கள் போக்கு ஏன் அப்படி" என்று கேள்வி கேட்டால், அதற்கு அவர் கூறும் பதில் சிந்தனைக் குரியதாக அமைகின்றது. 'பெருமைக்கும் சிறுமைக்கும் அவரவர்களது ஊழ்வினைதான் காரணமேயன்றி அவர்களது செயல்பாடு அல்ல.' என்பது அறிஞர்தரும் வாழ்க்கை விளக்கம்.

"நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது, திறவோர்
காட்சியின் தெளிந்தனம்: ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே:
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே."

என்பது நல்லறிஞர் தரும் வாழ்க்கைத் தத்துவம். "ஆற்றில் படகு விடப்படுகிறது. தண்ணீர் செல்லும் வழியிலே படகு சென்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


முடிவை எய்துகின்றது. சிலபடகு, கல்லில்-பாறையில் மோதி இடையிலேயே முறிந்து போகின்றன. இடையில் முறிவதும், முடிவை அடைவதும் படகின் முயற்சியில் இல்லையே. தண்ணீர்ப் போக்குதானே காரணம். அதுபோல! அவரவர்களது விதிவழியாகவே வாழ்க்கைப் போக்கு அமைகின்றது. பெருமை சிறுமையும் அவரவர்களது ஊழ்வினையை அடிப்படையாகக் கொண்டதாகும்."

என்று. தமது அனுபவ அறிவைக் கொண்டு மனித வாழ்க்கைத்தத்துவத்தை விளக்கிக் காட்டுகின்றார், இந்தப் பேரறிஞர். இவர் சங்ககாலப் பழைமையைச் சார்ந்தவர்: 'கணியன் பூங்குன்றனார்' என்ற திருப்பெயர் கொண்டவர்.

இந்தச் சான்றோரது கருத்துப்படி, நல்லதே என்று தெரிந்தாலும் கூட, அதனைப்பின்பற்ற முடியாதபடி, மனிதனைத் தடுப்பது அவனது விதி என்பதாகும். 'விதியின் விளையாட்டை வெல்லுதல் யார்க்கும் அரிது: விதிவலிது: ஊழின் பெருவிலி யாவுள.' இதில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர் சங்கச் சான்றோராகிய கணியன் பூங்குன்றனார்.

வாழ்க்கை, இடையில் (ஆற்றுப் பாறையில் மோதி முறிந்தபடகைப்போல) முடிவதற்கு அவரது விதி காரணமாக இருக்கலாம். ஆனால், முடிவான நிலையான அமைப்பை அடைவதற்கு வழி உண்டு என்று கூறுகின்றார் ஒரு வாழ்க்கைத்தத்துவஞானி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


"வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர்
என்பது இல்லை: நிற்குறில்,
ஆழ்ந்தார் கடல்பள்ளி அண்ணல்
அடியவர் ஆமினோ."

(திருவாய்மொழி. 4.1.6)

"வாழ்ந்தவராய் நினைப்பவர் எவராயினும் அவர் வாழ்ந்து நின்றோம் என்று சொல்பவர்யாரும் இலர். வாழ்வில் நிலையாக நிற்க வேண்டுமானால், ஆழ்ந்து நிறைந்திருக்கின்ற கடலைப்படுக்கையாக உடைய இறைவனுக்கு அடியவர்களாக ஆகிவிடுங்கள்." என்பது இந்தப்பாசுரத்தின் கருத்து இறைவனது திருவடியைச் சேர்வதுதான் நிலையான வாழ்வுக்கு உரியதாகும். இந்தக்கருத்தை வழங்கியவர் நம்மாழ்வார். "மலர் மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ் வார்." என்ற வள்ளுவத்தத்துவத்தைதான், ஆழ்வாரும் ஆணித்தரமாகக் கூறுகின்றார்.

என்றும் எங்கும் நிறைந்து நிலையாக நிற்பவன்யார்? அவன் இறைவன். அதனால் இறைவன் திருவடியை அடைந்தவர்களும் நிலையான வாழ்க்கையினராக நிற்பார்கள். வாழ்க்கை ஒரு பெருங்கடல். இதனை நீந்திக்கடக்க முடியுமா! முடியும். துயரம் இன்றி, நீந்திக்கடக்கலாம். எப்படி? வழிகாட்டுகின்றார் வள்ளுவப் பெருமான்.

இறைவன் திருவடிதான், வாழ்க்கைக்கடலை, எளிதாக நின்று நீந்திக்கடக்க உதவும் தெப்பம். (புணை). இறைவன் அடி சேராதார் நீந்தார்' என்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



எதிர் மறைமுகத்தானும் கூறுவார் திருவள்ளுவர். இந்த வாழ்க்கைப் பெருங்கடலில், இறைவன் திருவடியோடு, மிதக்கும் மிதவைகளும் உண்டு. அவைகள் தான், அருமை. எளிமை: உண்மை, இன்மை; புகழ்ச்சி மகிழ்ச்சி; நல்லுணர்வு அல்லுணர்வு அவலம், ஆனந்தம்! உடல் உறவு, ஆன்மஉறவு; பெருமை, சிறுமை முதலியவைகளாகும்.

இறைவன் திருவடியைப் பற்றிக் கொண்டு விட்டால், மற்றவைகள் எல்லாம், கடலைக் கடப்பதற்குப் பெருந்துணையாக நின்று உதவும். இல்லை என்றால், அவைகள் எல்லாம் வாழ்க்கைக் கடலில் மனிதனை ஆழ்த்தி விடுதலைத்தான் செய்யும். மனிதன் வாழப்பிறந்தவன்: வீழப்பிறந்தவன் அன்று. 'வையத்து வாழ்வாங்கு வாழ்வதற்குரிய வழி இதுதான்' என்பதை நன்கு உணர்ந்து கொண்டபிறகும் ஏன் சிலர், வீழ்கின்றார்கள்? அதுதான் அவரதுவிதி (ஊழ்வினை) என்று கூறுகின்றார் கணியன் பூங்குன்றனார்.

வாழ்க்கை, பயனுறவாழ்வதற்கு, இறைவன் திருவடியை அடைபவர்யார்? அடையாதவர்யார்? "அவரவர் விதிவழி அடைய நின்றனரே" என்பது நம்மாழ்வார் அளிக்கும் தெளிவானவிடை.

விதிவழி நடந்தார் வாழ்வு, உலகத்தார்முன் எவ்வாறு தோற்றம் அளிக்கிறது? அண்ணல் (ஆண்டவன்) அடிபற்றி நடந்தார் வாழ்வு உலகில் எவ்வாறு ஏற்றம் பெற்று விளங்குகின்றது? இதனை ஐயம் இன்றி, தெளிவாக உணரவைக்கும் இலக்கியம் உண்டா? உண்டு. அதுதான் கம்பராமாயணம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


**காப்பியம் :**

கவிச்சக்கரவர்த்தி கம்பர், ஒரு உலகமகாகவி. அவர்படைத்தளித்த இராமாவதாரக் காப்பியம், அவரைப்போன்றே உலக மகாகாவியமாகத் திகழ்கின்றது. இந்தக்காப்பியத்தை,' சரண்நாங்களே' என்று சொல்லித்தான் தொடங்குகின்றார் கம்பர். இறைவன் திருவடியை அடைக்கலமாக்கிக் கொண்ட தொடக்கமாக அமைந்ததால், இந்தக் காப்பியம் ஏற்றம் பெற்றுத் திகழ்கின்றது போலும்!

ஏற்றத்துடன் விளங்கும் இந்தக்காப்பியத்தில் தோற்றமளிக்கும் மாந்தர்கள் பலப்பலர். காவிய மாந்தர்கள், அவரவர்களது உணர்வின் மிகுதிக்கேற்பச் செயல்படுகின்றார்கள். இந்தக்காவியத்தில் இயங்கும் பாத்திரங்கள் உருவத்தால் வேறுபட்டிருக்கலாம். வேறுபாடு, பறவை, மிருகம், அரக்கத் தோற்றம், வேட்டுவத்தோற்றம் முதலியவைகளாக இருக்கலாம், ஆனால், மனிதமனத்துடன் இயங்குபவைகள். மானுடத்தை இயக்குகின்றார் கவிச்சக்கரவர்த்தி.

மனிதமனம், பல்வேறுபட்ட பண்புகளின் கூட்டுறவால் ஆனது. ஒவ்வொரு பண்பும், அதற்கேற்ற உணர்வின் மூலம் மனிதனை இயக்குகின்றது. இயக்கம், அவனது உள்ளுணர்வுக்குரிய பண்பை வெளிப்படுத்துகின்றது. இந்தப்பண்பாடே, மனிதர்களை ஒருவரோடு ஒருவரை நெருங்கவைக்கிறது: உறவு கொள்ளவைக்கின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


உறவு :

உறவு, இன உணர்வாலும் உண்டாகும் : அற உணர்வாலும் வளரும். எந்த உணர்வால் தோன்றினாலும் வளர்ந்தாலும் அந்த உறவுமானுடத்திற்கு உரியதே. ஒன்றற்கு ஒன்று வேறுபட்டிருக்கலாம் உணர்வுகள். ஆனால்அவைகள் மானுடத்தை விட்டு அகலாதவைகளே. இத்தகைய மானுட. அமைப்பை அடிப்படையாகக் கொண்டது இராமாவதாரக் காப்பியம்.

8281

"பிறப்பு உறவு, சிறப்பு உறவு, உடல் உறவு, ஆன்ம உறவு, உடன் பிறவா உறவு, உடன்பிறந்தும் அற்றுப்போன உறவு, அற்றபிறகும், அறாதபடி நிற்கவேண்டுமே என்று ஏங்குகின்ற உறவு" என்ற பல்வேறு வகையான உறவு முறைகளை வகைப் படுத்திக்காட்டுகின்றார் கவிச்சக்கரவர்த்தி இந்தக் காவியத்துள்.

ஒரு உறவுக்கு ஒரு பாத்திரப்படைப்பு: இதன் மூலம் இதனைவிளங்க வைக்கின்றார் புலவர் பெருமான். இல்லை! இல்லை!! ஒன்றுக்குப் பல பாத்திரங்களும் வரும்: பலபாத்திரங்கள் மூலம் ஒரு உறவும் வரும். அத்தனையும் கவிச்சக்கரவர்த்தியின் அற்புதமான, உளநூலாரும் வியக்கும் படியான புதுமைப் படைப்புகள்.

இவருடைய படைப்புக்கு முன்னால் பிரம்மன் படைப்பு எம்மாத்திரம்! நான்முகன் படைப்பு காலத்துக்கு உட்பட்டது. கவிச்சக்கரவர்த்தியின் பாத்திரப்படைப்பு - பா,த்திறத்தால் படைக்கப் பட்டதல்லவா? அதனால், அது, காலம் கடந்து நிற்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


தாய், சேய்: தந்தை, மைந்தன்; அண்ணன் தம்பி, கணவன், மனைவி, பாட்டன், பேரன், போன்றகுடும்ப உறவுகளிலும், 'என் உயிரனையாய்: 'தன் உயிர்த்தந்தை': 'நின்னின் தோன்றினோம்'; 'புதல்வரால் பொலிந்தான் நுந்தை, என்ற குடும்பத்துக்கு அப்பாற்பட்ட உறவுகளிலும். குருசீடன்; என்ற ஞானஉறவிலும் இழையோடி நிற்பது, மானுடம் என்ற மனிதப் பண்பாட்டுக் கூட்டுறவு உணர்வுதான்!

இத்தனை உறவுப்பாத்திரங்களும் இந்தக்காவிய உலகில் உலாவருகின்றன. சிறப்பு என்ன! யார் யார் எல்லாம், இந்தக்காவிய உலகு காணவருகின்றார் களோ, அத்தனை அறிஞர் உள்ளங்களிலும் என்றும் உலாவிக் கொண்டிருக்கும் இந்தப்பாத்திரங்கள். எதனால்?

அத்தனைப்பாத்திரங்களும், கவிச்சக்கர வர்த்தியின்கவிதை உளியால் செதுக்கிச் செதுக்கி உருவாக்கப்பட்ட புத்தம் புதிய வார்ப்புகள் அல்லவா! என்றும் மின்னிக் கொண்டிருக்கும்: காண்பார் உள்ளத்தோடு பின்னிக்கொண்டிருக்கும்.

உயிரினங்கள் உலாவிக் கொண்டிருக்கும் இந்த உலகம், மறையவனால் (பிரம்மன்) படைக்கப் பட்டது. இது ஒருகாலத்தில் மறையும்: அயனால் (பிரம்மன்) உருவாக்கப்பட்டது, அழியும். இந்தக் காவிய உலகப் பாத்திரங்கள், கற்பார் உள்ளத்தில் நிறைந்து நிற்கும்: என்றும் அழியாது நின்று அழகு அளித்துக் கொண்டிருக்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பாத்திரங்கள் பல, படைத்தவன் ஒருவன். ஒரு, கைவண்ணத்தால்-கவிதை வளத்தால் உருவானா லும் இயக்கம் பலவாகும். பாத்திரங்கள் பல்வேறு வகையாக இயங்கினாலும். இரண்டு அணிகளுள் அடங்கும்.

## உடன்பாடு எதிர்மறை :

ஒன்று உடன்பாட்டுப் பாத்திரம்: மற்றொன்று எதிர்மறைப் பாத்திரம். உடன்பாட்டு அணியில் நிற்கும் பாத்திரமும் எதிர்மறைப் பாத்திரமும் தனித் தனியாக நின்றுவிடவன அல்ல. ஓர் அணிப்பாத்திரத் தோடு, மற்றோர் அணிப்பாத்திரத்தைச் சந்திக்க வைப்பார் கம்பநாடர்.

## சந்திக்க வைப்பது எதற்கு :

மனிதவாழ்க்கை வளத்துக்குத் தேவையான தத்துவத்தேனை அள்ளி அள்ளிப் பொழிவதற்கு உடன்பாட்டுப் பாத்திரம், எதிர்மறைப்பாத்திரம் என்றால் என்ன?

'என்னைப்போல் நடந்துகொண்டால் இத்தகைய நன்மையைப் பெறலாம்' என்பதை உணர்த்துவது உடன் பாட்டுப் பாத்திரம். 'எனது செயலைப் போன்று உங்கள் செயல் அமைந்தால், என்னைப் போல இவ்வளவு பெரிய துன்பங்களை அனுபவிப் பீர்கள் நீங்கள்' என்று உலகுக்கு உணர்த்துவது எதிர்மறைப்பாத்திரம்.

இக்காவியத்துள் பாத்திரங்களை இப்படி வகைப்படுத்திக்காண்பது மிகவும் எளிது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



காவியத்தலைவன், நடையில் நின்றுயர் நாயகன் இராமன். இந்த பெருமானது அன்புக்குப் பாத்திரமானவர்கள் உடன் பாட்டு வரிசையில் நிற்பர்: பெருமானது அம்புக்குப்பாத்திரமானவர்கள் எதிர் மறை வரிசையில் நிற்பர்: இராம பிரானது அன்பால் அணைக்கப்பட்ட ஒரு பாத்திரத்தையும், அம்பினால் அடிபட்டு அழிய இருக்கும் ஒரு பாத்திரத்தையும் சந்திக்க வைக்கின்றார் கவிஞர் பிரான்.

அன்பால் அணைக்கப் பட்டவனும், அம்பினால் அடிபட்டு அழிய இருப்பவனும் பிறப்பால் ஒத்தவர் கள்: ஒரே இடத்தைச் சார்ந்தவர்கள்: ஒரே குலத்தினர். ஆனால் சிறப்பால் ஒவ்வாதவர்கள்; வேறுபட்டவர்கள்: வெவ்வேறு இடத்தைச் சார்ந்தவர்களாயினர், நேர்மாறுபட்ட இடத்துக்கு உரியவராயினர் இருவரும். உணர்வாலும் உறவாலும் ஒன்று பட்டவராகயிருந்த இந்த இருவரும், பாசத்தாலும் நேசத்தாலும் வெவ்வேறு வாழ்க்கைப் போக்கிற்கு உரியவராய் மாறுபட்டனர்.

இங்குதான், 'நிற்பது, நில்லாதது; அரிது, எளிது; உண்மை; இன்மை புகழ்ச்சி, இகழ்ச்சி; நல்லுணர்வு அல்லுணர்வு; நன்மை, தீமை: அறம்: இனம்: நன்னெறி, தீதில் நன்னெறி; நேசம், பாசம்; சிறப்பு; பிறப்பு; நீதி, சாதி, நாடு, வீடு, ஆன்ம உறவு, உடல்உறவு" முதலிய வாழ்க்கைத் தத்துவக்கருத்துப் பொருள்கள் தத்தமது வன்மைகளைக்காட்டி விளையாடுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


பந்தய விளையாட்டுக்களத்தில் இறங்கும்போது, இருஅணியினரும் தத்தமது வன்மையைத்தான் மதிப்பார்கள். களத்தில் மோதும் போதுதான், ஒரு அணியரின் வன்மையையும் மற்றொரு அணியரின் மென்மையும் புரிந்து கொள்ளமுடியும்.

காவியக்களத்தின் சந்திப்பிலும், இந்தத் தத்துவக் கருத்துக்கள் மோதும் போதுதான், ஒன்றனுடைய வன்மையையும் மென்மையையும் நாம் உணரமுடிகிறது. வன்மையின் நன்மையை நாடுபவர்கள் நல்லவர்களாவர்: அல்லாதவர் அல்லாரே. நல்லானும் அல்லானுமாகச் சந்திக்க வருபவர்கள் வீடணனும் கும்பகர்ணனும் ஆவர். இருவரும் உடன் பிறப்புச் சகோதரர்கள்: புலத்திய குலமாகிய உயர்பிறப்பினர்: இலங்கை வாழ் இடத்தினர்: புலனடக்கத்தோடு தவம்செய்து வரம்பெற்றவர்கள். இராவணனை அண்ணனாகவும், சூர்ப்பணகையைத் தங்கையாகவும் பெற்றவர்கள்: குலப்பெருமையை மதிப்பவர்கள்: வள்ளுவர் வகுத்த வழியை, வாழ்க்கையில் கடைப்பிடிக்க முயன்றவர்கள்.

ஆனால், இறுதியில் வேறுபட்டவராயினர் எப்படி? வீடணன் நீதி நெறியில் நின்றான்: கும்பகர்ணன் சாதிநெறியைச் சார்ந்தான். நீதி நெறியானுக்கு அறஉணர்வு மேலோங்கிநின்றது. கும்பகர்ணனுக்கு, இன உணர்வு தலை நிமிர்ந்து நின்றது. நீதி நெறி உய்திறம்: சாதிநெறி செய்திறம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# ௨

# அறிமுகம்

**பாத்திரப் படைப்பு :**

உலகப் பொருள்கள், பருப்பொருள் என்றும் நுண்பொருள் என்றும் இருவகைப்படும். இவைகளை, காட்சிப் பொருள் என்றும் கருத்துப் பொருள் என்றும் சொல்லலாம். கண்ணால் காணப்படும் பொருள்கள் அனைத்தும் ஏதேனும் ஒரு உருவம் பெற்றவைகள் அவைகளை உலகில் இயக்கிக் கொண்டிருக்கும் சக்திக்கு உருவம் இல்லை.

உருவம் அற்ற ஒன்றுதான், கண்ணுக்குத் தெரியும் உருவப் பொருள்களை நடமாடச் செய்ய முடியும். அதுதான் எங்கும் இருக்கும்: எல்லாக் காலத்திலும் இருக்கும். உருவம் பெற்றவைகள் காலத்துக்கும் இடத்துக்கும் உட்பட்டவைகள். இவைகள் எல்லை உடையன. இவைகளை இயக்கும் சக்தி எல்லை கடந்தது.

எல்லை கடந்து நிற்கும் ஒன்றினையும் உலகுக்கு எடுத்துக் காட்டும் ஆற்றல் பெற்றவர்கள் உயர் பெரும் கவிஞர்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'எல்லை ஒன்றின்மை எனும் பொருள் அதனை' எப்படிக்காட்டுவது? அதற்குத்தான், கால, தேச எல்லை உடைய வடிவினைக் கண்டனர் கவிஞர்கள்.

அன்பு, அருள், ஆணவம், அடக்கம், கற்பு முதலிய பண்புகள் வடிவம் அற்றவைகள் எங்கும், என்றும் இருப்பவைகள், எல்லை கடந்தவைகள். இவைகளின் ஆற்றலைப் புலப்படுத்தவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? அதற்காகத்தான், கவிஞர்கள் தம் காவியங்களில் பாத்திரங்களைப் படைக்கின்றார்கள். அந்தப்பாத்திரங்களின் மூலம், உருவம் அற்ற பண்பு உணர்வுகள், உலகில் நடம்புரிகின்றன.

இலக்கியங்களில் வரும் எந்தப் பாத்திரமாக இருந்தாலும், ஏதேனும் ஒரு உள்ளுணர்வால்தான், இயங்கிக் கொண்டிருக்கும். பாத்திரப் படைப்பின் நோக்கம், புறக்கண்ணுக்குப் புலனாகத ஒன்றை, யாவருக்கும் புரியும் வண்ணம் செய்வதுதான்; யாவரும் காணவைப்பதுதான். "இற்பிறப்பு என்பது ஒன்றும், இரும்பொறை என்பது ஒன்றும் கற்பெனும் பெயரது ஒன்றும் களிநடம் புரியக் கண்டேன்."

சீதாப் பிராட்டியின் உருவத்தில், கண்ணால் காண இயலாத, இல்பிறப்பு, பொறுமை, கற்பு ஆகியவைகள் காணப்பட்டன.

இதுபோன்றுதான் பாத்திரப்படைப்பில், காணமுடியாததைக் காணலாம். காணக்கூடிய உருவம் எல்லைக்குட்பட்டது. காணமுடியாத உணர்வுகள் நுண்பொருள் எல்லை கடந்தது:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்றும் நிற்பது. இது நினைவில் கொள்ளத் தக்கது. உலகில் வெளியில் தெரியும் பொருள்கள் கால, தேச எல்லைக்கு உட்பட்டது. அழியும் இயல் பினது ஆனால், காவிய உலகில் வரும் உருவப் பொருள்களாகிய பாத்திரப் படைப்புகள், எல்லை கடந்தன! என்றும் நிற்பன: அழியாதன அருவத்தைத் தாங்கிய உருவங்கள் அல்லவா இவைகள்? அதனால் அழிவுளது?

வீடணன் கும்பகர்ணன் என்ற பாத்திரங்கள், கவிச்சக்கரவர்த்தியின் கவிதை வளத்தால் எவ்வளவு காலத்துக்கு முன்பு உருவாக்கப் பட்டவைகள். இன்றும் நம் உள்ளங்களில் உலாவிக் கொண்டிருக்கின்றனவே! என்றும் உலாவும், கற்பார் உள்ளங்களில், உலகப் பொருளின் எல்லை இவைகளுக்கு இல்லை. அருவப் பொருள்கள் போன்றே, கவிஞரின் படைப்புப் பொருள்களாகிய உருவப்பொருள்கள் எல்லை கடந்து நிற்கும்.

'எல்லையொன்றின்மை எனும் பொருளதனை, கம்பன் குறிகளால் காட்டிட முயன்றான்" என்பது பாரதியாரின் கம்பரைப்பற்றிய மதிப்பீடு.

வீடணன், கும்பகர்ணன் என்ற பாத்திரங்களின் (குறிகளின்) மூலமாகக்கம்பன் காட்டிட முயன்ற எல்லை ஒன்று இல்லாத பொருள்யாது? "நெறி உணர்வு' எல்லையற்றது; நிலைத்து நிற்பது என்றும் அழியாதது: உருவம் அற்றது: அருவமானது இதுதான் இந்த இருபாத்திரங்களின் மூலம் செயல் படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


வீடணன், கும்பகர்ணன் தனித்தனிப் பாத்திரங்கள்தானே! எப்படி ஒரே நெறி உணர்வில் செயல்படுவர்? இங்கு, கவிச்சக்கரவர்த்தி, தமது பாத்திரப் படைப்புக் கலைத்திறனைக் காட்டியுள்ளதைக் காணலாம். இருவரிடமும் நெறியும் உண்டு: உணர்வும் உண்டு. ஆனால், அவைகள் செயல்படும் முறைகளில் வேறு படுவன. அதனால் இவ்விருபாத்திரங்களும் தனித்தனிப்போக்குடையவைகளாகின்றன.

நெறி, நீதியின் அடிப்படையிலும் உணர்வு, அறத்தின் அடிப்படையிலும் செயல்படுகின்றன வீடணனிடம்.

கும்பகருணனிடமோ, நீதி, சாதியின் அடிப்படையிலும், உணர்வு, இனத்தின் அடிப்படையிலும் செயல்படுகின்றன.

ஆகவே, ஒவ்வொருவரும் தனித்தனித் தோற்றத்தினராய் படைக்கப்பட்டுள்ளனர்.

நுண்பொருளையும் நுணுக்கமாகப் பிரித்துக் காட்டி, அதனை இருவேறு பாத்திரங்களில் செயல்படுத்திக் காட்டுவதுதான் காப்பியக் கலைத்திறன். இந்தக் கதாப் பாத்திரங்களை அறிமுகப் படுத்தும் போதே இந்த நுணுக்கத்தைக் குறிப்பாகக் காட்டியுள்ளார் கவிச்சக்கரவர்த்தி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

## அறிமுகத் தொடக்கம். கும்பகருணன் :

இராமாவதாரக் காப்பியத்தில், முதலில் தெரிவிக்கப்படுவது கும்பகருணன் பெயர்தான். அண்ணன் பெயர்தானே முதலில் வரவேண்டும்! அதுவும் யார் வாய்வழியாக ஒலிக்கப்படுகின்றது? அவனுடைய அருமைச்சகோதரி சூர்ப்பணகையின் வாய் உதிர்த்த முதல் பெயர் கும்பகருணன்.

தனது அன்புச் சகோதரியைப்பற்றி, "பெய் தவத்தினோர் பெண்கொடி எம்முடன் பிறந்தாள் செய்தகுற்றம் ஒன்று இல்லவள்." என்று கும்பகருணன் சொல்லுவதன் மூலம், இவர்களது குடும்பப்பாசத்தை உணரலாம்.

தனது அண்ணன் கும்பகர்ணனைப்பற்றி எந்த சூழ்நிலையில் சூர்ப்பணகை சொல்கின்றாள் என்பதைப் பார்த்தால், இவள் தன் அண்ணனை எப்படி மதித்திருந்தாள் என்பதை உணர்ந்து கொள்ளலாம், சூர்ப்பணகை, தனது கொடுஞ் செயலுக்குத் தண்டனையாக, இலக்குவனால் மூக்கறு பட்டாள். மூக்கு இழந்த நிலையில், இந்த வலியைத் தாங்க முடியாமல் அழுகின்றாள்.

அழுகைக்கு மூக்கு போனது மட்டும் காரணம் அல்ல! மானமும் போயிற்றே! அதுவும் தனக்கே உரிய இடத்தில் அல்லவா, இந்த மானம் போன அவல நிலை ஏற்பட்டது. (தண்டகாரணியம்) அழுகை வாராமலாயிருக்கும். திசைகள் எல்லாம் ஒலிக்குமாறு அழுகுரல் எழுப்பியும் யாரும் துணைக்கு வரவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இதற்குப்பிறகுதான், தனது அருமை அண்ணன் கும்பகருணன் பெயரைச் சொல்லி, மற்றவர்கள் செயலை வெறுக்கின்றாள் சூர்ப்பணகை,

"கல்ஈரும் படைத்தடக்கை அடல்,கர தூடணர் முதலா
அல்ஈரும் சுடர்மணிப்பூண் அரக்கர் குலத்து அவதரித்தீர்!
கொல்ஈரும் படைக்கும்ப கருணனைப்போல் குவலயத்துள்
எல்லீரும் உறங்குதிரோ? யான்அழைத்தல் கேளீரோ?" (கம்2844)

கும்பகருணன், தனது உறவினர்க்கு வரும் துன்பத்தைத்துடைப்பதற்கு, (உறவினரின் பகையை அழிப்பதற்கு) எல்லாநேரமும், ஆயுதத்தைக் (படை) கையில் வைத்திருப்பான். அது பகைவரை உடனே கொல்லக்கூடிய ஆற்றல் பெற்றது, (கொல்ஈரும் படை). அப்படி ஆயுதம் இருந்தாலும், அவன் அதனை மறந்து உறங்கிக் கொண்டேயிருப்பான். எழுப்பிவிட்டால், பாசத்தினரைக் காப்பதற்காகப் படையைப் பகையின்மேல் செலுத்துவான்.

தன்னைக்காப்பதற்காகவே, தண்டகாரணியத்தில் தங்கியிருக்கும்கரன், தூடணன் முதலிய அரக்கர்கள் துணைக்கு வராததால், 'எல்லோரும் கும்பகருணனைப்போல் உறங்கிக் கொண்டிருக்கிறீர்களா'' என்பது சூர்ப்பணகையின் அழுகைக் குரலோடு மிதந்து வந்தகேள்வி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இது எதைக் காட்டுகின்றது? 'கும்பகருணன், உடல் உறவுப்பாசத்தினன்: படைஎடுத்தகையினன்: உறங்கும் இயல்பினன் : தங்கை மூக்கை இழந்தது போன்று, தானும் மூக்கை இழக்கும் செயலினன் பாசத்தினரின் குற்றம் பாராதவன்."

என்பது சூர்ப்பணகையின் அழுகுரல் அழைப்பு ஒலி தெரிவிக்கும் கும்ப கருணனைப்பற்றிய கருத்து ஒருவரிடத்தில் எத்தனை நற்குணங்களும், தீய குணங்களும் இருந்தாலும், அவைகளில் எது அதிகமாகச் செயல்பட்டிருக்கின்றதோ அதை வைத்து தான் அந்த மனிதன் பிறரால் கணக்கிடப் படுகின்றான். கும்பகருணனிடம் மிகுதியும் காணப் படுவது உறக்கம். அதனால்தான் அவன் எங்கு பேசப்பட்டாலும் "உறங்குகின்ற கும்பகருணன்" என்று பேசப்படுகின்றான்.

கும்பகருணனும் தோற்றும் உனக்கே பெருந் துயில்தான் தந்தானோ? என்பது ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவைத் தொடர்.

**அடுத்த அறிமுகம் : கும்பகருணன் :**

இனி, கவிஞரே. தமது பாத்திரப்படைப்பாகிய கும்பகருணனை அறிமுகம் செய்து வைப்பதைக் காண்போம்.

உறக்க நிலையிலேயே, கும்பகருணனை, கதைக் களத்துக்குக் கொண்டுவருகின்றார் கவிச்சக்கர வர்த்தி. தன்னை மறந்து உறங்கும்போதுதான், ஒரு மனிதனது உள்ளத்தின் உண்மை நிலை வெளிப்படும். அகத்தின் அழகு முகத்தில் வெளிப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


படுவதற்குரியகாலம். தூக்கத்தில் மூழ்கியிருத்தல் தான். கும்பகருணனது புறத்தோற்றமும் அகத் தோற்றமும் ஒருங்கே காட்டப்படும் இடம், இலங்கையில் அவனுக்குரிய மாளிகை. நேரம், இரவு.

இதைக்கதைக் களத்துக்குக் கொண்டுவர வேண்டுமே? எப்படி? அனுமன், இராமபிரானது ஆணையின்படி, சீதாப்பிராட்டியைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கு, இலங்கை நகர் செல்கின்றான். அவன் சென்றநேரம் இராக்காலம். ஒவ்வொரு மாளிகையாகப் பார்த்துக் கொண்டு வருகின்றான் அனுமன்.

அந்த வரிசையில் இந்தக் கும்பக்கருணன் மாளிகை வருகின்றது. கண்டான் அனுமன். யாரை? அதைக் கவிச்சக்கரவர்த்தி, தமது கூற்றாகக் கூறுகின்றார். "மாருதி, மலையின் வைகும் கயக்கம் இல்துயற்சிக் கும்பகருணனைக் கண்ணின் கண்டான்" என்பது கவிக்கூற்று.

அனுமனால் காணப்பட்ட கும்பகருணன், மலை போன்றபெரிய தோற்றத்தினனாக உள்ளான்: கலக்கம் இல்லாத தூக்கத்தில் மூழ்கியுள்ளான். (கயக்கம் - கலக்கம் : துயற்சி - தூக்கம்) சிறிதும் கலக்கம் இல்லாத உறக்கத்தில்தான் தெளிவான உள்ளம்தோன்றும். அரக்கனின் புறத்தோற் றத்துக்கு, மலையைக் காட்டிய கம்பர், கடலையும் ஆதிசேடனையும் கூட காட்டுவார்: அவனது கருநிறத்துக்கு இருளை உவமையாக்குவார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'பன்னக அரசுஎன, பரவைதான்என,
துன்இருள் ஒருவழித் தொக்கது ஆம்என'
(நகம் பாம்பு : அரசு-ஆதிசேடன்: பாவை-கடல்
துன்இருள்-நெருங்கிய இருட்டு. கருமை)

புறத்தோற்றத்துக்கு இத்தனை உவமை காட்டிய கவிஞர், அகத்தோற்றத்தை ஒரே உவமையின் மூலம் உணர்த்துகின்றார். பாத்திரப் படைப்பு, புறத்தோற்றத்தை முக்கியமாகக் கொண்டதல்ல! அகத்தோற்றம்தான் மனிதனை இன்னார் என்று உலகுக்குக் காட்டுவது. அகம்தான், ஒருவரோடு ஒருவரை அகற்றுவதும் அணைப்பதும் ஆகும்.

"உன்னஅரும் தீவினை உருக்கொண்டென்னவே."

எண்ணிப்பார்ப்பதற்கும் முடியாத கொடுமையான பாவங்கள் எல்லாம் ஒருவடிவம் பெற்று இருந்தது போன்று படுக்கையில் கிடந்தான். கும்பகருணன்.

தீவினைக்கு (பாபக்குணத்துக்கு) உருவம் இல்லை. அது அருவமானது. அந்தஅருவம் இப்போது இந்தக் கும்பகருணன் உருவமாகத் தோற்றமளிக்கிறது.

தீவினையின் மொத்த உருவம் கும்பகருணன் இதுதான் இவனது அகத் தோற்றம்.

இந்த அகத் தோற்றத்தை, அங்கு இப்போது, கூர்ந்து நோக்கிக் கொண்டிருக்கும் அனுமனைக் கொண்டு மேலும் தெளிவாக்குகின்றார் கம்பநாடர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'ஆவது ஆகிய தன்மை அரக்கனை, அரக்கர்
கோ எனா நின்ற குணம் இலிஇவன்'
எனக் கொண்டான்?

கும்பகருணனை உற்று நோக்கிய, அனுமன், 'இவன், அரக்கர் தலைவனாகிய, சிறிதும் நற்குணம் அற்ற இராவணன்' என்று முடிவு செய்தான். இராவணன் என்று உணர்ந்த உடன், அவனைக் கொல்லத் துணிந்தான் அனுமன். இருப்பினும், புறத்தோற்றம், இராவணனிடமிருந்து பிரித்துக் காட்டுகின்றது. தோள் இருபது இன்மை. அதனால் அடங்கினான்.

அனுமனது கோபம் அடங்கப் பெற்றதற்கு கவிச் சக்கரவர்த்தி கொடுத்துள்ள உவமை சால அழகிது "மறுகி எறிய முனிவு எனும் வடவை வெங்கனலை அறிவு எனும் பெரும்பரவை அம் புனலினால் அவித்தான்."

கோபமாகிய நெருப்பை அறிவு என்ற தண்ணீரைக்கொண்டு அவித்து விட்டான். கோபம். வடவா முகாக்கினியாக வளர்ந்தது: அதனை அவிப்பதற்கு நீர் கொஞ்சமாக இருந்தால் போதாதே! அதுவும், அறிவு என்னும் கடல் நீராக வளர்ந்துவந்தது.

இவ்வளவு கோபத்துக்குக் காரணம், இவனை இராவணனாக உணர்ந்ததே, பெரும் பாவியாகிய இராவணனாக உணரவைத்தது அவனது அகத் தோற்றம். புறத்தோற்றக் காட்சி அனுமனது கோபம் அடங்குவதற்குக் காரணம் ஆயிற்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இதனால் தெரிவது என்ன? 'கும்ப கருணன் அகத்தோற்றத்தால், அவன் அண்ணன் இராவ ணனுக்குச் சமமானவன் தான்' என்பது.

இதனை உணர்ந்து தெளிந்து துணிந்தவன் யார்? எதனையும், கண்ட உடன், கணித்து எடை போடும் ஆற்றல் பெற்றவனாகிய அனுமன். இவன், 'எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப் பொருளின் மெய்த் தன்மையைக் காணும் நுண்ணறிவினன்' அல்லவா? அதனால்தான், அனுமன் கண்ட முடிவு அனைவரின் ஏற்புடைமைக்கு உரியதாகிறது.

**வீடணன் அறிமுகம்:**

அண்ணனைக்கண்டு தெளிந்த அனுமனைக் கொண்டே தம்பியாகிய வீடணனையும் உலகுக்குக் காட்ட வைக்கின்றார் கவிஞர் பிரான்.

கும்பகருணன் மாளிகையில் நுழைந்த அனுமன், அதே இரவு நேரத்தில், அந்த வரிசையில் உள்ள வீடணனது மாளிகையிலும் புகுந்தான். புக்கான். யார் மாளிகை?

**"வேந்தர், வேதியர், மேல் உளோர், கீழ்உளோர், விரும்பப்**
**போந்த புண்ணியன் கண்அகல் கோயிலுள் புக்கான்."** (கம்-4969)

அனுமன் புகுந்தது, கோயில். யாருடையது? புண்ணியனுடையது: யார் அந்தப் புண்ணியன்'. அரசர்கள் அந்தணர்கள், விண்ணுலகத்தவர் மண் ணுலகத்தவர் முதலிய யாவரும் விரும்பிப் போற்றும் படியாகப்பிறந்த வீடணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இங்கு வீடணனது புறத்தோற்றமே சொல்லப் படவில்லை. அகத்தோற்றம் மட்டுமே காட்டப் படுகின்றது.

ஏன்? அடுத்து, காட்டப் படுகின்ற புறத் தோற்றத்துக்குக் காரணம் உணர்த்துவதற்கு.

தம்பி வீடணன் புண்ணியன்: அண்ணன் கும்ப கருணன் பாவி. இருவரும் அகத்தோற்றத்தால் வேறுபட்டவர். புறத்தோற்றத்தால் ஒத்த கருநிறத்தவர்.

இரண்டன் கருமைக்கும், அகத்துக்கு ஏற்ப வேறுபாடு காட்ட வேண்டியது, இந்தப் பாத்திரங் களைப் படைத்தளித்த கவிஞரின் கடமை யல்லவா? கடமை அடுத்த கவிதையாக உருவெடுத்து வருகின்றது.

'பளிக்கு வேதிகைப் பவளத்தின்
கூடத்து, பசுந்தேன்
துளிக்கும் கற்பகப் பந்தரில்
கருநிறத் தோர்பால்
வெளித்து வைகுதல் அரிதுஎன
அவர்உரு மேவி,
ஒளித்து வாழ்கின்ற தருமம்
அன்னான்தனை உற்றான்"

(கம். 4970)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


வீடணன் தரும உருவினன் அறவடிவினனாக யிருத்தலால்தான், இவனை, ஆட்சிபுரியும் அரசர்களும் அறம் உரைக்கும் அந்தணர்களும், விண்ணகத் தேவர்களும், மண்ணக மக்களும் ஒருசேர விரும்புகின்றனர்: போற்றுகின்றனர். அறம் உருவம் அற்றது: அருவமானது. இது இப்போது வீடணன் வடிவமாக உருவெடுத்துள்ளது.

அறத்தின் நிறம் வெண்மை. சத்துவ குணத்தை வெள்ளை நிறமாகச் சொல்வது தத்துவ மரபு. அந்த வெண்மைநிற அறம், இலங்கையில் உள்ள அரக்கர்களுக்குப் பயந்து, அவர்களது நிறத்தைப் போலவே, கருநிறம் பெற்றதாக வீடணனிடம் உள்ளது.

வீடணனது கருநிறப் புறத்தோற்றத்துக்குக் காரணம், 'உள்ளிருக்கும் அற உணர்வு, வெளித்து வைகுவது அரிது என, அவர் உருமேவி ஒளித்து வாழ்கின்றது' என்று சொல்லப்படுகின்றது.

கும்பகருணனின் கருநிறத்துக்குக் காரணம் உள்ளிருக்கும் தீவினை-பாவ உணர்வு அப்படியே உடலில் வெளியேறியுள்ளது. தீவினை கருநிறம் தாமசகுணத்தைக் கருநிறமாகச் சொல்வது தத்துவமரபு.

கும்பகருணனை 'குணம் இலி' எனக்கணக்கிட்ட அனுமன், வீடணனை எவ்வண்ணம் மதிப்பீடு செய்தான். அதை அடுத்த கவிதை காட்டுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


"உற்று நின்று, அவன்உணர்வைத்
தன்உணர்வினால், உணர்ந்தான்;
'குற்றம் இல்லதுஓர் குணத்தினன்
இவன் 'எனக் கொண்டான்" (கம் 4971)

'குற்றம் என்பதே சிறிதும் இல்லாத ஒப்பற்ற குணத்தினனாக உள்ளான் வீடணன்' என்பது அனுமனின் கணிப்பு. இதனை எப்படி உணர்ந்தான்? வீடணனை நன்கு உற்றுப் பார்த்தான்: தனது நுண் உணர்வின் ஆற்றலைக் கொண்டு, அவன் நல்லுணர்வை அளந்து கண்டான். அதனால் உள்ளபடி வீடணனை உணர்ந்து தெளிந்து கொண்டான், அனுமன். அனுமனது கணிப்பின்படி. அண்ணன் கும்பகருணன் 'குணம்இலி' தம்பி வீடணன், குற்றம் இல்லதுஓர் குணத்தினன். இருவரது அகத்தோற்றங்களையும் நன்கு படம் எடுத்து வெளிக்காட்டி விட்டான் அனுமன். உள்ளதை உள்ளபடி காணும், காட்டும் ஆற்றல் அனுமனுக்கே உண்டு. ஏன்?

இவன்தானே, 'செவிக்குத்தேன் என இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகனாக, காவியத்தில் உலாவருகின்றான்! அதனால், இந்தக் கவிக்கு நாயகனின் கணிப்பு, காவியத்தின் இறுதி வரைபொய் கலவாத மெய்யாகவே பரிமளிக்கின்றது. இலங்கையிலேயே இராகவன் புகழைப்பாடும் ஒருவாய்ப்பு அனுமனுக்குக் கிட்டுகின்றது. அதனைக் கேட்கும் வாய்ப்பு,அறஉருவினனான வீடணனுக்குக் கிட்டுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இந்த வாய்ப்புக்குக் காரணமானவர் யார்? அனுமன் மூலகாரணம்: இராவணன் துணைக் காரணம். இந்த இருகாரணங்களாலும் கிடைத்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொண்டு விட்டான் அனுமச் செல்வன். அந்தச் சந்தர்ப் பத்தையே, தனது அறஉணர்வை வெளிப்படுத்தப் பயன்படுத்திக் கொண்டான் வீடணன்.

## நீதி வீடணன்

அசோகவனத்தில் சீதாப் பிராட்டியைக்கண்டு, தான்வந்த வேலையை ஓரளவு முடித்துக் கொண்ட அனுமன், அத்தோடு நிற்கவில்லை. மேலும், பிராட்டியைப் பெருமானிடமிருந்து பிரிக்கும் கொடுஞ்செயலைச் செய்த இராவணனை நேரில் காணவேண்டும்: இராமபிரானது ஆற்றலையும், தோற்றத்தையும் அவனுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் எனவும் திட்டமிட்டான்.

திட்டம் கைகூடியது, எப்படி? எது ஒன்று சோகத்தை அழிக்கும் அசோகவனமாக, இராவணனது ஆட்சியில் சிறந்து விளங்கிக் கொண்டிருந்ததோ அந்தக்கனகக் கற்பகச் சோலையை அழித்தான் அனுமன்.

அதனைக் கேள்வியுற்ற இராவணன், அனுமனைப் பிடித்துவர பலரை ஏவினான் அனைவரும் அனுமனது ஆற்றலுக்கு முன்னால் நிற்கமாட்டாமல் அழிந்தனர். இறுதியில் இந்திர சித்தனது பிரம்மாத்திரத்துக்குக் கட்டுப்பட்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அனுமன் அரக்கனது அத்தாணி மண்டபத்துக்குச் சென்றான். இங்குதான், 'நீயார்?' என்று இராவணன் கேட்டகேள்விக்கு, அனுமன் அளித்த விடையில் இராமபிரானது புகழ் பரக்கப் பேசப்படுகின்றது.

'தக்கோர் இடர்துடைத்து, ஏக ஈண்டுப் பிறந்தனன், தன் பொன் பாதம் ஏத்துவார் பிறப்பறுப்பான்' என்பன போன்ற பல தொடர்களை, அனுமனின் திருவாய், உதிர்த்துப் பொழிந்தன. இதனைக் கேட்ட வீடணன், இராம பிரானது தெய்வத் தன்மையை உணர்ந்தான். தனது அற உணர்வுக்கு எற்றஇடம் அங்குதான் என்பதை அப்போதே முடிவு செய்திருக்க வேண்டும் வீடணன்.

ஆனால், இதனைக்கேட்ட இராவணனோ, தனது ஆணவப்போக்காமல், இராமபிரானது ஆற்றலை உணராதவனானான். உணராதது மட்டும் அல்ல! எதிரியின் பெருமையைத் தனது பேரவையில் புகழ்ந்து பேசிய அனுமனுக்குத் தண்டனை கொடுக்கவும் துணிந்தான்.

அத்துணிவு, அனுமனைக் கொல்லுமாறு ஆணை பிறப்பித்தது. 'கொல்மின்' என்றகட்டளை பிறந்தது அண்ணன் இராவணன் வாயிலிருந்து. உடனே, 'நில்மின்' என்ற தொடர் ஓடிவந்தது அங்கு இத்தொடரை அந்தப்பேரவையில் ஓடச்செய்தது யார்? வீடணன். ஏன்? இவன் நீதியான், ஆகையால் அநீதியை எதிர்க்கின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கொல்மின் என்றனன்! கொல்லியர் சேர்தலும்,
"நில்மின்" என்றனன், வீடணன் நீதியான்'
(கம்5914)

என்பது கவிதைத் தொடர், இதனைத் தொடர்ந்து நீதியைப் பலபடியாக எடுத்துப் பேசி, இறுதியாக,

"மாதரைக் கொலைசெய்தார்கள் உளர்என
வரினும்,
தூதரைக் கொன்றுனார்கள் யாவரே
தொல்லை நல்லோர்"

என்று சொல்லி முடித்தான் வீடண நீதியான்.

அதனால் அனுமனைக் கொல்லாது. வாலில் நெருப்பு வைத்தான் இராவணன். இந்தக் கதைக்களம், இராமபிரானது தெய்வத்தன்மையை தான் உணர்ந்து கொள்வதற்கும், தனது அற உணர்வை வெளிப்படுத்துவதற்கும் வீடணனுக்குப் பயன்பட்டது. வீடணனது நடுநிலைதவறா நீதிநெறியை அனுமன் தெரிந்து கொள்வதற்கும் பயன்பட்டது.

இந்தப் பேரவையில், கும்பகருணன் இருந்தானா? இல்லையா? இருந்திருக்க வேண்டும் என்பதை அனுமானத்தால் ஊகிக்கலாம்.

இராவணனது மந்திராலோசனையில் இராமபிரானது ஆற்றலைப் பற்றிப் பேசுகின்றான் உறக்கத்திலேயே காலம் கழித்தவனுக்கு இது எப்படித்தெரிந்திருக்க முடியும்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


அனுமன் எடுத்துச் சொல்லும் போது, அதனை, இந்தப் பேரவையில் கும்பகர்ணன் கேட்டிருந்திருக்க வேண்டும். 'கொல்மின்' என்றபோதும், நில்மின் என்றபோதும்கும்பகருணன்யாதும்சொல்லமுடியாத நிலையில் அமர்ந்திருந்திருக்க வேண்டும்.

"Free of cost, and with the compliments of the Department of Education, Govt. of India, New Delhi."

**கும்பகருணன் நிலை:**

'உன்னரும் தீவினை உருக்கொண்டென்னவே' என்றும், 'குணம் இலி' என்றும், கும்பகருணனது அகத்தோற்றம் காட்டப்பட்டது. அதாவது, பாவத்தின் மொத்த உருவமாக உள்ளான்; நற்குணம் ஏதும் இல்லாதவன்: குணம் இன்மையால், அண்ணன் இராவணனை ஒத்தவனாக உள்ளான் என்பது கருத்து.

ஆனால், இதற்குப்பிறகு, எங்கும், தீவினை யோன் என்றோ, குணம் இல்லாதவன் என்றோ கும்பகருணன் கூறப்பட வில்லை. ஏன்?

இதனை நன்கு ஆராய்ந்து பார்த்தால், கும்பகருணன், விடணனோடு, அந்தப் பேரவையில் இருந்திருக்க வேண்டும்என்ற உண்மையை உணரலாம். எந்தப்பேரவை? இராவணனுக்கு. நீதியை எடுத்துக்கூறி, இராமபிரானது தெய்வீக ஆற்றல்கலந்து மானுடத்தின் பெருமையை அனுமன் விரிவாக விளக்கிப் பேசினானே அந்தப்பேரவை.

இராமபிரான் யார்? சீதாப்பிராட்டி யார்? அவர்களைப் பிரித்தது ஏன்? வஞ்சகச்செயலின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


தீமை எவ்வளவு கொடியது? தான் யார்? வந்தது எதற்கு? முதலியவற்றை வரிவாக எடுத்துச் சொன்னான் சொல்லின் செல்வன் அனுமன்.

கும்பகருணன் இதைக் கேட்டிருந்திருக்க வேண்டும். இராகவன் புகழ் இவனது செவிக்கும் தேன் என இனித்திருந்திருக்க வேண்டும். இப்படித் திருமால் சீர் கேட்ட பிறகு, ஓரளவு திருந்தியவனாக மாறிவிட்டான். இவன், உள்ளம் திருத்தம் பெற்றிருப்பதை அடுத்த காட்சியிலே காணலாம்.

அடுத்த பேரவைக் கூட்டத்தில் கும்பகருணன் பேசும் பேச்சு, இராவணன் செய்ததீச்செயலை, தான் உணர்ந்ததையும், இராமன் பெருமையைப்புரிந்து கொண்டதையும் நன்குபுலப்படுத்தும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# 3

# உணர்வுகள் இரண்டும் ஒன்றிய இடம்

**பேரவை :**

இலங்கை நகர் புதுமைக் கோலத்துடன் விளங்குகின்றது இப்போது. ஏன்? பழையது என்ன ஆயிற்று? அனுமனது வாலில் வைக்கப்பட்ட நெருப்பு அவனைச் சுடவில்லை. வைத்தவர்களைச் சுட்டது வைத்த நகரத்தையே சுட்டு எரித்து விட்டது.

"நினைக்கும் கேடு தனக்கேவரும்" என்ற பழமொழி எந்தக் காலத்துக்கும் உண்மையானது தான்!

அனுமனை அவமானப்படுத்த எண்ணி, வாலில் தீயைக் கொளுத்தச் செய்தான் இராவணன். ஆனால், அத்தீ, இலங்கை நகரத்தையே சுட்டெரித்து, இராவணனுக்கே பெரிய அவமானத்தை ஏற்படுத்தி விட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


என்றும் காணாத அவமானம்: மீள இயலாத அவமானம். மானம் போன நிலையை இராவணனே எடுத்துச்சொல்லும் நிலை ஏற்பட்டது. அதுவும் எங்கு? யார் முன்னிலையில்? தம்பிகள், மந்திரிகள் மக்கள் முன்னிலையில், தானே சொல்லி ஏங்குகின்றான். நகர் எரிந்த பிறகு, மயன் என்ற தேவதச்சன் (பொறி இயலாளன்) மூலமாக, நகரை நன்கு புதுப்பித்துக் கொண்டான் இராவணன்.

மன்னையின் அழகு உடைத்தாய் அமைந்த நன் நகரில், எழில் தரு மண்டபம் ஒன்று எழுப்பப் பட்டது.

அந்த அழகு மண்டபத்தில் பேரவைக் கூட்டம் நடைபெறுகின்றது. இங்கு ஒரு பெரிய விவாத அரங்கத்துக்கு ஏற்பாடு. இது யாருடையது?

அவமானத்தால் மனம் சோர்ந்து வாடி நிற்கும் இராவணன்தான், இந்த ஏற்பாட்டைச் செய்தான் வந்த அவமானத்தைப் போக்குவது எப்படி? இனி வாராமல் தடுப்பது எப்படி? இந்த ஆலோசனைக்குத் தான் இந்தப் பேரவை, கூட்டப்பட்டுள்ளது.

மானத்தோடு வாழ்பவன், தனது சொந்த இச்சையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக எந்தத்தீய செயலைத் செய்யத் துணிந்தானோ, அப்போது யாரிடமும் யோசனை கேட்பதில்லை. அந்தத்தீய செயலின் காரணமாக, யாவரும் காணவந்தஅவமானத்தைப் போக்கிக் கொள்வதற்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


யோசனை. இனி என்ன செய்யலாம்? விவாதத்தை, பேரவைத் தலைவனாகிய இராவணன் தான் தொடங்கி வைக்கின்றான்.

"சுட்டது குரங்கு; எரிசூறை யாடிடக்
கெட்டது கொடிநகர்; கிளையும் நண்பரும்
பட்டனர்! பரிபவம் பரந்தது எங்கணும்;
இட்டஇவ் அரியணை இருந்தது, என்உடல்."
(கம்6083)

"மற்றுஇலது ஆயினும்" "மலைந்த வானரம்
இற்றுஇலதாகியது" என்னும் வார்த்தையும்
பெற்றிலம்! பிறந்திலம் என்னும் பேர்அலால்,
முற்றுவது என்?இனி, பழியின் மூழ்கினாம்!
(6084)

இலங்கை மன்னன் மனம்நொந்து பேசிய பேச்சு இது, போனது மானம்: நொந்தது மனம்: வந்தது வார்த்தை. எதற்கு வந்தது? சென்றதைத் திருப்புவதற்கு.

இதற்கு முன்பு, ஒருபோதும், மனம் நொந்த நிலையில் பேசி அறியான் இராவணன்.

எந்த ஒரு உயிரினத்தை மிகக் கேவலமாக எண்ணியிருந்தானோ, அந்தக்குரங்கு, தனது நகரைச்சுட்டுப் பொசுக்கி விட்டது என்றால், அந்த அவமானத்தை என்ன என்று சொல்வது? அதுவும் அந்தக்குரங்கு இங்கேயே இறந்தது (இற்று இலது) என்றவார்த்தையைக்கூட கேட்க முடியவில்லையே என்றஏக்கம் இராவணன் நெஞ்சைப் பிளக்கிறது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இப்போது மூழ்கியிருப்பது பழி வெள்ளத்தில் முற்றுவது என் இனி? என்பதுதான் இறுதியில் இராவணன் கேட்ட கேள்வி. 'இனி செய்ய வேண்டியது என்ன?' இந்தக் கேள்விக்குத்தான் பேரவையினின்றும் விடைவர வேணடும்.

பேரவையில் இருப்பவர் அனைவரும், இலங்கை மன்னின் ஆளுகைக்கு உட்பட்டும், ஆணைக்கு அடங்கியவரும் ஆவர். ஆனால், தம்பிகள் இருவரும் கூட இப்படிப்பட்டவர்கள்தானா? இல்லை! அவர்களது, ஆக்க பூர்வமான பேச்சைப் பார்க்கும் போது மற்றவர்களினும் வேறுபட்டவர் என்பது தெரிகின்றது.

அவமானத்தைப் போக்கும் வழி, மானுடர் இருவருடன் போர்செய்து அவர்களை அழிப்பது. ஏன்? அவர்கள்தானே, இந்தக்குரங்கை அனுப்பிவைந்து, இங்கு அவமானம் ஏற்படுவதற்குக் காரணமாகயிருந்தவர்கள். ஆகவே, அந்த மானுடவருடன் போர் செய்வதே, இனி, மேற்கொள்ள வேண்டிய செயல்.

இந்தயோசனையைக் கூறியவர்கள், சேனைத் தலைவர், மகோதரன், வச்சிரதத்தன், துன்முகன், மாபெரும்பக்கன், பிசாசன் முதலிய அமைச்சர் வரிசையைச் சார்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் அரிசனின் அதிகாரத்துக்கு அஞ்சிநடப்பவர்கள்: பதவியைக் காப்பாற்றிக்கொள்ள பண்பையும் கைவிடத்துணிந்தவர்கள். இவர்கள் மன்னனின் மனம் எதை விரும்புமோ அதைமட்டுமே எடுத்துக் கூறும் மந்திரிகள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


**கும்பகருணன் :**

'எம்பி எனகிற்கில் உரைசெய்வல் இதம்' என்ற முன்னுரையோடு தொடங்குகின்றான் கும்பகருணன். அண்ணன். தம்பி என்ற உறவுமுறை இருப்பதால் தான், நன்மையானவற்றையே (இதம் - நன்மை) சொல்வதாக இவன் கூறுகின்றான். இதை இராவணனும் நம்பவேண்டும். 'தம்பி சொல்வது நமது நன்மைக்கே' என்ற நம்பிக்கை இராவணனுக்கு வரவேண்டும்.

இதற்குமுன்பு பேசியவர்கள் உறவு அற்றவர்கள்: ஆணைக்குக் கட்டுப்பட்டுதமது நன்மையையே நாடியவர்கள் என்பது குறிப்பு.

நன்மைதான் வரவேண்டும் என்ற நோக்கத்துடன் பேசுபவர்களின் பேச்சு சிறிது கடுமையாகத்தான் இருக்கும். அப்படித்தான் பேசுகின்றான் கும்பகருணன்.

**'நீஅயன் முதல்குலம் இதற்குஒருவன்**
**நின்றாய் :**
**ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்து அறிவு**
**அமைந்தாய் :**
**தீயினை நயப்புறுதல் செய்தனை; தெரிந்தால்,**
**ஏயின உறத்தகைய இத்துணைய வேயோ?'**
**(கம்6118)**

'பிரம்மன் முதலாக வந்த இந்தக்குலத்தில் நீ ஒருவன் தான் ஒப்பற்றவனாய் நிலைத்து நின்றாய்: உயர்ந்த குலப்பிற்கு ஏற்ப அளவற்றை வேதங்களைக் கற்று. அதனை உணர்ந்து தெளிந்த அறிவு நிரம்பப் பெற்றாய். அப்படி, யிருந்தும், (தீயாசெயலாகிய-பிறர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


மனை நயத்தலாகிய? தீயினை (தீ - நெருப்பு) விரும்புதலாகிய காரியத்தைச்செய்து விட்டாய் இதனை ஆராய்ந்து பார்த்தால், விதியினால் ஏவப்பட்டுவிளைவன இத்தோடு நிற்காது. இன்னும் வரும்.' என்பது இதன் பொருள்.

'இராவணனது செயல், பிறந்த குலப் பெருமைக்கும், கற்ற உயர்கல்விக்கும் ஏற்பஅமைய வில்லையே! தீ-நெருப்பு: நெருப்பின் செம்மை நிறம் கண்ணுக்கு அழகு. ஆனால் அது, தொட்டால் சுடுமே என்று அறிந்து கொள்வது சாதாரண மானவர்க்கும் உரியது.'

(சீதை, கற்புத்தீ - இதனை விரும்பி அல்லவா எடுத்துக் கொண்டு வந்து விட்டான்! இது விதிப் பயன். இதனால் இன்னும் அவமானமே விளையும்! என் செய்வது!" இதுதான் கும்பகருணனது ஏக்கம்.

அண்ணன் செய்த செயல் முறையற்றது : ஒரு உயிர் பிறப்பினன், உயர்கல்வியாளன் செய்வதா இது? என்று மனம் நோகின்றான் இவன்.

அதனால், அண்ணன் செய்த தீச் செயலைக் கண்டித்துப் பல படியாகப் பேசுகின்றான் அன்புத் தம்பி

**' தேவியை நயந்து சிறைவைத்த செயல் நன்றோ?**

**' ஒருத்தன்மனை உற்றாள் பொன் அடி தொழத் தொழ மறுத்தல் புகழா?'**

**' புன் தொழிலினால் இசை பொறுத்தல் புலமைத் தோ?**

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'சிட்டர்செயல் செய்திலை குலச்சிறுமை செய்தாய்?

'என்று ஒருவன் இல் உறை தவத்தியை, இரங்காய்
வன் தொழிலினாய் மறைதுறந்து சிறைவைத்தாய்
அன்று ஒழிவதாயின அரக்கர் புகழ்.'

'பேசுவது மானம் : இடை, பேணுவது காமம்"

என்பன போன்றவைகள், கும்பகருணன் தனது அண்ணன் செய்த செயலைக்கண்டித்து, இடித்துரைத்தவன் சொற்களாகும். இத்தகைய செய்யத்தகாதசெயலைச் செய்தால் என்னவரவேண்டுமோ அது இயற்கை நியதிப்படி வந்துள்ளது. அதனால், வந்த அவமானத்திற்கு வருந்திப் பயனில்லை.

குலத்துமான உணர்வுதான், கும்பகருணனை இவ்வாறு பேசச்செய்துள்ளது, அதனால்தான், குலப்பெருமையைச் சுட்டிக்காட்டி செய்தசெயலைக் கண்டிக்கின்றான். வந்த அவமானத் தண்டனை, செய்த தீச்செயலுக்கு ஏற்றதுதான்: நீதிக்குட்பட்டது தான். என்பது இவனது அழுத்தமான கருத்து.

செய்ததை நினைத்து வருந்திப் பயனில்லை. இனி. செய்வது என்ன?

அதைச் சொல்லும்போது, தம்பியைத் தட்டிக்கொடுத்தான் இராவணன். 'நன்று உரைசெய்தாய் குமர! நான் அது நினைந்தேன்' என்பது இராவணனது மனம் மகிழ்ந்த பேச்சு.

அப்படிச் செய்த உரை என்ன?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


• ஊறுபடை ஊறுவதன் முன்னம், ஒருநாளே,
ஏறுகடல் ஏறி, நரர் வானரரை எல்லாம்
வேறு பெயராத வகை வேரொடும் அடங்க
நூறுவதுவே கருமம்' என்பது நுவன்றான் '
(கம் 6126)

அந்தப் பகைவரை அழித்து விடுவதே, இனி செய்யத்தக்க காரியம். எப்படிச் செய்வது? வேரோடு அடியோடு அழிப்பது: வேறு இடத்துக்குப் பெயர்ந்து செல்லாதபடி ஒழிப்பது: எப்போது இதனைச் செய்வது? பகைவரின் படைகள் மேன் மேலும் பெருகி வளர்வதற்கு முன் செய்யவேண்டும் செய்யும் திட்டம் என்ன? ஒரே நாளில், நாமே கடலைக் கடந்து சென்று அவர்களை ஒழித்துக் கட்டவேண்டும். ஒழிக்கப்பட வேண்டியவர்கள் யார் யார்? மனிதர்களும் குரங்குகளும். (ஊறுதல்- மேன்மேலும் வளர்தல் (நூறுதல்—அழித்தல்: நரர்- மக்கள்-வானரர்-குரங்குகள்)

'படையெடுத்துச் சென்று பகைவர்களை அழிப்பதுவே செய்யத்தக்க காரியம்' என்று கும்பகர்ணன் சொன்ன வார்த்தைதான், அண்ணன் உள்ளத்தை மகிழ்வித்தது.

'செய்தது குலமானத்துக்கு உரியதல்ல! இனி செய்ய வேண்டியது குல மானத்துக்கு உரியதாக அமைய வேண்டும்' என்பது கும்பகருணனது கருத்து. 'செய்த தீச்செயலுக்காக, பகைவரிடம் மன்னிப்புக் கேட்பது சரியானதல்ல! தன் அண்ணன்
CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தனது வீரத்தால் அனைவரையும் வென்று குலத்துக்குப்பெருமை சேர்த்தவன். அதனால், இப்போதும் போர் செய்து வெற்றி பெற்று குலப்பெருமையை உயர்த்தவேண்டும்' என்பது கும்பகருணனது உள்ளக்கிடக்கை.

குலத்துமான உணர்வுதான், கும்பகருணனைச் செயல்படுத்துகின்றது. குலத்து மானம் அழியக் கூடாது. இராவணனது தீய செயலால் குலத்து மானம் போயிற்று. போனதைத் திரும்பப்பெறும் வழி, போர் செய்தலே. இந்த நம்பிக்கையோடு இருக்கின்றான், இவன் பேரவையில் பேசிய பேச்சு இதனை உறுதிப்படுத்துகின்றது.

போர் செய்தலை ஆதரித்து, மகன் இந்திரசித்து பேசி முடித்தபிறகு, வீடணன் முறை வருகின்றது.

**வீடணன் அறவுரை :**

வீடணன் கூற்று அறத்தின் அடிப்படையில் அமைந்தது. இருப்பினும், தன் அண்ணனைப் பெரிதும் மதித்து, உறவை முன்னிறுத்திதான் பேச்சைத் தொடங்குகின்றான்.

**" எந்தை நீ; யாயும் நீ; எம்முன் நீ; தவ**
**வந்தனைத் தெய்வம் நீ; மற்றும் முற்றும் நீ;**
**இந்திரப் பெரும்பதம் இழக்கின் றாய்; என**
**நொந்தனன் ஆதலின் நுவல்வது ஆயினேன்'**
**(கம்-6143)**

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


என்பது வீடணச் சான்றோனின் தொடக்க உரை. 'நனி தீ வினையை எல்லாம் வென்றவரின் நன்று உணரும் வீடணன்' என்பது விளம்பப் போகின்ற தம்பியைப்பற்றிய கவிதைத் தொடர். தீய வினைகளை எல்லாம் வாழ்க்கையில் நன்றாக வெற்றி கண்டவர் யாரோ, அவரைக் காட்டிலும் வாழ்க்கைத் தத்துவத்தை நன்றாக உணர்ந்தவன் இந்த வீடணன்.

இப்படிப்பட்ட தம்பி தீவினையை நயந்து செய்த அண்ணனுக்கு அறவுரையை அறிவுரையாகச் சொல்லத் தொடங்குகின்றான்.' எனக்கு நீ அண்ணன் என்ற உறவு முறையினன் மட்டும் அன்று: தந்தை, தாய், தெய்வம் ஆகிய எல்லா உறவு முறைக்கும் உரியவன்தான் நீ.

'அப்படிப்பட்ட நீ, உனது போர்த்திறனால், அனைவரையும் வெற்றி கொண்டு, இந்திரப்பெரும் பதத்தையும் நீயே பெற்றுள்ளாய். இத்தகைய பெருமிதமான வெற்றிவாழ்க்கைச் செல்வத்தை, நீ இழந்து விடப்போகின்றாயே என்று, நான் மனம் நொந்துபோனேன். அதனால்தான், இதனைச் சொல்கின்றேன்' என்று அடக்கமாகக்கூறிய வீடணன், 'முழுவதையும் கேட்டபிறகு என்னை நீ முனிதி' என்றும் தெரிவித்துக் கொண்டான். (முனிதி-கோபிப்பாய்)

தான் கூறும் அறவுரையை, இராவணன் ஏற்பது அரிது என்றும்' அதனால், தன்னைக் கோபித்து வெறுக்கக்கூடும் என்றும் முன் கூட்டியே அறிந்து கொண்டதனால்தான், இவ்வளவு பெரிய முன்னுரையோடு பேசத்தலைப் படுகின்றான் வீடணன். ஏன்? வீடணன் அறிவின் மிக்கான் அல்லவா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


"கோநகர் முழுவதும், நினது கொற்றமும்
சானகி எனும் பெயர் உலகின் தம்மனை
ஆனவள் கற்பினால் வெந்தது அல்லது' ஓர்
வானரம் சுட்டது என்று உணர்தல் மாட்சியோ'
(கம்-6145)

இலங்கை நகர் சுடப்பட்ட காரணம் யாது? அது, முதலில் உணர்த்தப்படுகின்றது. ஏனென்றால் 'சுட்டது குரங்கு" என்றுதான் இராவணன் பேச்சைத் தொடங்கினான். சுட்டது குரங்கு என்று உணர்வது அறிவுடைமை ஆகாது என்று முதலில் உணர்த்துகின்றான் வீடண அறிஞன்.

சுட்டது எது? சானகியின் கற்புத்தீ: அந்தப் பிராட்டி உலகுக்கே தாயாக விளங்கும் கருணை படைத்தவள். (உலகின் தம் அன்னை)

பெரிய நகர் முழுவதையும், இராவணனது வெற்றியையும் சுட்டெரித்தது சீதாப்பிராட்டியின் கற்புத்தீதான் என்று உணர வேண்டும். அதுதான் அறிவுடைமைக்கு அழகு.

"தீயினை நயப்புறுதல் செய்தாய்! என்று கும்பகருணன் குறிப்பாகச் சுட்டிக்காட்டினான். அந்தத் தீ என்பது எது என்பதை விளக்கிக் காட்டினான் வீடணன்.

இந்தக் கற்புத்தீ (சீதாப் பிராட்டி) இலங்கைக்கு வந்தது எப்படி? இராவணனே விரும்பி எடுத்துக்கொண்டு வரப்பட்டது இந்தக் கற்புத்தீ. தீயைக் கையினால் தீண்டினால் சுட்டு விடும். அதனால், தான், அந்தக் கற்புத்தீ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருந்த மண்ணோடு, அதனைத் தனது தேரில் எடுத்து வைத்துக்கொண்டு இலங்கைக்கு வந்து விட்டான்போலும் இராவணன்.

'இலங்கை, தீயினால் வெந்தது, சிறைவைக்கப் பட்டுள்ள சீதாப் பிராட்டியின் கற்பெனும் நெருப்பு' என்று உணர்த்திய வீடணன், மேலும் பல செய்திகளை நினைவு படுத்துகின்றான்.

கார்த்த வீரியார்ச்சுனனிடம் தோற்றது, நந்தி, வேகவதி மூலம் பெற்ற சாபம், வாலியின் வலிமைக்கு அடங்கியது, கூறிய மனிதர்பால் கொற்றம் கொள்ள வரம் கேட்காமை முதலியன வீடணன், எடுத்துக் காட்டிய பழைய செய்திகள். இதை எல்லாம் நினைவுக்குக் கொண்டுவந்ததன் நோக்கம், இராவணன், மனிதரிடம் போருக்குச் சென்றால், பெருந்தோல்வி பெற்று, இன்னும் அவமானத்தால் அழுங்க நேரிடும்.

இதற்கு முன்பு பேசியவர்களது யோசனை எல்லாம், இராவணனைப் போருக்குத் தூண்டுவதாக அமைந்தது. வீடணன் யோசனை, போரைத் தடுப்பது. போர் இல்லைஎன்றால், இனி,மேல் செய்யவேண்டிய வேறு செயல் என்ன?

**"இசையும் செல்வமும் உயர்குலத்து இயற்கையும் எஞ்ச**
**வசையும் கீழ்மையும் மீக்கொள, கிளையோடும் மடியாது,**
**அசைவுஇல் கற்பின்அவ் அணங்கை விட்டருளுதி; இதன்மேல்,**
**விசையம்இல்' எனச்சொல்லினன் - அறிஞரின் மிக்கான்.' (கம்-6173)**

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'நான் சொல்வதுதான் வெற்றிக்குரிய நல்லவழி: இந்த வழியைக் கடைப்பிடித்தால், நமது புகழும் செல்வமும் உயர்ந்து நிற்கும்: இதனைப் பின் பற்றவில்லை என்றால், பழியும், கீழ் மக்கள் இயல்புமே, மேலோங்கி நிற்கும். நமக்கு வந்த பழி அகல வேண்டும்: புகழ் ஓங்க வேண்டும். இதற்குத் தானே நாம் நடத்தும் ஆலோசனைக் கூட்டம். அதற்குரிய வழி இது ஒன்று தான்? அது என்ன?

குற்றம் இல்லாத கற்பினை உடைய சீதாப் பிராட்டியை, உரியவர்களிடம் கொண்டு சேர்ப்பிப்பதுதான்; இதனைவிட செய்வது எதுவும் இல்லை, இதைச் செய்யவில்லை என்றால், புகழ் அழியும்: பழி மிஞ்சும், இப்படிச் சொன்னவன் யார்? சாதாரணமானவன் அல்லன். அறிஞர்கள் யாவரினும் மேம்பட்ட அறிவுடைய வீடணன் "அறிஞரின் மிக்கான்" என்று வீடணனைப் பற்றிக் கூறுகின்றார் கவிச்சக்கரவர்த்தி.

(இசை - புகழ் : வசை - பழி : மீக்கொள - மேலோங்க.) அணங்கு-பெண் : (சீதாப்பிராட்டி) விசையம்-வெற்றி.)

நெருப்பு எங்கு இருக்கின்றதோ அங்கு, அது சுட்டுப்பொசுக்கிக் கொண்டுதானேயிருக்கும்! அதனால், இனிமேலாவது நம்மைச் சுடாமல் இருக்க வேண்டுமானால், அந்த நெருப்பை வெளியில் அகற்றி விடுவதுதானே, உணர்ந்து செயல்படுவதாகும்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


"சீதாப்பிராட்டியை, 'மானுடவர் இருவர்" என்று கூறினாயே, அவர்களிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பிப்பதுதான் செய்யத்தக்கது. போர் என்பது செய்யத்தகாதது! 'செய்யத்தக்கது இது; செய்யத்தகாதது இது' என்பதைத் தெளிவாக உறுதியுடன் எடுத்துக் கூறினான் விடண அறிஞன்.

இனி, 'செய்யத்தக்கது போர்தான்' என்று ஒரு தம்பி கூறினான். மற்றொரு தம்பி, அது, இனி செய்யத் தகாதது என்று கூறினான். இராவணன் எதை எடுத்துக்கொள்வான்.?

## செய்யத்தக்கதும் தகாததும்:

கும்பகருணனது கருத்துப்படி, போர் செய்வது தான் செய்யத்தக்கது: சீதையை விட்டுவிடுவது செய்யத்தகாதது, ஏன்? 'விட்டிடுது மேல் எளியம் ஆதும்.' அதனால், சீதையை விடக்கூடாது.

சீதை, ஒருத்தன் மனை உற்றாள். அவளை எடுத்துவந்தது செய்யத்தகாததீய செயல் இதைச்செய்த அன்றே அரக்கர் புகழ் ஒழிவதாயிற்று. குரங்குசுட்ட பிறகு, புகழ் போகவில்லை: அதற்கு முன்பே போய்விட்டது. எதனால்? ஒருபேரரசன், செய்யத்தகாத செயலைச் செய்ததால். செய்தது செய்தாகிவிட்டது, இதைச் செய்யும்போது, அண்ணன், எந்தத் தம்பியிடமும் யோசனை கேட்கவில்லை. இது கும்பகருணனுக்கும் வருத்தம் தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இருப்பினும், இனி, செய்த காரியத்துக்கு, வருத்தம் தெரிவித்து, சீதையை, மானுடவர்களிடம் சேர்ப்பித்து மன்னிப்புக் கேட்பது, மானம்காக்கும் செயல் அல்ல! அச்செயல் நமது வலிமையைக் குறைத்துக் காட்டும். அதனால், 'சீதையை விடுவது, செய்யத்தகாதது ; போர் புரிவது செய்யத்தக்கது' என்பதுதான் கும்பகருணனது அழுத்தமானகருத்து. இதில், முழுமையானகருத்து வேறுபாடுடையவன் வீடணன். செய்யத்தக்கது சீதையை விட்டுவிடுவது ; செய்யத்தகாதது போர்புரிவது. இதுவீடணனது உறுதியானகருத்து.

இந்த வேறுபாட்டுக்குக் காரணம், கும்பகருணன் இன உணர்வினன்; வீடணன் அற உணர்வினன். மன்னிப்புக் கேட்பது மானம்காப்பது ஆகாது என்பவன் அண்ணன். செய்தகுற்றத்துக்குத் தண்டனை பெற்றபிறகு மன்னிப்புக் கேட்பதுதான் மானம் காப்பதாகும் என்பவன் தம்பி.

**மானம் காத்தலும் காவாமையும் :**

ஒரு செயலே, ஒருவருக்கு மானம் காப்பதாகத் தோற்றுவதும், மற்றொருவருக்கு, மானம் காவாமையுமாகத் தோற்றுவதும் எப்படி?

மானம் என்பது என்ன? பெருமை. 'மானம் என்றால் என்ன' என்பதை விளக்கவந்த பரிமேலழகர் "எஞ்ஞான்றும் தம் நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும் ஆம். என்று தெளிவாக்குகின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


தம் நிலை என்பது, பிறப்பிலேயே அமைந்த குலப்பெருமை, சிறப்பினால் ஏற்பட்ட கல்விப் பெருமை, என்பதாகும். இதற்கேற்ப வாழ்க்கை நடத்துவதுதான் மானம் உடையது. இதில் சிறிது குறைந்தாலும் மானம் கெட்ட வாழ்க்கை.

மானம், மாண்புடையது என்றும், மாண்பு அற்றது என்றும் இருவகையாக மக்கள் வாழ்க்கையில் காணப்படுவன.

'மாண் பிறந்த மானம்' என்று திருவள்ளுவர் கூறுகின்றார், மாட்சிமை இல்லாத மானம் அரசனுக்குக் குற்றமாகும்,

**இவறலும், மாண்பு இறந்த மானமும், மாணா**
**உவகையும் ஏதம் இறைக்கு (திருக்குறள்-432)**

'மாண்பு இறந்த மானம்-நன்மையின் நீங்கிய மானம்' என்று பொருள் கூறிய பரிமேலழகர்" மாட்சியான மானத்தின் நீக்குதற்கு மாண்பிறந்த மானம் என்றார்' என்றும், அஃதாவது, அந்தணர், சான்றோர்' அருந்தவத்தோர், தம் முன்னோர், தந்தை தாய் என்றிவரை வணங்காமையும், முடிக்கப் படாதாயினும் கருதியது முடித்தே விடுதலும்' என்றும் விளக்கம் தருகின்றார்.

இந்த விளக்கத்தை அளவுகோலாகக் கொண்டு கும்பகருணன் எதை மானமாகக் கொண்டுள்ளான் என்பதையும் வீடணன் எதை மானமாகக் கொண்டுள்ளான் என்பதையும் அளந்து தெளிவு காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இதனை மேலும் நன்கு விளங்கிக் கொள்வதற்கு நம்மாழ்வார் பாசுரம் ஒன்று உறுதுணையாக உள்ளது.

"துயரங்கள் செய்யும் கண்ணா!
சுடர்நீள் முடியாய்! அருளாய் :
துயரம்செய் மானங்களாய்
மதனாகி உகவைகளாய்"
(திருவாய்மொழி 7.8.7)

'மாண்பு இறந்த மானம்' என்பதை 'துயரம் செய்மானம்' என்று குறிக்கின்றது இந்தப் பாசுரம். நன்மையின் நீங்கிய மானம், துயரம் செய்மான மாகத்தானே தோன்றும்! கும்பகருணன் கருதிய மானம், மாண்பு இறந்தது : நன்மையின் நீங்கியது : துயரம் செய்வது. வீடணன் சொல்லும் மானம், மாண்புடையது : நன்மைபயப்பது : துயரம் நீங்கியது.

தமது அண்ணன் இராவணன். செய்யத் தகாத தீச் செயலைச் செய்ததனால், குலத்துமனம் போயிற்று என்பதில் இரண்டு தம்பிகளுக்கும் உடன்பாடு இந்தக்கருத்தை எடுத்துக்கூறும் போது இருவரது உணர்வுகளும் ஒன்றுபட்டன.

ஆனால், போன மானத்தைத் திருப்பப் பெறுவது எப்படி என்ற நெறிமுறை கூறுவதில்தான், வேறுபாடு. கும்பகருணன் நெறி சாதியை அடிப் படையாகக் கொண்டது. வீடணன் கூறும் நெறி நீதியை அடிப்படையாகக் கொண்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


நீதிநெறி, குற்றம் செய்தவர்கள், செய்த குற்றத்துக்கு வருந்துவதும், செய்யப்பட்ட வரிடத்தில் மன்னிப்புக் கேட்பதும் முறையானது என்று கூறும். இதுதான் பெருமைக்குரியது புகழுக் குரியது : நன்மை பயப்பது. அதனால் 'சீதையை விட்டுவிடுக' என்று அறிவுரை கூறினான் வீடணன், இதுவே மாண்புடைய மானம்.

சீதையை விடாமல் இருப்பதும், போர் செய்வதும்தான் மானத்துக்குரிய செயல் என்பது கும்பகருணன் கருத்து. இது மானம்தான். ஆனால் மாண்பு இறந்த மானம் இது. இதனால் நன்மை விளையாது. துயரங்கள்தான் வரும். நன்மை விளையாதது, துயரமே விளைவது என்று. கும்பகருணனைச் சிந்திக்க விடவில்லை அவன் பின்பற்றிய சாதிநெறி, இவன்கூறும் நெறிக்கு அடிப்படை சாதி என்பதாகும்.

உடலோடு ஒட்டிய சாதிநெறியால் வரும் மாண்பு இறந்த மானம், அரசனுக்குக் குற்றத்தைத் தான் சேர்ப்பிக்கும் (ஏதம் இறைக்கு) என்பதை, இன உணர்வினனான குப்பகருணன் இப்போது சிந்திக்கவில்லை. சிந்தனையில் தெளிவு பிறக்கும் காலம், பிறகு இவனுக்குவரும்.

சாதியைப் பற்றி, பரிமேலழகர் கூறியுள்ள விளக்கம் இங்கு சிந்திக்கத் தக்கதாகும்.

**'மேல்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**
**கற்றார் அனைத்திலர் பாடு. (திருக்குறள்-409)**

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


என்ற திருக்குறளுக்கு விளக்கம் கொடுக்கும் போது, 'உடலோடு ஒழியும் சாதி உயர்ச்சியினும், உயிரோடு செல்லும் கல்வி (நீதி) உயர்ச்சி சிறப்புடைத்து? என்று தெளிவு படுத்துகின்றார் உரையாசிரியர்.

சாதி நெறி, அழியும் உடலைப் பற்றியது. அதனால், அது தாழ்ந்தது. நீதிநெறி உயிரோடு செல்வது. அதனால் அது உயர்ந்தது.

சாதி நெறி புன்மையது; நீதி நெறிமேன்மை யானது. இது கோதுஇலாத குணத்தினனான வீடணனுக்குத் தெளிவாகப் புரிகின்றது.

உறங்குகின்ற கும்பகருணனுக்கு ஒன்றும் புரிய வில்லை இந்தப் பேரவைக் கூட்டத்தில். இவனும் இந்த உண்மையை உணரும் காலம் வரும், எப்போது? உறங்கி எழுந்த பிறகு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# 4

# சகோதரர் மாற்றம்.

**மாற்றம் :**

எது மாற்றம்? ஒன்றாக இருந்தவர்கள் வேறாகப்பிரிந்தால் அது மாற்றம். வெவ்வேறு இடத்துக்கு மாறிப் போகும்போது, சிலருக்கு இன்பமாகவே இருக்கலாம்: அந்த மாற்றம் சிலருக்குத் துன்பமாக இருக்கலாம். மாற்றம் சிலருக்கு ஏமாற்றத்தை அளிக்கலாம்: சிலருக்கு ஏற்றத்தை அளிக்கலாம். ஏற்றமும் ஏமாற்றமும் அவரவர்கள் சேர்ந்த இடத்தைப்பொறுத்ததாகும்.

இடத்தைச் சேர்ந்த பிறகுதான், நாமே ஏமாறினோமா? ஏமாற்றப்பட்டோமா என்பது சிலருக்குப் புலனாகும். ஏமாறிய பிறகு, வேறு இடத்தைச் சேர்ந்தவனது எற்றத்தைக் கண்டு, ஏங்குவதும் உண்டு.

ஒன்றாக இருப்பது பிறப்பால்; வேறாக மாறுவது சிறப்புச் செயலால். பிறப்பின் காரணத்தால் ஒரே இடத்தில் இருந்தவர்கள், சிறப்பின் காரணத்தால் வெவ்வேறிடத்துக்கு மாறினால் மாறிய பிறகு இருவரது உள்ளத்திலும், தோன்றும் உணர்வு எப்படியிருக்கும்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



மாற்றம் பெற்றபிறகு, பிரிந்தவர்கள், ஒருவர் மற்றொருவரைப்பற்றி எவ்வாறு கணிப்பார்கள்? வெளியில் தெரியும் பொருளை எடை போட்டுக் காண்பதும் காட்டுவதும் எளிது. ஆனால், புறக்கண்ணுக்குப் புலப்படாத உள்ளத்தின் இயல்பை அளவிட்டுக் காண்பது அரிது, காட்டுவது அதனினும் அரிது.

அந்த அரிதான காரியத்தைச் செய்து முடிப்பவர்கள் கவிஞர்கள். அவர்கள் வெறும் வரட்டுக் கவிபாடுபவர்களாக இருக்க முடியாது. உள்ளத்து இயல்பை நன்கு உணர்ந்து தெளிந்தவர்களாக இருப்பார்கள். அத்தகைய கவிஞர்களுள் சக்கரவர்த்தியாக விளங்குபவர் கம்பர்.

மாற்றம் பெற்றபிறகு, கும்பகருணனும் வீடணனும் எத்தகைய உள்ளத்தினராகச் செயல்பட்டனர் என்பதை, கம்பநாடர் தமது காப்பியத்தில் அழகுபட விவரித்து விளக்கம் செய்கின்றார். இது, உளநூல் ஆய்வாளரும் கண்டு வியக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

இருவருக்கும் ஏற்பட்ட மாற்றத்துக்குக் காரணம் என்ன? பேரவையில் நிகழ்ந்த மாற்றம் தான். (மாற்றம் - வார்த்தை) (மாற்றம் - மாறுபாடு) வீடணன், பேரவையில் கூறிய கூற்று (நிகழ்த்திய மாற்றம்) 'செய்யத்தக்கது சீதையைவிடுவது, தகாதது போர்செய்வது' என்பதாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


கும்பகருணன் கூறிய கூற்று (நிகழ்த்திய மாற்றம்) 'செய்யத்தக்கது போர்செய்தல், தகாதது சீதையை விடுதல்' என்பதாகும்.

இந்த மாற்றங்களால்தான், (வார்த்தைகள்) ஒத்த பிறப்பினராய இந்த இருவரும் மாற்றம் (மாறுபாடு) உற்றவர்களானார்கள், உற்ற மாற்றம் வீடணனை ஏற்றத்தில் (உயர்வு) அமர்த்துகின்றது; கும்பகருணனை எங்கு அமர்த்துகின்றது? கூற்றத்தோடு கொண்டு சேர்க்கின்றது. (கூற்றம் - எமன்).

'கூற்றத்தின்வாய் வீழ்ந்த கும்பகருணன்' என்று எல்லாக் காலத்தினரும் அவனைச் சொல்லும் அளவுக்கு அவனது மாற்றம், அவனுக்கு ஊற்றம் கொடுத்துவிட்டது! விதி பிடர்பிடித்து உந்தினால்' அதிலிருந்து தப்புவது எப்படி? இந்த உண்மையைப் பிறகு அவனே சொல்லக் கேட்கலாம்.

கும்பகருணன் மாற்றம், (வார்த்தை, மாறுபாடு) அவனைக் கூற்றத்தின் இருப்பிடத்துக்கு, பிடர் பிடித்துத் தள்ளிக்கொண்டு சென்றது.

வீடணன் மாற்றம், (வார்த்தை, மாறுபாடு) அவனை, கைபிடித்து அழைத்துக் கொண்டு சென்றது ஏற்றத்துக்கு. (உயர்வு) அங்கு சென்ற பிறகு, ஏற்றகலமாகத் (உயர்வான பாத்திரம்) தோற்றம் பெற்று விளங்கினான், வீடணச் சீரியோன்.

கும்பகருணன் கூற்றத்தின் வாய் வீழ்ந்தது ஏன்? வீடணன் ஏற்றம் பெற்றது எவ்வாறு?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இதனை விவரிப்பதற்கு, ஏற்றமான (ஏற்றம்—பொருத்தம்) ஒரு கதைக்களத்தைக் காப்பியத்துள் அமைத்துக் கொள்கின்றார் கவிச்சக்கரவர்த்தி.

**கதைக்களம் :**

ஒருவரது மாற்றமே (வார்த்தையே)மேற்கொண்டு கதை வளர்வதற்கேற்ற களத்திற்குக் காரணமாகிவிடும்.

கும்பகருணன் மாற்றம் (வார்த்தை) கதை வளர்வதற்கு இடம் கொடுக்கவில்லை. வீடணன் மாற்றம் (வார்த்தை) கதைக்குக்களம் தேடவைக்கின்றது. எப்படி?

பேரவைக் கூட்டத்தில் வீடணன் சொன்ன அறிவுரையை இராவணன் ஏற்றுக்கொள்ளவில்லை, ஏற்றுக் கொள்ளாதது மட்டுமல்ல! அவனை மாற்றுக்கண் கொண்டும் நோக்கினான், 'செவ்கைப் பச்சொல் பொறுக்கும் பண்புடை வேந்தனாக' இருந்தால்தானே அறவுரையை ஏற்றுக்கொள்வான் இராவணன். அந்தப்பண்பு ஏது இவனிடம்?

அண்ணன், தனது அறிவுரையைக் கேட்கவில்லையே, வெறுக்கின்றானே என்பதற்காக, தம்பி வீடணன், அவனை வெறுக்கவில்லை. மேலும், தம்பி, இராவணன் மனம் கொள்ளும் வகையில் ஒரு சரித்திரச் சான்றுடன், செய்யத்தக்கது இன்னது என்பதை நன்கு புரியவைக்க முயல்கின்றான்.

அம்முயற்சியின் பயனாக வெளிவந்தது இரணியன் வரலாறு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



கவிச்சக்கரவர்த்தியின் புத்தம் புதிய புரட்சிப் படைப்பு இரணியன் வதைப்படலம். இராமாவதாரத்தில் நரசிம்மாவதாரம் கலந்து நின்று கர்ச்சிப்பது, வேறு எந்தமொழி இராமாயணத்திலும் காணமுடியாத ஓர் அற்புதப் படைப்பு. இதன் அருமையை, 'ஞான நாயகன்' என்ற புத்தகத்தில் படித்துச் சுவைக்கலாம்.

அமைச்சர்கள், சேனைத் தலைவர், இந்திரசித்து, கும்பகருணன் முதலிய, ஆலோசனையாளர்கள் அனைவரும் கூடியிருந்த அந்தப் பேரவையில்தான், இலங்கை மன்னனுக்கு, இரணியன் வரலாற்றை விரிவாக எடுத்துக் கூறினான் வீடண நீதியான்.

'உன்னை மிகப்பெரிய ஆற்றல் படைத்தவன் இரணியன். அவனே அழிந்தான். நீ எம்மாத்திரம்? அதனால்தான் இராமனிடம் நீ போர் செய்யச் செல்லவேண்டாம்' என்று சொல்கின்றான் வீடண அறிஞன்.

'செய்யத்தக்கது' 'செய்யத்தகாதது' எவை என்பதை பிரகலாதன் தனது தந்தைக்குக் கூறினான். தந்தை அதைக் கேட்கவில்லை. நல்லது கேளாமையால் அழிந்தான் இரணியன்.

'ஆழிவேந்தை வணங்குதி; வணங்கவே, உன் தொழில் பொறுகும்' என்று தந்தையிடம் மைந்தன் அடக்கமாக, அன்புதவழக் கூறினான். யார்? உலகெலாம் புகழ நின்றவன்' பிரகலாதன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar.

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'அப்பா, நீ அந்த நரசிம்ம மூர்த்தியை வணங்குவதுதான் செய்யத்தக்க காரியம். வணங்கில் நீ இதுவரை உனது ஆணவத்தால் செய்த தீய செயல்கள் அனைத்தையும் பொறுத்துக்கொள்வான்; உன்னைத் தனது அருட்கருணையால் மன்னித்து விடுவான். இதுவே நமது அரச மானத்தைக் காத்துக் கொள்வதற்குரிய தொன்றாகும். இதுவே, இனி செய்யத்தக்கது.

அந்த மூர்த்தியோடு மோதுவது செய்யத் தகாதது. 'அப்பா! வேண்டாம் போர்வேண்டாம்' என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டான் மைந்தன் பிரகலாதன்.

அன்பு தவழும் அறிவுரையை தனது சொந்த மைந்தன் கூறியும், காதில் ஏற்காமல், பெருமானோடு மோதுதலையே செய்தமையால் இரணியன் அழிந்து பட்டான்.

உறவுதான், உரிமையோடு அறிவுரையை, நிதானமாகச் சொல்லி, திருந்தாதவரை திருத்த வைக்க மனிதனைத் தூண்டிக் கொண்டிருக்கும்.

அந்த முறையில்தான், வீடணனது அறவுரையில் இரணியன் வரலாறு வந்து கலந்தது.

இது வருவதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அன்று இரணிய அசுரனை ஒழிப்பதற்கு, நரசிம்ம மூர்த்தியாக எந்த ஒரு பெருமான் வந்தானோ, அவன்தான் இப்போது, இராமமூர்த்தியாக வந்துள்ளான் என்று வீடணமேலோன் நம்பினான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இப்படி நம்புதற்குக் காரணம். இராவணனுக்கு முன்னால் அனுமன் பேசிய பேச்சைக் கேட்டது.

**'போர் அணங்கு இடங்கர் கவ்வ, பொதுநின்று,**
**'முதலே' என்ற**
**வாரணம் காக்க வந்தான் அமரரைக் காக்க**
**வந்தான்,'**

என்பது போன்று, இராமாவதாரம் இம்மண்ணுலகில் தோன்றியதற்கான காரணத்தைப் புலப்படுத்தியது. (இடங்கர்-முதலை; முதலே-ஆதிமூலமே; வாரணம்-யானை: அமரர்-தேவர்)

காத்தல் கடவுள் யாரோ. அவன் தனது கடமையைச் செய்வதற்கு, எந்தக் காலத்தில் எந்த உருவத்தில் எந்த அயுதத்தோடு வரவேண்டுமோ அப்படி வருவான்.

அவனது சங்கற்பத்தையார் அறிவார்? முதலையின் வாயில் அகப்பட்ட கஜேந்திரன் என்ற யானையைக் காப்பதற்கு, சக்கராயுதத்தோடு கருட வாகனனாய்த் தோன்றினான் அந்தக் காத்தற் கடவுள்.

'மழுங்காத வைந்நுதிய சக்கர நல் வலத்தையாய்
தொழுங்காதல் களிறு அளிப்பான் புள்ளூர்ந்து
தோன்றினையே.' (திருவாய்மொழி-3.1.9)

என்று நம்மாழ்வார் அனுபவிப்பார் இந்தக் கஜேந்திர மோட்சத்தை. (வைநுதி-மிகக் கூர்மையான; களிறு—யானை; புள்-பறவை: கருடன்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


யானையைக் காத்து முதலையை அழிப்பதற்கு சக்கரத்தை ஆயுதமாக ஏற்றுக்கொண்டு வந்தான்; பிரகலாதனைக் காத்து. இரணியனை ஒழிப்பதற்கு நகத்தை ஆயுதமாக்கிக் கொண்டான்; இப்போது அமரரைக்காத்து இராவணனை ஒழிப்பதற்கு வில்லை ஏந்தி வந்துள்ளான்.

ஆதிமூலமாக வந்தவன்தான், நரசிம்ம மூர்த்தியாக அவதரித்தான்; அவனே இராமனாக அவதாரம் செய்துள்ளான். இதனை, அனுமன் பேச்சிலிருந்து நன்கு உணர்ந்து கொண்டுவிட்டான் வீடணன். விளைவினை அறியும் மேன்மையன் அல்லவா இவன்! அதனால் இரணியன் வரலாற்றை, சொல்லவேண்டிய சமயத்தில் நிதானமாக, புரிந்து கொண்டு செயல்படும் முறையில் எடுத்துக் சொன்னான். யார்? 'உம்பர் மந்திரிக்கெல்லாம் ஒரு முழம் உயர்ந்த ஞானத்தம்பி.'

தம்பி ஞானத்தினன்; அண்ணன் அஞ்ஞானத்தினன், நன்மைதரக் கூடியது எதுவோ அதையே தீமைதருவதாகவும், தீமையையே விளைவிக்கக் கூடிய ஒன்றை, நன்மை தருவதாகவும் நினைப்பது தான் அஞ்ஞானம்.

அத்தகைய அஞ்ஞானத்தில் மூழ்கியுள்ளான் இராவணன் அதனால் தம்பி உரைத்த ஞானமொழி அவன் காதில் ஏறவில்லை. ஞானத்தம்பியின் அறவுரைக் கருத்தை நேருக்கு மாறாகக் கணக்கிட்டான் அஞ்ஞானியான இராவணன். எது செய்யத்தகாததாக உரைக்கப்பட்டதோ அதைச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



செய்யத்தக்கதாகவும், செய்யத்தக்கதை, செய்யத் தகாததாகவும் எண்ணிக்கொண்டு விட்டான் இராவணன். அதனால், இரணியன் வரலாற்றை, மைந்தன் பிரகலாதன் தந்தையைக் காட்டிக் கொடுத்தது போன்று, இந்தத்தம்பி, அண்ணனாகிய தன்னை, பகைவர்க்குக் காட்டிக்கொடுத்து விடுவதாகக் கணக்கிட்டுக் கொண்டு விட்டான் இராவணன். இந்த முடிவுக்கு வந்து விட்ட இராவணன் என்ன செய்வான்? இரணியனைவிட தான் புத்திசாலித்தனமாகச் செயல்படுவதாகத் திட்டமிட்டு, தம்பி வீடணனை அங்கிருந்து விரட்டி விடமுயன்றான்.

அம்முயற்சி, ஞானத்தம்பியை பலபடியாக வைதற்குரிய, வன்சொற்களாக இராவணன் வாயினின்றும் வெளியேறியது. இறுதியாக,

‘வஞ்சனை மனத்தினை; பிறப்பு மாறினை ;
நஞ்சினை உடன்கொடு வாழ்தல் நன்மையோ?

என்றும்

பழியினை உணர்ந்து, யான் படுக்கிலேன், உனை ,
ஒழி, சில புகலுதல், ஒல்லை நீங்குதி;
விழிஎதிர் நிற்றியேல், விளிதி! என்றனன்.

யார்?

அழிவினை எய்துவான் அறிவு நீக்கினான்.

அறிவு நீங்கினான். அறிஞனாகிய வீடணனை. ‘என்விழி எதிர் நிற்காதே; ஓடிப்போ இவ்விடத்தை; விட்டு’ என்று [illegible] விரட்டி விட்டான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இதனால், என்ன வரும்? அழிவுவரும் யாருக்கு? அறிவு நீங்கிய இராவணனுக்கு, எந்த நாட்டைவிட்டு, அறிஞன் அகற்றப் படுகின்றானோ, அங்கு அழிவுதான் வந்துசேரும்.

'ஒல்லை நீங்குதி' - 'விரைவில் சென்று விடு' என்பது இராவணன் வாயினின்றும் வந்த உத்தரவு. இது, ஒரு, அன்புடைய அறிஞனாகிய தம்பியைப் பார்த்து சொல்லத்தகாத வார்த்தை, இதை எதற்குச் சொன்னான்? செய்யத்தகாத காரியத்தைச் செய்வதற்கு.

அது என்ன காரியம்? இராவணனால், மானுடவர் இருவர் என்று இழித்துப்பேசப்படுகின்ற இராம இலக்குவரோடு போர்செய்யப் புறப்படுதல். இதனால் இவனுக்கு வருவது அழிவுதான். அது இப்போது தெரிவதில்லை. ஏன்? ஆணவம் அனைத்து உண்மைகளையும் மறைக்கும் அல்லவா!

இராவணனின் ஆணவப் போக்கு, அவனுக்கு வரயிருக்கும் அழிவைப்பற்றி சிந்திக்கவிடவில்லை.

இராவணனது மாற்றத்தால் (வார்த்தையால்) ஒரு தம்பி (வீடணன்) வேறு இடத்திற்கு மாற்றம் பெற்றான்: மற்றொரு தம்பி (கும்பகருணன்) பள்ளியறைக்குச் செல்லும் ஊற்றம் பெற்றான்.

பேரவையில் நிகழ்ந்த மாற்றங்களால் (வார்த்தைகளால்) ஏற்றம்பெற்ற சகோதரன் வீடணன் ஒருவனே. அவன் ஏற்றம் பெற்றது எவ்வாறு?

அடுத்த கதைக்களம் அதற்கு வழிவகுக்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# 5

# வீடணன் அடைக்கலம்

## நிறைவும் குறைவும் :

ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டவைகள் ஒரே இடத்தில் சேர்ந்திருத்தல் அரிது. அண்ணன் ஆணவத்தால் நிறைந்தவன்; அறிவால் குறைந்தவன் (அறிவு நீங்கினான்) தம்பி வீடணன் அறிவால் நிறைவானவன்: (அறிஞரின் மிக்கான்) ஆணவம் சிறிதும் இல்லாதவன். அறிஞனுக்கு, அறிவில்லாதவன் அதிகாரம் செலுத்தும் இடத்தில் வேலையில்லை. தனது அறிவு. எங்கு செயல்பட முடியுமோ அதுதான் அறிஞனுக்குரிய இடம்.

வீடணன் மேதாவிகட்கு எல்லாம் மேலான மேன்மையனாக விளங்குகின்றான். இவனுடைய மேதாவிலாசம் பேதையனாகிய அண்ணன் இராவணனிடத்தில் எடுபடவில்லை.

ஏதம் கொண்டு ஊதியம் போகவிடல்தாருன பேதையின் இயல்பு, இத்தகைய பேதையோனாக இராவணன் இருத்தலால், மேதையாகிய வீடணனை விரட்டிவிட்டான், ஏதம்—குற்றம் ;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


வள்ளுவத்தின் இலக்கணப்படி பேதைமை குறைவுடையது : மேதைமை நிறைவுடையது. எது குறையாக உள்ளதோ அதனையே நிறைவாகக் கருதுபவன் வாழ்க்கையில் என்றும் திருத்தம் பெறமுடியாது. அதுவே அவனுக்குத் தீங்காகமுடியும்.

தீங்குஎன்பது எது? நாளுக்குநாள் மேம்பாடு அடைய இயலாமைதான் வாழ்க்கையில் பெருந்தீங்கு. இந்தத்தீங்கு இராவணன் வாழ்க்கையில் ஒட்டிக் கொண்டு விட்டது. இதனை வெட்டி விடமுயன்றான் தம்பி வீடணன். ஆனால், அண்ணனோ, தம்பியை வெட்டி விடமுயன்றான். இந்த முயற்சிகளில் அண்ணனது வென்றது : வீடணனது முயற்சி தோற்றது. தோற்றவன், வென்றவனுக்கு முன்னால் நிற்க முடியாதல்லவா? அதனால், நீதிக்குறை உடைய இராவணனிடமிருந்து வெளியில் சென்று விடுவ தென்ற தீர்மானத்துக்குவந்தான் நீதி நிறையின னாகியவீடணன், செல்லும் இடம்எங்கு? :

**“சான்றோர் சான்றோர் பாலர்ஆப**
**சாலார் சாலார் ஆகுபவே.”** (புறம்218)

என்று, யார் யார் எங்கு சென்று சேர்வர் என்ற மக்கள் மன இயல்பைப் பற்றி கண்ணகனார் என்ற சங்கச் சான்றோர் கூறுகின்றார்.

சால்பு - நிறைவு. சாலார் - நிறைவு இல்லாதார், குறைவு உடையார். சான்றோர் - நிறைஞானம் பெற்றவர். குறைவுடையவன் ஒதுக்கித்தள்ளினால், நிறைவுடைய இடத்துக்குத்தானே செல்லவேண்டும்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


அத்தகைய நிறைவுடையவர் யாவர்? அவர் இருக்கும் இடம் யாது? இதையெல்லாம், அனுமன் இராவணனுக்கு எதிரில் அமர்ந்திருந்து பேசிய பேச்சிலிருந்து நன்கு உணர்ந்து கொண்டிருந்தான் வீடண அறிஞன், அதனால், அங்கு செல்வதென உடனே தீர்மானித்துக் கொண்டான் அவன்.

'நண்ணின மனிதர்பால் நண்பு பூண்டனை: எண்ணினை செய்வினை: என்னை வெல்லுமாறு உன்னினை: அரசின்மேல் ஆசை ஊன்றினை' என்பது இராவணன், தம்பியின் மேல் சாடிய குற்றச்சாட்டு.

இராவணனால், யார் குறைவுடையவர்-குற்றம் உள்ளவர் என்று சொல்லப்பட்டனரோ அந்த மானுடரைத்தான், நிறைவுடையவராக மதித்தான் வீடணன். அவர் இருக்கும் இடத்தில் சேர்வதெனத் தீர்மானித்தான்; வானிடைச்சென்றான்: செல்லும் போதும், அண்ணனுக்கு, 'நீதிசான்றன ஒன்றல பலப்பல உறுதி ஓதினான்' வீடணன்.

ஓதியது நீதி: ஆனால் உணரவேண்டியவன் உணரவில்லை. இது, எதைக்காட்டுகின்றது? இறுதிவரை, அண்ணனைத் திருத்துவதற்கு, தம்பி முயன்றான் என்பதைதான் காட்டுகின்றது, இங்கு அநீதிதான் இருக்கிறது. நீதிக்கும் அநீதிக்கும் நடுவில் ஒரு பெருங்கடலே அலை மோதிக் கொண்டிருக்கின்றது. கடலைக் கடந்தால்தான், நீதி, அநீதியின் கொடுமையிலிருந்து தப்பிக்கமுடியும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


வீடணன் நீதியான், இராவண அநீதியானிட மிருந்து தப்பிச் செல்லும்போது சொல்லிய சொற்களை கவிச்சக்கரவர்த்தி, கவியில் வடித்துக்கொடுத்திருப்பதனை இங்கு நாம் காணவேண்டும்.

'எத்துணை வகையினும் உறுதி எய்தின,
ஒத்தன உணர்த்தினேன் : உணரகிற்றிலை :
அத்த!என் பிழைபொறுத் தருளுவாய்'என,
உத்தமன் அந்நகர் ஒழியப் போயினான்.
(கம்-6376)

செல்பவன் யார்? உத்தமன். அப்படியானால் இருப்பவன் அதமன். உத்தம வீடணன், ,எத்தனையோ வகையில் நன்மையானவற்றை உணரும்படிக்கூறினேன் : உணர்ந்தாயில்லை : நான் சொன்னது குற்றமாகப்பட்டால், அதனைப் பொறுத்தருள்க' என் தலைவனே? என்று அன்போடு கூறிச்சென்றான்.

**சேர்வது எதற்கு!**

'அரசின் மேல் ஆசை ஊன்றினை' என்று இராவணன், வீடணன் மேல் குற்றம் சாட்டினான், ஆனால், உத்தமனாகிய வீடணன், தன்னுடன் வந்த அமைச்சர் நால்வரிடமும் தனது கருத்தை வெளிப்படையாகக் கூறுகின்றான். தனது ஆசை, 'அரசின் மேல் இல்லை' என்றும் ஆன்மாவைப் பற்றியது என்றும் தெளிவாக்குகின்றான்.

உத்தமனாகிய வீடணன், கடலுக்கு அக்கரையில் உள்ள இராமனை அக்கரையோடு சென்று சேர்வது எதற்காக? அதனை வீடணனே தெரிவிப்பதைக் கேட்கவேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

,அறம்தலை நின்றவர்க்கு அன்பு பூண்டனென்;
மறந்தும் நன்புகழ் அலால் வாழ்வு வேண்டலென்;'

என்றும்,

'எல்லைஇல் பெருங்குணத்து இராமன் தாள் இணை
புல்லுதும்: புல்லி, இப் பிறவி போக்குதும்,'

என்றும்,

'முன்புறக் கண்டிலென்; கேள்வி முன்புஇலேன்;
அன்பு உறக்காரணம் அறிய கிற்றிலேன்:
என்பு உறக் குளிரும்; நெஞ்சு உருகுமேல், அவன்
புன்புறப் பிறவியின் பகைஞன் போலுமால்'

என்றும்

'ஆதி அம் பரமனுக்கு அன்பும், நல் அறம்
நீதியின் வழாமையும், உயிர்க்கு நேயமும்,
வேதியர் அருளும் நான் விரும்பிப் பெற்றனென்-
போது உறு கிழவனைத் தவம்முன் பூண்ட நாள்.'

என்றும்

'ஆயது பயப்பது ஓர் அமைதி ஆயது:
தூயது நினைந்தது: தொல்லை யாவர்க்கும்
நாயகன் மலர்க்கழல் நணுகி, நம்மனத்து
ஏயது முடித்தும்' என்று இனிது மேயினான்,'

(கம்-6381, 83, 84, 85, 86)

இந்தக் கவிதைகள், வீடணனது உள்ளத் தூய்மையைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'ஒரு பரமபக்தன், பகவானைச் சென்று சேர்வதற்கு எவ்வாறு துடித்துக் கொண்டிருப்பானோ, அத்தகைய ஆன்மத் துடிப்புதான் விடணனை இயக்கிக்கொண்டிருக்கிறது' என்பதைக் கம்பநாடர் இந்தக் கவிதையின் மூலம் காட்டியுள்ளார்.

'இராமன்தாள் இணை புல்லுதும்; புல்லி இப்பிறவி போக்குதும்' என்று கூறுவது. அரக்கர் பிறவியை அழிப்பதும், ஆண்டவனுக்கு அடியவனாகுவதுதான் வீடணனது எண்ணம்' என்பதைப் புலப்படுத்துகின்றது.

இராமபிரானை, இராவணனுக்குப் பகைவனாக வந்த மனிதனாக எண்ணவில்லை வீடணன்; இறைவனாகவே மதித்துள்ளான். 'புன்புறப் பிறவியின் பகைஞன் போலுமால்' என்ற தொடர் இதனை உறுதிப்படுத்துகின்றது.

ஆகவே 'வீடணன், இராமபிரானிடம் சென்று சேர்வது, வெறும் அரச வாழ்வுக்காக அல்ல! ஆன்மக் கலப்புக்காகத்தான். 'நிற்குறின் அண்ணல் அடியவர் ஆமினோ' என்ற நம்மாழ்வாரின் அறிவுரையின்படி, வீடணன், இராமபிரானுக்கு அடியவனாவதற்குத்தான் செல்கின்றான்.

அதனால், இதை 'அடைக்கலம்' என்றுதான் சொல்லவேண்டும். வெற்றரசை விரும்பியிருந்தால், வீடணன் சேர்க்கை என்று சொல்லலாம்; இவன் விரும்பியது 'வீட்டரசு' என்பதால் இது 'அடைக்கலம்' ஆகும். அதாவது, பக்தன் பகவானிடம் சரணாகதி செய்து கொள்வது போன்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இராமாயணக் காப்பியத்தை, சரணாகதி நூல் என்று சொல்வார்கள் பெரியோர்கள். அதற்கு, இந்த வீடணன் சரணாகதியே அடிப்படையாகும்.

இந்தக்கருத்தை, நீதிபதி, திரு மு.மு. இஸ்மாயீல் அவர்கள் தனது அடைக்கலம் என்ற நூலில் உறுதிப்படுத்தியுள்ளார். 'இராமாயணத்திற்குச் சரணாகதி சாஸ்திரம் என்ற பெயரும் உண்டு. தன்னிடம் அடைக்கலம் புகுந்த, தன் எதிரி இராவணின் இளவலாகிய வீடணன் வேண்டியபடி, அவனுக்கு அடைக்கலம் கொடுத்தவன் இராமன் என்பதனைப் பிராதான்யமாகக் கொண்டே இப்பெயர் அமைந்தது என்பர்.' (அடைக்கலம்: பக் 6)

'சரணாகதி. என்பதற்கும் அவர் கொடுக்கும் விளக்கம் இங்கு பொருத்தமாக அமைகின்றது. 'தன்னுடைய செயலற்ற நிலையிலோ, தன்னால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாத நிலையிலோ, தான் ஒரு பேராபத்தில் இருக்கும் போதோ, தான் தப்பித்துக் கொள்வதற்கோ, உய்வதற்காகவோ, உதவி தேடுவது, சரணம் புகுதல் அல்லது அடைக்கலம் வேண்டல் என்பதாகும்.'

இது ஒரு மனிதனுக்கும் பிறிது ஒரு மனிதனுக்கு மிடையே நிகழும் பொழுது மிகமிகச் சாதாரணப் பொருளைக் கொடுக்கிறது.' 'ஆழ்ந்த பொருளில் இதனைக் காணும் பொழுது படைக்கப் பெற்ற உயிரொன்று, தன்னைப் படைத்த பரம் பொருளினிடத்துச் சரண் தேடுவதையே அது குறிக்கும்.' (அடைக்கலம் பக்-1,2)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



'வீடணன், இராமபிரானிடம் சென்று சேர்வது, ஒருமனிதன் பிறிதொரு மனிதனிடம் ஏதேனும் உலகியல் பொருளை நாடிச் செல்வது போன்றதல்ல! படைக்கப்பட்ட உயிர்ஒன்று பரம் பொருளிடம் சென்று கலக்கக்கூடிய உயர்வைக் காட்டுவது' என்றகருத்தை, அடைக்கல நூல் உறுதிப்படுத்து கின்றது. 'தெள்ளிதின் மேல் அரசு எய்து வான் விரும்பிமேயினான்' என்ற அனுமன் கூற்றும் வீடணன் சரணாகதியை உறுதிப்படுத்தும்.

வீடணன், தனது சொந்த அண்ணனை விட்டு விலகியதும், சொந்தம் இல்லாத, அரக்கர் குலப்பகைவனாகிய இராமபிரானிடம் சென்று சேர்ந்ததும் அரசியல் காரணத்துக்காகத்தான் என்று சிலர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இதனைக் காரணத்துடன் மறுக்கும் வகையில் பல பேரறிஞர்கள் எடுத்துரைத்துள்ளார்கள். அவர்களுள் ஒருவராகத் திகழும் மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் சொல்லியிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

'பிரபத்தி தத்துவத்தை விளக்கும் பக்தியே, உருவானவன்' என்று விபீஷணன் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டவன்.' என்றும், 'கெட்ட வழியிலிருந்து நல்வழிப்படுத்தும் என் வார்த்தைகள் தங்கள் உள்ளத்தில் ஏறவில்லை. உலகின் இயல்பு இதுதான். நாசமாக வேண்டுமென்று விதி இருந்தால் [illegible] சொற்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


யாவும் பயனற்றவை யாகிவிடும்.' என்று கூறிவிட்டு ராமர் இருக்கும் இடம் வந்து, ஆகாயத்தில் நின்றபடியே வானரர்களை நோக்கி, 'என்பெண்டு பிள்ளைகளைத்துறந்து ராமரைச் சரணமாக அடைந்து விட்டேன்.' என்றும் சாஸ்திரிகள் கூறுகின்றார்கள். (ராமாயணப் பேருரைகள். பக்-222, 229)

இது, வீடணன் சென்றது அரசியல் அடிப்படை அல்ல ஆன்மீக அடிப்படை என்று மேலும் உறுதிப் படுத்துகின்றது. இதுவரை, பிறப்பால் உறவின னான அண்ணனுக்கு (இராவணனுக்கு) அடிமையாக யிருந்து அரக்கர் குலத்தவனானான் வீடணன், இனி சிறப்பால் அண்ணலுக்கு (இராமபிரானுக்கு) அடியவனாகி, ஆழ்வார் நிலைக்கு உயர்வு பெறப் போகின்றான் அவன்.

இராமாவதாரக் காப்பிய மாந்தர்களுள் ஆழ்வார் என்ற சிறப்புப்பட்டத்துக்கு உரியவன் வீடணன். பரதனுக்கும் அந்தச் சிறப்புப்பட்டத்தை அளிப்பார்கள் இராமாயணப் பக்தப் பெரியோர்கள்.

பரதாழ்வார், விபீஷணாழ்வார் என்றே இவர்களை வைணவ ஆச்சாரியார்கள் குறிப்பிடு வார்கள். காப்பிய மாந்தர்களுள் இவர்கள் இருவர் மட்டும் ஆழ்வார் நிலைக்கு உயர்ந்தது எவ்வாறு?

**அடைக்கலம் :**

அரசர் குலத்தில் தோன்றியவன் பரதன்: அரக்கர் குலத்தில் பிறந்தவன் வீடணன். இருவரும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பிறந்தகுலத்தால் வேறுபட்டவர்கள். ஆனால் இராம பிரானை அடைந்த முறையில் ஒன்றுபட்டவர்களானார்கள். இருவரும், இராமனடியார்கள் ஆனார்கள். அடியவர்களாக வாழ்தலையே வாழ்க்கையின் பயனாகக் கருதியவர்கள். அடியவர்களுக்குரிய சின்னம் எதுவோ (முத்திரை) அதனைப் பெற்றுக்கொண்டவர்கள்: அடைக்கலச் சின்னம் திருவடி, அதனைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்த இருவரும்.

பரதன், இராமபிரான் திருக்கரத்தாலேயே திருப்பாதுகையைப் பெற்றுக் கொண்டான். அது, சித்திர கூடமலை அடிவாரம். வீடணனுக்கு இது நடந்த இடம் கடல்கரை.

வீடணன் அடைக்கலம் பெற்றதைக்காண்போம், இந்தக் கதைக்களத்தின் நிகழ்ச்சியை கம்பர். ஆழ்வார் நிலையிலிருந்து விவரித்துள்ளார் என்று கூறினால், அது மிகையானது என்று. இராம பக்தர்கள் யாரும் சொல்லமாட்டார்கள். அவ்வளவு அருமையாக அமைந்துள்ளது.

அடைக்கலம் அடைவதற்கும், அதனைப்பெறுவதற்கும், அரக்கர் குலத்தில் பிறந்த வீடணனுக்குத் தகுதியுண்டா? தகுதியை அளந்து காண்பதற்குரிய அளவுகோல் வேண்டுமே! அதனை, ஆச்சாரியப் பெருமானாகிய வேதாந்த தேசிகர் தந்துள்ளார் 'அடைக்கலப்பத்து' என்ற தமது பிரபந்தத்தில் 'அடைக்கலம்' பற்றி விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். பதினோரு பாசுரங்களைக்கொண்டது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இப்பிரபந்தம். இராமதேசிக ஆச்சாரியர் இதற்கு நல்லதொரு விரிவுரை தந்துள்ளார்.

"உகக்கும் அவை உகந்து, உகவாது
அனைத்தும் ஒழிந்து, உறவுகுணம்
மிகத்துணிவு பெறஉணர்ந்து,
வியன் காவல் எனவரித்து,
சகத்தில் ஒரு புகல்இல்லாத்
தவம் அறியேன், மதிள்கச்சி
நகர்க்கருணை நாதனை, நல்
அடைக்கலமாய் அடைந்தேனே."

(அடை-5)

உலகில் வேறு எந்த அடைக்கலமும் இல்லாதவன்; மற்ற உபாயத்தைப் பற்றிய அறிவு அற்றவன். இத்தகையவன்தான் அடைக்கலம் அடைவதற்குரியவன்.

சரணம் பெறுதற்குரிய தகுதிகள் ஐந்து 1. உகக்கும் அவை உகத்தல்-எம்பெருமான் எதனைக் கண்டு மகிழ்வானோ, அதில் மகிழ்தல்: 2. உகவாது அனைத்தையும் ஒழித்தல் — பெருமான் எதைக்கண்டு வெறுப்பானோ அதனிடத்தில் வெறுப்புக் கொள்ளுதல்: 3. உறவுகுணம் உணர்தல் —பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள உறவினை உணர்ந்து கொள்ளுதல்: 4. மிகத் துணிவுபெற உணர்தல்—எம்பெருமானிடம் மிக்க உறுதியாகிய மகாவிசுவாசத்தைக் கொள்ளுதல்: 5. பெருமானே என்னைக் காத்தற்கு உரியவன் என்று எண்ணுதல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இந்த ஐந்தும் முறையே ஆநுகூல்ய சங்கல்பம், ப்ராதி கூல்யவர்ஜதம், மகாவிசுவாசம், கோப்த்ருத்வ வரணம், கார்ப்பண்யம் என்று வடமொழியில் சொல்லப்படும். இது ஸ்ரீ ராமதேசிகாசார்யர் தரும் விளக்கம்.

வீடணனுக்கு இந்த ஐந்து விதமான தகுதிகளும் உண்டு என்பதை, அவன், தன்னுடன் வந்த அமைச்சர்களிடம் உரைத்த வார்த்தைகளால் உணரலாம். கவிச்சக்கரவர்த்தி, வீடணன் வாயிலாக அவனது உள்ளார்ந்த உணர்வை வெளியிட்ட கருத்துக் கவிதைகளை ஏற்கனவே கண்டோம்.

அடைக்கலம் பெற்றுக்கொண்டதற்கான அடையாளம் என்ன? சரணாகதியைப் பெருமான் ஏற்றுக் கொண்டதை எப்படித்தெரிந்து கொள்ளலாம்? இந்த வினாவிற்குரிய விடையை நம்மாழ்வார் திருவாய் மொழிப்பாசுரம் ஒன்றில் காணலாம்.

**'கூட்டுதிநின் குரைகழல்கள் : இமையோரும்**
**தொழாவகை செய்து,**
**ஆட்டுதி நீ; அரவணையாய்!**
**அடியேனும் அஃது அறிவன் :**
**வேட்கைஎலாம் விடுத்துஎனை உன்**
**திருவடியே சுமந்துஉழல**
**கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை**
**நான் கண்டேனே.'**(திருவாய்மொழி-4.9.9)

ஞானமில்லாதவராயினும், நீ உகந்தாரை, ஒலிக்கின்ற கழலை உடைய திருவடிகளிலே சுட்டிக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


கொள்கின்றாய் : நீ உகவாதாரை, அவர்கள் தேவர்களேயாயினும், உன்னைத் தொழாதபடி செய்து விஷயங்களில் திரியும்படி செய்கின்றாய்; அதனை அடியேனும் அறிவேன். அரவணையாய்! வேட்கை எல்லாம் விடுத்து உன் திருவடிகளையே சுமந்து திரியும்படியாக, தன் முயற்சியால் ஒருவராலும் அடையமுடியாத திருவடிகளிலே என்னைச் சேர்த்தாய் : நான் பார்த்தேன். என்கிறார்.

என்பது இப்பாசுரத்தின் பொழிப்புரை. இது, ஈட்டுரை தமிழாக்கம் செய்த திரு. B R. புருஷோத்தம நாயுடு அவர்கள் தந்த விளக்கம். இறைவனது திருவடிகளையே, சுமப்பதும், அப்போது, உலகத்து ஆசைகள் எதுவும் இல்லாதிருப்பதும் அடியார்களது இயல்பு. வேட்கையை விடுப்பதும், திருவடியைச் சுமப்பதும் சரணாகதி அடைந்தவர்களின் சின்னம் அடையாளம் என்பது தெரிகிறது.

**வீடணனும் திருவடியும் :**

வீடணன் அடைக்கலம் அடைவதற்கு முழுத்தகுதி பெற்றவன். அண்ணன் இராவணனை விட்டுப் பிரிந்தபிறகு, அரக்கர் குலப்பிறப்பின் பயனை நிரந்தரமாகப் போக்கிக் கொள்ளத் துணிந்தான். அதனால், உலக வேட்கை (ஆசை) எலாம் விடுத்தவனானான் : இனி, இராமபிரானை அன்றி வேறுஒருவரைப் புகலிடமாகக் கருதாதவனானான்: இராமபிரான் உகப்புக்குரிய அறத்தையே உகப்பவனானான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


தகுதியிருந்தாலும், 'எதிரியின் பக்கத்திலிருந்து வருவதால். இராமபிரான் எவ்வாறு தன்னை ஏற்றுக் கொள்வான்' என்ற ஐயப்பாடு வீடணன் உள்ளத்தில் தோன்றியிருக்கக்கூடும். மேலும், அரக்கர் குலத்தைச் சார்ந்தவனாக இருக்கும் தன்னைப் பற்றி இராமபிரான் தவறாகத்தானே எண்ணியிருப்பான். இந்த எண்ணம் மாறினால் தானே தன்னை ஏற்றுக்கொள்ளக்கூடும். அந்த எண்ணத்தை மாற்றுபவர்யார்? இதனை எல்லாம் முதலில் வீடணன் சிந்தித்திருந்திருக்க வேண்டும்.

வீடணன், விளைவினன அறியும் மேன்மை யனாகயிருந்ததால் இராமபிரான், தன்னை நிச்சயமாக ஏற்றுக் கொள்வான் என்ற நம்பிக்கை யோடு, பெருமான் வானரர்களோடு தங்கியிருக்கும் கடலின் வடகரைக்கு வந்தான். இந்தக்கடற்கரைக் கூடாரத்தில் இருப்பவர்கள் எவரும் தன்னைப்பற்றி அறிந்திருக்க முடியாது என்பது வீடணனுக்கு நன்கு தெரியும்.

இருப்பினும், ஒருவனை நம்பினான் வீடணன். அவன்தான் அனுமன். இராவணனது பேரவையில் அவனுக்கு, தான் நீதியை எடுத்துக்கூறிய போதும் அனுமனைக் கொல்லக்கூடாது என்று எடுத்துரைத்த போதும், அதனை அனுமன் கேட்டுக் கொண்டிருந் தான், அதனால், தனது நீதி நெறியைப்பற்றி, அனுமன் இராமபிரானிடம் சொல்லி, தனது அடைக்கலத்துக்கு ஆதரவாக இருக்கக்கூடும் என்று வீடணன் நம்பினான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


வீடணனது நம்பிக்கை வீண்போகவில்லை. எதிரியின் பக்கத்திலிருந்து வரும் ஒருவனை ஏற்றுக்கொள்வதா? வேண்டாமா? என்ற ஆலோசனை நிகழ்ச்சி இராமபிரான் திருமுன்னிலை யில் நடந்தது. அப்போது, அனுமனைத்தவிர, மற்றைய அனைவரும் வீடணன் வருகையை எதிர்த்தனர். அனுமன் மட்டுமே 'இவன் வரவு நல்வரவே' என்று துணிவாகக் கூறினான்.

அனுமன் நுணங்கிய கேள்வியன் அல்லவா? அதனால், வணங்கிய சென்னியனாய், மறைத்த வாயினனாய், வீடணனைப்பற்றி, எதையும் மறைக்காமல் விரிவாக எடுத்துப் பேசினான் அனுமன்.

இந்தப் பேரறிவாளனது பேச்சைச் செவி மடுத்து இனிது மாந்திய இராமபிரான், 'மாருதி வடித்துச் சொன்ன பெற்றியே பெற்றிஆகும்' என்று எடுத்துக்கூறினான். பிறகு, 'அபயம்' என்ற போழ்தத்தே அபயதானம் ஈதலே நமது கடப்பாடு' என்று, இச்சமயம்தான் மேற்கொள்ள இருக்கும் காரியத்தைத் தெளிவுபடுத்தினான் இராமபிரான்.

அதனால், வீடணனை அழைத்து வருமாறு சுக்கிரீவனைப் பணித்தான் இராமபிரான் அழைத்து வரும் பணியைசுக்கிரீவனிடம் ஒப்படைத்ததற்குக் காரணம் உண்டு. இராமபிரானுக்கு உதவவந்த வானரப்படைக்கு உரிமை உடையவன் இவனே: மேலும் அரச பதவியில் இருப்பவன், இவன் கிட்கிந்தை மன்னன், அழைக்கப்படுபவன் இலங்கை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



மன்னனாகக் கூடியவன். மன்னனை வேறுஒரு மன்னன்தானே வரவேற்க வேண்டும்! அதற்கு மேலும் வேறு ஒரு காரணம் உண்டு. வீடணனை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று, சுக்கிரீவன் தான் முதன் முதலாக மறுப்புக் கூறினான். மறுப்புக்கூறிய மன்னனையே, வெறுப்பு இன்றி விருப்பத்தோடு, வீடணனை அழைக்கச் செய்வது அரசியல் முறை.

கூடாரத்துக்கு வெளியில் நின்ற வீடணனை அழைக்கச் சென்ற சுக்கிரீவன், அவனிடம் 'தாமரைக் கண்ணன் (இராமபிரான்) வழுவல்இல் அபயம் உன்பால் வழங்கினன்' என்று சொன்னான். அதனைக் கேட்டதும் வீடணன் பேசிய பேச்சு அவனது உள்ளத் தூய்மையை உள்ளபடி புலப் படுத்துகின்றது. அதனைக் கம்பநாடர், அருமையான கவிதையில் வடித்துக் கொடுத்துள்ளார்.

'பஞ்சு' எனச் சிவக்கும் மென்கால்
தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக்கு இளைய என்னை
'வருக' என்று அருள்செய் தானோ?
தஞ்சுஎனக் கருதினானோ? தாழ்சடைக்
கடவுள் உண்ட
நஞ்சுஎனச் சிறந்தேன் அன்றோ
நாயகன் அருளின் நாயேன். (கம்-6487)

இராமபிரானது அருள் தன்மையை நினைக்கும் போது தனது தாழ்மையை எண்ணிப்பார்க்கின்றான் வீடணன். அதனால் இரண்டு வினாக்கள் வியப்புடன் எழுகின்றன வீடணன் உள்ளத்தில். 'குடும்பத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


தொடர்பால் ஏற்பட்ட வஞ்சகனாகிய தன்னை, பெருமான் 'வருக' என்று அருள் உணர்வு பெருக அழைப்பு விடுத்து விட்டானே! என்ன (வியப்பு) ஆச்சரியம். அதுவும் எவ்வளவு வஞ்சகன்?'

'அகலகில்லேன் இறையும்' என்று பெருமானுடன் ஒன்றியிருந்து வாழக்கூடிய மென்மைப் பிராட்டியை—மேன்மைத்தேவியை, அந்தப் பெருமானிடமிருந்து பிரித்தது எவ்வளவு பெரிய கொடுஞ் செயல் அதுவும் இராமபிரான் இல்லாத நேரத்தில், திருட்டுத்தனமாகப் பிரித்து வந்தது வஞ்சகச் செயல் அல்லவா;

'பிரிக்கப்பட்ட பிராட்டி எவ்வளவு மென்மையானவள்! காலில் செந்நிறத்தைச் சேர்ப்பதற்கு, செம்பஞ்சுக்குழம்பு வருகிறது என்று சொன்னாலே, அதனையே பொறுக்காமல் தானே சிவக்கும் மென்மைப் பாதங்களை உடைய மேன்மையள் சீதாப்பிராட்டி.'

'இத்தகைய மென்மைப் பிராட்டியைத்தனது வன்மைச்செயலால் பிரித்த இராவணனுக்குத்தம்பி நான். இது தெரிந்தும், என்னை 'வருக' என்று அழைத்த அன்புதவழும் இராமபிரானது அருட்கருணையை என்ன என்று வியப்பது.'

'அத்தோடு நில்லாமல் இரக்கம் என்ற ஒரு பொருள் இல்லாத அரக்கர்குலத்தவனாகிய என்னை அடைக்கலப் பொருளாக ஏற்றுக்கொண்டு விட்டானே! என்ன வியப்பு என்ன வியப்பு.'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



'நான், அரக்கர் குலத்தவனாகயிருப்பதால், தீண்டத்தகாத நஞ்சு (விஷம்) போன்றவன்.என்னை அந்தப் பெருமான் ஏற்றுக் கொள்ளயிருப்பதால், சிவபிரானது திருக்கழுத்தைச் சேர்ந்த நஞ்சு போன்று நான் ஏற்றம் பெற்றவனாவேன்? 'நாயினும் கடைப்பட்ட நான், நாயகனது (இராமபிரான் திருவருளினால், சிவபிரான் திருக்கண்டத்தைச் சேர்ந்த நஞ்சைப் போன்று சிறப்புப் பெறுவேன்.

வீடணனது இந்த உணர்வுகலந்த பேச்சு, இராமபிரானது கருணைத் திறத்தையும். தனது அரக்கர் குலச்சிறுமையையும் எவ்வளவு நினைந்து பார்த்து உருகியுள்ளான் என்பதைக்காட்டுகின்றது.

இறைவனது அருள் திறத்தை எண்ணும் எண்ணம்தான், மனிதன், தான் செய்த பாவச் செயலை நினைத்து நினைத்து உருகச் செய்கின்றது. இந்த உருக்கம்தான், பாவஅழுக்கைக் கழுவும் புண்ணிய நீர்.

## இராம தரிசனம் :

விரைந்து செல்கின்றான் வீடணன். செல்லும் போது, அவன் கைகள் இரண்டும் தலைமையின் மேல் குவிந்தன: முகம், 'அழிந்தது பிறவி' என்னும் அகத்தின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது: வலிய கல்லும் மரங்களும்கூட கண்டு உருகும் வண்ணம் அன்பினால் கண்கள் நீரைப் பொழிந்தன. இராமபிரான் கருணையால் பார்வையைச் செலுத்துகின்ற ஒவ்வொரு கணத்திலும், மார்பு மண்ணுறப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


பணிந்தது. இது, வீடணனது அளவு கடந்த பக்தியையும், ஆர்வத்தையும் அடக்கத்தையும் காட்டுகின்றது.

மண்ணுறப் பணிந்து வணங்கிக் கிடக்கும் வீடணனை, இராமபிரான் தனது கருணையால், எழுந்து இனிது இருத்தி என்றான்: மலர்க்கையால் இருக்கை ஈந்தான்: பிறகு, 'ஏழினோடு ஏழாய் நின்ற உலகும் என்பெயரும். எந்நாள்

**வாழும்நாள், அன்றுகாறும், வாள்எயிற்று**
**அரக்கர்வைகும்**
**தாழ்கடல் இலங்கைச்செல்வம் நின்னதே**
**தந்தேன்.**

என்று கூறினான்.

கடல்சூழ்ந்த இந்த இலங்கைப் பேரரசு இனி உன்னுடையதே. எவ்வளவு நாள்? பதினான்காக நின்ற இந்த உலகு இருக்கும் வரையிலும், எனது பெயர் நிற்கும் வரையிலும் 'என்று இராமபிரான் வீடணனிடம் சொன்னதோடு நிற்கவில்லை; தனது தம்பி இலக்குவனை அழைத்து, 'துஞ்சல் இல் நயனத்து ஐய! சூட்டுதிமகுடம்' என்று ஆணையிட்டான், யாருக்கு? தஞ்ச நல்துணைவனான தவறியாப் புகழான் தனக்கு.

'நம்மிடத்தில் நல்ல அடைக்கலப் பொருளாக வந்து சேர்ந்த, குற்றமே இல்லாத புகழ் நிரம்பியவன் என்ற பொருள் பொதிந்த கவிதைத் தொடர் வீடணனைப்பற்றி இராமபிரான் கொண்ட நல்லெண்ணத்தைக் காட்டுகின்றது.'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'இலங்கைச் செல்வம் தந்தேன்' என்றது அரசியல்.

ஆனால், விடணன், தான் இங்கு வந்தது எதற்கு என்பதனை பணிவோடு தெரிவிக்கின்றான். இராமனை மன்னனாகக் காணவில்லை: இறைவனாகக்கண்டு தரிசிப்பதே வருகையின் நோக்கம், வாழ்க்கையின் குறிக்கோள் என்று குறிப்பிடுகின்றான் வீடணன்.

'விளைவினை அறியும் மேன்மை வீடணன்,
'என்றும் வீயா
அளவு அறு பெருமைச்செல்வம் அளித்தனை
ஆயின், ஐய!
களவுஇயல் அரக்கன் பின்னை தோன்றிய
கடமை தீர,
இளையவற் கவித்த மௌலி என்னையும்
கவித்தி என்றான்.' (கம்-65006)

இராமபிரான் தந்தது இலங்கைச் செல்வம், இதற்கு அடையாளம் முடிசூட்டுதல். வீடணன் வேண்டுவது அளவு அறுபெருமைச் செல்வம்: இது தான் என்றும் அழியாதது. (வீயாதது) எல்லை அற்றபெருமை உடையது: அத்தமில் செல்வமாகயிருப்பது. இது மோட்ச சாம்ராஜ்யம் எனப்படும். அந்த வீட்டரசுதான் எனக்குவேண்டும். இது தந்ததற்கு அடையாளம், திருப்பாதுகையைத் தலையில் அணிதல்.

'முடிவேண்டாம்: அடிவேண்டும்' என்றான். முடி, மன்னன் தலைக் காட்டும்; அடி, இறைவனின் அடியவன் என்பதை உலகுக்கு உணர்த்தும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'அடியவனாக வாழ்தல்தான் வாழ்க்கையின் குறிக்கோள்: அரசனாக வாழ்வது நோக்கமல்ல!'' இதனை உணர்த்துகின்றது வீடணனது அடிவீழ்ச்சி விண்ணப்பம். விண்ணப்பம்யாது?

'இளையவற் கவித்த மோலி என்னையும் கவித்தி' என்பது, பரதனுக்கு என்னபாதுகை கொடுக்கப்பட்டதோ அதனையே எனக்கும் கொடுக்கவேண்டும். பரதன், இராமபிரானது பாதுகையைத் தனது தலைக்கு அணியாகச் சூட்டிக்கொண்டான். இராமபிரானது ஆணையின் படி, அயோத்தியை ஆள்வதற்கு உடன் பட்டான் பரதன்.

அதுபோல, தானும் இராமபிரானது பாதுகையையே தலைக்கு அணியாகச் சூடிக்கொள்ள விரும்பினான் வீடணன். 'கோலமாம் என் சென்னிக்கு உன்கமலம் அன்ன குரைகழலே' என்பது நம்மாழ்வாரது அனுபவம். (கோலம்-அழகு: சென்னி-தலை : கமலம்-தாமரை : கழல்-திருவடி)'

இராமபிரானது பாதுகையையே தமது தலைக்கு அணியாக ஏற்றுக் கொண்டதனால் போலும் பரதனும், வீடணனும் ஆழ்வார்களாக விளங்குகின்றார்கள். இருவரும் அடிசூடிய அரசர்கள்.

பாதுகையைக் கேட்பதன் நோக்கம் என்ன? பிறப்பின் காரணத்தால் வீடணனுக்கு ஒரு கடமை உண்டு. அந்தக்கடமையைச் செய்தால் அரக்கனாகத் தான் வாழவேண்டி வரும். தன் அண்ணன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இராவணன் களவியல் அரக்கன். அவனுக்குப் பின்னோனாகப் (தம்பி) பிறந்திருப்பதால், அண்ணன் சொற்படிதான் நடக்க வேண்டும். சாதி நெறியைப் பின்பற்றிக் கொண்டு இலங்கையிலே தான் தங்கியிருக்க வேண்டும்.

அந்தக்கடமை தீரவேண்டுமானால் பிறவி மாற வேண்டும். அரக்கர் பிறவி எப்போது மாறும்? இராவண சகோதரன் என்றநிலை ஒழிந்து இராமன் குடும்பத்துள் ஒருவனாகக்கலந்து கொள்ள வேண்டும். கலப்பதற்கு வீடணனுக்கு விருப்பம் உண்டு. ஆனால், கலக்கச்செய்யும் உரிமை இராம பிரானுடையது. இங்குவர எண்ணும் போதே, 'இராமன் தாளிணை புல்லுதும் புல்லி இப்பிறவி போக்குவதும் என்ற நோக்கத்தோடுதானே வந்தான் வீடணன்! கேட்கும் போது, 'பரதன். என்று குறிக்காமல் 'இளையவன்' என்று சொன்னதே அவனது விருப்பத்தை ஓரளவு வெளிப் படுத்தியதாயிற்று.

இராம சகோதரனாக மாறிவிட்டால் இராவண சகோதரன் வீடணன் தனது கடமையை மறந்தான் என்று யாரும் சொல்லமுடியாது.

வீடணனைக் குறிக்கும்போது, கவிச்சக்கர வர்த்தி, 'அவன் ஒரு தீர்க்கதரிசி' என்று அறிவிப்பது போல் அழகான ஒரு தொடரால் அறிமுகம் செய்கின்றார். அத்தொடர், 'விளைவினை அறியும் மேன்மை வீடணன்! என்பது. அது, கருத்து வளம் பொதிந்த அழகுத்தொடர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இராமாயண கதாப்பாத்திரங்களுள் எதிர்கால நிகழ்ச்சியை உணர்ந்து செயல்படக்கூடியவன் ஒருவன் உண்டு என்றால் அவன் வீடணனே.

**கேட்டதும் கிடைத்ததும் :**

வீடணன் இராமபிரானிடம் கேட்டது, பாதுகை: அவனுக்குக் கிடைத்தது. பாதுகையைச் சூடிக் கொண்ட பரதனை ஒத்த சகோதரநிலை.

'குகனொடும் ஐவர்ஆனேம் முன்பு:
பின்குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம்:
எம்முழை அன்பின் வந்த
அகன்அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்:
புகல்அரும் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.'
(கம்-6507)

என்பது இராமபிரானது அருள்நயம் கனிந்த ஆசிமொழி. ஆசியோடு கலந்துவந்த சகோதர அனுமதிப் பெருவார்த்தை.

வாய்மையும் மரபும் காத்த மன்னனாகிய தசரதனை, வீடணனுக்குத் தந்தை ஆக்கினான் என்றால், இது, இராமபிரானது எவ்வளவு சிறந்த அருள் திறத்தைக் காட்டுகின்றது! (நுந்தை- உன் தந்தை) புதல்வர்களே இல்லாமையால் ஏக்கம் உற்றதசரதன் இப்போது எழுபுதல்வர்களால் பொலிவுற்று விளங்குகின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



வேட்டுவக்குலத்தோன், குகன்: குரக்கினத்தான் சுக்கிரீவன்: அரக்கினத்தான் வீடணன். இவர்கள் யாவரையும் இனத்தின் சிறுமையைச் சிறிதும் பார்க்காமல், அவர்களது அன்பை மட்டுமே அளவுகோலாகக் கொண்டு தனது அருள் பெருக்கால் அவர்களை சகோதரர்களாக அணைத்துக் கொண்டான் அயோத்தி அண்ணல்.

இந்த மூவரில் 'ஐய' என்று பெருமையோடு அழைக்கப்பட்டவன் வீடணன். மேலும் 'அகன் அமர் காதலுடையான்' - மனத்தில் நிறைந்த அன்புடையவன்' என்றும் இராமபிரானால் மதிக்கப் பெற்றவன். ஏற்கனவே, குகனையும், சுக்கிரீவனையும் உடன்பிறவாச் சகோதரர்களாகச் சேர்த்துக் கொண்ட இராமபிரான், அரக்கர் குலத்து வீடணனைப் பரதனுக்குச் சமமாக மதிப்பளித்து, ஒன்றாக அணைத்துக் கொண்டான்.

சகோதரர்களில், 'பரதன் பெரிதும் உத்தமன் ஆவதுண்டோ' என்று இராமபிரான் பரதனுக்குத் தனித்ததோர் ஏற்றம் அளித்துள்ளான், அவ்வளவு எற்றம் வீடணனுக்கு. ஏன்? சகோதரர்களில் இராமபிரானது பாதுகையைத் தனது தலைக்குஅணியாகச் சூடிக்கொண்டு, அவன் இட்ட ஆணையை மீறாமல், கோசல நாட்டுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டான் பரதன்.

அதுபோன்று, வீடணனும், இராமபிரானது திருவடிப் பெருமையை உணர்ந்து, பாதுகையைப் பெற்று, இலங்கை அரசுப் பொறுப்பை ஏற்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இந்தக் கவிதை, இராமபிரானது கருணைப், பெருக்கையும், வீடணனது அடிமைத் திறத்தையும் எடுத்துக்காட்டி, ஏற்றம் பெற்று விளங்குகின்றது. தசரதன் புதல்வரால் பொலிந்தான் : இந்தக்கவிதை ஏற்றுக்கொண்டவனின் திருவுளப் பெருமையையும் ஏற்கப்பட்டவனின் பெருமையையும் புலப்படுத்துவதால் பொலிவு பெறுகின்றது.

**வீடணன் மகிழ்ச்சி :**

கவிச்சக்கரவர்த்தி கம்பர், பரதன் பெற்ற மகிழ்ச்சி போன்றே வீடணனும் மகிழ்ந்தான் என்று கூறுகின்றார். ஏன்? திருவடியைச் சூடிக் கொண்டதால்.

**'அடித்தலம் இரண்டையும், அழுத**
**கண்ணினான்,**
**முடித்தலம் இவைஎன முறையின் சூடினான்:'**
என்றும்.

**'பாதுகம் தலைக்கொடு, பரதன் பைம்புனல்**
**மோது கங்கையின் கரைகடந்து முந்தினான்?**
**என்றும் பரதனைப்பற்றிக்கூறிய**
**கவிஞர்பெருமான், வீடணனைப்பற்றி!**

**'திருவடி முடியின் சூடி செங்கதிர் உச்சிசேர்ந்த**
**அருவரை என்ன நின்ற அரக்கர்தம் அரசு.'**

என்று அழகுபடத் தெரிவிக்கின்றார்.

வீடணன் பெற்ற மகிழ்ச்சிக்குரிய காரணத்தை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அவனே சொல்லக் கேட்கவேண்டும். அது ஒருத் தனிக்கவிதையாக மலர்ந்துள்ளது.

'நடுஇனிப் பகர்வது என்னோ? நாயக!
நாயினேனை,
'உடன்உதித் தவர்களோடும் ஒருவன்' என்று
உரையாநின்றாய் :
அடிமையின் சிறந்தேன்' என்னா,
அயிர்ப்பொடும் அச்சம் நீங்கி,
தொடுகழல் செம்பொன் மேனி சென்னியில்
சூட்டிக் கொண்டான். (கம்-6508)

'சக்கரவர்த்தித் திருக்குமாரனாகிய இராம பிரான், களவியல் அரக்கன் பின்னே தோன்றிய. இழிகுலத்தவனாகிய தன்னை ஏற்றுக் கொள்ளுவானா? ஏற்காது தள்ளுவானா' என்ற ஐயம் (அயிர்ப்பு) இருந்தது வீடணன் உள்ளத்தில், மேலும், இந்த வானர வீரர்கள் தன்னைக் கண்டதும் அடித்து விடுவோர்களோடு என்ற பயமும் (அச்சம்) இருந்தது. இந்த இரண்டும் நீங்கியதே மகிழ்ச்சியின் முதல் காரணம்.

அடுத்த படியாக, அயிர்ப்பும் (சந்தேகம்) அச்சமும் இருந்த இடத்தில், இராமபிரான் மொழிந்த சொல் அமிழ்தம் வந்து தங்கியது. அந்த அமிழ்த, மொழி என்ன? 'உடன் பிறந்தவர்களோடு ஒருவன்' என்று கூறியது, இராம சகோதரர்கள் பிறப்பினாலும், சிறப்பினாலும், பண்பினாலும், எவ்வளவு உயர்ந்தவர்கள். அவ்வளவு உயர்ந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


வர்களுக்குச்சமமாக, நாயினும் தாழ்ந்தவனாகிய என்னை அமர்த்தி விட்டாயே' என்று சொல்லும் போது வீடணன் மனம் மகிழ்கின்றது.

மேலும், 'அடிமையின் சிறந்தேன்' என்று வீடணன் உரைத்த வார்த்தை, அவனது உள்ளக் களிப்பைத் தெளிவாக்குகின்றது.

வஞ்சக அண்ணனுக்கு அடிமைப்பிறப்பினனாகிய வீடணன், அயோத்தி அண்ணலுக்கு அடியவனாக ஆகும் வாய்ப்பு கிட்டியது என்றால், அந்த மகிழ்ச்சிக்கு எல்லை உண்டா? இல்லை எல்லை.

**உயிரினங்களின் உவகை:**

அரக்கர் குல வீடணனை, அந்தம் இல் குணத்தவனாகிய இராமபிரான் ஏற்றுக் கொண்ட உயர்ந்த செய்கையைக் கண்டு, வாய் இல்லாத இயற்கைப் பொருள்களும் கூட மகிழ்ந்தன என்று கூறுகின்றார் கம்ப நாடர்.

**'தீர்த்தன் நல் அருளை நோக்கிச் செய்ததோ?**
**சிறப்புப் பெற்றான்,**
**கூர்த்த நல் அறத்தை நோக்கிக் குறித்ததோ?**
**யாது கொல்லோ?**
**வார்த்தை அஃது உரைத்த லோடும்**
**'தனித்தனி வாழ்ந்தேம்' என்ன**
**அர்த்தன, உலகில் உள்ள சராசரம்**
**அனைத்தும் அம்மா!"** (கம்-6504)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


உலகத்தில்உள்ள உயிரினங்கள் இரண்டுவகை. இயங்குவன ஒன்று. இயங்காது நிற்பன மற்றொருவகை.

சர, அசரம் - சராசரம் : நிற்பன நடப்பன. இந்த எல்லாவகை உயிரினங்களும் உவகையால் ஆரவாரித்தன. இதனைக்கண்டு கம்பரே வியந்து போகின்றார். கவிஞரது வியப்பு, அம்மா என்ற இடைச்சொல்லாக, கவிதையின் இறுதியில் நிறைவாக நிற்கின்றது.

வியப்புக்குக்காரணம், பேசும்வாய் உள்ளன வாய் இல்லாதனவாகிய எல்லாவகை உயிர்களும் தனித்தனியாகப் பிரிந்து நின்று பிறகு ஒன்று கூடி 'நாங்கள் வாழ்ந்தோம்' என்று சொல்லிக் கொண்டு ஆரவாரம் செய்தன. இந்த ஆரவாரம் மட்டும் கவிஞரது வியப்புக்குக் காரணம் அன்று. இந்த ஆரவாரம் எதனைக் கருதியதாக இருக்கலாம் என்று சிந்தித்தார் கம்பநாடர்.

இந்த நிகழ்ச்சிக்கு உரியவர் இருவர் : ஒருவர் ஏற்றுக் கொண்டவர் : மற்றொருவர் ஏற்றுக் கொள்ளப்பட்டவர். ஒருவர் அருளாளர் : மற்றொருவர் அறவாழ்வினர். அருள், அறத்தை எற்றுக் கொண்டுவிட்டது.

அறம், அருளால் தானே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இதில் வியப்பு என்ன! அறம், அரக்கர் குலத்திலிருந்து வந்தது. அதனால், அறமாகிய மணி, அரக்கர் குலப்பாவமாகிய அழுக்கோடு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


கூடியதாகவல்லவா இருக்கும்! அந்தப் பாவ அழுக்கால் மூடப்பட்டிருந்தும், ஏற்றுக்கொள்ளப் பட்டதால்தான், வியப்பு, அழுக்கு மணியை (பாவகுல அறம்) எற்றுக்கொள்ளலாமா? அழுக்கைக் கழுவும் நீர் இருக்கும்போது ஏன் அஞ்சவேண்டும்?

ஏற்றுக்கொண்டவன் தீர்த்தன். தீர்த்தம் - நீர். புண்ணிய நன்னீர். தன்னைச் சேர்ந்தவர்கள் யாவராயினும் அவரது பாவஅழுக்கைப் போக்கித் தூய்மை செய்பவன். அவனும்தூய்மையன் : சேர்ந்தாரையும் தூய்மையாக்குபவன்.

தீர்த்தனாகிய (தூயனாகிய) இராமபிரானது அருள் திறத்தை நோக்கித்தான் உயிர்கள் ஆர்த்தனவோ? இல்லை! இல்லை!!

ஏற்றுக்கொள்ளப் பட்டானே அந்த வீடணனது மிக்க நல்ல அறஉணர்வை நோக்கித்தான் ஆரவாரம் செய்தனவோ? ஆரவாரத்துக்குக் காரணம் எதுவாக இருக்கலாம்? இவ்வளவு தாழ்ந்தவனையும் ஏற்றுக் கொண்டு 'இலங்கைச் செல்வம் உன்னதே தந்தேன்' என்று கூறினானே இராமபிரான்! என்ன அருள்! வியக்கலாம்.

ஆனால், இராவணன் ஆட்சியில் உயிரினங்கள் பலவும் கொடுமைக்குள்ளாகியிருந்தன. இனி, அந்த இலங்கைஆட்சி வீடணனுக்கு வரப்போகின்றது. இதற்குக் காரணம் இவனது அறவாழ்க்கை. இந்த அறஉணர்வை, பாவிகளாகிய அரக்கர் கூட்டத்திலிருந்த போதும் விடாது காப்பாற்றி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


வந்தானே! 'வெளித்து வாழ்தல் அரிது' என ஒளித்து வாழ்ந்த தருமத்தினனாக இருந்தானே. அதனால், 'சிறப்புப் பெற்றான் கூர்த்தநல் அறத்தைக் குறித்ததே இந்த ஆரவாரம்.

'யாது கொல்லோ?' என்ற வியப்பு தோன்றினாலும், வீடணனது சிறப்பை உணர்த்தும் வண்ணம் இந்தக்கவிதையை அமைத்துள்ளார் கம்பநாடர். அண்ணன் செய்ததீய செயலைக் கண்டிப்பதில் ஒத்த உணர்வினரான தம்பிகளுள், ஒருவன், சேரவேண்டிய இடத்தைச் சேர்ந்து இவ்வாறு ஏற்றம் பெற்றான்.

மற்றொருதம்பி கும்பகர்ணன் என்ன ஆனான்? அவன்கதை அத்தோடு முடிந்ததா? இல்லை! இல்லை! அவனைக்கதைக்களத்துக்குக் கொண்டுவருகின்றார் கம்பர். கதைக்களம் என்ன? போர்க்களத்துக்கே அனுப்பப் படுகின்றான் அண்ணன் இராவணனால்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# 6
# உறங்கிய தம்பியும் உறங்காத அண்ணனும்

**உறக்கம்**

உடலின் ஆரோக்கியத்துக்கு இறைவனால் அளிக்கப்பட்ட ஒரு வரப்பிரசாதம் உறக்கம். இது, எப்படி உடலின் ஆரோக்கியத்துக்கு உதவுகின்றது?

உடல், உழைப்புக்காகவே ஏற்பட்டது. அந்த உழைப்பு தனக்காகவும் இருக்கலாம். பிறர்க்காகவும் இருக்கலாம். எதற்காக உழைத்தாலும், களைப்பு தோன்றுவது இயல்பு. இந்தக்களைப்பைப்போக்கிக் கொள்ள ஓய்வு தேவை. அந்த ஓய்வை அளிப்பது உறக்கம். உழைத்த உடல், உறக்கத்தில் ஓய்வு பெற்று களைப்பு நீங்கினால், நல்ல ஆரோக்கியத் தோடு விளங்கும். ஆரோக்கியம் பெற்றஉடல் மேலும் உழைப்பதற்குத் தயாராகிவிடும்.

நல்ல உறக்கத்தில் கிடைக்கும் சுகம் வேறு எதிலும் கிட்டாது. ஆனால், அந்தச்சுகம், பகலில் நன்கு உழைத்த உடலுக்குத்தான். இரவில் கிட்டும். தன்னை மறந்த நிலையில் தூங்கும் தூக்கம்தான் அத்தகைய சுகத்தைக் கொடுக்கும். இத்தகைய சுக வாழ்வினனுக்கு எந்த நோயும் அணுகாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


நோய் அணுகினால், தூக்கம்-உறக்கம் இல்லை: உறக்கம் இல்லை என்றால் இன்பம் இல்லை. சுகம் அணுகாது போய்விடும்.

தூங்கிச் சுகம் பெறுவது முறையானது, தூங்கிப் பெறவேண்டிய சுகத்தை, சிலர் தூங்காமலேயே பெறுவர். அவர் யோகிகள். தூங்காமல், தூங்கும் நிலை அது, 'தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம்?' என்று தாயுமான அடிகள் ஏங்கினார். தூங்காமலே தூங்கிச் சுகம் பெறுவர் யோகிகள். தூங்கியும் சுகம் காணாதவர் போகிகள்.

செயலற்று இருத்தல் என்பதுதான் தூக்கம் உடல் செயலற்றுக் கிடக்கலாம். ஆனால், உள்ளம் உலகச் செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தால், தூங்கியதன் சுகம் கிட்டாது, உடலும் உள்ளமும். ஒரு சேர செயலற்ற நிலையில் கிடக்கும் போது உறக்கத்தின் பயனாகிய இன்பம் கிட்டும். ஆரோய்க்க வாழ்வுபெற முடியும்.

உறக்க காலத்துக்கும் அளவு உண்டு. அளவு கடந்த உறக்கமும் ஒரு நோய். அளவுக்குட்பட்ட உறக்கம் இல்லாதிருப்பதும் ஒரு நோய். உறங்க வேண்டிய இரவு நேரத்தில் உறக்கம் வராதிருப்பதும், உறங்க வேண்டாத பகல் நேரத்தில் உறக்கம் வருவதும் உடல் ஆரோக்கியத்துக்கு உரியதல்ல.

'செய்தக்க அல்ல செயக்கெடும்: செய்தக்க செய்யாமையானும் கெடும்' - என்ற திருக்குறள் அறவுரை, உறக்கத்துக்கும் பொருந்தும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


வள்ளுவர் தந்த அறவுரையை 'உறக்கம்' என்ற ஒரு நெறியில் கூடப்பின்பற்றவில்லை இலங்கையில் உள்ள அண்ணன் தம்பியர் இருவரும். அண்ணன் இராவணன் உறக்கம்வராது உழன்று கொண்டிருந்தான். தம்பி கும்பகருணன் உறக்கத்திலேயே திளைத்துக் கொண்டிருந்தான்.

இரண்டுநிலையும் வேண்டாததுதான். வேண்டுதலும் வேண்டாமையும் அவரவரது உள்ளத்தின் இயல்பைப் பொறுத்ததாகும்.

**இராவணன் உறக்கம் இன்மை :**

உறக்கத்தை வருமாறு வேண்டுகின்றான் இராவணன். ஆனால், அது இவனிடம் வருவதில்லை. ஏன்? அதனைப் பக்கத்தில் நெருங்க விடாதவாறு. இரண்டு உணர்வுகள் இவனை நன்றாக அழுத்தமாகப் பிடித்துக் கொண்டுள்ளன. ஒன்று காமஉணர்வு: மற்றொன்று அவமான உணர்வு, இந்த இரண்டு உணர்வுகளும் இவன் உள்ளத்தை அலைத்துக் கொண்டிருக்கும்போது, எத்தனை வருந்தி வருந்தி அழைத்தாலும் உறக்கம் எட்டிக்கூட பார்க்காதே!

உறக்கத்தின் வருகையைத் தடைப்படுத்தும் இந்த உணர்வுகள் இரண்டையும் இராவணனே வேண்டிப்பெற்றான். இந்த இரண்டும் நல்வாழ்க்கைக்கு வேண்டாதவைகள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இராவணன் உள்ளத்தில் முதலில் புகுந்தது காமஉணர்வு. அந்த உணர்வுப் பசியைத்தணிக்க முயன்று முடியாததால், நிகழ்ந்த செயல்களால், அடுத்துப் புகுந்தது அவமான உணர்வு.

சீதாப் பிராட்டியிடம் தவறாக நெருங்கியதால் காமஉணர்வு: இராமபிரானிடம் போர்க்களத்தில் நெருங்கியதால் அவமான உணர்வு.

'சுட்டது குரங்கு எரி சூறை ஆடிட, இட்ட இவ் அரியணை இருந்தது என்உடல்' என்று தலை குனிந்து, பேரவையில் கூறிய அவமானத்தைப் போக்கிக் கொள்வதற்குப் போர்க்களம் சென்ற இராவணன், மேலும் பெரிய அவமானத்தைச் சுமந்து கொண்டுவந்தான்.

எவ்வளவு பெரிய அவமானம்! போர்க்களத்தில், தான் கொண்டு சென்ற சேனைகள் அத்தனையும் அழிந்தது: ஏறிச்சென்றதேர். எடுத்துச் சென்றவில், சூடிச்சென்றமுடி அத்தனையும் இராமபிரான் விட்ட அம்பின் வேகத்தால் அழிந்து ஒழிந்தன.

போர்க்களத்தில், எல்லாம் அழிந்த நிலையில் இராவணன் நிற்கும் அவமானத் தோற்றத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது ஒரு கவிதை.

**'அறம்கடந்தவர் செயல்இது' என்று**
**உலகுஎலாம் ஆர்ப்ப,**

**நிறம்கரிந்திட, நிலம்விரல் கிளைத்திட,**
**நின்றான்**

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இறங்கு கண்ணினன்: எல்அழி முகத்தினன்:
தலையன்
வெறுங்கை நாற்றினன், விழுதுடை
ஆல்அன்ன மெய்யன். (கம்-7265)

**இராவணன் அவமானம் :**

நாணத்தால் இராவணனது, உடல்கருத்தது: கால் விரல், நிலத்தைக் கீண்டிக் கொண்டிருந்தது: கண்கள் கீழே நோக்கின: முகம் ஒளி இழந்தது: தலை தாழ்ந்தது: கைகள் ஆயுதத்தை இழந்தது வெறுமையோடு, ஆலமரத்தின் விழுதுகளைப் போன்று தொங்கின.

இதனைக்கண்ட, உலகத்தவர் அனைவரும் 'தருமத்தைக் கடந்தவரின் செயல் இப்படித்தானே இருக்கும்' என்று கூறி ஆரவாரித்தனர்.

உலகத்தவரின் ஆர்ப்பு. மேலும், இவனது அவமானத்தை மிகுவித்தது.

அவமானம் படிப்படியாகத் தொடர்ந்தது. ஆயுதம் இன்றி, நாணத்தால் சாம்பி நிற்கும் இராவணனைக் கொல்ல நினைக்கவில்லை இராமபிரான். ஆயுதம் அற்றவனைக் கொல்வது யுத்த தர்மம் அன்று. அந்தத் தர்மத்தைக் கடைப்பிடித்த இராமபிரான், எந்தத்தர்மத்தையும் வாழ்வில் ஏற்காத இராவணனை, 'இன்றுபோய், போருக்கு, நாளைவா' என்று விடை கொடுத்து அனுப்பினான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பகைவனிடம் உயிர்ப்பிச்சை பெறுவது, வெற்றி வீரனாய் வாழ்க்கைமுழுவதும் திகழ்ந்தவனுக்கு எவ்வளவு பெரிய அவமானம்! பெருவீரனாகப் போர்க்களம் புக்கவன். எல்லாம் களத்தே போட்டு வெறுங்கையனாக இலங்கை மீண்டான்.

இலங்கை மீண்ட இராவணன், பூதலம் என்னும் நங்கை தன்னையே நோக்கிப்புக்கான். அப்பொழுது. இவனை. தாது அவிழ் கூந்தல் மாதர் தனித்தனியாக நோக்குகின்றனர். அவர்களது நோக்கு, அவமானத்தை மேலும் வளர்க்கின்றது.

அவமானம் தாங்கமுடியாமல், யார் கண்ணிலும் படாமல் இருக்க வேண்டி, படுக்கை அறையுள் நுழைந்தான் இராவண அரக்கன். 'செறிமலர் அமளி சேர்ந்தான்' என்பது கவிதைத் தொடர். தன்னைச் சார்ந்தவரை. அக்கணமே உறங்கவைக்கும் மென் மலர்ப்பள்ளி அது. அப்படியிருந்தும் உறக்கம் இல்லை இவனுக்கு. அதன் காரணத்தை அடுத்த கவிதை அழகாகத் தெரிவிக்கின்றது.

'பண்நிறைப் பவளச்செவ்வாய், பைந்தொடி
சீதை என்னும்
பெண்இறை கொண்ட நெஞ்சில், நாண்நிறை
கொண்ட பின்னர்
கண்இறை கோடல் செய்யான் கையலு
கவலை சுற்ற
உள்நிறை மானம் தன்னை உமிழ்ந்துஎரி
உயிர்ப்ப தானான்.' (கம்-7281)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இராவணன் நெஞ்சில் ஏற்கனவே ஒரு பெண் தங்கியிருக்கின்றாள். (காமஉணர்வு) யார் அந்தப்பெண்? சீதை என்னும் பெண். எப்படிப் பட்டவள்? பண்ணினது இனிமை நிறைந்த சொற்கள்: பவளம் போன்ற செந்நிறத்த வாய்: பசுமையான பொன்னால் ஆன தங்கவளையல்கள் தங்கியகைகள் இவைகளை உடையவள்.

இந்தப் பெண் தங்கியுள்ள உள்ளத்தில் நாணம் (வெட்கம்) (அவமானம்) வந்து நிரம்பிவிட்டது. காமஉணர்வு அவமான உணர்வு. இந்த இரண்டு உணர்வுகளின் மோதுதலால் கண்கள் இரண்டின் இமைகளும் சிறிதும் மோதுதல் செய்யாவாயின. உறங்காக் கண்ணினனாயினன். அதனால் உள்ளே நிறைந்த அவமானத்தைத் தனது பெருமூச்சுயின் மூலம் வெளியிட்டுக் கொண்டிருந்தான் இராவணன்.

இறை, நிறை என்ற சொற்கள் நிறைந்து நின்று இந்தக் கவிதையைக் கற்பார் உள்ளத்தில் நிற்கச் செய்கின்றன. 'பெண் இறை கொண்ட நெஞ்சில், நாண் நிறை கொண்டது. அதனால் கண் இறை கோடல் செய்யான்' என்ற கவிதைப்பகுதி படித்துப் படித்துச் சுவைக்கத்தக்கது. இறை-தங்குதல்: இறை- சிறிதும். இருபொருள் உணர்த்தும் இறை என்ற சொல், கவிதைக்குமேலும் சுவை ஊட்டுகின்றது.

உறங்காத ஒருவன் உறங்கும் ஒருவனுக்கு இடையூறாகத்தான் இருப்பான். உறக்கம் அற்ற அண்ணன், உறக்கம் உற்ற தம்பியை எழுப்பும் நிலைக்குத்தயாரானான், ஏன்? எதற்காக, தம்பியின் உறக்கத்தை, கலைக்கத் துணிந்தான் இந்த அண்ணன்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



## மகோதரன் வருகை

இராவணனாகத் துணியவில்லை. இவனைத் துணியவைத்தவன் ஒருவன். அவன் 'மாயைகள் பலவும் வல்ல மகோதரன் என்ற மந்திரி. இந்த மந்திரி. இலங்கை மன்னனைச் சந்திக்க வருவதற்கு முன்பு, மாலியவான் என்ற (பாட்டன்) மூதாதை வந்தான். சோர்வுக்கு என்னகாரணம் என்றான் மாலியவான்.

அப்போது, போர்க்களத்தில் இராவணன் கண்ட காட்சியை-நிகழ்ந்த நிகழ்ச்சியை விரிவாகப் பேசினான். அந்தப் பேச்சை, பதினெட்டுக் கவிதைகளில் விவரித்துள்ளார் கம்ப நாடர்.

அத்தனைக் கவிதைகளும். இராவணனது இப்போதைய உள்ளத்து இயல்பை நன்றாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. இராமபிரானது பேராற்றலையும், தனது தாழ்மையையும் இராவணன் உணர்ந்து கொண்டிருப்பதை இந்தக் கவிதைகளில் காணலாம். 'நாசம் வந்து உற்றபோது நல்லதோர் பகையைப் பெற்றேன்' என்று இராவணன் இறுதியாகக் கூறி முடிப்பதைப் பார்த்தால், இனி இவன் போர்க்களத்துக்கே செல்ல மாட்டான் போலும் என எண்ணலாம்.

ஆனால் அந்த எண்ணத்துக்கு இடம் கொடுக்க வில்லை பக்கத்தில் நின்ற மந்திரி மகோதரன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


"வென்றவர் தோற்பர்; தோற்றார்,
வெல்குவர்; எவர்க்கும் மேலோய்!
நின்றவர் தாழ்வர்; தாழ்ந்தோர்,
உயர்குவர் நெறியும் அஃதே"
என்றனர் அறிஞர் அன்றே!
ஆற்றலுக்கு எல்லை உண்டோ?
புன்தவர் இருவர் போரைப்
புகழ்தியோ, புகழ்க்கு-மேலோய்.'
(கம்-7308)

என்று கூறி இராவணனைத் தேற்றினான் மகோதரன். அறிஞர்கள் சொல்லும் அனுபவ வார்த்தையை, தனது கொள்கைக்குத் துணையாக்கிக்கொண்டான் மந்திரி. 'தோற்றார் வெல்குவர், - இது இயல்பு. இன்று தோல்வி கண்ட நீ, நாளை வெற்றிபெறுவாய். அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு. நம் இடத்தில் வீரர்கள் இருக்கும் போது எதற்கு அஞ்சவேண்டும்? என்று சொல்லிய பிறகு, கும்பகருணனை நினைவு படுத்தினான் அமைச்சன். இதைக்கேட்ட இராவணன் உடனே, தனது தம்பியை எழுப்பி அழைத்து வருமாறு ஆணையிட்டான்.

**உறங்கியதம்பி :**

'உறங்குபவனை எழுப்புவது பாவம்!' என்ற பழமொழி ஒன்று உண்டு. ஏன்பாவம்? மனிதன் உறங்கும்போது, எந்தப்பாவ காரியத்தையும் செய்வதில்லை, பாவச்செயல்களில் - பிறர்க்குத் துன்பம் கொடுத்தலில் ஈடுபடாத நேரம் உறங்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


போதுதான். உறங்கிய மனிதனை, உறக்கத்திலிருந்து எழுப்பிவிட்டு விட்டால், எழுந்ததும் அவன் செய்யும் காரியம் பாவச்செயல்கள்தான். இந்தப் பாவச்செயலுக்கு யார்காரணம்? தூங்கியவனை எழுப்பியவன்தானே! அதனால், எழுந்தவனும் பாவி, எழுப்பியவனும் பாவி ஆகிறார்கள்.

அதனால், தூங்குபவனை எழுப்பாதே என்றனர்' என்று இதற்கு விளக்கம் அளிப்பார் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர். கும்பகருணனை எழுப்பச் சென்றது ஒரு ஆள் அல்ல! ஒரு பெரிய பட்டாளம். உறக்கம் சாதாரணமா? பேர் உறக்கம் அல்லவா? எவ்வளவு பெரிய உறக்கம்!

சேனாவீரர்கள் தமது அலைக்கையால் அடித்து அடித்து எழுப்பினர் என்று, அதனைப் பல கவிதைகளில் நகைச்சுவைததும்பக் கூறுகின்றார் கம்பர். பாட்டு பாடிக்கொண்டே அடித்து எழுப்பினார்கள். என்னபாட்டு? கும்பகருணன் இப்போது செய்வதையும் இனிச்செய்ய வேண்டியதனையும் தெரிவிக்கும் பாட்டு அது,

**'உறங்குகின்ற கும்பகன்ன! உங்கள் மாய**
**வாழ்வுஎலாம்**
**இறங்குகின்றது' இன்றுகாண்: எழுந்திராய்!**
**எழுந்திராய்!**
**கறங்குபோல வில்பிடித்த காலதூதர் கையிலே**
**உறங்குவாய்! உறங்குவாய்! இனிக்கிடந்து**
**உறங்குவாய்.'** (கம்-7316)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்பது படைவீரர்களின் பாட்டு. 'இனி நீ உறங்க வேண்டிய இடம் இது அல்ல! நிரந்தரமான உறக்கத்துக்குச் செல்லவேண்டும். அந்த இடத்துக்கு நீ போய்த்தான் ஆகவேண்டும். அதற்குப்பிறகு உன்னை எழுப்புவதற்கு நாங்கள் வரமாட்டோம்; யாரும் வரமாட்டார்கள்.

உன்னை, அத்தகைய உறக்கத்துக்கு அனுப்பக் கூடியவர் இருவர்: அவர்கள் இருவரும். போர்க் களத்தில் வில்லேந்திய கையினராக உலாவிக் கொண்டுள்ளார்கள். அவர்களே உனக்கு எமதூதுவர்களாகயிருப்பார்கள் உன்னை அவர்கள் அழைக்கவில்லை. அவரிடம் உன்னை அனுப்புவதற்கு உங்கள் அண்ணன்தான் உன்னை அழைத்துவரச் செய்தான்? என்ற கருத்தெல்லாம் இக்கவிதையில் பொதிந்து கிடக்கின்றது. (கறங்கு - காற்றாடி: காலதூதர் - எமதூதர்: இங்கு இராம இலக்குவர். இராமன் கையால் இவன் மடிவான் என்பது குறிப்பு)

## எழுந்த தம்பியும் எதிர் நின்ற அண்ணனும் :

வெகு சிரமப்பட்டு ஒரு விதமாக, கும்பகருணனை எழுப்பினர் வீரர்கள். 'கூயினன் நும்முன்' -உமது அண்ணன் உம்மை அழைத்தான் என்று கூறினார்கள் எழுப்பிய வீரர்கள்.

எழுந்த கும்பகருணன், உடனே, தனது அண்ணன் முன்போய் நின்றான். வந்த தம்பியை, அன்போடு தழுவிக்கொண்டான் அண்ணன். பிறகு உணவு அளித்தான்; போர்க்கோலம் செய்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



போருக்குரிய ஆடையை அணிவித்த பிறகு, தம்பியைப் பார்த்து இராவணன் சொல்கின்றான்.

'வானரப் பெருந் தானையர், மானிடர்,
கோனகர்ப் புறம் சுற்றினர்; கொற்றமும்
ஏனை உற்றனர்; நீ, அவர் இன்உயிர்
போனகத் தொழில் முற்றுதிபோய்' என்றான்.'
(7349)

நடந்ததையும் நடக்க வேண்டியதையும் தெரிவிக்கின்றான் இலங்கைமன்னன். இந்த இரண்டையும் எதிர்பாராதவன் கும்பகருணன்.

'மனிதர்கள், குரங்குப் படையோடு, இந்தப் பெருநகரை வளைத்துக் கொண்டுவிட்டனர். அது மட்டும் அல்ல! என்னையும் வெற்றி கொண்டு விட்டனர். இது நடந்தது. இனி நடக்கவேண்டியது என்ன தெரியுமா? நீ போர்க்களம் செல்லவேண்டும். அங்கு, நீ அவரது இனிய உயிரை உண்ணுகின்ற செயலைச் செய்து முடிக்கவேண்டும்.' என்பது இராவணன் தம்பிக்கு இட்ட கட்டளை.

கவிச்சக்கரவர்த்தி, இந்தக் கவிதையின் இறுதியில், தமது காப்பியக் கலைத்திறனைக் குறிப்பாக உணர்த்தியுள்ளார். அதன் நுணுக்கத்தை ஆராய்ந்தால், ஒரு உண்மை தெளிவாகும். என்ன உண்மை?

தீய இயல்பினர் தமது நன்மைக்கு என்று பேசினாலும், அப்பேச்சிலேயே, அவரையும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


அறியாமல் அவர் அழிவிற்கு வேண்டிய கருத்து அடங்கியிருக்கும். இராவணனை, இப்படிப்பேச வைத்துள்ளார் இங்கு, கம்பர்.

அத்தகைய நுணுக்கம் பெற்றது, 'நீ அவர் இன்னுயிர் போனகத் தொழில் முற்றுதி போய்' என்ற கவிதைப் பகுதி போனகம் - உணவு. போனகத்தொழில் உண்ணுதல். 'நீ போர்க்களம் சென்று அவரது இனிய உயிரை உண்ணுக' என்பது இராவணனது எண்ணம். ஆனால், இதில் அடங்கியிருப்பது, 'நீ போர்க்களம் சென்று, உனது இனிய உயிரை அவர்க்கு உணவாக்குக' என்பது.

நீ போர்க்களம் சென்று அந்த மானிடவர் கையால் மடிவாய் என்ற அமங்கலப் பொருள், இதனுள் (சொல்லுபவனையும் அறியாமல்) அடங்கி யுள்ளது.

இப்படி இரட்டைப் பொருள் கண்டு இன்புறும் வண்ணம் சொற்களை அமைத்து, பாத்திரங்களை இடத்துக்கு ஏற்ற வண்ணம் உருவாக்குவது கவிச் சக்கரவர்த்திக்குக் கைவந்தகலை, இப்படிப்பட்ட இடங்கள் கம்பசித்திரம் என்றும் கம்பசூத்திரம் என்றும் அறிஞர்களால் விமர்சிக்கப்பெறும்.

**தம்பியின் ஆவேசம் :**

ஆவேசம் எப்பொழுது வருகின்றது. உள்ளத்தில் உணர்ச்சி கொந்தளித்து எழும்போது, அதனை அடக்க முடியாத நிலையில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


வார்த்தைகளாகப் பொழிந்து தள்ளுகின்றது ஆவேசம். கும்பகருணன் வாயினின்றும் உதிர்ந்த வாசகங்கள் அத்தகைய ஆவேசத்தைக் காட்டு கின்றன. வேண்டாத ஒரு நிகழ்ச்சி நடந்ததாகக் கேள்விப்படும் போதும், தேவையில்லாத-பயனில்லாத ஒரு செயலைச் செய்யத் தூண்டப்படும் போதும் ஆவேச உணர்வுகள் உள்ளத்தின் அடித் தளத்திலிருந்து பீறிட்டுக்கொண்டு வெளியேறு கின்றன. கும்பகருணனிடம் அப்படிப்பீறிட்டுக் கொண்டு எழுந்தோடிவந்த உணர்வுகளை, பத்துக் கவிதைகளில் அடக்கி வெளிப்படுத்துகின்றார் கவிச்சக்கரவர்த்தி.

'ஆனதோ வெஞ்சமம்?' என்று தொடங்கிய ஆவேசம், 'உய்திறம் எது? செய்திறம் எது?' என்பதைத் தெளிவாகப் புலப்படுத்திவிட்டு ஓரளவு அடங்குகின்றது. தீவினையின் வெறுப்பு, நல்வினையின் விருப்பு, குலப்பெருமையின் சிறப்பு, பாசப்பிணைப்பு, அறச்செயலின் அரவணைப்பு இத்தனை நற்குணங்களும் கும்பகருணனிடம் நிறைந் திருந்தன என்பதை, இந்தப்பத்துக் கவிதைகளும் காட்டுகின்றன.

தீயசெயலைக் கண்டால், பொறுக்காத உள்ளத்தில் தோன்றும் உணர்வு, அதனைச் செய்தவனிடம் முதலில் கேள்வி உருவில்தான் பொழிந்து தள்ளும். அத்தகைய வினாவடிவில் வருகிறது முதல் கவிதை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'ஆனதோ வெஞ்சமம்? அலகில் கற்புடைச்
சானகி துயர்இனம் தவிர்ந்தது இல்லையோ?
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ? புகுந்ததோ பொன்றும் காலமே?

சொற்கள் மட்டும் உள்ளத்து உணர்ச்சியை வெளிப்படுத்துனவ அல்ல! அதன் அமைப்புதான் உணர்ச்சியின் வேகத்தை வெளிப்படுத்துவது.

உண்டாகிவிட்டதோ கொடியபோர்? என்று, பயனிலை முன்னாகவும் எழுவாய் பின்னாகவும் அமைந்திருப்பது, சொல்பவனது, போர்விரும்பாத் தன்மையைக் காட்டுகின்றது. இதனைத் தொடர்ந்து அமைந்த 'சீதையின் துயரம் நீங்கவில்லையா? நமது புகழ் போயிற்றா? நாம் அழியும் காலம் வந்து விட்டதோ' என்ற வினாக்களும் கும்பகருணனது, உள்ளத் தூய்மையைப் புலப்படுத்துகின்றன.

'புகழ், மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் வளர்ந்தது. அந்தக்குடும்பப் புகழ், சீதாப்பிராட்டி நம் நகரத்தில் துன்பப்படுவதன் மூலம் அழிந்து விடும்.' என்பது கும்பகருணனது கருத்து. இதுதான் நாம் அழியும் காலம்.

'குலப்பெருமை அழிகின்றதே' என்ற வருத்த மிகுதியினால், தான் கூறும் கூற்று அண்ணன் உள்ளத்தை வருத்துமே என்று கும்பகருணன் எண்ணவில்லை.

'திட்டிவிடம்' என்பது கொடியவிஷம் நிறைந்த பாம்பு, இதைப் பார்த்தாலே பார்த்த உயிரைக் கொன்றுவிடும். அத்தகைய கற்புச்செல்வி சீதாப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



பிராட்டி. இன்னும் இந்தச்சீதையை நீ விடாமல், உன் நகரத்திலேயே வைத்திருக்கின்றாய். தீது என்று எடுத்துக் காட்டியபிறகும், இந்தத்தீய செயலையே நன்று எனக்கொண்டிருக்கின்றாய். இதற்கு என்னகாரணம்? இது உன் விதியின் வண்ணம். உனது தலைவிதி (ஊழ்வினை) தீயதையே நல்லதாக நினைக்கச்செய்து, அழிவினுக்குத்தள்ள இருக்கிறது. எனது விதி போர்க்களத்துக்கு என்னை அனுப்பிவிடும் போலும்!

**கொடுத்ததும் கெடுத்ததும் :**

'கொடுத்தனை இந்திரற்கு உலகும் கொற்றமும்:
கெடுத்தனை, நின்பெரும் கிளையுப்; நின்னையும்
படுத்தனை; பலவகை அமரர் தங்களை
விடுத்தனை; வேறுஇனி வீடும் இல்லையால்.'
(7354)

என்றும்,

'அறம் உனக்கு அஞ்சிஇன்று ஒளித்ததால்; அதன்
திறம்முனம் உழத்தலின், வலியும் செல்வமும்
நிறம் உனக்கு அளித்தது; அங்கு அதனை நீக்கி, நீ
இற, முன் அங்கு, யார் உனை எடுத்து
நாட்டுவார்?' (7355)

என்றும்

கடுமையாக எடுத்துப் பேசினான் கும்பகருணன். 'அறத்தைப் பின்பற்றிய வாழ்க்கை அழியாத வாழ்க்கை. அந்த அறம், உன் மிசயலுக்குப் பயந்துபோய் இன்று மறைந்துவிட்டது. நீ அந்த அறத்தை நீக்கியதனால், அழிவுப்பாதையை நோக்கி விட்டாய்: அப்படி அழியும் நிலையில் நிற்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


உன்னை எடுத்து நிலை நாட்டும் ஆற்றல் பெற்றவர் எவர்?' ஒருவரும் இல்லை. இந்தப் பேச்சைப் பார்க்கும் போது, கும்பகருணன், அறம்தான் மனிதனை நன்கு வாழவைக்கும் என்பதில் எவ்வளவு நம்பிக்கை கொண்டவன் என்பது தெரிகின்றது.

'இருப்பினும், அண்ணா! உன்மேல் கொண்ட பாசத்தால், உனக்கு ஒன்று உணர்த்துவேன். அது 'நன்று' என்று கருதினால். நீ அழிவனின்றும் தப்பித்துக் கொள்ளலாம். அதை நல்லது என்று நீ ஏற்கவில்லை என்றால், மற்றொன்றும் சொல்லுவேன் என்றும் இரண்டு வழியைக்காட்டித் தனது பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றான் தம்பி.

**உய்திறமும் செய்திறமும் :**

**'தையலை விட்டுஅவன் சரணம் தாழ்ந்து, நின்**
**ஐயறு தம்பியொடு அளவளா வுதல்**
**உய்திறம்: அன்றுஎனின், வேறும் ஓர்**
**செய்திறம்: அன்னது தெரியக் கேட்டியால்.'**

**'பந்தியில் பந்தியில் படையை விட்டு, அவை**
**சிந்துதல் கண்டு, நீ இருந்து தேம்புதல்**
**மந்திரம் அன்று; நம்வலி எலாம் உடன்**
**உந்துதல் கருமம்' என்று உணரக் கூறினான்.**

'நாம் பிழைக்கும் வழி இதுதான்' என்று உறுதியாகச் சொல்கின்றான் கும்பகருணன். எது அந்த வழி? முன்பு பேரவைக் கூட்டத்தில், எது ஒன்று செய்யத்தகாதது என்று சொல்லப்பட்டதோ, அதுதான், செய்யத்தக்கது, பிழைக்கும்வழி என்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இன்று சொல்லப்படுகின்றது. 'தையலைவிட்டு அவன் சரணம் தாழ்தல்' – 'சீதாப்பிராட்டியைக் கொண்டுபோய் இராமபிரானிடம் ஒப்படைத்து விட்டு, அவன் திருவடிகளில் அடைக்கலம் புகுந்து, மன்னிப்புக்கேட்டல்' இதுதான் செய்யத்தக்கது.

அன்று, 'விட்டிடுதி மேல் எளியம் ஆதும் (சீதையை விடுதல்) செய்யத்தகாதது என்று சொன்னவன் இன்று இதுதான் செய்யத்தக்கது- பிழைக்கும் வழி, என்று சொல்கின்றான் என்றால் அது கும்பகருணன், எவ்வளவு தெளிவுடையவனாக இருக்கின்றான் என்பதைக் காட்டுகின்றது.

உய்திறம் மேலும் தொடர்கின்றது. முன்பு, பேரவையில் இந்த நன்னெறியை-நீதி நெறியை எந்தத் தம்பி நமக்கு இதை உறுதியாக எடுத்துச் சொன்னானோ, அந்தத்தம்பி வீடணனோடு மனம் கலந்து பேசி உறவாடிக் கொள்ளுதல் வேண்டும். இந்த நல்வழியே நமக்குப் பிழைக்கும்வழி (உய்திறம்) என்று எடுத்துச்சொன்ன தம்பியை நாம் முன்பு சந்தேகப் பட்டோம். அந்தச் சந்தேகத்தை இனி நீக்கிக் கொள்ளுதல் வேண்டும். 'தெளிந்தான் கண் ஐயுறவு, தீரா இடும்பை தரும்' என்பது வள்ளுவம்.

தம்பி வீடணன் சிறிதும் ஐயம் இன்றித் தெளிந்து ஏற்றுக் கொள்ளப்பட்டவன். அவனைச் சந்தேகித்து, நகரை விட்டுவிரட்டியது பெரியதவறு என்பது கும்பகருணனுக்கு இப்போது நன்கு புரிகின்றது. உய்திறம்-பிழைக்கும் வழி-சீதையை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


விட்டு, இராமபிரானிடம் மன்னிப்புக் கேட்டல் ஒன்று வீடணனிடம் மனம் கலந்து உறவாடி மகிழ்தல் மற்றொன்று.

இந்த இரண்டையும் வற்புறுத்திக் கூறுகின்றான் கும்பகருணன். முன்பு எதுதவறாகப் பட்டதோ, அது இன்று சரிஎன்று தோன்றுகின்றது. இந்தத்தெளிவு எப்படி இவனுக்கு ஏற்பட்டது? உறங்கி எழுந்தபின் வந்த தெளிவா? அல்லது இயல்பிலேயே நல்லது செய்வதில் நாட்டம் உடையவனா?

'குலப்பெருமைக்குக் குறைவு நேரும் வண்ணம் எந்தத்தீய செயலையும் செய்தல் கூடாது; அப்படி செய்தால், பெருமைக்குலம் சிறுமை எய்தும் என்பதில் நம்பிக்கை கொண்டவன் கும்பகருணன் எங்கு பேசினாலும், எப்போது பேசினாலும் அவன் பேச்சிலிருந்து இது தெரிகின்றது. இது இவன் இயல்பு இந்த இயல்பு அண்ணன் மேல் கொண்ட பாசத்தால் சிறிது மறைந்து நின்றது.

உறங்கி எழுந்தபிறகு பாசம் அகன்றது: தெளிவு பிறந்தது. அதனால். உய்திறம், சீதையை விடுதலும் தம்பியைத் தழுவிக்கொள்ளுதலும்தான் என்பதை உறுதியாகக் கூறுகின்றான் கும்பகருணன்.

இதைக் கூறிக்கொண்டிருந்த போது, அண்ணன் முகம், கோப உணர்வை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. அதனைக் கவனித்த தம்பி கும்பகருணன், பேச்சை மாற்றினான். அது அண்ணனுக்கு உகப்பாகயிருக்கலாம் என எண்ணி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இரண்டாவது வழியைச் சொல்லத் தொடங்குகின்றான் தம்பி. போருக்குச் செல்வது அண்ணனுக்குப் பிடித்தமான ஒன்று என்பது தெரியும் தம்பிக்கு. இருப்பினும், அதில் ஒரு மாற்றம் செய்கின்றான் 'வேறும் ஓர் செய்திறம்: அன்னது தெரியக் கேட்டியால், என்று இரண்டாவது வழிக்கு முன்னுரை வகுக்கின்றான் கும்பகருணன்.

ஒவ்வொரு நாளும் சிறிது சிறிதாகப் படையைப் போர்க்களத்துக்கு அனுப்பி, அவைகள் அழிவதைக் கண்டு வருந்தி அழுது கொண்டிருத்தல் செய்யத் தக்கதுஅல்ல. 'நம்வலிமை எல்லாம் ஒரு சேரச் சேர்த்துக்கொண்டு சென்று போர் செய்தல்' செய்யத்தக்கது. இதுதான் 'செய்திறம்' என்று கூறினான் கும்பகருணன்.

போர்செய்வது நல்லது என்று சொல்வது எதனால்? போரில் எல்லாம் ஒருசேர இராம இலக்குவர் கையால் மடிந்து விடலாம் என்பதால். மடிந்து விடுவது எதனால். அந்தக் காரணத்தை அவனே சொல்கின்றான்.

'தஞ்சமும். தருமமும், தகவுமே அவர்
நெஞ்சமும், கருமமும் உரையுமே நெடு
வஞ்சமும், பாவமும், பொய்யும் வல்லநாம்
உஞ்சுமோ? அதற்குஒரு குறைஉண்டாகுமோ?
(7356)

'அறம் வெல்லும் பாவம் தோற்கும்: வெல்லுமோ தீவினை அறத்தை மெய்ம்மையால்.' இது என்றும் உண்மையானதுதான் என்ற நம்பிக்கையை முழுமையாக உடையவன் கும்பகருணன் என்பதை இந்தக் கவிதை காட்டுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'நமக்கு எதிரில் நிற்பவர் வெற்றிக்குரிய குணத்தினர்: நாம் தோற்று அழிதற்குரிய தீய செயலினர் நாம் எப்படிப் பிழைக்கமுடியும்'

'அவர்கள், மனம், மொழி, மெய் என்ற மூன்றனிலும் தூய்மையுடையவர். இந்தத்தூய்மை யால், தம்மை அடைக்கலமாக அடைந்தவரைத் தாங்குதல், அறநிலை நிற்றல், நடுநிலை நின்று உண்மை கூறுதல் இதில் தவறாதவராக உள்ளனர்.'

'நாமோ, அதற்குமாறாக வஞ்சனையும் பாவமும் பொய்யும் உடையவராக இருக்கின்றோம். அதனால் நமக்கு எப்படி வெற்றி கிடைக்கும்? நம்மிடத்தில் உள்ள தீயசெயல்களுக்குத் தண்டனையாக அழிவு தான் கிட்டும்.'

இப்படி, எது உய்திறம் என்பதையும், எது செய்திறம் என்பதையும் வகுத்தும் விரித்தும் தெளிவுபட அஞ்சாமல் எடுத்துரைத்தான் தம்பி கும்பகருணன்.

**இராவணன் சீற்றம் :**

தம்பி, தான் உரைத்த மாற்றம் (வார்த்தை) அண்ணனது உள்ளத்தை மாற்றம் (மாறுபாடு) செய்துவிடும் என நம்பினான். ஆனால், அது தம்பி கும்பகருணனுக்கு ஏமாற்றமாகத்தான் ஆயிற்று ஏன்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அண்ணன் இராவணனது முகத்தில் மாற்றத் துக்குப்பதில் சீற்றம் (கோபம்) தான் வெடித்தது. அந்தச் சீற்றம் சாதாரணமானதல்ல! இவனைக் கூற்றத்துக்கே (எமனிடமே) கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கும் நிலைக்குப் பெருகியிருந்தது.

இராவணனது சீற்றம், கூற்றாகக் (வார்த்தை) கொதித்துவந்து பாய்ந்தது கும்பகருணன்மேல். ஏன்? தன்நலப் பசியைத் தணித்துக்கொள்ளத் துடிக்கும் ஒருவனிடம், அவனுக்கு மிக நெருங்கிய உறவினன் ஒருவன், எவ்வளவு பாச உணர்வோடு அறிவுரை சொன்னாலும், அது ஏறுவதில்லை. காமப்பசி அவ்வளவு கொடியது.

உலகசமுதாய நீதிக்கு எவ்வளவு புறம்பானதாக யிருந்தாலும், தனது பேராசைப் பசியைத்தணித்துக் கொள்வதையே நேர்மையானது என்று வாதிப்பான் தன்னலவாதி. தனது வாதத்திறமை முழுவதையும், தன்னைச் சார்ந்தவரை தனது நலத்துக்காகவே பயன்படுத்திக் கொள்வான் அந்தக் கொடியோன்.

இந்தக் கொடியவன் செயல், இத்தோடு நிற்காது; 'யாரை எவ்வளவு அவலச் சூழ்நிலைக்கு அனுப்புகிறோம்' என்று ஒருசிறிதும் கவலைப் படாமல், துன்பத்துக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கும். அத்தகைய இயல்பினனாகி விட்டான் இராவணன். முதல்நாள், மிகப் பெருஞ் சேனையோடு போர்க்களம் சென்று, எல்லா வற்றையும் இழந்து, இராமபிரான் உயிர்வழங்க,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அவமானத்தைச் சுமந்துவந்த இவன், மறுநாள், தம்பியை அதே போர்க்களத்துக்கு அனுப்புவது என்று முடிவுசெய்தான் என்றால் இந்த இராவணன் கொடுஞ்செயலை என்ன என்று சொல்வது!

இராமபிரானும் இலக்குவனும் எவ்வளவு சிறந்த போராற்றல் உடையவர்கள் என்பதை நேரில் கண்டறிந்தவன் இராவணன். கண்டது மட்டுமல்ல! அவரது போராற்றலை உணர்ந்து பேசினான், எப்படி? 'இளையவன் தனக்கும் ஆற்றாது என் பெருஞ்சேனை.'

**"தாபதன் அம்புக்கு ஆற்றா நொந்தனன்யான்"**
**'ஆயிரம்தோளும் அன்னான் விரல்ஒன்றின் ஆற்றல் ஆற்றா'**
**'வேதம்தப் பினபோதும் அன்னான் தனுஉமிழ் சரங்கள் தப்பா'**
**'என்னைத் தீராத்தறப்பத்தைத் துடைத்தது என்றால் பிறிதுஒரு சான்றும் உண்டோ.'**
**'கூற்றையே ஊர்கின்றானோ குரங்கின்மேல் கொண்டு நின்றான்?**

என்பன, இராவணன் வியந்து பேசிய பேச்சுக்களுள் சில.

போர்க்களம் செல்பவன், யாராயிருந்தாலும் உயிரோடு மீள முடியாது என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டுள்ளான் இராவணன், இதை அவன் பேசிய பேச்சுக்களே தெளிவிக்கின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அப்படியிருந்தும், தனது சொந்தத்தம்பியை போர்க்களம் அனுப்பத்துணிந்தான் இவன் என்றால், இந்த இராவணனுக்குக் கொஞ்சமாவது உடன்பிறப்புப் பாசம் உண்டா? அவ்வளவு கொடியன் இராவணன். அதுவும், தம்பியைப் போர்க்களத்துக்கு, அவனே போகச் செய்யும் அளவுக்குத் தூண்டுகின்றான். இராவணன். எதனைச் சுட்டிக்காட்டித் தூண்டுகின்றான்?

கும்பகருணனிடம் இயல்பாக அமைந்துள்ள செய்ந்நன்றி உணர்வைத் துண்டுவதன் மூலம், தனது கருத்தை முடித்துக்கொள்ள எண்ணி விட்டான் இவன். கும்பகருணனது அந்த நல்லுணர்வைத் தனது கொடுஞ்செயலுக்குத் துணையாக்கும் அளவுக்கு இராவணனது சீற்றம் கூற்றமாக வெடிக்கின்றது, எப்படி?

'உறுவது தெரிய அன்று உன்னைக் கூயது;
சிறுதொழில் மனிதரைக் கோறி சென்று; எனக்கு
அறிவுடை அமைச்சன் நீ அல்லை, அஞ்சினை;
வெறிவிது. உன்வீரம்' என்று இவை விளம்பினான்.'

'மறம்கிளர் செருவினுக்கு உரிமை மாண்டினை;
பிறங்கிய தசையொடு நறவும் பெற்றினை;
இறங்கிய கண்முகிழ்த்து இரவும் எல்லியும்
உறங்குதி போய்' என உளையக் கூறினான்.'

'மானிடர் இருவரை வணங்கி மற்றும், அக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட்டு உய்தொழில்
ஊறுடை உம்பிக்கும் உனக்குமே கடன்;
யான் புரிகிலேன்; எழுக! போக!' என்றான்.

(7361, 62, 63.)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இந்தக் கவிதைகள், இராவணனது உள்ளத்து எழுந்து வந்த கோபதாப உணர்வுகளை வெளிப் படுத்துகின்றன.

'உன்னை அழைத்தது எனக்கு நீ யோசனை கூறுவதற்காக அல்ல! அந்தச் சிறுதொழில் மனிதர் களை, போர்க்களத்துக்குச் சென்று கொல்ல வேண்டும் என்பதற்காகத்தான். எனது அழைப்பின் காரணத்தைப் புரிந்துகொள்ளாமல், எனக்கு அறிவுரை சொல்லத் துணிந்துவிட்டாய். அறிவுரை சொல்வதற்கு அமைச்சனுக்கு மட்டுமே உரிமை உண்டு. நீ அத்தகைய அறிவுடைய அமைச்சன் அல்ல! பாசத்துக்குரிய தம்பி நீ. உனது பேச்சைப் பார்த்தால், நீ போருக்குப் பயந்துவிட்டாய் என்பது தெரிகிறது. நீ இப்போது வீரன் அல்ல! கோழை.' இத்தோடு சொல்லி நிறுத்தவில்லை இராவணன். தனது தம்பியின் நல்லுணர்வைத் தூண்டுவதன் மூலம், அவனை ஆவேசத்தோடு செயல் படுதற்குரிய உத்தி ஒன்றைக் கையாளுகின்றான் இராவணன். அதனைத் தெரிவிக்கின்றது இரண்டாவது கவிதை.

இந்தக் கவிதையின் கருத்து, கும்பகருணனைச் சுழல வைக்கின்றது. எதைப்போல? பம்பரத்தைப் போல. பம்பரத்தைச் சுழலவைக்க ஒரு கயிறு வேண்டுமே? அந்தக்கயிறு எது? பாசக்கயிறு. கும்பகருணன் செய்ந்நன்றி உணர்வால் உருவான ஒரு பம்பரமாகின்றான். இந்தப் பம்பரத்தை, அண்ணன், உடன் பிறப்புப் பாசமாகியகயிற்றினால் நன்றாகச் சுழலவைத்து விடுகின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இராவணன் தொடுத்த பாசக்கயிறு, கும்ப கருணனைக் கூற்றுவனின் பாசக்கயிற்றில் சென்று தொங்கவைத்துவிடுகின்றது. யார் அறிவார் விதிப்பயனை? அண்ணன், தம்பிகளுக்கிடையில் விதியின் விளையாட்டு நடைபெறுகின்றது.

இந்த உட்பொருளை எல்லாம் அடக்கிக் கொண்டிருப்பது. இரண்டாவது கவிதை.

இந்தக் கவிதைக்குப் பொருள் காணும் போது, இத்தகைய உணர்வு தோற்ற வேண்டும்.

சொற்களுக்குப் பொருள்கள் பல இருக்கலாம். அதில், இடத்துக்கேற்பவும், சொல்பவன், கேட்பவன் உணர்ச்சிக்கு ஏற்பவும் அமையும் பொருள்களே பொருத்தம் உடையதாகும். அத்தகையதொரு நற்பொருளை இந்தக் கவிதைக்குக் கண்டுள்ளார் பேரறிஞர்,அறிவொளி அவர்கள். அவர் எழுதியுள்ள 'நெஞ்சில் நெருஞ்சி' என்ற நூலின் 104ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள கருத்து மிகப்பொருத்தமாக உள்ளது. ★

'போர் செய்யும் வலிமையை நீ இழந்துவிட்டாய்' (வை. மு. கோ. அண்ணாமலைப் பல்கலைக்கழக உரை) என்று மட்டும் முதலடிக்குப் பொருள் செய்கின்றனர். இதற்கு முன் உள்ள பாட்டிலேயே

---

★ இந்நூல் கும்பகருணன் பாத்திரப் படைப்பை உளநூல் முறையில் திறனாய்வு செய்த ஒரு சிறந்த நூல். கும்பகருணன் எந்த உணர்வோடு செயல் பட்டான் என்பதை நன்கு விவரிக்கின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



'அஞ்சினாய், உன் வீரம் வறிது' இராவணன் திட்டியதில் இப்பொருள் அடங்கிவிட்டது. மீண்டும் அதே பொருளைக் கொள்வது பயனில்லை; இங்குள்ள 'உரிமை' என்ற சொல்லுக்கு உரிய வலிமை என்பதைவிடச் 'சொந்தம்' - என்பது பொருத்தமாக இல்லையா? 'மாண்டனை'- என்பதற்கு 'மாட்சிமைப்பட்டாய்' என்ற பொருள் தெளிவானதில்லையா? புறநானூற்றில் பிசிராந்தையார் பாட்டில் 'மாண்ட என் மனைவி'-என்பதற்கு இப்பொருள்தானே கொள்கிறோம். — எனவே 'நீ போருக்குப் போகும் உரிமையாலேயே சிறந்திருந்தாய். அதனால். நிறைய தசையும் கள்ளும் பெற்றாய்.' என்றபொருளே இங்குக் கொள்வதற்குரியதாகும்.

இந்தக்கருத்தே, இங்கு ஏற்புடையதாக உள்ளது. அண்ணன் இராவணன் தனது தம்பியை எந்த நோக்கத்தோடு வளர்த்து வந்துள்ளான் என்பதையும் இங்கு உணரலாம். தம்பி இறந்தபிறகு, அண்ணன் அழுவதாக அமைந்துள்ள கவிதைகளில் இந்தக்கருத்து நன்கு தெளிவாக்கப்பட்டுள்ளது.

பிறங்கிய தசையையும், நறவையும் (மாமிசத்தையும் கள்ளையும்) கொடுத்து, கும்பகருணனை இராவணன் வளர்த்தது. தனது நலனுக்காக, போரிடுவதற்குத்தான் என்பது நன்கு புரிகின்றது முதலிரண்டு அடிகளில். 'இறங்கிய கண்முகிழ்த்து (குழிந்துள்ள கண்ணை மூடிக்கொண்டு) இரவும் எல்லியும் (இரவு பகல் எப்போதும்) போய் உறங்குதி' என்று கூறினான் இராவணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



கவிதையின் ஈற்றில், 'அவன் கூற்று எப்படியிருந்தது' என்பதைக் கவிச்சக்கரவர்த்தி எவ்வளவு நுணுக்கமாகக் காட்டியுள்ளார்? உளையக் கூறினான்.' உளைய - வருந்துமாறு. கும்பகருணன் மனம் வருந்துமாறு கூறினான் இராவணன். சொல்பவன், கேட்பவன் இருவரது மனப்போக்கையும் ஒருசேர வெளிப்படுத்தும் முறையில் 'உளைய' (வருந்த) என்ற சொல்லை, கவிதையின் இறுதியில் நிறைவாக அமைத்துள்ளார் கவிச்சக்கரவர்த்தி.

இராவணன் சொன்னதைக் கேட்டு கும்பகருணன் ஏன் மனம் வருந்தவேண்டும்? இங்குதான் அவனது செய்ந்நன்றி உணர்வு வெளிப்படுகின்றது.

'உளைய' என்பது, இயல்பாக, கும்பகருணனிடம் அடங்கிக்கிடந்த செய்ந்நன்றியாகிய சிறந்த உணர்வை வெளிப்படுத்தி விளங்கவைக்கும் தூண்டுகோலாக அமைந்துள்ளது. 'நம்மை. இவ்வளவு நல்ல முறையில் வளர்த்த அண்ணன் இவ்வளவு பெரியதுன்பத்தில் தவிக்கும்போது, அவனைக் கைநழுவவிட்டுவிட்டுப் போகலாமா? அப்படிப் போனால், செய்ந்நன்றி மறந்த பாவத்துக்கு ஆளாகிவிடுவோமே! இந்த நன்றி உணர்வை மறந்தல்லவா அண்ணனை வைதுவிட்டோம்.' என்ற நினைவுதான் கும்பகருணன் உள்ளத்தை வருத்தி இருக்கவேண்டும்.

'உறங்குதிபோய்' என்று சொல்லிவிட்டால் தம்பி உறங்குவதற்குச் செல்லமாட்டான் என்பது இராவணனுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



தம்பியின் நன்றி உணர்வைத்தட்டி எழுப்பி, அவனை வருந்தச் செய்யும் என்பதை உணர்ந்துதான் அண்ணன், 'உறக்குதிபோய்' என்ற தொடரைப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

'உளைய' (வருத்தம்) என்ற சொல், கேட்பவனாகிய கும்பகருணனது அகத்தையும், சொல்பவனாகிய இராவணனது அகத்தையும் திறந்து விடுகின்ற ஒருதிறவு கோலாக அமைந்துள்ளது. இதுவும் ஒரு கம்ப சூத்திரமாகும். இப்படி எத்தனை எத்தனையோ சூத்திரங்களை, இந்தக் காப்பியத்தில் காணலாம். பிறகு, இராவணன், தான் செய்யப்போவது எது என்பதைத் தெரிவிக்கும் முன்பு, கும்பகர்ணனால் சொல்லப் பட்டதை மறுத்துப் பேசுகின்றான்.

'உய்திறம்' என்று எதனைக் கும்பகருணன் கூறினானோ, அது, தனக்கு உய்தொழில் (பிழைக்கும்வழி) அன்று எனக்கூறுகின்றான் அண்ணன். 'தையலை விட்டு அவன் சரணம் தாழ்தல்' என்பதை உய்திறமாகக் கூறினான் 'அது, உய்திறம்தான்: யாருக்கு? உனக்கும் உன் தம்பி வீடணனுக்கும்: எனக்கு, அச்செயல் உய்திறம் அன்று.' என்று தெளிவுபடுத்தினான் இலங்கை மன்னன்.

'மானிடர் இருவரை வணங்குதல் கூனுடைக் குரங்கையும் கும்பிடுதல்.' இச்செயல் எனக்கு உரியதல்ல இவை, உனக்கும் உன் தம்பிக்குமே கடமையாக இருக்கலாம்: யான் அது செய்யேன். எழுக! போக என்றான் இராவணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கும்பிட்டு வாழ்தல்' அண்ணனாகிய எனக்குரிய தல்ல! தம்பிகளுக்கு உரியதாகலாம், என்ற தொடர் நல்ல கருத்தோடு கும்பகருணன் உள்ளத்தில் தங்கிக் கொண்டுவிட்டது. அதனைப்பிறகு போர்க்களத்தில், காட்டுவான் இவன்.

'அண்ணன் செய்ய விரும்பாத ஒன்றை நாம் செய்வதா?' தமது சொந்த வாழ்க்கைக்காகப் பிறரைக்கும்பிட்டு வாழ்தல் குலப்பெருமையைக் குலைப்பதாக எண்ணினான் கும்பகருணன். 'பிறரெல்லாம், தமக்குக் கைகட்டிச் சேவகம் செய்யும் 'வண்ணம் வாழ்ந்த பெருமை நிறைந்த குலத்தார், ஒன்னொருவருக்குப்போய் அடியவராவதா? ஆம்! ஆம்! குலத்துமானம் போய்விடும்.' என்று எண்ணத் தொடங்கி விட்டான் இந்தத்தம்பி.

தம்பியின் எண்ணத்தை மேலும் தூண்டும் முறையில், தனது ஏவலர்க்கு ஆணையிட்டுவிட்டு, போருக்குத்தானே செல்வதாக, புறப்பட ஆயத்தமானான்.

**ஏவலர்க்கு இட்ட உத்தரவு :**

'தருக!என் தேர்ப்படை; சாற்றுஎன் கூற்றையும்;
வருக, முன் வானமும் மண்ணும் மற்றவும்;
இருகை வன்சிறுவரோடு ஒன்றி என்னொடும்
பொருக வெம்போர்? எனப்போதல் மேயினான்.'
(7364)

இராவணனது இந்த இறுதிச் சொல்லைக் கேட்டான்: உறுதியான செயலைக் கண்டான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கும்பகருணன், உடனே மனம் மாறினான். மனம் மாறவைத்தது, அவனுக்கு இயல்பிலேயே அமைந்திருந்த, செய்ந்நன்றி மறவாமை என்ற நல்லுணர்வு, அத்தோடு குலத்து மான உணர்வு. இந்த இரண்டு உணர்ச்சிகளால் சூழப்பட்ட கும்பகருணன், வீரர்களால் சூழப்பட்டவனாய் போர்க்களம் செல்லத்துணிந்தான். துணிந்தபோதும், தனது அண்ணனுக்குத் துணிவாக ஒரு நல்லதைச் சொல்லி விட்டுத்தான் செல்கின்றான்.

சொன்னது என்ன? 'நீ பொறுத்தியால்' என்பது, குற்றம் செய்தவர்கள்தான், செய்யப்பட்டவர்களிடத்தில் வருந்தி மன்னிப்புக் கேட்பது இயல்பு. இவன் எந்தக் குற்றமும் செய்யவில்லை. அப்படியிருந்தும், 'பொறுத்தியால்' என்று கேட்பதற்குக்காரணம், கும்பகருணன் சொன்ன நல்லதையெல்லாம் அண்ணன் குற்றமாகக் கருதியதனால்; சொன்னதோடு மட்டுமல்ல மனம் மாறியதை, செயலாலும் காட்டினான் கும்பகருணன், என்னசெயல்?

அண்ணனது பொன் அடியை வணங்கினான்; வன் நெடுஞ்சூலத்தை வலக்கையில் வாங்கினான். முதல் செயல் மன்னிப்பு வேண்டுவது: அடுத்தது போர்க்களத்துக்குச் செல்லத்தயாராகுவது.

**கும்பகருணன் மாற்றம் :**

இந்த இருசெயல்களுக்குப் பின்னால், தம்பி அண்ணனைப்பார்த்து, பேசிய பேச்சு, அவனது உள்ளத்தூய்மையையும், அண்ணன்பால் கொண்ட பாசத்தையும் வெளிப்படுத்துகின்றது. அழிவு வரும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று அறிந்தும் அண்ணனுக்காக உயிர்விடத் துணிந்தான் செய்ந்நன்றி மறவாமை என்ற நல்லுணர்வின் நெருக்குதலால்.

'வென்றுஇவண் வருவென் என்றுஉரைக்கிலேன்;விதி
நின்றது; பிடர்பிடித்தஉந்த நின்றது;
பொன்றுவென்; பொன்றினால், பொலன்கொள் தோளியை
"நன்று"என நாயக விடுதி; நன்றுஅரோ." (7366)

என்றும்

'என்னை வென்றுளர்எனின், இலங்கை காவல!
உன்னை வென்றுஉயருதல் உண்மை; ஆதலால்,
பின்னை நின்று எண்ணுதல்பிழை; அப் பெய்வளை
தன்னை நன்குஅளிப்பது தவத்தின் பாலதே.'(7368)

என்றும் சொல்லிவிட்டு இறுதியாக,

'இற்றை நாள்வரை, முதல்யான் முன்செய்தன
குற்றமும் உளஎனின் பொறுத்தி; கொற்றவ!
அற்றதால் முகத்தினில் விழித்தல்; ஆரிய
பெற்றனென் விடை' என, பெயர்ந்து போயினான், (7369)

ஆக்கச் செயல் எது? அழிவுச் செயல் எது? என்று நன்றாகத் தெரிகின்றது. என்றாலும், ஆக்கத்தின் பால் கும்பகருணன் போக்கு இல்லை! அழிவையே நாடிச்செல்கின்றான். ஏன்? இவனைப் பற்றிய விதி. (ஊழ் வினை) விதி நின்றது. எப்படி நிற்கின்றது? போர்க்களம் சென்று அழிந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போவதற்குக் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு நிற்கின்றது. இதன்பிடியிலிருந்து யார் தப்பிக்க முடியும்? அதனால் போகின்றேன் என்றான் தம்பி.

'போனால், நிச்சயமாக உயிரோடு திரும்பி வர மாட்டேன்'- அங்கேயே அழிவேன், (பொன்றுவேன்) அப்படி நான் அழிந்த பிறகாவது, சீதையை, உரியவரிடம் சேர்ப்பித்துவிடு அண்ணா!' என்று கூறினான் கும்பகருணன்.

மேலும், இதற்குரிய காரணத்தை விவரிக்கின்றான் இவன். 'என்னை வென்றுவிட்டால், அந்த மானிடர் நிச்சயமாக உன்னையும் வென்று விடுவார்கள். அதனால், அதற்குப்பிறகும் யோசித்துக் கொண்டு தவறு செய்யாமல், சீதையை விட்டுவிடுக. இதுவே நீ செய்த தவத்தின் பயன் என்று உணர்ந்து கொள்' என்று, செய்யத்தக்க காரியம் இது என்பதை வலியுறுத்திக் கூறினான் அன்புத்தம்பி.

இறுதியாக அண்ணனிடம் விடைபெறுகின்றான். எப்படி? 'மேலோனே (ஆரிய) இன்று வரை நான் செய்த குற்றங்கள் அனைத்தையும் பொறுத்துக் கொள். உன் முகத்தில் விழித்தல் இன்றோடு கழிந்தது. விடை பெற்றுக்கொண்டேன்' என்று கண்கலங்கக் கூறிவிட்டு, அந்த இடத்தை விட்டு நகர்ந்தான் செய்ந்நன்றி மறவாச் செம்மல்.

இந்த உருக்கமான பேச்சைக் கேட்டும் அண்ணன் இராவணன் ஒன்றும் பேசவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


சாகப்போகின்றேன் என்று வேகமாகச் சொல்லிய பிறகும், அதைக்கேட்டுக் கொண்டிருந்தானே அன்றி, தம்பியின் சாவைத்தடுக்கும் முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை அண்ணன், அவ்வளவு கல்நெஞ்சன் இராவணன்.

## அண்ணனா? அறமா?:

போர்க்களத்துக்குப் புறப்படும் முன்பு, கும்பகருணன் உள்ளத்தில் ஒரு பெரும் போர் நடந்திருந்திருக்கவேண்டும். அண்ணன் பக்கம் சாய்வதா? அறத்தின் பக்கம் சாய்வதா? அண்ணன் அழிபவன்: அறம் அழியாதது. என்றும் அழியாத அறத்தைப் பற்றினால், நின்று வாழ்ந்தவனாகலாம்: இன்றே அழியும். அண்ணன் கூற்றின்படி நடந்தால், வீழ்ந்தவனாகத்தான் கருதவேண்டியிருக்கும்.

வாழ்ந்தவனாகப் பெயர் பெற்றிருப்பது நல்லதா? வீழ்ந்தவனாக உலகத்தாரால் தூற்றப் படுதல் நல்லதா? இதில் எதை வேண்டுமானாலும் பின்பற்றலாம் கும்பகருணன். அத்தகைய சுதந்திரத்தினன் இவன். அப்படியிருந்தும், இவன் அறத்தைச்சார்ந்து நீதிநெறி நிற்க விரும்பவில்லை. அழிந்துபோகும் உடல் உறவுச்சாதி நெறியையே பின்பற்றி அண்ணனுக்காக வீழ்ந்தே போவோம் என்று விரும்பி ஏற்றுக் கொண்டான் போர்ச் செயலை.

ஏன்? அழிவை யார் விரும்பி ஏற்பார்கள்? 'அழிந்துபோகும் உடலின் மூலம், அதைவிட உயர்ந்த ஒன்று கிடைக்குமானால், அழிவை விரும்பி ஏற்கலாமே' இதுதான் கும்பகருணன் எண்ணம். இதற்குக் காரணம் என்ன?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



வள்ளுவத்தின் அடிப்படையில் அவன் சிந்தனை ஓடியுள்ளது. செய்ந்நன்றி மறந்தவர்க்கு பிழைப்பு இல்லை.

**'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுஉண்டாம்: உய்வுஇல்லை,**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு?**
**(திருக்குறள் - 110)**

தனது அண்ணன், தன் உடல் வளர்ச்சிக்காகச் செய்த உதவிக்கு நன்றிக் கடன் தீர்த்தாக வேண்டுமே! அந்தக் கடனை எப்படித் தீர்ப்பது? அண்ணன் இராவணன் சொல்லியபடி செய்தால் தானே! இது தீயதாகவே இருக்கலாம். இந்த நன்றிக்கடன் உணர்வுக்கு முன்னால், நீதி நெறியேயாயினும் அறவாழ்வு, வலிமை இழந்து நிற்கின்றது கும்பகருணன் உள்ளத்தில்.

கும்பகருணனைப் பொறுத்த அளவில் அவனது உள்ளத்துக்கு அவன் பின்பற்றிய நெறி சரியான தாகயிருக்கலாம். ஆனால் உலகப் பெருமக்கள் அவன் பின்பற்றிய நெறியை எப்படி எடை போடுவார்கள்? 'செய்ந்நன்றி மறவாமை' என்பது தனி ஒருவனது வாழ்க்கை உயர்வுக்குரிய நற்குணம். ஆனால், மனிதன் சமுதாயத்தோடு இணைந்து நின்று வாழவேண்டியவன். தனது நன்மை பெரிதா? சமுதாய நன்மை பெரிதா?

பிறர்க்கென வாழும் பெரியவர் உள்ளத்தில் சமுதாய நன்மைதான் பெரியதாகத் தோற்ற மளிக்கும். தனது செய்ந்நன்றி உணர்வை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதனால், தான் வாழும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



சமுதாயத்துக்குப் பெருந்தீங்கு ஏற்படும் நிலை கிட்டுமானால், சான்றோர்கள் செய்ந்நன்றி உணர்வைக் கைவிட்டுவிடுவார்கள். ஏன்? சமுதாயம் வாழவேண்டும் என்ற பெருநோக்கினர் சான்றோர்கள் அவர்கள்தான் 'உத்தமர்' என்று போற்றப்படுவர்.

அறம், நீதி என்ற உலகப் பெருநோக்கில் பார்க்கும்போது. செய்ந்நன்றி உணர்வு, சாதிநெறி என்பவைகள் சிறுசிறு குளங்கள். கும்பகருணன் கடக்க எண்ணியது, சிறுகுளம், அவனது நீச்சல் இந்தச் சிறுகுளத்தில்தான் நடந்தது. அதைப் பொறுத்தவரையில் அவனது சிறுகுள நீச்சல் பாராட்டுக்குரியதே.

அறக்கடல், நீதிப்பெருங்கடல் அவனுக்கு முன்னால் தோன்றாமல் இல்லை ஆனால் அந்தத் தோற்றத்தை முந்திக்கொண்டு வந்தது சாதிநெறி-செய்ந்நன்றி என்ற சிறுகுளம். அதனால் அதில் குதித்தான் நீந்தினான். இதுவே தனக்குப்போதும் என்ற மனநிறைவுக்கு உரியவனான் கும்பகருணன். ஆனால், தனது சாதிநெறியின் புன்மை தெரிகின்றது இவனுக்கு. எப்போது? நீதிநெறியின் மேன்மையை நேருக்கு நேராகச் சந்திக்கும்போது. சந்திப்பு அடுத்தகளம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# 7
# களப்போரில் உளப்போர்

**சந்திப்பு:**

சமுதாயத்தில் இணைந்து நின்று வாழும் மனிதர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்து, கருத்து பரிமாற்றம் செய்துகொண்டு வாழ்வது நல்லது. அது, இன்றியமையாததும் கூட ஆகும், இத்தகைய சந்திப்பு தனிமனித வாழ்வின் உயர்வுக்கும் பயன்படும்: சமுதாய நல்வாழ்வுக்கும் உதவுவதாக அமையும்.

உடல் உறவுப் பாசத்தால் பிணிக்கப்பட்ட உறவினர்கள் சந்தித்தால், அவர்களது பேச்சில், தங்களது பாசத்திற்குட்பட்ட வீட்டினரைப் பற்றியதாகவே இருக்கும். உறவுப் பாசத்துக்கு அப்பாற்பட்ட நண்பர்கள் இருவர் சந்தித்தால், அங்கு, தமது நல்வாழ்வு பற்றியதும் நாட்டு நலம் பற்றியதுமான பேச்சு நடக்கும். எந்தப்பாசமும் இல்லாத சான்றோர்கள் சந்தித்தால், அங்கு இடம் பெறுவது உலகநல்வாழ்வு பற்றியதாக அமையும். ஏன்? இவர்கள் உள்ளுவதெல்லாம் உயர்வையே உள்ளும் உத்தமர்கள் அல்லவா!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உத்தமர்கள் உலகைப்பற்றித்தானே சிந்திப்பார்கள். இவர்களது சந்திப்பில் வீட்டுக்கோ, நாட்டுக்கோ இடம் இருக்காது. அறத்தை உலகில் நிலை நாட்டுவது எப்படி என்ற சிந்தனையாளர்கள் தான் உத்தமர்கள்.

இப்படிப்பட்ட உயர்சிந்தனை உத்தமர்களை, பண்புடையாளர் என்றும் சான்றோர் என்றும் பேசும் வள்ளுவம்.

**'பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல், மண்புக்கு மாய்வது மன்' (திருக்குறள் 996)**

'பண்புடையவர்கள் இருத்தலால்தான் உலகம் நடந்து வருகின்றது. அவர்களது தொடர்பு இல்லையேல் உலகம்அழிந்துவிடும்' என்பது இதன்பொருள்.

உலகம் வாழ வாழ்பவர்கள் உத்தமர்கள். தாம்வாழ உலகம் வாழ வாழ்பவர்கள் எவ்வகையினர்? மத்திமர்கள். தாம்மட்டுமே வாழ எண்ணுபவர் அதமர்கள். இந்த மூவகை நிலைகளும் அவரவர்களது மனப்பக்குவத்தைப் பொறுத்ததாகும்.

**மூவர்நிலை :**

இந்த அளவுகோல் கொண்டு அளந்து பார்த்தால் இலங்கைச் சகோதரர்கள் மூவரும் மூவகைநிலைகளுக்கு உரியவராகின்றனர்.

சகோதர வரிசையில் இறுதியில் நிற்பவனாகிய வீடணன் 'உத்தமன்' என்ற நிலைக்கு உயர்வு பெற்று முதல் இடம் பெறுகின்றான். கம்பரே, இவனை 'உத்தமன்' (6376) என்று கூறிவிட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'உத்தமன் அந்நகர் ஒழியப் போயினான்' என்பது கவிச்சக்கரவர்த்தியின் திருவார்த்தை. சகோதர வரிசையில் முதலிடத்தில் நிற்கும் இராவணன், தனது சொந்த சுகத்தையேயன்றி வேறு எவரது நலத்தையும் சிந்திக்காதவனாகையால் கடையனாகித் தாழ்ந்துபோகின்றான். 'இரக்கம் இல் அரக்கன்' எனப்பட்டான் இவன்.

சகோதரப் பிறப்புவரிசையில் இடையில் நிற்கும் கும்பகருணன் மனப்பக்குவத்தாலும் - சிறப்பு முறையிலும் இடையனாகவே (நடு நிலை) மதிக்கப் படுகின்றான். இந்த இடையன் (நடு நிலையாளன்) கடையனாகிய, தனது அண்ணன் இராவணனையும் சந்தித்து இருமுறைக்கு மேலும் பேசியுள்ளான்: முதல்வனாகிய தனதுதம்பி வீடணனையும் சந்தித்துப் பேசயிருக்கின்றான். அண்ணனையும் தம்பியையும் சந்தித்துப் பேசிய பேச்சு. இவனை இவ்வாறு விமர்சிக்க உதவுகிறது.

இந்த மூன்று சகோதரர்களது மனநிலையை உளநூல் முறையில் ஆய்வு செய்துள்ளார் பேராசிரியர் அறிவொளி அவர்கள். அவரது ஆய்வு:– அறிவின் முதிர்ச்சியாகிய மெய்யறிவு முற்றிப்போன பாத்திரம் வீடணன். அவனிடத்தில் அரக்கர்களின் கலாச்சாரச் சாயம் அறவே இல்லை. ஆயிரம் மறைகளை அறிந்தவனாயினும் இராவணன் அனுபவ அறிவின்றி மெய்யறிவு காணாமையால், கலாச்சாரச் சாயம் சிறிதும் குறையாமலிருந்தான்.' – 'முதிர வேண்டிய அளவுக்கு முதிராத அறிவையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


கலாச்சாரச் சாயம் குறையவேண்டிய அளவுக்குக் குறையாமையும் ஆகிய ஒரு புதுப்பண்பைக் கண்டான் இக்கவிஞன். இதன் வெளியீடுதான் கும்பகருணன் என்ற பாத்திரமாகும்.' (நெஞ்சில் நெருஞ்சி - பக் 112, 113)

கும்பகருணன், தம்பியைப் போன்று உயர்வு பெற்று உத்தமனாக விளங்கமுடியாமையையும், அண்ணனைப் போன்று இழிநிலை எய்தி கடைய னாகத் தாழாமையையும் விளக்குகின்றது அறிவொளியின் ஆய்வு. நன்று.

இந்தமூவரும் தனித்தனியாக இருந்திருந்தால் இத்தகைய மதிப்பீட்டுக்குரியவராகியிருக்க முடியாது. ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசியதால் தான், அந்தப் பேச்சிலிருந்து இவர்களைக் கணக்கிட்டுப் பார்க்க முடிகிறது. சந்திப்பின் பயனைக்காட்டுகிறது இது.

**சந்திப்பின் காரணம்:**

சந்திப்பு நடப்பதற்குக் காரணம், ஒருவரை மற்றொருவர் அழைப்பதாலும் இருக்கலாம்: அழைக்காமலேயே விரும்பிச் செல்வதாலும் இருக்கலாம். கும்பகருணன் இரண்டுக்கும் உரியவ னாகின்றான். அண்ணனைச் சந்தித்தது, அழைப்பின் பேரில். அண்ணன் இராவணன், கும்பகருணனை அழைத்துவரச் செய்தான். சென்றான் கும்ப கருணன். சந்தித்தான்: பேசினான்.

தம்பியுடன் சந்திப்பு, தம்பி வீடணன் அவனாகவே. அண்ணன் கும்பகருணனிடம் வந்தது. இரண்டு சந்திப்பிலும், கும்பகருணன் மனம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நொந்தது: கண்கள் குளமாயின. அண்ணன் சந்திப்பு அவைக்களம்: தம்பி சந்திப்பு போர்க்களம். அவைக்களச் சந்திப்பில், அண்ணனது அடாத செயலைக்கண்டு மனம் வெதும்பினான்: போர்க்களச் சந்திப்பில் தம்பியின் மேன்மையைக்கண்டு மனம் வியந்து மகிழ்ந்தான் கும்பகருணன்.

இந்த இரண்டு சந்திப்பிலும் அவன் பெற்ற பயன் என்ன? போர்க்களத்தில் தம்பியின் உயர்வு தெரிகிறது: புரிகிறது. அந்த உயர்நெறியை - நீதி நெறியைப் பின்பற்ற முடியவில்லை. செய்ந்நன்றி மறவாமை உணர்வு, நீதிநெறியைப் பின்பற்ற விடாதபடி தடுக்கின்றது.

அவைக்களச் சந்திப்பில் அண்ணனது மரபு மீறிய கொடுஞ்செயலின் தீமைபுரிகின்றது. நீதியை எடுத்துச்சொல்லி அண்ணனைத் திருத்த முடியவில்லை.

அதனால் அண்ணனை ஒட்டியும் நிற்க இயலாத நிலை; தம்பியைச் சார்ந்தும் நிற்க இயலாத நிலை. இந்த இரண்டு சந்திப்பும் இப்படி ஒரு இக்கட்டான நிலையை ஏற்படுத்திவிட்டது. கும்பகருணனுக்கு.

அதனால், கும்பகருணன் தனக்கு என்று ஒரு நிலையை ஏற்படுத்திக் கொண்டுவிட்டான். அந்தத் தனித்துவ நிலையே அவனுக்குப் புகழுக்குரியதாகின்றது.

## தனித்துவ வெளிப்பாடு:

போர்க்களம் நோக்கி வருகின்றான் கும்பகருணன். எப்படி? பெருஞ்சேனையோடு. சேனைகள் புடைசூழ வரும் கும்பகருணனின் புறத்தோற்றத்தைக் காட்ட வந்த கம்பர், 'தோளொடு தோள்செலத் தொடர்ந்து நோக்குறின் நாள்பல கழியுமால்; நடுவண் நின்றது ஓர் தாளுடை மலைகொலாம்' என்று கூறுகின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



'மலை போன்ற பெருந்தோற்றத்தினன்' என்பது குறிப்பு. இது, தாளுடை மலை- மலைக்குக் கால் இருக்காது. தேரில் வரும் இந்த மலை கால்களை உடையது கும்பகருணனை கால்களைப் பெற்றமலையாகச் சொல்வதில் கவிஞருக்கு அவ்வளவு மகிழ்ச்சி போலும்! தன் அண்ணன் இராவணனது அழைப்புக்கு இணங்கி, அவனைக் காணச்சென்ற கும்பகருணன் தோற்றத்தை அங்கும் மலையாகத்தான் காட்டுகின்றார் கம்பர் அந்தக்கவிதை, சென்ற கும்பகருணன் தோற்றத்தை மட்டும் காட்டவில்லை. எதிர் நின்று வரவேற்கயிருக்கும் இராவணன் தோற்றத்தையும் காட்டுகின்றது.

நின்ற அண்ணன், தன்னிடம் வந்த தம்பியைத் தழுவிக் கொண்டான். எப்படி! இராவணனும் மலை போன்ற பெருந்தோற்றத்தினன். வந்த கும்ப கருணனும் அத்தகைய பெருந்தோற்றத்தினன். இதை. கற்பார் மனத்தில் நிற்கும் வண்ணம் கூறுகின்றது கவிதை.

**'நின்ற குன்று ஒன்று, நீள்நெடுங் காலொடும்**
**சென்ற குன்றைத் தழீஇயன்ன செய்கையான்.'**
**(7343)**

இராவணன் நின்றகுன்று: கும்பகருணன் சென்ற குன்று: குன்று (மலை) செல்லுமா? இது நீண்டகால் வளர்ந்தமலை. 'நின்ற இராவணன், சென்ற கும்ப கருணனைத் தழுவிக் கொண்டான்.' இதுதான் செய்தி. இதனை உள்ளபடியே கூறுவதாகவிதை? நின்றவனைக் குன்றாகக்கற்பித்தும், சென்றவனை, கால்வளர்ந்த குன்றாகக்கற்பித்தும் காட்டும்போது தானே கவிதைவளம் பெறுகின்றது!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இந்தக் கவிதையின் வளம் அத்தோடு நிற்க வில்லை. தழுவிக்கொண்டவனும், தழுவப்பட்டவனு மாகிய இருசகோதரர்களும் புறத்தோற்றத்தால் மட்டுமே பெருமைக்குரியவர். இவர்களது அகத் தோற்றம் சிறுமைக்குரியதாகவே இருக்கும் என்பதைக் குறிப்பிடுகின்றது.

அகத்தோற்றத்தால் பெருமை பெற்று விளங்கும் வேறு இருசகோதரர்களது காட்சியைக் காட்டும் கவிதையைக் கண்டால்தான். இங்கு ஏன் புறத் தோற்றம் மட்டுமே காட்டப்பட்டுள்ளது என்பது விளங்கும்.

அங்கும் தம்பிதான் வருகின்றான்; அண்ணன் தான் வரவேற்பவன். வந்த தம்பியை, வரவேற்ற அண்ணன் தழுவிக் கொண்டான். இந்த நிகழ்ச்சி நடைபெற்ற இடம் இயற்கைச் சூழல் நிறைந்த சித்திரகூட மலை.

வந்த தம்பி பன்னரும் புகழ்ப்பரதன்: வரவேற்ற அண்ணன் 'நியாயம் அத்தனைக்கும் ஓர் நிலையம் ஆயினான். இராமபிரான், வந்த பரதனை அன்போடு தழுவிக் கொண்டதைக் கம்பர் சொல் கின்றார். எப்படி?

'தயாமுதல் அறத்தினைத் தழீஇயது என்னவே' என்பது கவிதைத்தொடர்.

'கருணாநிதியான கடவுள், தருமதேவதையைத் தழுவிக்கொண்டது போன்றது இராமபிரான் பரதனைத் தழுவிக் கொண்டது' என்பது இதன் கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அருள், அறத்தைத் தழுவியது. இராமபிரான் அருள்: பரதன் அறம். இங்கு இந்த இரு சகோதரர்களின் அகத்தோற்றம் மட்டுமே காட்டப்பட்டது.

அயோத்தி சகோதரர்கள் அகத்தோற்றப் பொலிவினர்: இலங்கைச் சகோதரர்கள் புறத்தோற்றப் பெருமையர். புறத்தோற்றம் மங்கும்: அகத்தோற்றம் ஓங்கும். புறத்தோற்றம் அழியும்; அகத்தோற்றம் வெல்லும். புறத்தோற்றம் கண்டாரை நடுங்கச் செய்யும்: அகத்தோற்றம் அனைவரையும் அன்பால் அணைத்துக் கொள்ளும்.

புறத்தோற்றப் பெருமை கும்பகருணனின் தனித்துவம். இது, கண்ணால் காணப்படும் தனித்துவம். கண்ணால் காணமுடியாதது அகத்தோற்றத் தனித்துவம். அது வெளிப்பட வேண்டுமானால், அதற்கு ஒரு சந்தர்ப்பம் கிட்டவேண்டும். அந்தச் சந்தர்ப்பம், வீடணன் சந்திப்பால் கிட்டயிருக்கிறது. இந்தச் சந்திப்புக்குச் சந்தர்ப்பம் உருவாகிறது. எப்படி?

போர்க்களத்திற்குள் புகுந்த கும்பகருணனது புறத்தோற்றத்தைக் கண்டு அஞ்சி ஓடத் தொடங்கின வானரப் படைகள், 'நம் வானரங்கள் நடுங்கும்படியாக வரும் இந்தப்பெருந்தோற்றத்தினன் யார்?' என்பது இராமபிரான் கேள்வி. அதற்கு விளக்கமான விடை தருகின்றான் வீடணன்.

**வீடணன் விளக்கம் :**

கும்பகருணனைப் பற்றிய விவரம் பத்துக் கவிதைகளாக நீள்கின்றது. அதில், கும்பகருணனது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அகத்தோற்றம் மிகுயாக இடம் பெறுகின்றது. கும்ப கருணன் எத்தகைய இயல்பினன் என்பதை அறிவதில்தான் இராமபிரான் விருப்பம் உள்ளது. அது வீடணனுக்குத் தெரியும். 'மறு இல்சிந்தையான் அல்லவா வீடணன்.' அதற்கேற்ப விவரிக்கின்றான்.

'ஆழியாய்' இவன், ஆகுவான்
ஏழை வாழ்வுடை எம்முனோன்
தாழ்விலா ஒரு தம்பியோன்;
ஊழி நாளும் உறங்குவான்.' (7387)

'எமது அண்ணன் இராவணன் அறிவில்லாத வாழ்க்கையன். (ஏழை-அறிவின்மை) அவனுக்கு ஒரு தம்பி இவன். அண்ணனுக்குத் தாழ்வு (குறைவு) வராதபடி செயல்படும் ஒப்பற்ற தம்பி இவன். செயல் இல்லாதபோது பலநாளும் உறங்கியே காலம் கழிப்பான். 'தாழ்வுஇலா' என்றதொடர் அண்ணனுக்குக்குறைவு நேராதபடி என்றும், தனக்கு எந்த விதமான தாழ்வு வராதபடி என்றும் பொருள் கொள்ளும் முறையில் அமைந்துள்ளது.

'தாழ்வு இலா தம்பி' என்பதை அடுத்து விளக்குகின்றான். அண்ணனது நல்வாழ்வில் கவனம் செலுத்துபவன் தான் தாழ்விலாத்தம்பி. தம்பி என்று பெயரளவில் இல்லாமல், அண்ணனது பெருமிதவாழ்வுக்குத் தாழ்வு நேரும் வண்ணம் அண்ணன் தீயசெயல் செய்தால், அதனைக் கண்டித்து நீதிகூறும் அமைச்சனாகவும் செயல் படுபவன் இவன். அமைச்சனாகச் செயல்பட்டதை எடுத்துக்கொள்கின்றான் வீடணன் ...

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



"தருமம் அன்று இதுதான்; இதால்
வரும், நமக்கு உயிர் மாய்வு" எனா,
உருமின் வெய்யவனுக்கு உரை
இருமை மேலும் இயம்பினான். (7395)

'மறுத்த தம்முனை, வாய்மையால்
ஒறுத்தும், ஆவது உணர்த்தினான்;
வெறுத்தும், 'மாள்வது மெய்' எனா
இறுத்து, நின்எதிர் எய்தினான்.' (7396)

இந்த இருகவிதைகளும். கும்பகருணனது, இப்போதைய மனநிலைப் போக்கை வீடணன் கூறுவதாக அமைந்துள்ளன.

பேரவை ஆலோசனைக் கூட்டத்தில் இராவணன் செய்த தீயசெயலைக் கும்பகருணன் கண்டித்துப் பேசிய பேச்சை நினைவுகூர்ந்து வீடணன் சொல்கின்றான். 'பிறன் மனைவியைக் கவர்ந்து வந்து சிறைவைத்ததாகிய இந்தக் கொடுஞ்செயல் தருமத்தைச் சேர்ந்தது அல்ல! இச்செய்கையால் நமக்கு உயிரிழப்பு உண்டாகும்.' இது, கும்பகருணன், தனது அண்ணனைப் பார்த்துக் கூறிய அறிவுரை. இதை இரண்டு முறைக்கு மேலும் சொன்னான்.

அண்ணனோ, இடியைக் காட்டிலும் கொடியவனாகயிருக்கின்றான், கொடியவன் நீதிக்குப்படிவானா? படியமாட்டான், அதனால் நீதி வார்த்தையை மேலும் தொடர்ந்தான்.

,தனது நல்ல அறவுரையைக் கேளாது மறுத்த அண்ணனை, மேலும் மெய்ம்மொழிகளால் கடிந்து கூறினான். அண்ணனைத் திருத்துவதற்கு மென்மொழியாலும் முயன்றான்: வன்மொழியாலும் முயன்றான்.'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'முயற்சி பயனளிக்காததால், 'தான் இறப்பது உறுதி - உண்மைதான் என்று நினைத்து, தனது உயிரை வெறுத்து இங்கு உனக்கு எதிரில் போருக்காக வந்து நின்றுள்ளான் இந்தக் கும்பகருணன்' என்று கூறினான் வீடணன்.

கும்பகருணன், ஆலோசனைக்கூட்டத்தில் அண்ணனைக் கண்டித்துப் பேசியதுதான் வீடணனுக்குத் தெரியும் இரண்டாவது முறையாகப் பேசியதும், உயிரைவெறுத்து, போருக்குப் புறப்பட்டதும் வீடணனுக்கு எவ்வாறு தெரியும்? அதுவும் இப்போது தானே அண்ணனைக் கடிந்தும், உயிரைவெறுத்துப் போருக்கு வந்தான் இது, வீடணனுக்கு அதற்குள்ளாகத் தெரிந்திருக்க முடியுமா?

இதையெல்லாம் ஒற்றரால் அறிந்திருக்க வேண்டும். என்பதுபதில். இராமபிரானுக்குத் தெரியாமல் ஒற்றர்களை நியமித்திருந்தானா வீடணன்? அப்படிச்செய்திருந்தால் இராமபிரான் ஆணைக்கு உட்பட்டதாக இருக்கமுடியாதே. என்ற வினா விடைகளெல்லாம் பொருத்தமானதாக இல்லை. என்று முடிவு செய்து, 'கம்பன் இதனைத் தவறிப்போய் பாடியதாகத்தான் இதனைக் கொள்ள வேண்டியிருக்கிறது' என்ற தீர்மானத்துக்கு வருகின்றார் அறிவொளி அவர்கள் (நெஞ்சில் நெருஞ்சி பக்-82)

கவிச்சக்கரவர்த்தி, தமது காப்பியத்தை, எந்தக் குறையும் யாரும் காணமுடியாத அளவில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



தான் பாடியுள்ளார் என்பது அறிஞர்கள் அனைவரும் ஒத்துக்கொண்டமுடிவு, அப்படியானால் இதற்கு விடை என்ன? கவிச்சக்கரவர்த்தி ஒரு கவிதையை ஒருசொல்லால் பூட்டிவைத்திருப்பார். மற்றோர் கவிதையில் அது திறக்கும் பெருந்திறவு கோலை வைத்திருப்பார். அதனைக் கண்டுபிடித்து எடுத்துத்திறந்தால், அக்கவிதையினுள் பொதிந்து கிடக்கும் பெரும்பொருள் கண்டு மகிழலாம்.

இதற்குரிய திறவுகோல் 6774ம் கவிதையில் உள்ளது. 'கல்விக்கண்மிக்கோண்' என்றதொடர், முன்கண்ட கவிதையில் எழுந்த வினாவுக்கு விடை காண உதவும். வீடணன் 'கல்விக்கண்மிக்கோன், எனக் கூறப்பட்டுள்ளான். தான்பெற்ற ஞானக் கல்வியாகிய கண்ணால், காலத்தையும் இடத்தையும் கடந்து அங்குநடக்கும் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளக்கூடியவன் வீடணன்.

பாரதயுத்தகளத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் கண்டறிவதற்கு சஞ்சயன் ஞானக்கண் பெற்றிருந்தது போன்று இலங்கையுத்தகளத்தில் வீடணன் அத்தகைய ஞானக்கண் பெற்றிருந்தான் என்று கொள்ளுதல் வேண்டும். மேலும், இவன் முழுதுணர்புலவன் (6531) என்றும் கவிஞரால் குறிக்கப்பெறுகின்றான். 'முழுதுணர்புலவன்' என்பது 'தீர்க்கதரிசி' என்ற வடசொல்லின் தமிழாக்கம்.

தீர்க்க தரிசிக்கு எல்லாம் எளிதில் புலனாகும், 'கண்ணுடையர் என்பவர் கற்றோர்' என்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


திருக்குறள் தொடருக்கு, 'தேயம் இடையிட்டவற்றையும் காலம் இடையிட்டவற்றையும் காணும் ஞானக்கண் உடைமையின் கற்றாரைக் கண்ணுடையார்' என்று பரிமேலழகர் விளக்கம் கொடுத்துள்ளார்.

ஆகவே, வீடணன் கல்விக்கண் மிக்கவனாகயிருப்பதால், கும்பகருணன், போர்க்களம் வரும் முன்பு, அங்கு இராவணன் முன் நடந்த நிகழ்ச்சிகளை அறிந்திருக்கவேண்டும் என்று நம்பலாம். கல்விக்கண் கொண்டு நோக்கினால் கவிச்சக்கரவர்த்தியின் கவிதையில் நிறைவையே காணலாம். கம்பர் வீடணனுக்குக் கல்விக்கண் கொடுத்து, காப்பியத்தைத் திறம்பட நடத்திச் செல்கின்றார். இதனைக் கற்பாருக்கும் கல்விக்கண்வேண்டுமே!

மேலும், கும்பகருணனது நல்லெண்ணத்தையும். அவனது போர்க்களத்து வருகையையும் தெளிவு படுத்துகின்றான் வீடணன்.

**"நன்றுஇது அன்று நமக்கு எனா,**
**ஒன்று நீதி உணர்த்தினான்:**
**இன்று காலன்முன் எய்தினான்,**
**என்று சொல்லி இறைஞ்சினான்." (7397)**

'பிறன் மனைவியைக்கவர்ந்து வைத்திருக்கும் இச்செயல் நமக்கு நல்லது அல்ல!-என்று பொருத்தமான நீதியை எடுத்துக்கூறினான் கும்பகருணன். அதை அண்ணன் சிறிதும் உணராததால்தான், அண்ணனுக்காகவே உயிர்விடுவதற்கு, இன்று எமனுக்கு முன்னால் வந்தது போன்று வந்துள்ளான்'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்று, இராவணனுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சியை நேரில் கண்டது போன்று தெளிவாகக் கூறினான் கல்விக்கண்மிக்கோனாகிய வீடணன். இதனை எல்லாம் எடுத்துச் சொல்லி வணங்கி நின்றான் வீடண அறிஞன்.

**அழைப்பு :**

'அண்ணன் செய்த செயல் இவனுக்குப் பிடிக்கவில்லை' என்று தெரிவிக்கப்பட்ட செய்தியை அங்கு அனைவரும் கேட்டனர். கேட்டவர்களுள் சுக்கிரீவன் தானாக, தனது கருத்தை எடுத்துச் சொன்னான். அவன் சொன்னது என்ன?

'இவனை இன்று'
கொன்று ஒரு பயனும் இல்லை: கூடுமேல்
கூட்டிக்கொண்டு
நின்றது புரிதும்: மற்று இந்நிருதர்கோன் இடரும்
நீங்கும்:
'நன்று' என நினைந்தேன்? என்பது சுக்கிரீவன்
கூற்று.
நாதனும் (தலைவனாகிய இராமபிரானும்)
'நயன்இது'

என்று கூறினான்.

அப்படியானால், யார், அவனை அழைக்கச் செல்வது? அத்தகுதி வீடணனைத்தவிர அங்கு யாருக்கும் இல்லை.

இதனை உணர்ந்து கொண்ட இராமபிரான், வீடணனைப்பார்த்து, 'நீயே சென்று அவனை அழைத்துவா' என்று சொல்லி 'நன்று போக' என்று விடை கொடுத்தான். வீடணனும். 'அறிவினால், அவனை உள்ளம் சேகு அறத் தெருட்டி, ஈண்டுச் சேருமேல் சேர்ப்பேன்' என்று கூறிவிட்டு, கும்பகருணன் நிற்கும் எதிரியின் போர்வரிசையை நோக்கி நடந்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


அழைக்கச் செல்பவனும் நன்னெறியினன்: நல் உணர்வினன் அழைக்கப்படுபவனும் நன்னெறியினன்: நல் உணர்வினன். ஆனால் இந்த அழைப்புக்கு வெற்றிகிடைத்ததா? இல்லையே! ஏன்? அதனை, இருவரது உள்ளத்தில் நடந்த போராட்டம் நன்கு தெளிவாக்கும். எது போராட்டம்? நன்மைக்கும் தீமைக்கும் நடப்பது போராட்டம். இதுகளத்தில் நடக்கும் புறப்போர். இது இயல்பு.

ஆனால், நன்மைக்கும் நன்மைக்குமே போராட்டம் என்றால் இது வியப்பு. இந்த வியப்பு உள்ளத்து உணர்வுப் போரால் வருகின்றது. அத்தகைய நல்லுணர்வுப்போரை, அன்புளம் கொண்ட சகோதரர்கள் இருவரிடையே நடத்திக் காட்டுகின்றார் கவிச்சக்கரவர்த்தி.

நீதிநெறித் தம்பியும் சாதிநெறி அண்ணனும் போர்களத்தில் சந்திக்கும் இந்தச் சந்திப்புக் காட்சி, கவிச்சக்கரவர்த்தியின் புதுமைப்படைப்பு.

இந்த அற்புதமான படைப்பைப் பற்றி, இந்தக் காப்பியத்தை நன்கு இலக்கியத் திறனாய்வு செய்த வ. வே. சு அய்யர் அவர்கள் கூறியிருப்பதை நோக்கவேண்டும்.

'அழிந்துகொண்டிருக்கும் பொருளின் மேலே தன்னுடைய அன்பார்ந்த நன்றியை வைத்தான் கும்பகருணன்: அண்ணனுக்கும் அரசனுக்கும் நன்றி காட்டாமல், அறத்தின்மேல் தன் அன்பார்ந்த நன்றியை வைத்தான் வீடணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இந்த இருவருக்கும் இடையே முரண்தொடைக் கோலத்தை மிக மேன்மையாகச் செய்து கம்பன் இக்காட்சியைத் தன் கண்டுபிடிப்பாகவே செய்து விட்டான். இது ஐயர் அவர்களின் கூற்று. (நெ. நெ. பக் - 146)

இந்தச் சந்திப்புக் காட்சியைப்பற்றி பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் கூறியிருக்கும் கருத்தும் சிந்தனைக்கு விருந்தாகும். 'வீடணனிடம் எல்லை இல்லாத அன்பு பூண்டவன் கும்பகருணன். ஆனால், அண்ணன் தம்பியர்களாகிய இவர்கள் இருவருக்கும் விழுப்பொருள்கள் வேறு வேறு. இராமனிடம் சேர்வது,

'மருள்உறு பிறவி நோய்க்கும் மருந்தும் ஆம்
மாறிச்செல்லும்
உருள்உறு சகட வாழ்க்கை
ஒழித்து வீடளிக்கும்' (கு-வி. 138)

என்று கருதுபவன் வீடணன்., வீடணனைப் போலவே கல்விகேள்வி ஞானங்களில் நிறைந்தவன் தான் கும்பகருணனும், என்றாலும் என்ன? இருவருடைய விழுப்பொருள்களும் இருவேறு துருவங்களாக அமைந்துவிட்டன. இருதுருவங்களாக விழுப்பொருள்கள் இருப்பினும் ஒருவர் மாட்டு ஒருவர் கொள்ளும் அன்பு இதனால் குறைய வேண்டியதில்லை, என்பதை எடுத்துக் காட்டவே கவிஞன் இந்தக்காட்சியை அமைத்துக் காட்டுகின்றான்.' இதுபேராசிரியரின் ஆய்வுரை. (கம்பன் புதியபார்வை பக்-370)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



**அன்பிற் கனிந்த அண்ணனும் தம்பியும் :**

போர்க்களத்தில், இந்த இருசகோதரர்களது சந்திப்பின் தொடக்கத்திலேயே அன்பின் வெளிப்பாட்டைக் காணமுடிகிறது. 'வீடணன் விரைவில் உன்பால் வந்தனன்' என்று, இலங்கை வீரர்கள் கும்பகருணனிடம் சொன்னார்கள். இது, இவனுக்கு எவ்வளவு நற்செய்தியாக இருந்தது என்பதைக் கும்பகருணன் முகம்காட்டியது.

இந்த நற்செய்தியைக் கேட்டதும், கும்பகருணன் 'வரம்பு இலா உவகை கூர்ந்து சிந்தையால் களிக்கின்றான்! வீடணனைக் காண்பதில் எல்லையற்றமகிழ்ச்சி. அதனால்மனத்தில் பேருவகை மிக்கவனானான் கும்பகருணன்.

தனது வருகையைக்கண்டு மகிழ்ந்து நிற்கும் கும்பகருணனைப் பார்த்ததும் வீடணன் என்ன செய்தான்? தான், அண்ணன்பால் கொண்ட அன்பையும் மதிப்பையும் வெளிப்படுத்தும் முறையில் அவனது பாதங்களைத்தனது தலைதொடுமாறு வணங்கிப்பணிந்தான் வீடணன். 'செறிகழல் சென்னி சேர்த்தான்.' என்பது கவிதைத் தொடர்.

**அண்ணனின் அன்புப் பேச்சு :**

தனது அன்புத்தம்பியைப் பார்த்ததும் அளவு கடந்த உணர்ச்சிப் பொங்கி வழிந்தது கும்பகருணனுக்கு. இது, எதிர்பாராத ஒரு சந்திப்பு அண்ணனுக்கு. தம்பிக்கும் எதிர்பாராததுதான் இந்தச்சந்திப்பு. ஆனாலும், இந்தச்சந்திப்புக்கு வழி வகுத்துக்கொண்டவன் தம்பிதான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



எதிர்பாராத சந்திப்பில் யார் முதலில் பேச்சை தொடங்குவது? அண்ணன்தானே முதலோன்! அவன்தான் தொடக்கம். பேச்சைத் தொடங்கு வதற்கு முன்பு தனது அன்புப்பெருக்கைச் செயலில் காட்டினான் கும்பகருணன். என்னசெயல்? காட்டியது எப்படி?

'முந்தி வந்து இறைஞ்சினானை முகந்து,
உயிர் மூழ்கப் புல்லி' னான் கும்பகருணன்.

தனது அன்பை, தம்பியைத் தழுவிக் கொள்வதன் மூலம் காட்டிய கும்பகருணன், 'நீ வந்த காரணம் என்ன? என்ற கேள்வியுடன் பேச்சைத் தொடர்ந்தான்.

கும்பகருணன் பேசிய பேச்சை ஒன்பது கவிதை களில் விவரிக்கின்றார் கவிச்சக்கரவர்த்தி. இந்தக் கவிதை ஒன்பதிலும், கும்பகருணனது உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதைக் காணலாம். அந்த ஓட்டத்தில், தம்பியின்மேல் கொண்ட அன்பு உணர்வும் தம்பியின் மேன்மையான வாழ்வைக் கண்டு மகிழ்ந்த இன்பஉணர்வும் மிதந்து வருவதைக் கண்டு மகிழலாம்.

கேள்வி எப்படித் தொடங்குகின்றது? 'தம்பி: வந்தது என்! தனியே?' இதுகேள்வி. விவரம்! தெளிவிலார்போல மீளவந்தது என்? 'நீ, எங்கள் அரக்கர் குலத்தினின்றும் பிழைத்துப் போயினாய்' என்று மனம் மகிழ்ந்திருந்தேன். என் மகிழ்ச்சியான நல்லெண்ணம் முழுதும் உன் வருகையால் கெடுகின்றதே! அறிவில்லாதவனைப்போல அல்லவா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



நீ என்னிடம் வந்திருக்கின்றாய். வந்த காரியம் என்ன?' என்று கேட்டான் அண்ணன். இதைக் கேட்கும்போது, 'மழையின் நீர் வழங்கு கண்ணின னாக' இருந்தான் அண்ணன். ஏன் அழுகை.

'பிழைத்துப்போன, அறிவுடைத்தம்பி மறுபடியும் நம் பக்கம் வந்துவிட்டானே! நம்மைப் போன்றே அழிந்து விடுவானே' என்ற கவலை, கண்ணீராக வடிந்தது.

**அமுதும் நஞ்சும்:**

அமுது, உண்ண உண்ண இன்பம் பயப்பது: உண்டாரை நிலையாக வாழவைப்பது. நஞ்சு கொடியது: தன்னை அணுகியவரை அப்போதே வீழவைப்பது. 'தம்பியின் வாழ்வு அமுதத்துடன் அணைந்தது: தனது வாழ்வு நஞ்சுடன் கலந்தது' என்று எண்ணுகின்றான் கும்பகருணன்.

அதனால், 'அமுது உண்பாய், நஞ்சு உண்பாயோ?' என்று அடுத்த கேள்வியைத் தொடுத்தான் அண்ணன். வீடணன் பெற்றுள்ள பெருவாழ்வு, கும்பகருணன் உள்ளத்தை எவ்வளவு மகிழ்வித் துள்ளது என்பதை அடுத்த கவிதை காட்டுகின்றது.

'அவயம் நீ பெற்ற வாறும், அமரரும் பெறுதல்
ஆற்றா,
உவய லோகத்தினுள்ள சிறப்பும், கேட்டுஉவந்தேன்
உள்ளம்:
கவிஞரின் அறிவு மிக்காய்! காலன் வாய்க்
களிக்கின்றேம்பால்
நவைஉற வந்ததுஎன் நீ? அமுது உண்பாய் நஞ்சு
உண்பாயோ. (7402)

(அவயம்-அடைக்கலம்: உவயம்-இரண்டு: காலன்-எமன்: நவை-குற்றம்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்ன அருமையான கவிதை! காணமுடியாத உணர்ச்சியின் ஆழத்தை வடித்துக்காட்டுகின்றது இக்கவிதை. 'தனது தம்பி பெற்றது நல்வாழ்வும் ஆகும்: பெருவாழ்வும் ஆகும்.' என்று களிப்புற்றான் கும்பகருணன். இராமபிரானிடத்தில் அடைக்கலப் பொருளாகச் சேர்ந்தது நல்வாழ்வு. (அபயம்-பயமற்றது: அடைக்கலம்) இது இம்மைப்பயன். இறைவன் திருவடியை அடைந்ததால் வீடு பெற்றான் இது மறுமைபயன்: இது பெருவாழ்வு. இந்த இருவிதமான வாழ்வு அமுது உண்ட அமரர்களாலும் (தேவர்களாலும்) பெறுவதற்கு அரியது.

அத்தகைய உயர்வற உயர்ந்த வாழ்வைக் கண்டு அண்ணன் கும்பகருணன் 'உவந்தேன் உள்ளம்' என்று கூறுகின்றான். தனது நிலையை, 'காலன் வாய்க்களிக்கின்றேன்? என்று குறிப்பிடு கின்றான் கும்பகருணன். 'எமன் வாயில் சிக்கிக் கொள்ள இருக்கும் எங்களிடத்தில் நீவரலாமா? நீ கவிஞர்களைக் காட்டிலும் மேம்பட்ட அறிவு படைத்தவன் அல்லவா? அப்படியிருக்கும்போது, குற்றம் உனக்குச் சேரும் வண்ணம் எங்களிடத்தில் நீ வரலாமா? குற்றம் அற்ற நீ, குற்றமே உற்ற எங்கள் பால் இற்றைக்கு வந்தது எற்றுக்கு?' என்று உணர்வு பொங்கக் கேட்டான் கும்பகருணன்.

**புலத்தியன் மரபும் குலத்தின் இயல்பும் :**

இலங்கைச் சகோதரர்கள் எந்த மரபைச் சேர்ந்தவர்கள்? அந்த மரபு உயர்ந்ததா? தாழ்ந்ததா? எவனும் தனது மரபைத் தாழ்ந்ததாகச் சொல்லிக் கொள்ள மாட்டான். எந்த மரபிலே வந்தானோ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அது தான் அவனது குலம் ஆகும். இங்கு இது சிந்திப்பதற்கு ஒன்றாகும். கும்பகருணன், மரபையும் குலத்தையும் பற்றிச் சிந்தித்துப் பேசுகின்றான் அடுத்தாற்போல். மரபு, ஆண்மகன் வழிவருவது. அதுதான் வம்சம் எனப்படும். அதன் பெருக்கம் குலம் எனப்படும். (குலம் - கூட்டம்) எப்படிப் பெருகியது? பெண் தொடர்பு.

இலங்கைச் சகோதரர்களின் மரபுத் தோற்றம் எப்படி வந்தது? இந்த வம்சாவழியைக் கம்பர் தமது காப்பியத்தில் எங்கும் முறையாகச் சொல்லவில்லை. ஆனாலும், மூலக்கதை ஆசிரியராகிய வான்மீகி முனிவர் தமது இராமகாவியத்தில் உத்தர காண்டத்தில் விரிவாகச் சொல்லியிருப்பதை ஏற்றுக் கொண்டுள்ளார் கம்பர்.

பிரம்மாவுக்குச் சமமான அந்தணர் புலஸ்தியர். இவரது மகன் விச்ரவஸ் (விசுரவசு) இந்த அந்தணர், தேவவர்ணினி என்ற பெண்ணை மணந்தார். இவள் பரத்வாஜ முனிவரின் மகள். இந்தத் தம்பதிகளுக்கு மகனாகத் தோன்றியவன் வைச்ரவணன் 'குபேரன்' என்ற பெயர் படைத்தவன் ஆயினன். வைச்ரவணன் குபேரன் ஆனது எப்படி? புலனடக்கத்தோடு மேருமலைச் சாரலில் தவம் செய்தான். தவத்தின் பயன் பிரம்மாவின் தரிசனம். தரிசனப்பயன், அரசு, செல்வம், புஷ்பக விமானம் பெற்றது.

படைப்புக்கடவுள் தந்த செல்வம் அல்லவா? அதனால் வற்றாத பெருஞ்செல்வம். அரசு பெற்றான். ஆனால், ஆள்வதற்கு ஒரு தேசம் வேண்டுமே!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


அந்தத் தேசம்தான் இலங்கை. இதனை உரிமை யாக்கிக் கொள்ளுமாறு தந்தை விச்ரவஸ் அனுமதி யளித்தார். புஷ்பகவிமானம் எங்கு வேண்டு மானாலும் செல்லக்கூடிய வான்வழி வாகனம். இலங்கை அரசு. அழியாச் செல்வம். இப்படி வைச்ரவணன் குபேரன் ஆனான்.

இலங்கையில் முன்பு இருந்தவர்யார்? இலங்கை வரலாறு யாது?

ஹேதி, ப்ரஹேதி அரக்கர்கள். ஹேதியின் மகன் சுகேசன். இவனுடைய மக்கள் மூவர். மாலி, சுமாலி, மாலியவான். இவர்கள் மூவரும் தவம் செய்து ஆற்றல் பெற்றனர். தாங்கள் வசிப்பதற்குச் சுகமான ஒரு இடம் வேண்டும் என விரும்பினார்கள் இம் மூவரும், தமது விருப்பத்தை 'விசுவகர்மா' என்ற சிற்பியிடம் தெரிவித்தார்கள் இவர்கள்.

'தெற்கே நீர் நிலைக்கரையிலே திரிகூட மலை உச்சியிலே ஒரு நகரம் அமைத்திருக்கின்றேன்: எதிரே சுவேல மலை, எங்கும் நீர்: நடுவே இலங்கை: நாற்புறமும் ஓங்கி நிற்கும் பாறைகள்: உள்ளடங்கிய நகரம். அங்கு போய் வாழுங்கள்' என்றான் விசுவகர்மா.

பாதுகாப்பான, சுகமான நகரத்தை அடைந்தனர் அரக்கர் மூவரும். தமது சுகபோக வாழ்க்கைக்காக, மற்றவர்களைத் தொல்லைக்குள்ளாக்கினர் இவர்கள். தொல்லை தாங்காத நல்லோர்கள் காத்தல் கடவுளைப் பிரார்த்தனை செய்து கொண்டார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


காத்தல் கடமைக்குரிய கடவுள். நல்லோர்களது பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டார். உடனே, தமது கருட வாகனத்தில் வந்தார்: அரக்கர்கள் அஞ்சினர். அந்த மூவருள் ஒருவன் மாலி அழிந்தான்: மற்றைய, சுமாலி மாலியவான் இருவரும் குகைக்குள் சென்று ஒளிந்து கொண்டுவிட்டார். இந்த நிகழ்ச்சியைத் திருவாய் மொழிப்பாசுரம் ஒன்று தெளிவாக்குகின்றது.

'ஆளியைக் காண்பரி யாய், அரி காண்நரி யாய், அரக்கர்
ஊளையிட்டு அன்று இலங்கை கடந்து பிலம்புக்கு ஒளிப்ப,
மீளியம் புள்ளைக்கடாய் விறல் மாலியைக் கொன்று, பின்னும்
ஆளுயர் குன்றங்கள் செய்து அடர்த் தானையும் காண்டும் கொலோ' (7.6.8)

நம்மாழ்வார் சொல்லும் அரக்கர் குலத்தைத் தடிந்த நிகழ்ச்சி, இராமாவதாரத்துக்கு முந்தியது என்று உணரவேண்டும். இலங்கையில் இவ்வாறு அரக்கர் குலம் அழிக்கப்பட்டபிறகு, அமைதியான தேசம் என்று குபேரன் அங்கு வந்தான். மீண்டும் அங்கு அரக்கர் ஆட்சிவந்தது எப்படி?

பிலம்புக்கு (குகை) ஒளித்த சுமாலிக்கு. கைகஸீ என்ற மகள் இருந்தாள். இவனைக் கொண்டு இழந்ததை மீட்கத்திட்டமிட்டான் மாலியவான். திட்டம் கைகூடியது. என்ன திட்டம்? கைகஸியை விச்ரவசு என்ற அந்தணரிடம் அனுப்பினான் மாலியவான். அந்தணர் முன் சென்று நின்றாள் கைகஸி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'நீ யார்? என்ன வேண்டும்' அந்தணர் கேள்வி. 'என் பெயர் கைகஸி: மற்றவை உமக்கே தெரியும்' என்று கூறினாள். 'நீ வந்த நேரம் தவறானது: இருப்பினும் உன் எண்ணத்தை நிறைவு செய்வேன். என்றார் விச்ரவஸ். அந்த நிறைவுப்பயன்தான், கைகஸிக்கு, இராவணன், கும்பகருணன், சூர்ப்பணகை விடணன் என்ற நால்வர் மக்கள்.

தாய் கைகஸி விருப்பத்தின்படி தவம் செய்து ஆற்றல் பெற்று, இழந்த இலங்கையை, குபேரனை விரட்டி விட்டுவிட்டுப் பெற்றுக்கொண்டான் இராவணன். இது, திருவாளர் கே. எஸ். ஸ்ரீனிவாஸன் அவர்கள் எழுதிய காவ்ய ராமாயணம் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது. (பக்கம் 359, 360, 361)

இலங்கைச் சகோதரர்களுக்குத் தந்தை வழி வந்தது புலத்தியன் மரபு, உயர்ந்தது; தாய் வழி வந்தது அரக்கர் குலம் தாழ்ந்தது. இவர்களது குலம் அரக்கர்: மரபு புலத்தியர், தம்பி விடணனைப் பார்த்ததும் கும்பகருணனுக்கு, தமது, குலம் பற்றியும் மரபு பற்றியும் சிந்தனை ஓடுகிறது. அந்தச் சிந்தனையை வெளிப்படுத்துவது அடுத்த கவிதை.

'குலத்து இயல்பு அழிந்ததேனும். குமர' மற்ற
உன்னைக் கொண்டே
புலத்தியன் மரபுமாயாப் புண்ணியம்
பொருந்திற்று, என்னா,
வலத்துஇயல் தோளை நோக்கி மகிழ்கின்றேன்;
மன்ன! வாயை
உலத்தினை : திரிய வந்தாய் : உளைகின்றது
உள்ளம் அந்தோ'. (7403)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'தம்பி! உன் வெற்றி பொருந்திய தோளைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கின்றேன். ஏன் மகிழ்ச்சி? அரக்கர்குலத்து இயல்பு அழியும். யாரால்? எங்களால்; பிறன் மனைகவர்ந்து வந்த வஞ்சகச் செயலால் அரக்கர் குலம் அழியும். ஆனால், புலத்தியன் (தந்தை வழி) மரபு அழியாத நன்மையைப் பெற்றுவிட்டது. கவிஞரின் அறிவுமிக்க நீ அறவழி நின்று நற்காரியங்களைச் செய்து கொண்டிருப்பதால் புலத்தியன் மரபு பெருமை குன்றாமல் இருக்கும். அதனால் மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சிக்கு இடையூறாக அமைந்து விட்டதே உன் வருகை?

'உனது வருகை, எனது வாயை உலர(பற்ற) வைத்துவிட்டது. என் மனம் வருந்துகின்றது. சென்ற நீ வந்தது எதற்கு.' என்று மனம் புலம்பிக் கூறினான் கும்பகருணன்.

தாய்(கைகஸி)வழிவந்த அரக்கர்குலம் அழிவதற்குத் தாங்கள் காரணம்; தந்தை (விச்ரவஸ்) வழிவந்த புலத்தியன்மரபு மேலும் உயர்வதற்குக் காரணம் வீடணன் பின்பற்றிய அறஉணர்வு மிகுந்த நீதிநெறி. இதைக் கும்பகருணன் நன்கு உணர்ந்துள்ளான். இக்கவிதை இதனை நன்கு தெளிவாக்குகின்றது.

**சாதியின் புன்மையும் நீதியின் மேன்மையும் :**

தாய்வழி வந்தது சாதி: அரக்கர் சாதி. தந்தைவழி வந்தது நீதி: அந்தணர் நீதி. எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர் நீதி நெறியினர். அந்த மேன்மை நெறியில் நடை போட்டுக் கொண்டிருப்பவன் வீடணச் செல்வன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இரக்கம் என்று ஒரு பொருள் இல்லாத நெஞ்சினர் சாதி நெறியினர். அந்தப்புல்லிய நெறியே, தங்களுக்கு நல்லதைச் செய்யும் என்று நம்பிக் கொண்டிருப்பவன் கும்பகருணன். இதனை மனத்தில் இருத்திக்கொண்டு, 'தீமை இம்மையே தீர்ந்தசெல்வ! பிறன் மனை நோக்கு வேமை உறவு எனப் பெறுதி போலாம்.' என்று வீடணன் வருகையைக் கணித்தான் அண்ணன் மேலும்.

'நீதியும் தருமம்நின்ற நிலைமையும், புலமை
தானும்,
ஆதிஅம் கடவுளாலே அருந்தவம் ஆற்றிப்
பெற்றாய்;
வேதியர் தேவன் சொல்லால், விளிவுஇலா
ஆயுப் பெற்றாய்:
சாதியின் புன்மை இன்னும் தவிர்ந்திலை போலும்
தக்கோய்!' (7406)

'தம்பி நீதான் தகுதியுடையவன். (தக்கோய்) எதற்கு? நீதிநெறி நிற்பதற்கும்: அறவழி நடப்பதற்கும். இது எதனால் கிடைத்தது? நீதவம் செய்து. பிரம்ம தேவன் மூலம் இந்த நற்குணத்தைப் பெற்றாய்.'

'மேலும் அந்த நான்முகன் அருளால், அழிவு இல்லாத ஆயுளையும் (சிரஞ்சீவி) பெற்றுக் கொண்டிருக்கின்றாய். இப்படியிருந்து சாதியின் கீழ்மையை இன்னும் நீ விடவில்லையா?' (இங்கு திரும்பவந்தது. சாதியின் புன்மையை அல்லவா காட்டுகிறது என்பது குறிப்பு) என்று அழுது புலம்பினான் அரக்க அண்ணான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


**ஏற்றமும் கூற்றமும் :**

சாதியின் புன்மையையே நன்மையாகப் பற்றிக் கொண்டிருக்கும் அரக்கர்களுக்கும், நீதியின் மேன்மையை உணர்ந்து அதனைக் கடைப்பிடிக்கும் நல்லோர்களுக்கும் எவ்வெவ்வகையில் பலன் கிட்டும் என்பதைத் தெரிந்தவனாய் மேலும் பேசுகின்றான் கும்பகருணன்.

'ஏற்றிய வில்லோன் யார்க்கும்
இறையவன் இராமன் நின்றான்;
மாற்றரும் தம்பி நின்றான்:
மற்றையோர் முற்றும் நின்றார்:
கூற்றமும் நின்றது எம்மைக்
கொல்லிய; விதியும் கின்ற;
தோற்றஎம் பக்கல் ஐய!
வெவ்வலி தொலைய வந்தாய்.' (7407)

'தம்பி! நீ அறவழியினன்: அதனால் உனக்கு ஏற்றம்: (உயர்வு) நாங்கள் மற (பாவம்) நெறியினர்: அதனால் எங்கள் பக்கம் கூற்றம். (எமன்) எம்மைக் கொல்வதற்கு விதியும் துணை நிற்கின்றது. எமனும் விதியும் எங்கள் பக்கம்: இராமனும் இளையோனும் உன்பக்கம்? 'அரக்கர்களாகிய எங்களிடமிருந்து உன்னைக் காப்பதற்காக இறையவனாகிய இராமன் ஏற்றிய வில்லோனாக எப்போதும் தோற்ற மளிக்கின்றான்.'

'நீ எப்போதும் உன் மனத்தில் அன்பை ஏற்றி வைத்திருக்கிறாய்: உன்னைக் காப்பதற்காக இராமபிரான் தனது வில்லில் எப்போதும் அம்பை ஏற்றி வைத்திருக்கின்றான், (ஏற்றிய வில்லோன்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


காக்கப்படுவது அன்பு: காப்பது அம்பு. 'போரில் தோற்றுப் போகும் நிலையில் உள்ள எம் பக்கல் ஏன் வந்தாய்' என்று கேட்டான் கும்பகருணன்.

**கடன் கழித்தல்.**

ஒவ்வொருவருக்கும் அவரவரது பிறப்பின் காரணத்தால் ஒவ்வொரு கடமை உண்டு. அப்படி வீடணனுக்கும் ஒரு கடமை இருக்கும் அல்லவா! அதனை நினைவு படுத்துகின்றான் அண்ணன். அந்தக் கடமையை வீடணன் அன்றிவேறு யாரும் செய்ய முடியாது. அது, அரக்கர் குலத்தினர் அனைவர்க்கும் செய்யும் நீர்க் கடன்.

**'ஐய! நீ அயோத்தி வேந்தற்கு அடைக்கலம்**
**ஆகி. ஆங்கே**
**உய்கிலை என்னின், மற்றுஇவ் அரக்கராய்**
**உள்ளோர் எல்லோம்**
**எய்கணை மாரியாலே இறந்து பாழ் முழுதும்**
**பட்டால்,**
**கையினால் என்நீர் நல்கி, கடன்கழிப் பாரைக்**
**காட்டாய்.'** (7408)

'தம்பி! நீ இராமனிடம் இருப்பது உனக்கு மட்டும் நன்மை அல்ல! எமக்கும் அதுதான் நன்மை. உறுதியாக. நாங்கள் எல்லாரும், இராமபிரான் விடுகின்ற அம்பு மழையில் மூழ்கி இறந்து விடுவோம். அப்படி இறந்து விட்டபிறகு, எள்ளும் தண்ணீரும் விட்டு நீர்க்கடன் கழிப்பவர்கள் யார் இருக்கின்றார்கள்? நீ இராமன் பக்கம் சேர்ந்து பிழைத்துக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


கொள்வதால் அந்த நீர்க்கடன் செய்யலாம். எங்களுக்காக, நீர்க்கடன் செய்ய நீ ஒருத்தனே! அதனால் இராமபிரானோடு நீ சேர்ந்தது எங்களுக்கும் நன்மையே' என்று கூறினான் அண்ணன் கும்பகருணன்.

**இறுதியாக :**

'தம்பி நீ இலங்கை வருவாய்: இப்போது அல்ல! எப்போது? நாங்கள் எல்லாம் விண்ணுலகம் எய்திய பிறகு. அப்போது, திரு உறைமார்பனோடு இலங்கையுள் புகுக! பெரிய அரச செல்வம் துய்க்க! இப்போது அங்குசெல்' என்று நிறைவாகக் கூறுகின்றான் கும்பகருணன்.

**வீடணன் விண்ணப்பம் :**

எது விண்ணப்பம்? தன்னைவிட மேலானவரிடத்தில், அவரது திருவடியைத் தொட்டு வணங்கி மண்ணுறப்பணிந்து வேண்டிக் கொள்வதே விண்ணப்பமாகும். அந்த விண்ணப்பத்தின் பயன் யாருக்கு? கொடுப்பவனுக்கும் கிட்ட வேண்டும்: ஏற்பவனுக்கும் கிட்ட வேண்டும். விண்ணப்பம் கொடுப்பவன் எவ்வளவு உயர்ந்தவனாகயிருந்தாலும், தன்னைத்தாழ்த்திக் கொண்டு அடக்கமாக நின்று கொடுக்கவேண்டும். விண்ணப்பத்தைப் பெறுபவன் எவ்வளவு தாழ்ந்தவனாகயிருந்தாலும். அவனைத் தன்னிலும் உயர்ந்தவனாக மதித்து விண்ணப்பத்தை அவனிடம் சேர்ப்பிக்கவேண்டும் கொடுப்பவன். அந்த முறையில், போர்க்களத்தில் வீடணன் நடந்து கொள்கின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


வீடணன், தனது அண்ணனைக் காண்பதற்குப் புறப்படும் முன்பு, இராமபிரானிடம் என்ன சொன்னான்? அதை நினைத்துக் கொள்கின்றான் அண்ணனுக்கு முன் தான் நிற்கும் போது வீடணன். 'அவனை உள்ளம் சேகு அறத்தெருட்டி, ஈண்டுச், சேருமேல் சேர்ப்பன்' என்று சொல்லி வந்தான். (சேகு-குற்றம்) அதை மனத்தில் இருத்திக்கொண்டு பண்பாட்டின் உருவமாய் நின்று பேசுகின்றான் வீடணச்சீரியோன்.

## இம்மையும் மறுமையும் :

இம்மையில் (இப்பிறப்பில்) இன்பம் துய்த்தவன் மறுமையில் (மறுபிறப்பில்) துன்பம் அனுபவிப்பான். இது சாதாரண உலக இயல்பு. சிலருக்கு இது விதி விலக்காகவும் ஆகலாம். அத்தகையவருள் ஒருவனாகத் தன் அண்ணனை நிற்கச் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தோடு விண்ணப்பத்தைத் தொடங்குகின்றான் வீடணன்.

**'இருள்உறு சிந்தையேற்கும் இன்அருள்**
**சுரந்த வீரன்**
**அருளும், நீசேரின்; ஒன்றோ, அவயமும்**
**அளிக்கும்; அன்றி,**
**மருள்உறு பிறவி நோய்க்கும் மருந்தும் ஆம் :**
**மாறிச்செல்லும்,**
**உருள்உறு சகட வாழ்க்கை ஒழித்து வீடு**
**அளிக்கும் அன்றே.'** (7410)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வீடணன் இராமபிரானைச் சேர்ந்ததால் எத்தகைய உயர்வு பெற்றதாகக் கும்பகருணன், கருதினானோ அத்தகைய உயர்வு (உவயலோகத்துச் சிறப்பு) தன் அண்ணனுக்கும் கிட்டவேண்டும் என்ற விருப்பத்தை வெளியிடுவதாக அமைந்தது இந்த முதல் கவிதை. இதனைத் தொடர்ந்து வீடணன் கூற்றாகப் பதினான்கு கவிதைகள் வருகின்றன. இந்தப் பதினைந்து கவிதைகளும், வீடண அறிஞன், தனது அண்ணன் நல்வாழ்வில்-பெருவாழ்வில் வாழவேண்டும்: அதனைக்கண்டு தான் மகிழவேண்டும், என்பதில் எவ்வளவு ஆர்வம் கொண்டவனாய் இருந்திருக்கின்றான் என்பதைத் தெளிவாக்குகின்றன.

இந்தப்பதினைந்து கவிதைகளில் வெளியிடும் வீடணனது கருத்தைநான்கு வகையாகக் காணலாம். 1. கும்பகருணன், நல்வாழ்வு பெறுவதற்கு என்ன செய்யவேண்டும்? 2. அப்படிச்செய்ய முடியாதிருப்பதற்குத் தடையாக இருப்பது எது? 3. அந்தத்தடையை எப்படிப் போக்கிக்கொள்வது? 4. தடை நீக்கத்துக்குப்பிறகு பெறும்பயன் எது? இவைகள் விளக்கம் பெறுகின்றன இதனுள்.

'அண்ணா! நீ, நான் எங்கு சென்று சேர்ந்தேனோ, அந்த இடத்தை வந்து அடைய வேண்டும். அங்குவந்தால், அந்த இடத்தில் வீற்றிருக்கும் இராமபிரான் ஏற்றுக் கொள்வானா? என்ற சந்தேகம் உனக்கு இலக்கலாம், அந்தச் சந்தேகமே வேண்டாம். அறியாமை (அஞ்ஞானம்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


நிறைந்த எனக்கே, தனது இனிய அருளை வழங்கிய வீரன், உனக்கு அருள் செய்யாதிருப்பானா? உறுதியாக உனக்கும் அருள் செய்வான். நீ வந்தால் கொடுப்பது அருள் மட்டும் அல்ல.' அடைக்கலமும் கொடுப்பான். அந்த அடைக்கலமே, மயக்கப் பிறவியாகிய இந்த நோய்க்கு மருந்தாகும். அதனால், உருண்டோடிக் கொண்டிருக்கும் இந்த மண்ணுலக வாழ்வு ஒழியும். பிறகு நலம் அந்தம் இல்லதோர் வீடாகிய பரமபதத்தையும் பெறலாம். மனிதப் பிறவியின் நோக்கமாகிய வீட்டின்பம் பெறுவதற்கு, நீ செய்யவேண்டியது இராமபிரானிடம் வருவது தான்.

**உத்தமன்:**

'அண்ணா! அங்கு நீ வந்தால், இராமபிரான் உனக்குக் கொடுப்பது என்பது மட்டுமல்ல! நானும் கொடுப்பேன்' என்று சொல்லத் தொடங்குகின்றான் வீடணன். இவன் கொடுப்பது என்ன?

**'எனக்கு அவன் தந்த செல்வத்து இலங்கையும் அரசும் எல்லாம்**
**நினக்கு நான் தருவென்: தந்துஉன் ஏவலின் நெடிது நிற்பென்;**
**உனக்கு இதின்உறுதி இல்லை: உத்தம! உன்பின் வந்தேன்**
**மனக்குநோய் துடைத்து, வந்தமரபையும் விளக்கு வாழி.'** (7411)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தனது அண்ணனை 'உத்தம' என்ற உயர்வுச் சொல் இட்டு அழைக்கின்றான் தம்பி. முன்பு கும்ப கருணன், வீடணனைப் பார்த்துப் பேசிய பேச்சு, அவனது மனத்தூய்மையைக் காட்டியது. அதனால், 'உத்தம' என்றான். தான் பிறந்த மரபின் பெருமையை உயர்த்தும் வண்ணம் நடந்து கொள்பவன் உத்தமன்தானே! வீடணன் சொல்லும் முறையில் நடந்து கொண்டால், கும்பகருணனே புலத்தியர் மரபு - குடிப்பெருமையை உயர்த்தலாம் என்ற கருத்தைக் குறிப்பிக்கும் முறையில் 'வந்த மரபையும் விளக்கு' என்றான்.

புலத்தியர் புண்ணிய மரபு எதனால் விளக்கம் பெறும்? இராமபிரான் தனது ஆசீர்வாதத்தோடு அருள் நலம்கனிய, வீடணனுக்கு, செல்வத்தையும் இலங்கையை ஆளும் உரிமையையும் கொடுத்தான். அந்த ஆசீர்வாதச் செல்வத்தையும் இலங்கை அரசையும் வீடணன் கும்பகருணனுக்குத் தந்து விடுவான். அரசைக் கொடுத்தது மட்டுமல்ல! இறையருள் பெற்ற வீடணன், கும்பகருணனுக்குப் பணிவிடை செய்யும் ஏவலாளனாகவும் இருப்பான்.'

இதனால் கும்பகருணன் மனத்தில் உள்ள எல்லா விதமான துன்பமும் நீங்கும். இதனை எல்லாம் உள்ளடக்கிக்கொண்ட வீடணன், 'உனக்கு இதின் உறுதி இல்லை' என்று உறுதியாகக் கூறினான். கும்பகருணனுக்கு நன்மை அளிப்பது இதைவிட வேறு ஒன்று இருக்கமுடியாது. 'புலத்தியன் மரபு உன்னால்தான் காப்பாற்றப் பட வேண்டும்' என்று கும்பகருணன் கூறியதால் அதனை நினைவுபடுத்துகின்றான் அன்புத்தம்பி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'தாழ்கடல் இலங்கைச் செல்வம்' இறைவன் திருவருளோடு கிடைத்த அவ்வளவு உயர்வுக்குரியதாகயிருந்தும், 'நினக்கு நான் தருவேன்' என்று மனம் உவந்து சொல்கின்றான் என்றால், அது வீடணனது எவ்வளவு உயர்ந்த மனப்பான்மையைக் காட்டுகின்றது! அத்தோடுமட்டும் அல்ல! இலங்கைப் பேரரசுக்கு உரிமையாகக்கூடிய ஒருவன் 'உன் ஏவலின் நெடிது நிற்பேன்' என்று சொல்கின்றான். இது எல்லாம், வீடணன், 'குணங்களால் உயர்ந்தான்' என்ற பராட்டுக்குரியவன் தான் என்பதைக்காட்டுகின்றது.

கும்பகருணன், இராமபிரானிடம் தான் வந்து சேரவேண்டியவன் என்பதை மேலும் காரணம் காட்டிக் கூறுகின்றான் வீடணன். 'அண்ணா! நீ நீதி அறத்தொடும் தழுவி நின்றாய்! அதனால் வேதநூல் மரபுக்கு ஏற்ற ஒழுக்கமே பிடிக்க வேண்டும்.' சாதியை வென்றவன் நீ. நீதியையே நோக்குபவன் நீ: அறவாழ்வே உன் உள்ளத்துக்கு இசைந்தது. ஆகவே வேதநூலுள் என்ன சொல்லப் பட்டுள்ளதோ அந்த முறைமைக்குத்தக்க ஒழுக்கத்தைத்தானே பின்பற்ற வேண்டும்! அந்த ஒழுக்க நெறியை நீ இப்போது இருக்கும் இடத்தில் பின்பற்ற முடியாதே!' என்று விளக்கினான்.

நல்வாழ்வு பெறுவதற்குரிய வழியைப் பின்பற்ற முடியாதபடி தடுப்பது எது? அண்ணன் இராவணன் மேல் கொண்ட பாசம். கும்பகருணன் மனம், நீதி நெறியின் பெருமையை உணர்ந்திருந்தாலும், அதைப் பின்பற்றி நடப்பதற்கு இராமன் பக்கல் சேர

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


முடியாதபடி தடுத்துக் கொண்டிருப்பது, அண்ணனது ஆணையை ஏற்றுக் கொண்டு அவன் நன்மைக்காக, இராமபிரானை எதிர்க்க வந்திருப்பது தான். நல்லது செய்வதற்கு - தீவினையை வெல்வதற்குப் பாசம் தடையாக இருப்பதில்லை. இது, இதிகாச, புராண நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டி விளக்கப்படுகின்றது. பரசுராமன் தாய் ரேணுகாதேவி. அவள் தண்ணீர் கொண்டுவர நீர்த்துறைக்குச் சென்றபோது, அங்கு, புனல் விளையாட்டு அயர்ந்த சித்திரதன் என்னும் கந்தருவனைக் கண்டு மனம் நெகிழ்ந்தாள். அதனை ஞானக்கண்ணால் அறிந்த அவள் கணவன் சமதக்கினி அவளைக் கொல்ல, பரசுராமனை ஏவினான். அவன், தனது தாய் என்றும் பாராமல் அவளைக் கொன்றான்: பாசத்தை வென்றான். இது இதிகாசக்கதை. இதை ஏன் செய்தான்? 'அறத்தினை நோக்கி, ஈன்றதாய் வினை செய்ய அன்றோ கொன்றனன். யார்? தவத்தின் மிக்கான் பரசுராமன்?

'கண்ணுதல், தீமை செய்ய
கமலத்து முளைத்த தாதை
அண்ணல்தன் தலையின் ஒன்றை
அறுத்து அன்று அமைந்தான்அன்றே.'

பிரமன், தனக்கு உரிய நான்கு தலைகளோடு ஐந்தாவதாக ஒரு தலையினைப் படைத்துக் கொண்டு. சிவனொடு ஒப்பத் தன்னையும் எண்ணிச் செருக்குற்றான். சிவன், அவன் தலைகளுள் ஒன்றைக்கிள்ளி ஆணவத்தை அடக்கினான். இது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


புராணச் செய்தி. (கண்+நுதல்=நெற்றிக்கண் - சிவபிரான்: கமலம்-தாமரை: தாதை-தந்தை சிவனுக்குத் தந்தை பிரமன்) தாயைக் கொன்ற செய்தி இதிகாசம்' தந்தையைத் தண்டித்த செய்தி புராணம்.

தீவினை செய்பவர் யாராகயிருந்தாலும் தண்டிக்கப்படுவர். தண்டித்தவர் மைந்தன் என்ற பாசத்தினர். தண்டித்த பரசுராமனும் சிவனும் பிறரால் வணங்கப்படுதற்குரிய தெய்வ நிலையிலேயே உள்ளனர். அதனால், நல்வினையைக் கடைப் பிடிப்பதற்கு தீவினையை அகற்றுவதற்கு உடல் உறவுப்பாசம் தடையாக இருக்கவேண்டியதில்லை. இதிகாச, புராணச் செய்திகளுக்கு மேல், மருத்துவ முறை ஒன்றை எடுத்து விளக்குகின்றான் வீடண அறிஞன்.

சமுதாயம் ஒரு உடல் போன்றது. தீமை செய்பவன் உடலில் தோன்றிய கட்டி (புண்) போன்றவன். உடலைக் காப்பாற்ற வேண்டுமானால், கத்தியினால் அந்தக் கட்டியை அறுத்து எடுக்க வேண்டும். பிறகு புண்ணை ஆற்றிக் கொள்ளலாம். நமது உடல் பகுதிதானே இந்தக்கட்டி என்று நினைத்து ஒன்றும் கவனிக்காமல் விட்டுவிட்டால். அந்தக் கட்டியினாலேயே உடல் நோயுற்று அழுகிப்போய் அழிந்து விடும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


தீமைசெய்பவனை, ஒழிக்கவில்லை என்றால் சமுதாயம் அழிந்து விடும். அதனால்' சமுதாய நலன் கருதி உலகை உய்வு வேண்டி, அறிவுடையார், தீமையே வடிவாய அரக்கர் பக்கம் சாரார்.

'உடலிடைத் தோன்றிற்று ஒன்றை
அறுத்து அதன் உதிரம் ஊற்றி,
சுடல் உறச் சுட்டு, வேறுஓர்
மருந்தினால் துயரம் தீர்வர்'

என்பது வீடண நீதியான் எடுத்துக் காட்டிய உவமை விளக்கம்

'தூயவை துணிந்த போது பழிவந்து தொடர்வது உண்டோ' - அண்ணா, 'அதனால் உடல் உறவுப் பாசத்தை, நல்வினைக்குச் செல்லும் அறநெறியின் தடையாகக்கருதாதே, என்று விளக்கமாக எடுத்துரைத்தான் வீடண நீதியான்.

பாசத்தடையைப் போக்கி இராமபிரான்பால் நேசம் கொண்டால் எத்தகைய உயர்வு கிட்டும்: வாழ்வு எப்படி மலரும் என்பதை அடுத்து விளக்க முற்படுகின்றான் வீடணச்செம்மல்.

'திருமறு மார்ப நல்க,
அனந்தரும் தீர்ந்து, செல்வப்
பெருமையையும் எய்தி வாழ்தி;
ஈறுஇலா நாளும் பெற்றாய்;
ஒருமையே அரசு செய்வாய்:
உரிமையும் உனதே; ஒன்றும்
அருமையும் இவற்றின் இல்லை:
காலமும் அடுத்தது ஐயா!' (7420)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'தேவர்க்கும் தேவன் நல்க,
இலங்கையில் செல்வம் பெற்றால்,
ஏவர்க்கும் சிறியை அல்லை;
யார்உனை நலியும் ஈட்டார்?
மூவர்க்கும் தலைவர் ஆன
மூர்த்தியார் அறத்தை முற்றும்
காவற்குப் புகுந்து நின்றார்;
காகுத்த வேடம் காட்டி.' (7421)

'முனிவரும் கருணை வைப்பர்;
மூன்று உலகத்தும் தோன்றி
இனிவரும் பகையும் இல்லை;
ஈறுஉண்டு என்றுஇரங்க வேண்டா:
துனிவரும் செருநர் ஆன
தேவரே துணைவர் ஆவர்:
கனிவரும் காலத்து, ஐய!
பூக்கொய்யக் கருத லாமோ? (7422)

(திருமறு மார்பன்-திருமகள் தங்கிய மார்பினனான திருமால்-இராமன்: நல்க-கொடுக்க: அனந்தர்-தூக்கம்: ஈறு-முடிவு: நலிதல்-வருத்துதல்: செருநர்-பகைவர்: கனி-பழம்)

'உறக்கம் நீங்கும்: கிடைக்கும் அரசச் செல்வம் இராமபிரானால் கொடுக்கப்படுவது; அதனைத் தனி ஒருவனாக நின்று ஆளலாம்: இதனால் யாவர்க்கும் மேலோனாகலாம்: யாரும் துன்புறுத்த மாட்டார்கள்: முற்றும் துறந்த முனிவர்களும் கருணை காட்டுவார்கள்: மூன்று உலகத்தும் பகையில்லை:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இப்போது பகைமை உள்ளத்தோடு இருக்கின்ற தேவரும் துணைவராக இருப்பார்கள்? இது, கும்ப கருணன் அடைவதற்குரிய நன்மை நிறைந்த பெருவாழ்வு. இத்தகைய பெருவாழ்வு கனியயிருக்கும் காலத்தில் சிறிய வாழ்வுக்கு ஆசைப்படலாமா? என்று கேள்விகேட்டு சிந்திக்க வைக்கின்றான் அண்ணனை.

**கனியும் பூவும் :**

கனி, கண்ணுக்கு இனிய காட்சி நல்குவது: மூக்குக்கு இனிய நறுமணம் தருவது: நாக்குக்கு இனியசுவை கொடுப்பது: வயிற்றுக்கு நல்ல உணவாக அமைவது. பூ, கண்ணுக்கும் மூக்குக்கு மட்டுமே நலம் பயப்பது. ஒரு மரத்தில் கனியும் பூவும் இருக்கிறது. இதனைக் காண்பவன் எதனைப் பறிப்பான்?

அறிவுடையவன் கனியின் மேலேதானே கையை வைப்பான்? ஏன்? முதலில், கண், மூக்கு, நாக்கு இவற்றுக்கு இனிமை நல்கி, இறுதியில் வாய்வழியாக வயிற்றுள் புகுந்து, பசியைப் போக்கும் உணவாக மாறி, செரிக்கப் பெற்று, இரத்தத்தோடு கலந்து, தன் உருவைக் கரைத்துக் கொள்கின்றது கனி, தன்னை எவன் ஒருவன் உணவாக உண்டானோ, அவன். உடலுக்கு ஆரோக்கியத்தை நல்கி, அவன் வளம் பெற வாழவைக்கின்றது கனி. (பழம்) இத்தகைய நலம் பயக்கும் கனியே கையில் தானே வரஇருப்பதை, வேண்டாம் என ஒதுக்கிவிட்டு. பூவைப்பறித்து மகிழ்வது அறிவுடைய செயலாகுமா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


நீதிநெறி, அறஉணர்வு கனிபோன்றது. இதனைப் பின்பற்றினால், வாழ்க்கை ஆரோக்கியமாகவும் வளம் நிறைந்ததாகவும் அமையும். இதனைப் பின்பற்றியவர்களை, 'நீதியான்' என்றும் 'தருமத்தான்' என்றும் உலகம் என்றும் போற்றிக் கொண்டிருக்கும். இதுவே நிலையான புகழ்.

'தோன்றின் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவம் இவனது வாழ்க்கையில் மலர்ந்து நிற்கும். இவ்வளவு நன்மை தரக்கூடிய நீதி நெறியை விட்டு விட்டு சாதி நெறியாகிய மலரைப்பறித்து வைத்துக் கொண்டு மனம் மகிழ்வது அறிவின் செயலாகுமா? 'நீ மதி உடையவன்' சிந்தித்துப்பார்; நீதி நெறியாகிய கனிவேண்டுமா? சாதி நெறியாகிய மலர்வேண்டுமா? என்று அண்ணனின் சிந்தனையைத் தூண்டினான் அறிவுடைத்தம்பி வீடணன்.

முதலில் பூ; அது பிஞ்சாகமாறி, பிறகு காயாக உருப்பெற்று, பின்பு கனியாக முழுமை அடையும். மலரின் முடிவு பழமாக அமைவதுதான். கனியின் ஆரம்ப நிலை பூ, பூவின் முடிந்த நிலை பழம். சாதிநெறி, நன்னெறிவாழ்வின் ஆரம்பநிலை. இதனுடைய வளர்ச்சிக்கு, 'செய்ந்நன்றி உணர்வு' உதவுவதாக அமையலாம். ஆனால் நிறைவான நிலை நீதி நெறியில் நிற்பது.

அண்ணன் பின்பற்றி நிற்கும் சாதிநெறியைக் குறைத்துப் பேசவில்லை அன்புடைத்தம்பி. கும்பகருணனது செய்ந்நன்றி உணர்வுச்செயலைக் குற்றமாக்கிக் காட்டவில்லை வீடண அறிஞன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


அவைகள் எல்லாம் தனிமனித வாழ்க்கையின் வளர்ச்சிக்கு உதவும் தொடக்கநிலை. மனிதன், சமுதாயம் வளம்பெற நலம்பெற வாழும் வாழ்வுதான் உயர்ந்த வாழ்க்கை. அத்தகைய வாழ்க்கைக்கு சாதிநெறியை உதறித்தான் ஆகவேண்டும்: நீதிநெறியை நிலையாகக் கடைப்பிடித்துத்தான் ஆகவேண்டும்.

பூ, தனித்து நின்று அழிந்துவிடுவது, அதனால் யாருக்கும் பயன் இல்லை. கனி,, தன்னை உண்பவனோடு ஒன்றாகக்கலந்து, தன் உருவத்தைக் கரைத்துக் சொள்கின்றது, இதனால் மனிதன் வளமான வாழ்வினனாகின்றான். சாதிநெறி அழியும் உடல் உறவை ஒட்டியது. உடலும்: அழியும் உறவும் ஒழியும். இதற்காகப் பின்பற்றிய நெறியாகிய சாதியும் நில்லாது நீங்கும்.

நீதி, உயிரோடு ஒட்டியது. மன்னுயிர் எனப்படுவது. நிலைபெற்றது எனப்படுவது. அதனால் நீதிநெறியும் நிலையானது. இது, வாழ்க்கையின் கனியாகும். இவ்வளவு சிந்தனைக் கருத்தையும் அடக்கிவைத்துதான், 'கனிவரும் காலத்து 'ஐய' பூக்கொய்யக் கருதலாமோ' என்று கேட்டான் வீடண நீதியான்.

**கனியைத் தருபவர்:**

'வேத நாயகனே உன்னைக் கருணையால் வேண்டி விட்டான். காதலால், என்மேல் வைத்த கருணையால், கருமம் ஈதே; ஆதலால், அவனைக் காண, அறத்தொடும் திறம்பாது, ஐய! போதுவாய் நீயே' என்னப் பொன்னடி இரண்டும் பூண்டான். (7423)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'கனிதந்தால் கன்! உண்ணவும் வல்லீரே' என்று ஏங்குவது பெரியோர்கள் இயல்பு. அறவாழ்வாகிய கனியைத் தரயிருப்பவன் இராமபிரான். அவன் வேதங்களுக்கெல்லாம் தலைவன் (நாயகன்) வேதம் நிலையான அறத்தைத் தெரிவிக்கும் பழம்பெரும் நூல். அதற்குத் தலைவன், அழைப்பு விடுத்திருக்கும் இராமபிரான்.

'அண்ணா! அத்தகைய தலைவன், தனது அருட் கருணையால், உன்னை அழைத்து வருமாறு என்னை அனுப்பினான். நீ, என்மேல் கொண்ட அன்பினாலும், என்னிடம் வைத்த அருள் ஆற்றலாலும், அவனது அழைப்பைத் தெரிவிக்கவந்த எனது விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்வதுதான் இப்போது நீ செய்யவேண்டிய காரியம். கருமம் ஈதே! வேறொன்றும் இல்லை.'

'ஆதலால், அந்த அறத்தின் மூர்த்தியைக் காண்பதற்கு இப்போதே புறப்படுவாய், ஈதே இன்னம் உன்னை வேண்டுவது எந்தாய்! காலக் கழிவு செய்யாதே.' என்று பணிந்து வேண்டிக் கொண்டான் வீடணப்பெரியோன். தனது பணிவைச் செயலிலும் காட்டினான் வீடணச்சீரியோன். எப்படி? 'பொன் அடி இரண்டும் பூண்டான்.' அண்ணனது பாதங்களை வெறும் கால்களாகக் கருதாமல், திருவடியாக மதித்து வணங்கினான் வீடணநல்லோன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


கீழ்மையைத் தழுவிக்கொண்டு மகிழும் தன் அண்ணனை, எப்படியாவது மேலோனாக உயர்த்திவிடவேண்டும் என்று முயன்றான் அன்புத்தம்பி. முயற்சிக்கு வெற்றி கிடைத்ததா? தம்பியின் வெற்றி அண்ணன் கையில் அல்லவா உள்ளது? கை, கனிக்கு நீட்டுகிறதா? மலர்பறிக்க நீட்டுகிறதா?

**கும்பகருணன் கூற்று :**

மனிதர்கள் தத்தம் உள்ளத்து இயல்புக்கு ஏற்ப செயலை மேற்கொள்கின்றனர். எந்தச் செயலைச் செய்தாலும், அதனை நியாயப் படுத்திக் காட்டுவார்கள். தமது அறிவு வன்மையை அதற்குத் துணையாக்கிக் கொள்வார்கள். கும்பகருணனும் தனது செயலை நியாயப்படுத்துகின்றான். அதற்குத் தனது செய்ந்நன்றி மறவாமை என்ற நல்லுணர்வை அடிப்படையாக்கிக் கொள்கின்றான்.

**செய்ந்நன்றி மறவாமை :**

தனது பாதங்களில் பணிந்து கிடக்கும் அன்புத் தம்பியைத்தன் கைகளால் எடுத்து மார் பாரத்தழுவிக் கொண்டான் கும்பகருணன் பிறகு, அன்புதவழ அழைத்த அவன் அழைப்பை ஏற்றுக் கொள்ள முடியாத தனது நிலைமையை நினைத்து பார்த்தான்: 'தம்பியை வெறுங்கையோடு அனுப்பு கின்றோமே' என்று எண்ணினான். இந்த எண்ணமும், தனது நிலையும் அவன் கண்ணில் நீரை வரைவழைத்து விட்டது. மனம் உடைந்து அழுகின்றான். 'தன் தறுகணூடு வெம்புணீர் சொரிய நின்றான்' என்பது கவிதைத் தொடர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


தறுகண் - அஞ்சாமை, அஞ்சாமையும் அழுகையும் ஒன்றுக்கு ஒன்று மாறானது. ஆனால், கும்பகருண னிடத்தில் இரண்டும் ஒன்று சேர்ந்து விட்டது. தனது தம்பியின் எமாற்றத்தை நினைக்கும்போது, அஞ்சாமையை அழுத்திவைத்துவிட்டு அழுகை மேலோங்கிவிட்டது என்பது கருத்து. இந்த அழுகை உள்ளத்தோடு தனது கருத்தை வெளியிடத் தொடங்குகின்றான் கும்பகருணன்.

'நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிது வளர்த்து
பின்னை,
போர்க்கோலம் செய்து விட்டாற்கு உயிர்கொடாது
ஆங்குப்போகேன்;
தார்க்கோல மேனிமைந்த என்துயர் தவிர்த்தி
ஆகின்,
கார்க்கோல மேனியானைக் கூடுதி கடிதின் ஏகி.'

'நன்றி மறப்பது நன்று அன்று' என்ற நல்லுணர்வு அவன் உள்ளத்தில் குடிகொண்டிருப்ப தால், விடணன் அழைப்பு ஒதுக்கப்படுகின்றது கும்பகருணனால்.

'கோலம்' என்ற சொல்லால் உருவான இந்தக் கவிதை, கும்பகருணனது உள்ளக் கோலத்தை வெளிப்படுத்துகின்றது, (கோலம்-அழகு) கோலம் என்ற சொல் அடிதோறும் வந்து கவிதையை அழகுபடுத்துகின்றது. எப்படி? 'அங்குப்போகேன்' என்று உறுதியாகக் கூறுகின்றான் கும்பகருணன். 'இங்கு இருப்பதே எனக்குப்போதுமானது' என்பது குறிப்பு. இராமன்பால், தான் போக இயலாமைக்கான காரணத்தை விளக்குகின்றான் அவன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'இங்கு வந்தது எதற்கு? யார் அனுப்ப வந்தேன்' என்பதை எல்லாம் நினைக்கும்போது, அங்குப் போவது எவ்வளவு பெரிய துரோகச்செயல்' சொல்வதைக் கவனமாகக்கேள் என்றான் கும்ப கருணன். 'அண்ணன் இராவணன் என்னை வளர்த்தது, எதற்கு? அவனுடைய, வாழ்வுக்கு நான் உதவுவேன் என்பதற்காக. இந்த வாழ்வோ, தண்ணீரில் ஏற்படுகின்ற குமிழி போன்று விரைவில் எந்த நேரமும் அழியக்கூடியது.'

'இத்தகைய நீர்க்கோல வாழ்வை நச்சி (விரும்பி) நெடிது (நீண்டநாள்) வளர்த்தான். இப்போது, அவன் வாழ்க்கையை நான் காக்கவேண்டிய காலம் வந்துவிட்டது.'

'அண்ணனைக் காப்பதற்காக, எனக்குப் போர்க்கோலத்தை அவனே செய்துவித்து இங்கு அனுப்பிவைத்துள்ளான். இந்த நிலையில், என்னை நம்பியிருக்கின்ற அண்ணனை ஏமாற்றிவிட்டு, அவனுடைய எதிரியாகிய இராமபிரான் பக்கம் வந்து சேர்ந்து கொண்டால் எவ்வளவு பெரிய துரோகச்செயல். இந்தப் பெருந்துரோகத்தை நான் செய்யலாமா? அது நியாயமாகுமா?''

அதனால், என்னுடைய துன்பத்தை நீ, நீக்குவது உண்மையானால், எங்கிருந்து வந்தாயோ அந்த இடத்துக்கு விரைவில் போய்விடு, 'கூடிதி கடிதின் ஏகி' என்று காரணத்தோடு, தனது செயலை நியாயப்படுத்திக் காட்டினான் கும்பகருணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


**உனக்கும் எனக்கும் :**

ஒரு செயல், ஒருவனுக்கு நியாயமாக அமையும் போது, வேறு ஒருவனுக்கு, அது அநியாயமாக அமையலாம், அப்படி அமைந்தால் அது மனிதனிடம் அமைந்த குறையா? செயலில் அமைந்த குறையா? இதற்கு விளக்கம் தருபவன், வீடண அறிஞனால், உத்தமன் என்று அழைக்கப்பட்ட கும்பகருணன். உத்தம கும்பகருணன் உரைக்கின்றான் 'உனக்கு ஒரு நியாயம் எனக்கு ஒரு நியாயம்' என்று, யாரைப் பார்த்து? தன்னால் 'கவிஞரின் அறிவுமிக்கான்' என்று கருதப்பட்ட தம்பி **வீடணனைப்பார்த்து.**

'மலரின்மேல் இருந்த வள்ளல்
வழுஇலா வரத்தி னால், நீ
உலைவுஇலாத் தருமம் பூண்டாய்;
உலகுஉள தனையும் உள்ளாய்:
தலைவன் நீ, உலகுக்கு எல்லாம்
உனக்குஅது தக்க தேயால்;
புலைஉறு மரணம் எய்தல்
எனக்குஇது புகழ தேயால்.' (7427)

'தம்பி உனக்கு எது செய்யத்தக்கதோ, அது எனக்கு, செய்யத்தக்கது அல்ல. **இது** எனக்குப் புகழ்தருவது: அது உனக்குத்தக்கது.' இது என்பது, மரணம் எய்தல்: அது, என்பது. சரணம் அடைதல். கும்பகருணன் மரணம் வீரமரணமும் அல்ல! புலையுறு மரணம். அறத்தை நிலை நாட்டுவதற்காகப் போர்செய்து உயிர் விட்டால் அது வீரமரணம் என்ற சிறப்புப் பெறும். ஒரு பாவியை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ வைப்பதற்காக அதர்மத்தின் பக்கம் நின்று போர்செய்து உயிரைத்துறந்தால், அது இழிந்த மரணம் என்று உலகத்தாரால் பழித்துப் பேசப்படும். வீர மரணத்தினன் வீர சுவர்க்கம் அடைவான். புலை (இழிந்த) மரணத்தினன் பாவிகள் நிறைந்த நரகத்தை அடைவான்.

'மரணம் அடைதலை. தனக்கும். சரணம் அடைதலை தம்பிக்கும்' உரித்தாக்குகின்றான் கும்பகருணன். ஏன்?

## தம்பிதலைவன்: அண்ணன்புலையன்.

(புலையன்—இழிந்தோன்) 'தலைவன் நீ உனக்கு அதுதக்கது: புலை உறு மரணம் எனக்கு இது புகழ்' இதை, கும்பகருணன் ஒளிமறைவின்றிக் கூறுகின்றான். ஆகவே 'புலையனாகிய தான் மரணத்தைத்தான் அடையவேண்டும்; என்று தனது இழி நிலையைக் கூறுவதன்மூலம் தம்பியின் உயர் நிலையை உணர்த்துகின்றான் கும்பகருணன்.

தம்பி எதனால் 'தலைவன்' என்ற உயர் நிலையை எய்தினான் என்பதையும். அண்ணன் கூறுகின்றான். தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரம்ம தேவன் கொடுத்தவரத்தால் வீடணன் சிரஞ்சீவி ஆனான். என்றும் அழியாத அறவழியைப் பின்பற்றியதால், உலகம் உள்ளளவும் இறவாமல் இருப்பான். அதனால் உயிருக்கு அஞ்சி இராமன் பக்கம் சேர்ந்தான் வீடணன் என்று யாரும் சொல்லமாட்டார்கள் அதனால் 'தலைவன் நீ' என்று தம்பியைப்பார்த்துக் கூறினான் கும்பகருணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


அத்தகைய அறநெறியைப் பின்பற்றாததாலும், சிரஞ்சீவி வரம் பெறாததாலும் கும்பகருணன் தனது மரணத்தை. புலை உறு மரணம் என்று கூறிக்கொள்கின்றான். 'தலைவன் நீ உலகுக்கெல்லாம்' என்று கும்பகருணன் கூறிய தொடர், தம்பியைப்பற்றி அவன் கொண்டுள்ள உயர்வெண்ணத்தைக் காட்டுகின்றது.

இலங்கைக்கு மட்டும் தலைவன் அல்ல வீடணன். உலகத்தினர் அனைவர்க்கும், இத்தகைய தலைமைப் பதவியை அடையக்கூடிய அறிஞன் ஒருவன் பின்பற்றும் வழியை, புலையன் ஒருவன் பின்பற்றுவது எப்படிப் பொருத்தமாகும்? எவ்வாறு முடியும்? 'அதனால்தான் உனக்கு, சரணம் எய்தல் தக்கது: எனக்கு, புலையுறு மரணம் எய்தல் புகழ், என்றும் கூறினான் கும்பகருணன். ஆகவே, அவரவரது மனப்பக்குவத்துக்கு ஏற்ப ஒரு செயல் நியாயமாகவும் அநியாயமாகவும் ஆகின்றது.

புலைஉறு மரணம் எய்தல் கும்பகருணனுக்கு நியாயமானது. வீடணனுக்கு அது அநியாயமானது. வீடணனுக்கு நியாயமாகயிருக்குக்கூடிய சரணம் அடைதல், கும்பகருணனுக்கு அநியாயமானதாகும்' எப்படி என்பதை அடுத்து விளக்கிக்காட்டுகின்றான் அண்ணன்.

**உண்டவர்க்கு உரியது :**

கும்பகருணன், இளமைக்காலம் முதல் உணவு உண்டு உடலை வளர்த்தவன்: தம்பி வீடணன் இளமைப் பருவத்திலிருந்து உண்மையைக்காணும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


அவாவில், ஆன்மத்தொடர்புடன் வளர்ந்தவன். அண்ணன் உணவையே உண்டவன் அதனால் உடல் பெருத்தவன்: தம்பி உண்மையைக் கண்டவன்: அதனால் உடல் சிலுத்தவன். ஒன்று பெருகினால்: மற்றொன்று சுருங்கும். இது இயற்கை நியதி. அண்ணனுக்கு உடல் பெருத்தது: வளர்ந்தது. உண்மைத்தொடர்புக்குரிய ஆன்ம வளர்ச்சி சிறுத்தது: தளர்ந்தது. தம்பிக்கு, ஆன்மத்தொடர்பு வளர்ந்தது: உடலைப்பற்றிய எண்ணம் தளர்ந்தது.

சுருக்கமாகத் தொகுத்துப் பார்த்தால் தம்பிக்கு உலகியல் உறவுத் தொடர்பு குறைந்தது: உலகியல் துறைக்கு அப்பாற்பட்ட ஆன்மீக உறவுத்தொடர்பு நிறைந்தது, அதனால் உடல் சிறுத்தது: ஆன்ம உணர்வு பெருத்தது. 'இராமன் தாள் இணை புல்லுதும்; புல்லி இப்பிறவி போக்குதும்' இது, தம்பி வீடணனது நோக்கம். கும்பகருணன் உடல் உறவு உணர்வு பெருத்தவன்: ஆன்மீக உணர்வு சிறுத்தவன். அதனால் தான் 'உண்டவன் கடமைக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசுகின்றான்.'

ஆனால் ஆனந்தம் அளிக்கும்வாழ்வுக்கு என்ன செய்யவேண்டும்? 'அப்போது எது கடமையாக யிருக்கும்' என்பதைப்பற்றி. சிந்தித்துச்செயல் பட்டவன் தம்பி. அது பற்றிச்சிறிதும் சிந்தியாதவன் அண்ணன். அதனால்தான் கும்பகருணன் தன் அளவில் உள்ள கடமையைப் பொதுவாக்கி, வீடணனைச் சிந்திக்கத் தூண்டுகின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'கருத்துஇலா இறைவன் தீமை
கருதினால், அதனைக் காத்துக்
திருத்தலாம் ஆகின் அன்றோ
திருத்தலாம்: தீராது ஆயின்,
பொருத்துஉறு பொருள்உண் டாமோ?
பொருதொழிற்கு உரியர் ஆகி
ஒருத்தரின் முன்னம் சாதல்
உண்டவர்க்கு உரியது அம்மா; (7428)

'தம்பி! நீயும், நானும் ஒருவகையில் ஒன்றாக நின்று செயல்பட்டோம்; -என்ன செயல்'-நமது அண்ணன், அறிவு இல்லாதவன் செய்யும் தீய செயலைச் செய்தான். அது நமக்குப் பிடிக்கவில்லை. அதனால், அவனைத் திருத்துவதற்கு இருவருமாக அறவுரை கூறித்திருத்துவதற்குப் பெரிதும் முயன்றோம். இந்தமுயற்சியில் ஈடுபட்ட வகையில் நாம் இருவரும் கருத்து ஒற்றுமை உடையவர்களே. அதற்குமேல். அவன் திருந்தாதபோது, நாம் மேற்கொள்ள வேண்டியது என்ன? அந்தக்கடமை யாது?

அந்தக்கடமை, உண்டவர், ஒருத்தரின் முன்னம் சாதல் என்பதுதான் கும்பகருணன் கொள்கை. திருந்தவில்லை என்றால், அது சமுதாய உடலை அழிக்க வந்த நோயாக வளர்ந்தகட்டியாகக் கருதி அதனை வெட்டி எறியவேண்டும். அதாவது திருந்தாதவனை ஒதுக்கித் தள்ளிவிட்டு, அவனிடமிருந்து நாம் பிரிந்துவிட.வேண்டும் என்பது வீடணன் கொள்கை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


இப்படிக்கொள்கை வேற்றுமை உடைய சகோதரர் இருவருக்கும் கடமை ஒன்றாக அமைய முடியாது. 'அறிவு இல்லாத அரசன் தீய செயலிலிருந்து திருந்தவில்லை என்றால், அவனை நன்னெறியில் பொருந்தச் செய்வதற்கு வேறு வழி உண்டா? பொருத்து உறு பொருள் உண்டாமோ? என்பது அண்ணனது கேள்வி.

வேறு வழி எதுவும் இல்லை. அதனால், அடுத்துச்செய்யவேண்டிய தம்பியின் கடமை என்ன. அந்தத் திருந்ாதவன் சாவதற்கு முன்னாலேயே நாம் இறந்துவிடுவதுதானே கடமையாகும். 'ஒருத்தரின் முன்னம் சாதல் உண்டவர்க்கு உரியது.' என்று தனது புலை உறுமரணத்தை நியாயப்படுத்தி பேசுகின்றான் கும்பகருணன்.

தனது மரண வாழ்க்கையை மேலும் நியாயப்படுத்திப் பேசுகின்றான் கும்பகருணன்.

"உம்பரும் பிறரும் போற்ற மூவுலகை ஆண்ட ஒருவன்,
தம்பியர் இன்றி மாண்டு கிடப்பனோ தமையன் மண்மேல்!

என்பது கும்பகருணனது அடுத்தகேள்வி. அதனால், 'எனது புலைஉறு மரணம் கடமைக்கு உரியதே' என்பது அண்ணன் கும்பகருணனது வாதம். தனது மரணத்தை நியாயப்படுத்திப் பேசிய கும்பகருணன், வீடணன் கொடுப்பதாகக் கூறிய அரசச் செல்வத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கொள்கையை விடமுடியாத தனது உறுதியையும் கூறுகின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


அண்ணன் இராவணன் தனது மான உணர்ச்சியை எப்படி கும்பகருணத் தம்பியிடம் வெளிப்படுத்தினானோ அப்படியே, தனது தம்பி வீடணனிடம் வெளிப்படுத்துகின்றான் கும்பகருணன்! கும்பிட்டுவாழ்தல்' இவர்களது கொள்கைக்கு வரும் குறைபாடு.

'செம்பிட்டுச் செய்த இஞ்சித்
திருநகர்ச் செல்வம் தேறி,
வம்பிட்ட தெரியல் எம்முன்
உயிர்கொண்ட பகையை வாழ்த்தி
அம்பிட்டுத் துன்னம் கொண்ட
புண்ணுடை நெஞ்சோடு ஐய!
கும்பிட்டு வாழ்கி லேன்யான்
கூற்றையும் ஆடல் கொண்டேன் (7429)

கும்பகருணன். தனது உள்ளத் திண்மையையும் உடலின் வன்மையையும் எடுத்துரைப்பதாக அமைந்தது இந்தக்கவிதை. உடலும், உள்ளமும். உயிரும் எல்லாம் அண்ணனுக்கே என்பதனை இங்கு உறுதிப்படுத்துகின்றான் கும்பகருணன். எல்லாம் அண்ணலுக்கே (இராமபிரானுக்கே) என்ற அளவில் வாழ்க்கையினை அமைத்துக் கொண்ட வீடணனிடம் உரைக்கும் வார்த்தை இது. 'குன்று அன கொள்கையான்' (7340) தான், என்பதை உறுதிப்படுத்தி மகிழ்கின்றான் கும்பகருணன். உடலால் மட்டும் குன்று (மலை) அல்ல! உள்ளத்தாலும் குன்றாத (அசையாத) குன்றுதான் கும்பகருணன். இதை நிரூபிக்கிறது இக்கவிதைப் பொருள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சாதாரண மனிதன்-சராசரி மனிதன், உலகியலில் ஒரு பெரும் பொருள் கிட்டுமானால், அதற்காகத் தனது வாழ்நாளில் கடைப்பிடித்துவந்த கொள்கையைக் கைநழுவ விட்டுவிடுவான். பெறும் பொருளுக்கு முன்னால் கொள்கை, சிறுமைக் குரியதாகி விடுகின்றது சாதாரண மனித உள்ளத்தில். அதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தான், கும்பகருணனது குன்று அன்ன கொள்கையின் பெருமை விளங்கும்.

8281

'எம்முன் (அண்ணன்) உயிர் கொண்ட பகையை வாழ்த்தி, கும்பிட்டு வாழ்கிலேன்' என்றமன உறுதி, அவனது கொள்கைப் பிடிப்பைக் காட்டுகின்றது. இது. சராசரி மனித நிலையினின்றும் கும்பகருணன் உயர்ந்து நிற்பதைக் காட்டுகின்றது. கும்பிட்டு வாழ்வதற்கு, இவனுக்குக் கிடைக்கும் செல்வம் எது? சாதாரணமானதா? இல்லை! இல்லை? மிக மிக உயர்ந்தது. அதுவும். கொடுப்பவனும் தேவாதி தேவன். அப்படியிருந்தும் இவனது உள்ளத்தில் கொள்கைக்கு முன்னால் அச்செல்வம் சிறுமையாக நிற்கின்றது, இது. கும்பகருணனது பெருமையை நிலை நாட்டுகின்றது.

கிடைக்கும் செல்வம், செம்பு இட்டுச்செய்த இஞ்சிச் செல்வம்-செம்பு உலோகத்தாலேயே கட்டப் பட்ட மதில்களால் சூழப்பட்ட அரசுச்செல்வம், இந்த இலங்கை அரசுச்செல்வம் நிலையானது என்று தெளியவில்லை இவனது மனம். (இஞ்சி-மதில்: தேறி-தெளிந்து)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'இத்தகைய செல்வம் கிடைக்கிறதே என்பதற்காக, மாலைஅணிந்த எனது அண்ணன் உயிரைப் பறிக்க உள்ள பகைவனை வாழ்த்தி (வம்பு-வாசனை: தெரியல்–மாலை) அம்புதைத்துக் கிழித்த புண்ணுற்றாற் போன்ற மனதோடு வணங்கி வாழமாட்டேன்.' (துன்னம்-கிழித்தல்) என்று தனது நெஞ்சத்து உறுதியை வெளிப்படுத்தினான் கும்பகருணன்.

'ஒட்டார்பின் சென்றுஒருவன் வாழ்தலின்
அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று" (திருக்குறள்-967)

என்ற வள்ளுவ வீரத்திற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது 'கும்பிட்டுவாழ்கிலேன்' என்ற உறுதிநிலை.

கும்பகருணன் தனது மனதுக்குப் புண்ணாக நினைப்பது, அண்ணனது பகைவனை வாழ்த்தி வணங்கிக் கொண்டிருத்தலை. கும்பகருணனது உள்ளத்திண்மையை உறுதிப்படுத்துவதாக அமைந்த இந்தக்கவிதையின் மூலம், சிந்தாமணிச் செந்தமிழ்க் காப்பியத்தின் ஒரு கவிதையின் அருமையையும் வெளிப்படுத்துகின்றார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். கவிதையின் அருமை பெருமை அறிபவர் கவிஞர் அன்றோ? பிறருக்குப் புலனாகுமா? ஆகாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


"வம்புகொண்டு இருந்த மாதர் வனமுலை மாலைத்
தேன்சோர்
கொம்புகொண்டு அன்ன நல்லார் கொழுங்கயல்
தடங்கண் போலும்
அம்புகொண்டு அரசர் மீண்டார்; ஆக்கொண்டு
மறவர் போனார்,
செம்புகொண்டு அன்ன இஞ்சித் திருநகர்ச்
செல்வ என்றார்." (சிந்-439)

'எதிரியைக் 'கும்பிட்டு வாழ்தல்' என்பது எக்காலத்திலும் எவ்விடத்திலும் என்னால் செய்ய முடியாதஒன்று.எதிரியோடுஉடன் நின்றுஎன்னைக் கொல்வதற்கு எமனே (கூற்றம்-எமன்) வந்தாலும் அவனையும் வெல்லக்கூடிய ஆற்றல் படைத்தவன்' தான், என்று தனது உடல் வன்மையைச் சுட்டிக் காட்டினான் கும்பகருணன். தனது வீரச்செயலை, 'உலகம் சுற்றும் பருதியின் (பருதி-சூரியன்) திரிவென்' என்றும், 'கறங்கு எனத்திரிவென்,என்றும், (கறங்கு - காற்றாடி) 'உயிர் சுமந்து உலகில் ஒருவரையும் திரிய ஒட்டேன்' என்றும், மேலும் பலபடியாகத் தெரிவித்தான் கும்பகருணன்.

## வீடணனுக்கு அறிவுரை :

தனது, நிலையை உள்ளபடி விளக்கிக் காட்டிய கும்பகருணன், அடுத்து, தம்பி என்ன செய்ய வேண்டும் என்பதையும் தெளிவாக்குகின்றான். 'தம்பி, எனது சொல், "ஏற்றுக் கொள்ளத்தக்கது தான்" என்று நீ கருதுவாயானால், சிறிதும் காலம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



கடத்தாமல், இராமனிடம் செல்ல அந்தச் சகோதரர்களது நட்பையே விரும்பி ஏற்றுக்கொள்: (இந்தச் சகோதரர்களது தொடர்பை வெறுத்து ஒதுக்கிவிடு.) என்னிடம் பேசுவதில் எந்தப்பயனும் இல்லை: என்சொற்படி நீ அவர்களோடு சென்று சேர்ந்தால் பலராலும் புகழப்படுவாய்: (நான் சிலரால் மட்டும் புகழப்படுவேன்) "யாரும் தொழ நிற்பாய்" என்று அறிவுரை கூறினான் கும்பகருணன்.

தம்பி சென்று சேரவேண்டிய இடம் இராமன் பக்கம்தான் என்பதை மேலும் உறுதிப்படுத்து கின்றான் கும்பகருணன். தம்பி அங்கு சேர்வது இங்குள்ளார் அனைவர் நலத்துக்கும் ஏற்றதாகும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றான். இலங்கை அரக்கர் சமுகம், இராவணப் பாவிக்காகப் போரிட்டு உயிர் விட்டால், அவர்களுக்கு நரகம்தான் கிடைக்கும். அவர்கள் நரகம் அடையாமல் காக்கும் ஆற்றல் வீடணனுக்கே உண்டு. எப்படி?

"போதி நீ, ஐய! பின்னைப்
　　பொன்றினார்க்கு, எல்லாம் நின்ற
வேதியர் தேவன் தன்னை
　　வேண்டினை பெற்று, மெய்ம்மை
ஆதிநூல் மரபி னாலே
　　கடன்களும் ஆற்றி, ஏற்றி,
மாதுயர் நரகம் நண்ணா
　　வண்ணமும் காத்தி மன்னோ." (7436)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


வீடணன், அரக்க சகோதரத் தொடர்பை நீக்கிக்கொண்டு, இராம சகோதரர்களில் ஒருவனாக இணைந்தபிறகு, புண்ணியம் பெற்றவனாகின்றான். புண்ணியன் கையினால் சரம கைங்கர்யம் நிகழ்ந்தால், அந்தக் கைங்கர்யத்துக்குரியவர்கள் நரகம் புக மாட்டார்கள். சுவர்க்கம் புகுவார்கள். அரக்கர் செய்த பாவச்செயல், அவர்களை நரகத்தில்தான் தள்ளும். அவர்களை நரகம் நண்ணா வண்ணம் காப்பது வீடணன் கையில்தான் உள்ளது. இறந்தவர்கள் அனைவர்க்கும் இறுதிக்கடனாகிய எள்நீர்க் கடன் வீடணப் புண்ணியன் கையால் நடை பெற்றால் மாதுயர் (பெரியதுன்பம்) தரும் நரகம் பக்கத்திலும் வராது. அக்கடன் வேதநூலில் சொல்லப்பட்ட முறைப்படி (மரபு-முறை) நடத்த வேண்டும். இந்த நீர்க்கடன், வேதியர் தேவனாகிய இராமபிரான் அனுமதியோடு நடைபெறவேண்டும். ஆகவே 'போதி நீ, ஐய!' என்று கும்பகருணன் தம்பியிடம் வேண்டிக் கொண்டான்.

**நிறைவாக :**

**'ஆகுவது ஆகும், காலத்து: அழிவதும் அழிந்து சிந்திப்**
**போடுவது; அயலே நின்று போற்றினும் போதல் திண்ணம்:**
**சேகுஅறத் தெளிந்தோர் நின்னின் யார் ஊர்? வருத்தம் செய்யாது**
**அகுதி; எம்மை நோக்கி இரங்கலை: என்றும் உள்ளாய்."** (7437)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


என்று கூறி தம்பிக்கு ஆசீர்வாதம் செய்தான் கும்பகருணன். 'என்றும் உள்ளாய்' - மனநிறைவான நல்வாழ்த்து.

உலகத்து இயற்கை நியதியின் படிதான் எல்லாம் நடக்கும். அதனை தடுக்கவோ விடுக்கவோ யாராலும் முடியாது. வீடணன் முயன்றான். முயற்சிக்கு வெற்றிகிட்டவில்லையே என்று அவன் மனம் சோர்ந்துவிடக்கூடாது. இதற்குச் சொல்லப் படுவதுதான் கும்பகருணனின் நிறைவுப் பெருவார்த்தை.

வீடணனுக்கு ஆகும் காலம்: கும்பகருணனுக்கு அழியும் காலம். ஆவதும் அழிவதும் யார்யாருக்கு எந்தநேரத்தில் நடைபெற வேண்டுமோ, அந்த நேரத்தில் தானாக நடக்கும். அதைத் தடுக்க முயல்வது வீண்முயற்சி. இதை, 'ஆகுவது ஆகும் காலத்து' என்றும்; அழிவதும் அழிந்து சிந்திப் போகுவது? என்றும் இயற்கை நியதியை எடுத்துக் கூறினான் கும்பகருணன். அதற்கு மேலும் தன்னுடைய அழிவு உறுதி என்பதை, 'அயலே நின்று போற்றினும் போதல் திண்ணம்?' என்று எடுத்துரைத்தான் அண்ணன்.

இந்த இயற்கை நியதியைக் குற்றமறத் தெளிந்தவன் வீடணன். இதனை 'சேகு அறத் தெளிந்தார் (குற்றம் இல்லாமல்) நின்னில் யார் உளர்?' என்று வீடணனைப் பார்த்து கும்பகருணன் கூறினான். அதனால், 'நான், உன் அழைப்பை ஏற்று வரவில்லையே என்று வருந்தாமல், இராமனிடம் செல்வாய். எங்கள் அழிவை நினைத்தும் வருந்தாதே. நீ தான் என்றும் இருப்பவன்; தீர்க்கதரிசி: சிரஞ்சீவி' என்று மன நிறைவோடு ஆசீர்வதித்தான் கும்பகருணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'என்றும் உள்ளாய்' என்று சொல்லால் ஆசீர்வாதத்தை நிறைவு செய்துகொண்ட அண்ணன், அதனைச் செயலாலும் தொடர்கின்றான். சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தனது சகோதரப் பாசத்தைக் காட்டுகின்றான் கும்பகருணன்.

'என்று அவன் தன்னை மீட்டும்
எடுத்துமார்பு இறுகப் புல்லி,
நின்று நின்று. இரங்கி ஏங்கி,
நிறைகணால் நெடிது நோக்கி,
'இன்றொடும் தவிர்ந்தது அன்றே
உடன்பிறப்பு' என்று விட்டான்;
வென்றிவெந்திறலி னானும்
அவன் அடித்தலத்து வீழ்ந்தான்.' (7438)

அன்பின் அடையாளச் செயல், வயதில் மூத்தவர் இளையவரை மார்பாரத் தழுவிக்கொள்வது வீடணனை, எடுத்து மறுபடியும் மார்பில் இறுகத் தழுவிக்கொண்டான் அண்ணன். பிறகு, 'இனி இந்தச் சந்திப்பு நேர வாய்ப்பு இல்லையே, இது இறுதிச் சந்திப்பு ஆயிற்றே' என்று நினைத்து நினைத்து வாய்விட்டுப் புலம்பினான்: புலம்புதலைக் கண்களும் தெரிவித்தன நீர் அருவியின் மூலமாக. இந்த இரக்க உணர்வோடு நீண்டநேரம் பார்த்துக் கொண்டே நின்றான்.

'இன்றொடும் தவிர்ந்தது அன்றே உடன்பிறப்பு' என்பது அவன் வாய் புலம்பிய இறுதிவார்த்தை. இப்புலம்புதல் தம்பியின் மேல் இவன் கொண்ட அளவற்ற சகோதரப் பாசத்தைக் காட்டுகின்றது. அண்ணனையும் ஒதுக்க முடியவில்லை: தம்பியையும் அணைத்துக்கொள்ள முடியவில்லை. என் செய்வது?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


சகோதரப்பாசம் கும்பகருணனை ஆட்டிப் படைக்கின்றது. அதனால்தான், இருவருக்கும் இடையில் நின்று தடுமாறுகின்றான் கும்பகருணன். தன்னை இறுதியாகத் தழுவிக்கொண்ட கும்பகருணனது பாதத்தில் வீழ்ந்து வணங்கி வீடணனும் தனது அன்பினை வெளிப்படுத்திக் கொண்டான். 'வென்றி வெந்திறலினானும் அவன் அடித்தலத்து வீழ்ந்தான்.' (வெற்றியைக் கொள்ளும்படியான மிக்க வலிமையை உடைய வீடணன்.)

## பிரியா விடை:

தம்பி, அண்ணனிடம் வெளியில் விடைபெற்றான்: ஆனால், உள்ளத்தால் பிரியாதவனானான். அண்ணனும் விடை கொடுத்ததும் வெளியில் தான்! ஆனால் நெஞ்சு அளவில் பிரியாதநிலையினன் தான். இத்தகைய ஆழ்ந்த சகோதரபாசம். இதனைத் தெரிவிக்கும் கவிதைகள்:

'வணங்கினான்; வணங்கி, கண்ணும்,
வதனமும், மனமும், வாயும்
உணங்கினான்; உயிரோடு யாக்கை
ஒடுங்கினான்; 'உரைசெய்து இன்னும்
பிணங்கினால் ஆவது இல்லை;
பெயர்வது; என்று உணர்ந்து போந்தான்,
குணங்களால் உயர்ந்தான் சேனைக்
கடல்எலாம் கரங்கள் கூப்ப.' (7439)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'கள்ளநீர் வாழ்க்கை யேமைக்
கைவிட்டு, காலும் விட்டான்;
பிள்ளைமை துறந்தான்;' என்னாப்
பேதுறும் நிலையன் ஆகி,
வெள்ளநீர் வேலை தன்னில்
வீழ்ந்தநீர் வீழ. வெங்கண்
உள்ளநீர் எல்லாம் மாறி
உதிரநீர் ஒழுக நின்றான்.' (7410)

முதல்கவிதை வீடணன் நிலைமையைத் தெரிவிக்கின்றது: அடுத்தது கும்பகருணன் நிலைமையைப் புலப்படுத்துகின்றது. பிரிவுத் துன்பத்திற்குட்பட்ட இருவரது அகத்தோற்றத்தையும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன இந்த இரு கவிதைகளும்.

குணங்களால் உயர்ந்தான் - வீடணன், அண்ணனை இறுதியாக வணங்கினான்: வணங்கிய பிறகு உணங்கினான் (வாடினான்) கண், முகம், மனம், வாய் அனைத்தும் வாடிவிட்டன. உயிரும் உடலும் ஒடுங்கப்பெற்றான்; பிறகு உணர்ந்தான். என்ன உணர்வு? இவனோடு கருத்து மாறுபட்டுப் பேசிப் பயன் இல்லை; அதனால் திரும்புவோம் என்று உணர்ந்தான். பிறகு அந்த இடத்தை விட்டுப்புறப்பட்டான். அப்போது அங்கிருந்த கடல் போன்ற சேனையில் உள்ள வீரர்கள் அனைவரும் கை கூப்பி. செல்லயிருக்கும் வீடணனை நோக்கி வணங்கினார்கள். இது, தம்பியின் நிலை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


அண்ணன் கும்பகருணனோ அழுதுகொண்டேயிருந்தான். அழுதால் கண்களில் நீர் வருமே! அந்தநீருக்கு உவமையாக இடைவிடாது ஓடி வருகின்ற ஆற்றுநீரும் நிற்காது. அவ்வளவு நீரும் கண்களின் வழியாக வடிந்தபிறகு, இரத்தமாகிய நீர் ஒழுகிற்று. தம்பியின் பிரிவுத்துன்பம் அண்ணனை அவ்வளவு சோகத்துக்கு உள்ளாக்கி விட்டது.

ஏன் இப்படி அழுதான்? 'இந்தத்தம்பி இளமைப் பருவத்தின் அறியாமையை (பிள்ளைமை) விட்டு நீங்கியவன். இப்போது, வஞ்சக வாழ்க்கையை உடைய எங்களை வெறுத்து. அரக்கர் குலத் தொடர்பையும் அறுத்துக்கொண்டு விட்டானே,' என்ற நினைவு கும்பகருணனை இவ்வாறு அழச்செய்தது.

அண்ணன் தம்பியர் இருவரும் களத்தில் தான் போர் செய்ய நின்றனர். ஆனால் எதிர்பாராத சந்திப்பின் காரணமாக, தமது உள்ளத்தில் பெரும் போர் நடத்திவிட்டனர். களப்போருக்கு முன்னால் நடந்த இந்த உளப்போரில் யாருக்கு வெற்றி?

'அவனை உள்ளம் சேகு அறத்தெருட்டி, ஈண்டுச் சேருமேல் சேர்ப்பன்' என்று தான் இராமபிரானிடம் வீடணன் சொல்லி வந்தான், சேர்க்க முடியாததால் தோல்வி-ஆனால், அவனை உள்ளம் சேகு அறத் தெருட்டியதில் வெற்றி என்றுதான் சொல்ல வேண்டும். இந்தச் சந்திப்பு, கும்பகருணன், கொள்கைப் பிடிப்பு உடையவன் என்பதை அறிதற்கு உதவுகிறது.

## வீடணன் மீட்சி

அண்ணனிடம் பிரியா விடை பெற்று வந்த வீடணன், புறப்பட்ட இடம் வந்து சேர்ந்தான். நடந்தநிகழ்ச்சியை இராமபிரானிடம் சொல்கின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'எய்திய நிருதர் கோனும், இராமனை இறைஞ்சி,
'எந்தாய்;
உய்திறம் உடையார்க்கு அன்றோ அறன் வழி
ஒழுகும் உள்ளம்
பெய்திறன் எல்லாம் பெய்து பேசினென். பெயரும்
தன்மை
செய்திலன்; குலத்து மானம் தீர்ந்திலன் சிறிதும்'
என்றான். (7441)

தனது அண்ணனை அழைப்பதற்குத்தான் மேற்கொண்ட முயற்சி, அது, அண்ணனிடம் பயன் படாமல் போனதன் காரணம், இதனைச் சுருக்கமாகக் கூறுகின்றான் வீடணன். முயற்சி: பெய்திறன் எல்லாம் பெய்து பேசியது - அவன் மனமாற்றம் அடைவதற்கு வேண்டிய சொற்கள்- நூல்வழி, மரபுவழி, முன்னோர் ஒழுகியவழி- அத்தனையும் சொல்லிப் பார்த்தல்.

வராதகாரணம்: உய்திறம் உடையார்க்கு அன்றோ அறன்வழி ஒழுகும் உள்ளம் - அறநெறியே ஒழுகும் ஒழுக்கம் உளதாதல், தீயதனின்றும் விலகிப் பிழைக்கும் தன்மை உடையார்க்கு அல்லவா? உய்திறம் அங்கு இல்லை. முடிவாக 'குலத்து மானம் தீர்ந்திலன்' என்பதுதான் கும்பகருணன் இங்கு வாராததன் முக்கிய காரணம் என்று தெளிவாக்கினான் வீடணன் அரக்கர் குலப்பற்றுச் சிறிதும் நீங்காதவன். அதனால். தன் அண்ணன் பக்கமே நின்று உயிர் விடுவான் கும்பகருணன்.

'குலத்து மானம் தீர்ந்திலன்' என்பது தான் கும்பகருணன் அடையாளம்: முத்திரை, அதனால், அவனிடம் உய்திறமும் இல்லை: அறன் வழி ஒழுகும் உள்ளமும் இல்லை. இது, வீடணன், கும்ப கருணனைப்பற்றி அளவிட்ட இறுதி மதிப்பீடு·

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# 8
# கும்பகருணன் போர்ச்செயல்கள்

## பெருமிதம் :

உள்ளத்தில் தோன்றும் உணர்வுகள் வெளிப் படாமல் இருக்கமுடியாது. அப்படி வெளிப் படுவதற்கு இடம் அளிப்பது உடல்-மெய், மெய்யின் மூலம் வெளிப்படுதலால் மெய்ப்பாடு என்று பெயர். இத்தகைய மெய்ப்பாடுகள் எட்டு என்று தொல் காப்பியம் கூறுகின்றது. அதனுள் ஒன்று 'பெருமிதம்' என்பது. இந்தப்பெருமித மெய்ப்பாடு இப்போது களப்போரில் வெளியாகின்றது கும்ப கருணனிடத்தில்.

களத்தில் இறங்கிப்போர் புரிவதன் முன்பு, கும்பகருணன் உளத்தில் (மனத்தில்) சிலஉணர்வுகள் போரிட்டன. அந்தப்போர் நிலை, வீடணனுடன் உரையாடிய உரையாடலில் தெரிந்தது. அந்த உணர்வுப் போராட்டத்தில் எது வென்றது? அந்த உணர்வுதான், இனி கும்பகருணனை இயக்கிக் கொண்டிருக்கும். மானம், அறம், பாசம், அறிவு, தறுகண் (அஞ்சாமை) முதலியன கும்பகருணன் உள்ளத்தில் போராடிய உணர்வுகள். இனி, இவனுடைய செயல்களைப் பார்க்கும் போது, தறுகண் (அஞ்சாமை) உணர்வுதான் மேலோங்கி நிற்பதைக்காண முடிகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


மனிதனிடத்தில் வெளிப்படும் பெருமித மெய்ப்பாட்டுக்கு நிலைக்களனாகயிருக்கும் உணர்வுகள் நான்கு, அவற்றுள் ஒன்று' தறுகண்' (அஞ்சாமை)

'கல்வி, தறுகண், புகழ்மை, கொடை எனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே;
(தொல்-பொருள் 253)

கும்பகருணன் இந்த நான்கன் மூலமும் பெருமிதம் பெற்றவன் தான். ஆயினும், இனி. கும்பகருணனை ஆட்டிப்படைப்பது 'தறுகண்' என்பதுதான். (அஞ்சாமை) இந்த உணர்வின் அடிப்படையில் இயங்குகின்ற கும்பகருணனது போர்க்களச் செயல்களும், பேசிய பேச்சுகளும் அவனைப் பெருமிதத் தோற்றத்தினனாக உலகின் முன் நிறுத்துகின்றன.

'தான் உயர்ந்ததவம். 'உத்தம' என்ற வீடணன் அழைப்பு' முதலியவற்றால் இவனது கல்விப் பெருமிதம் தெரிந்தது. 'புலத்தியன் மரபு பேசுவது. இராமனே வியப்பது, 'எனக்கு இது புகழதே' என்பன முதலியவற்றால் புகழ்ப் பெருமிதம் வெளிப்பட்டது. 'குலம் வாழ வீடணனைக் காத்தல். வீடணன் தருவதாகக் கூறிய அரசை வேண்டாம் என மறுத்தல் முதலியவற்றால் கொடைப் பெருமிதம் மேலோங்குகின்றது. ஆனால் இனி, போர்க்களத்தில் கும்பகருணனைப் பெருமிதத் தோற்றத் தினனாகக் காட்டும் பெருமை தறுகண் (அஞ்சாமை) என்ற உணர்வுக்கே உரியதாகும்.

'போராண்மை என்ப தறுகண்' என்பதுதானே போர்க்கள வீரன் இலக்கணம்! கதைக்களத்தில், கும்பகருணன் இதுவரை சொல் வீரனாகத்தான் காட்சியளித்தான் இனி, அவன் போர்க்களச் செயல் வீரனாகக்கதைக் களத்தில் தோற்றம் அளிக்கப் போகின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



கவிச்சக்கரவர்த்தி கம்பர், கும்பகருணனது போர்க்களச் செயல்களைப் பலபடியாக விவரித்துப் பாடுகின்றார். இந்தப் போர் வீரனது வீரப்பெருஞ் செயல்கள் 180 கவிதைகளாக மலர்ந்துள்ளன, இந்தக் காப்பியத்துள். இது, கும்பகருணன் போர்ச்செயல்கள் கவிஞரை எவ்வளவு தூரம் கவர்ந்துள்ளது என்பதைக் காட்டுகின்றது.

## போர்க்கள நிகழ்ச்சிகள் :

போர்க்களத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை வரிசையாக ஒருவர் சொன்னால் அதைக் கேட்பது, ஒரு வரலாற்றுப் புத்தகத்தைப்படித்து, செய்தியைத் தெரிந்து கொள்வது போன்றுதான் இருக்கும்.

ஆனால், கேட்பவர் மனம் கொள்ளும் வகையில் சுவைபடச் சொல்லும் திறன், கவிஞர்களுக்கே உண்டு. அதுவும் கவிச்சக்கரவர்த்தி. போர்க்கள நிகழ்ச்சிகளைச் சொன்னால் எப்படியிருக்கும்? போர்க்கள நிகழ்ச்சிகள் அச்சம் தரத்தக்கன. அத்தகைய பயங்கரக்காட்சிகளையே, பயன் நிறைந்த செவிநுகர் கனிகளாக'த் தருவார் கம்பர்பிரான்.

இந்த நிகழ்ச்சிகளை சொல்லிப்போகும் முறைவைப்பே ஒரு தனி அழகைத்தருகின்றது. இந்தப் போர்க்கள நிகழ்ச்சிகளில் மிகமிக முக்கியமானது, கும்பகருணன் மூக்கு அறுபட்டது. இந்நிகழ்ச்சிதான் அரக்கன், அண்ணலிடம் (இராமபிரான்) நேருக்கு நேராகப் பேசுவதற்குக் காரணமாக அமைகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


## மூக்கு அறுபடுதல் :

இவனுடைய சகோதரியும் மூக்கு அறுபட்டாள்; இவனும் மூக்கு அறுபட்டான். அறுபட்டதில் இரண்டும் ஒன்று. ஆனால் அறுபட்ட முறையில் வேறுபாடு உண்டு.

சூர்ப்பணகை அறுபட்டது யாரும் இல்லாத-யாரும் காணாத ஆரணியத்தில்-காட்டில்; இவன் மூக்கு அறுபட்டது எல்லோரும்-வீரர்கள் அனைவரும் சூழ்ந்திருக்கும் போர்க்களத்தில். அவள், மூக்கு அறுபடுவதற்கு முன்பே, இராமபிரானைக் கண்டாள்; பேசினாள். இவன் மூக்கு அறுபட்ட பிறகு இராமபிரானைக் கண்டான்; பேசினான். அரக்கி மூக்கு அறுபட்டது இலக்குவனது வாளால். அரக்கன், மூக்கு இழந்தது சுக்கிரீவனது வாயால். சகோதரி மூக்கிழப்புக்குக் காரணம் அவனது காம உணர்வு. சகோதரன் மூக்கிழப்புக்குக் காரணம் இவனது மான உணர்வு.

எந்த வகையில் பார்த்தாலும், சகோதரி பெற்ற மூக்கு இழப்பு அவமானத்தைவிட, சகோதரன் அடைந்த மூக்கு இழப்பு நிகழ்ச்சி மிகப்பெரிய அவமானச் சின்னமாகும். சூர்ப்பணகை மூக்கு அறுபட்ட நிகழ்ச்சி, படிப்படியாக, தனது அண்ணன் இராவணனைக் கதைக்களத்துக்குக் கொண்டு வந்து சேர்த்தது; இறுதியில் போர்க்களத்திலும் நிறுத்தியது. இங்கு எப்படி?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


அண்ணன் இராவணனது காம உணர்வு, கும்ப கருணனைப் போர்க்களத்துக்கு அனுப்பியது: மூக்கு அறுபடவைத்தது: அவமானச் சின்னத்தை ஏற்படுத்தியது, 'கூற்றையும் ஆடல் கொண்டேன்' என்று கூறிக்கொண்டு வீரம் காட்டிப்போர் செய்ய வந்த இந்தப் பெருவீரன், எப்படித்தனது மூக்கை இழந்தான்? தனது. முகத்தில் உள்ள மூக்கையே காக்க முடியாதவன், அகத்தில் உள்ள அண்ணனது மானத்தை எப்படிக் காப்பான்?

ஆனால், மூக்கைக்காக்காத கும்பகருணன் அதன் மூலம் தனது சகோதரன் ஒருவனைக் காத்து விட்டான். அந்தக்சகோதரன் தம்பி வீடணன். தனது மூக்கிழப்புதான். தம்பியைக்காக்க உதவியது என்பதைக் கும்பகருணன் உணர்ந்தானா?

சகோதரியின் மூக்கு இழப்பு, இராவணனைப் படிப்படியாகக் கதைக்களத்துக்குக் கொண்டு வந்தது; இறுதியில் அவனைப் போர்க்களத்துக்கு அனுப்பிவைத்து, அவனது வாழ்க்கைக்கே முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

ஆனால், இந்தச் சகோதரன் மூக்கு இழப்போ, படிப்படியாக, இவனை இராமனைக் காணவைத்து' தம்பிக்கு நல்வாழ்வு அளிக்க உதவியது; தம்பி வீடணனை, இராவணனிடமிருந்து காக்கவைத்தது.

சகோதரியின் மூக்கு அறுபட்ட நிகழ்ச்சி, தனது அண்ணனைக் கொன்றது; இந்தச் சகோதரன் மூக்கு அறுப்பட்ட நிகழ்ச்சி, தனது தம்பி வீடணனைக் காத்துநின்றது. ஒன்று அண்ணனை ஒழித்தது: ஒன்று தம்பியைக் காத்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இவ்வாறு ஒத்திட்டுப் பார்க்கும் போது, சகோதரியின் நிகழ்ச்சியை விட, சகோதரன் மூக்கு அறுபட்ட நிகழ்ச்சி நன்மைக்கு உதவி உள்ளது, நன்று, உயர்ந்தது. இந்த நிகழ்ச்சியை நோக்கி, போர்க்கள நிகழ்ச்சிகளைப் படிப்படியாக நடத்திக் கொண்டு செல்கின்றார் கவிச்சக்கரவர்த்தி.

போர்க்கள நிகழ்ச்சிகள் போர்க்காலத்தில் எப்படி நடக்கின்றன என்பதனைச் சுவையோட்டம் குறையாமல் கவிதைகளை வழங்கும் கலைத்திறன், கவிச்சக்கரவர்த்திக்கே, கைவந்த ஒன்றாகும்.

**போர்க்களம் புகுதல்:**

மூக்கு அறுபடப் போகும் நிகழ்ச்சியை நோக்கி, போர்க்கால நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தும் கவிஞர், கும்பகருணனைப் போர்க்களத்தில் புகுதவைப்பதே ஒரு தனி அழகு. 'உதிரவேல் நோக்கியுள்ளான்' என்ற தொடரின் மூலம் கும்ப கருணனைப் போர்க்களத்துள் புகுதவிட்டுள்ளார் கம்பர்.

கும்பகருணன் போர்க்களச் செயலில் ஈடுபடத் துவங்குவதாக அமைந்த கவிதை அற்புதமான ஒன்றாகும்.

'நீரினை ஓட்டும் காற்றும், காற்றுஎதிர் நிற்கும் நீரும்,
போர் இணை ஆக என்று பொருகின்ற பூசல் நோக்கி,
தேரினை ஓட்டி வந்தான் - திருவினைத் தேவர் தங்கள்
ஊரினை நோக்கா வண்ணம், உதிரவேல் நோக்கி உள்ளான்.' (7447)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


வானர வீரரும் அரக்கவீரரும் எதிர்எதிராக நின்று கடுமையாகத் தாக்கிக்கொண்டிருக்கும் நேரம், கும்பகருணன் போர்க்களம் புகும் நேரமாகும்.

இவன் தனது கையில் உள்ள இரத்தக்கறை படிந்த வேலை நோக்கிய வண்ணம் இருப்பவன். (உதிரம்- இரத்தம்) இப்போது தனது தேரினை ஓட்டிக்கொண்டு வந்தான் இவன், எங்கு? பொருகின்ற பூசல் நோக்கி-வானரரும் அரக்கரும் எதிர்த்துப்போர் செய்து கொண்டிருக்கின்ற இடத்தை நோக்கித் தேரினைச் செலுத்தினான் இவன். அந்தப் போர் எப்படி நடக்கின்றது?

காற்றும் தண்ணீரும் மோதிக்கொள்வது போல் இருக்கின்றது. நீர்நிலையில் உள்ள தண்ணீரை காற்று ஓட்ட முயல்கின்றது. அந்தக் காற்றின் வேகத்தினைத் தாங்கி அதன் எதிர், ஓடாது நிற்கின்றது, நீர். ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுக்கவில்லை.

ஒன்றினை ஒன்று வெல்லவும் இல்லை: தோற்கடிக்கவும் இல்லை, வானரவீரர்கள் இராமபிரானுடைய அருட்காவலில் உள்ளனர். அதனால் நீர்நிலையில் உள்ள தண்ணீரை, ஒத்துள்ளனர், இவரை ஓட்ட முயன்ற அரக்கர் காற்றினை ஒப்பர். நீரும் காற்றுமாக நின்று வானரரும் அரக்கரும் எதிர்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில். கும்பகருணன் தேருடன் போர்க்களம் நோக்கிப் புகுந்தான். அப்போது, திருமகள் (இலக்குமி) தேவரது ஊரை நோக்காமல், தமது இலங்கையையே நோக்கும் வண்ணம் செய்தான் கும்பகருணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'செல்வமகள் (இலக்குமி) தேவர்களது ஊருக்குச் செல்லமுடியாது: இலங்கையிலேதான் இருக்க வேண்டும்.' என்பது கருத்து. இவன். போர்க்களம் புகுந்தவேகம், 'வானரச் சேனைகள் அனைத்தும் மாளும்: எதுவும் உயிர் மீளாது. அரக்கர்க்கே வெற்றி நீளும்' என்று திருமகளைக் கருதச் செய்ததாம்.

கும்பகருணன் பூசலை (சண்டை) நோக்கித் தனது தேரினை ஓட்டி வந்த செய்தியைத் தெரிவிக்கும் இந்தச் செய்யுளில், கவிதா தேவி கற்பனைத் தேர்ஏறி வந்து காட்சியளிப்பதைக்கண்டு மகிழலாம். ரசிகர்களுக்குத்தானே தெரியும் கவிதாதேவி கற்பனைத் தேரில் காட்சியளிப்பது!

**எதிர்ப்போர் :**

போர்க்களத்தில் எதிர்த்துப் போர் செய்பவர்கள் போர் வீரர்கள். எதிர்த்து நிற்கமுடியாதவர்கள் கோழைகள். அப்படிக்கோழைப் பட்டியலுக்கு உரியவர்கள் எந்தத்தரப்பிலும் யாரும் இலர்.

வானரப் படையில் உள்ள வீரத்தலைவர்களைக் கும்பகருணன் எதிர்த்துப் போராடினான். இந்தப் போர்க்களச் செய்தியைச் சுவைபட வரிசைப்படுத்தி யுள்ளார் கவிஞர். எங்கெங்கே எத்தகைய உத்தியைக் கையாண்டால் கவிதைச்சுவை குறையாமல் காப்பியம் நடக்குமோ, அப்படி உத்தியைக் கையாண்டுள்ளார் இங்கு, கம்பர். யுத்தக்களத்தில் நாடக அமைப்பின் மூலமும் [illegible]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



நீலன், அங்கதன், அனுமன், இலக்குவன், சுக்கிரீவன், இராமன் ஆகிய அனைவரிடமும் தனது போர்த்திறனைக் காட்டிவிட்டான் கும்பகருணன். ஒருவரை விடுத்து மற்றொருவரிடம் கும்பகருணன் செல்வதற்குக் காரணம் வேண்டுமே?

முதலில் போர்செய்பவரைக் கொன்றுவிட்டால், அடுத்தவரிடம் செல்லலாம். ஆனால் இவன் யாரையும் கொல்லவும் இல்லை: யாரிடமும் தோற்கவும் இல்லை, இராமபிரானிடம்தவிர. அப்படியானால் ஒருவரை விட்டு மற்றவரிடம் செல்வதற்குக் காரணம். அதனைத்தான், கவிச்சக்கரவர்த்தி சுவையுடன் ஓட்டிச்செல்கின்றார் போர்க்கள நிகழ்ச்சிகளை.

**நீலனும் நிருதனும்:**

நீலன் வானரப் படைத்தலைவர்களுள் ஒருவன். இவனிடம் முதல்போர். இந்தப் போரில் யுத்த தருமத்தைக் கடைப்பிடித்தான் நிருதன்-அரக்கன். அதனால் நீலனை விட்டு நீங்கினான். யுத்த தர்மங்களுள் ஒன்று ஆயுதம் இல்லாதவனிடம் போர் செய்யாதிருப்பது.

........................ ..........."நீலன் தன்னை
எய்த்துஉயிர் குடிப்பல் என்னா எற்றினான், இடது கையால்
மெய்த்தலை சூலம் ஓச்சான் வெறுங்கையான் என்று வெள்கி'

நீலன் வெறுங்கையினனாக இருக்கின்றானே, என்று வெட்கப்பட்டு, அவன் மேல் சூலத்தைச் செலுத்தாதவனானான் கும்பகருணன். இது, யுத்த தருமத்தைக் கடைப்பிடிப்பவன் இவன்' என்று காட்டுகின்றது. (வெள்கி-வெட்கம் கொண்டு)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


## அங்கதனும் அரக்கனும்:

நீலன் கும்பகருணனிடம் தளர்ந்தது கண்டு அங்கதன், அரக்கனை எதிர்த்தான். அங்கதன் வாலியின் மகன்; 'நீ இது பொறுத்தி' என்று சொல்லி இராமபிரான் கொடுத்திருந்த வாளினை ஏந்தியவன்: வானரப்படைத் தலைவருள் ஒருவன்.

அங்கதன் தனக்கு ஆயுதமாகக் கொண்டது ஒரு மலையை. 'ஆண்டுச் சால நீண்டது ஓர் நெடுந்திண் குன்றம் (மலை) நில முதுகு ஆற்ற வாங்கி 'மாண்டனன் அரக்கன் தம்பி' என்று உலகு எலாம் வாழ்த்தத் தூண்டினன்.

ஆனால், அங்கதனால் எடுத்து எறியப்பட்ட (தூண்டினான்) மலை கும்பகருணனை என்ன செய்தது? 'அதனை அன்னான் ஒரு தனித்தோளின் எற்றான்.' கும்பகருணன் அந்த மலையைத் தனது தோளில் ஏற்றுக்கொண்டான். அதனால் அந்த மலை சுக்கு நூறாகத்தூள் தூளாயிற்று. மலையைத்தூள் பண்ணிய மறப்போர் வீரன், அங்கதனை அடிக்கப் போகும் போது, அனுமன் எதிர்க்க வந்தான்.

## மாருதியும் மறப்போர்வீரனும் :

மாருதியின் - அனுமனின் போராற்றலை-பேராற்றலை இலங்கை நகரில் ஏற்கனவே கண்டவன் கும்பகருணன். இருந்தாலும் போர்க்களத்தில் விட்டுக் கொடுப்பானா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அனுமனுக்கும் அரக்கனுக்கும் மிகக்கடுமையான போர்தான் நடந்திருந்திருக்கவேண்டும். ஆனால், அனுமனின் வஞ்சினம் (சபதம்) ஒன்று, அதைத் தடுத்துவிட்டது. இந்தச்சபதம், யாருக்கு உதவ வேண்டுமென்று செயல்பட எண்ணினானோ, அந்தச் செயல்பாட்டுக்கும் தடையாகி விடுகிறது. இது எல்லாம், கும்பகருணன் மூக்கறு படுதலுக்குக் காரணமாகின்றது. அனுமன், கும்பகருணனிடம் முதலில் ஒரு வஞ்சினம் செய்கின்றான். அது என்ன?

'எறிகுவென் இதனை நின்மேல்; இமைப்புறும்
அளவில், ஆற்றல்
மறிகுவது அன்றி, வல்லை மாற்றினை
என்னின், வன்மை
அறிகுவர் எவருப்; பின்னை யான்உன்னோடு
அமரும் செய்யேன்;
பிறிகுவென்; உலகில், வல்லோய்! பெரும்புகழ்
பெறுதி' என்றான் (7471)

கும்பகருணனது ஆற்றலை உள்ளபடி உணராது பேசிய பேச்சு இது, எல்லாவற்றையும் நுனித்து உணரும் ஆற்றல் பெற்றவனாகிய அனுமனாலேயே, கும்பகருணனது தோள் ஆற்றலின் பெருமையைக் கணிக்க முடியவில்லை.

'கும்பகருணா! இந்த மலையை உன்மேல் தூக்கி எறிவேன்: அத்தோடு உன் வலிமையெல்லாம் அழிந்து போய்விடும். அப்படி அழியாமல், இதனை நீ தள்ளினாய் ஆனால் உன் வல்லமையை எல்லோரும் அறிவார்கள். பின்பு உன்னோடு நான் போர் செய்யமாட்டேன்: போய்விடுவேன். வல்லவனே! நீ இந்த உலகில் பெரிய புகழைப் பெறுவாய்' என்று அனுமன் கூறினான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


அதனை அப்படியே ஏற்றுக் கொண்ட கும்பகருணனும் 'நீ எறியும் மலைக்கு, நான் தளர்ச்சி உறுவேனாயின், நான் உனக்குத் தோற்றவன் ஆவேன்; என்று கூறினான். இந்த மலைப் போரில் கும்பகருணன்தான் மலைக்காமல் வென்றான். எறிந்த கல்மலை, கும்பகருணனது தோளில் பட்டு நூறு துகள்களாகச் சிதைந்து விழுந்தது. அதனால், செய்த வஞ்சினத்தின்படி, அனுமன் அரக்கனோடு போர்செய்ய இயலாதவ னாயினான். இந்தச் சபதம், பிறகு பெரிய துன்பத்திற்குள்ளாக்குகிறது. கதையை அப்படிச் சுவைப்பட நடத்துகின்றார் கவிஞர்பிரான்:

## இலக்குவனும் கும்பகருணனும் :

அனுமன் கை மடக்கப்பட்டதால், கும்பகருணனது பேராற்றலைக் கண்டு வானரப் படைகள் அஞ்சின-நடுங்கின: ஒடுங்கின. அதனைக்கண்ட இலக்குவன் கும்பகருணனை எதிர்க்க முன்வந்தான். இலக்குவனைப் பார்த்ததும் கும்பகருணனுக்குத்தன் சகோதரி சூர்ப்பணகையின் நினைவு வந்து விட்டது. 'இவன் கை தானே, நமது தங்கையின் மூக்கை அரிந்தது: அதற்குத் தண்டனை கொடுத்து விட வேண்டும்.' என்று துடித்தான்: அந்தத்துடிப்பு, கும்பகருணனது வாயினின்றும் சொற்களாக வெடித்தது.

**"இராமன் தம்பி நீ: இராவணன் தம்பிநான்; இருவேம்**
**பொரா நின்றேம்; இது காணிய வந்தனர், புலவோர்;**
**பராவும் தொல்செரு முறைவலிக்கு உரியன பகர்ந்து,**
**விராவு நல்அமர் வினைக்குதும் யாம்என விளம்பா?**

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



என்று இருவரது நிலையையும் ஒத்திட்டுக் காட்டிய பிறகு, கும்பகருணன் சூர்ப்பணகையை நினைவூட்டிப் பேசுகின்றான்.

'பெய்தவத் தினோர் பெண்கொடி,
எம்முடன் பிறந்தாள்;
செய்த குற்றம்ஒன்று இல்லவள்
நாசி வெஞ்சினத்தால்
கொய்த கொற்றவ! மற்றுஅவள்
கூந்தல் தொட்டுஈர்த்த
கை, தலத்திடைக் கிடத்துவென்
காக்குதி' என்றான். (7506)

எதிரில் நிற்கும் இலக்குவன் மேல்அடங்காக் கோபம் கொண்டு கும்பகருணன் போர் செய்வதற்குக் காரணமாக அமைகின்றது இந்தப்பேச்சு.

இது, கும்பகருணன் தனது தங்கை சூர்ப்பணகையிடம் எவ்வளவு பாசம் உடையவனாக இருந்துள்ளான் என்பதையும், அவனிடம் ஒரு குற்றமும் காணாத அன்பினனாக இருந்துள்ளான் என்பதையும், காட்டுகின்றது. மேலும், அவள், இந்த அரக்கர் குடும்பத்தில் பிறந்திருப்பதை, தங்களது பெரிய தவப்பயன் என்று கும்பகருணன் கருதுவதையும் காட்டுகின்றது.

இலக்குவனை அழைப்பதே, சூர்ப்பணகையின் மூக்கை அரிந்த செயலை வைத்துதான். (நாசி-மூக்கு) 'அவள் எந்தக் குற்றமும் செய்யாதவள். அவளது மூக்கை அறுத்தவனே!' என்று அழைக்கின்றான் கும்பகருணன். அவள் செய்தகுற்றம் இவனுக்குத் தெரியாதல்லவா! இவள் மூக்கறுபட்ட அவமானத்தை, இந்தச் சகோதரன் ஒருவன்தான் நினைக்கின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இராவணன்கூட நினைக்கவில்லை. 'கரனையும் மறந்தான்; தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான் உரனையும் மறந்தான்' என்பதுதான் இராவணனது நிலை. இவனுக்கு முன்னால் மூக்கு அறுபட்ட நிலையில் வந்து நின்றாள் அரக்கி. அப்படியிருந்தும், நினைத்துச் செயல்படவேண்டிய பெரிய சகோதரனே மறந்தான்.

ஆனால், கும்பகருணனோ, மூக்கு அறுபட்ட நிலையில் தங்கையைப் பார்த்ததும் இல்லை. பார்க்காத நிலையிலும் இவ்வளவு ஒரு உணர்ச்சி வேகம் வருகிறது என்றால், இது, இவனது சகோதரப்பாசத்தின் ஆழத்தைக் காட்டவில்லையா?

'அவள் கூந்தல் தொட்டு ஈர்த்த, கை, தலத்திடை வீழ்த்துவன்: காக்குதி' என்று எச்சரித்த கும்பகருணனுக்கு இலக்குவன் கொடுத்தபதில், அவனைச் சிந்திக்கவைக்கும்,

'........................'மாற்றங்கள் நும்பால்
வில்லினால் சொல்லின் அல்லது, வெந்திறல் வெள்கச்
சொல்லினால் சொலக்கற்றிலம் யாம்'எனச் சொன்னான்,

'உன்னிடத்தில் என் வில்தான் பேசும்: உன்வார்த்தைக்குப் பதிலை, சொல்லினால் சொல்லக்கூடிய கல்விக்கூடத்தில் நான் கற்றதில்லை. என்வில் உனக்குத் தக்கபதில் சொல்லும்;' என்று இலக்குவன் கூறினான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



போர்க்களத்தில் வீரச்செயல்கள் தான் நிறைந்திருக்கும். அதற்கிடையில் ஒரு நாடக அமைப்பாக இந்தக்காட்சியை அமைத்திருப்பது. பாலைவனத்தில் ஒரு சோலைவனத்தின் வனப்பைக் காட்டுவதுபோல் உள்ளது.

இலக்குவன் கூறுவதாக அமைந்த இந்தத் தொடர்,

"வாளினால் பேசல் அல்லால் வாயினால் பேசல் தேற்றேன்'

என்ற சிந்தாமணிக் காப்பியத்தின் கவிதைத் தொடரை நினைவு படுத்துகின்றது.(சிந் - 257)

இருவருக்கும் கடும்போர், மண்ணில் நின்ற வானரர்களும் (குரங்குகளும்) விண்ணில் நின்ற வானவர்களும் (தேவர்களும்) போர்ச் செயல்களைக் கண்டு வியந்து போயினர்; அஞ்சினர்: நடுங்கினர். இலக்குவனது வில்லாற்றலுக்குப் பதில் கொடுக்க முடியவில்லை கும்பகருணனால். அதனால். வேறு பக்கம் திரும்பினான் இவன். திரும்பியபக்கம் நின்றவன் சுக்கிரீவன்.

**குரக்கினத்தானும் அரக்கினத்தானும் :**

சுக்கிரீவனும் கும்பகருணனும் நேருக்கு நேராக நின்று கடும்போர் செய்தனர். இருப்பினும், கும்ப கருணன் மலை போன்ற பெருத்த உடலினன், அதனால், சுக்கிரீவனை, 'மொய்ம் பினால் (வலிமை) பொறுக்கிலாவகை நெடும் புயங்களால் பிணித்து இறுக்கினான் கும்பகருணன்.' இறுக்கம் தாங்காமல் சுக்கிரீவன் உணர்வு இழந்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



உணர்வு இழந்த சுக்கிரீவனை, கும்பகருணன் இலங்கை நகருக்குத் தூக்கிக்கொண்டு செல்லத் திட்டமிட்டான். காரணம். 'நமது அரசனே போய் விட்டானே நாம் போர் செய்வது எதற்காக?' என்று எண்ணிக்கொண்டு வானர வீரர்கள் எல்லாம் கிட்கிந்தைக்குச் சென்று விடுவார்கள்' எனக் கும்பகருணன் கருதினான். இந்தக் கருத்துதான் சுக்கிரீவனைக் கும்பகருணன் தூக்கிக்கொண்டு செல்லத் தூண்டியது.

தூக்கிக்கொண்டு புறப்பட்டுவிட்டான் அரக்கன். அவன் நோக்கம் குரங்கினத்தானை (சுக்கிரீவனை) இலங்கை நகருக்குள் அடைத்துவிட வேண்டும் என்பது. அண்ணன், சீதையை இலங்கைச் சிறைக்கு உரியவளாக்கினான். தம்பி (கும்பகருணன்) சுக்கிரீவனை - கிட்கிந்தை அரசனை இலங்கை நகர்ச்சிறையில் வைத்தான் என்ற பெயர் வரட்டுமே என எண்ணினான் போலும்! சீதையைக் கண்டுவந்த அனுமன்தான் இங்கும் செல்லவேண்டும். எங்கும் செல்லவேண்டாம்!

நின்ற இடத்திலிருந்தே, தடுத்தால் போதும். அது செய்ய இயலாத நிலையில் கையைப் பிசைந்துக் கொண்டு நிற்கின்றான் அனுமன். தன்னால், செய்யக்கூடிய காரியத்தையும் செய்யமுடியாமல். கிட்கிந்தை அரசனுக்கு வந்த ஆபத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கும் அனுமனது பரிதாபநிலையைக் காட்டுகிறது ஒரு கவிதை. இது, கம்பரது, கதையை நடத்திச்செல்லும் கலைத்திறனுக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது என்னலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



'ஒருங்கு அமர் புரிகிலேன், உன்னொடு யான்'என,
நெருங்கிய உரையினை நினைந்து, நேர்கிலன்,
கருங்கடல் கடந்தஅக் காலன், காலன்வாழ்
பெருங்கரம் பிசைந்து அவன் பின்பு சென்றனன்.'
(7544)

கும்பகருணனின் இலங்கைப் போக்கை, ஓடிச் சென்று தடுக்கும் வலிமைபெற்ற காலும் உண்டு: அவனைப் பிசைந்துத் தள்ளும் கையும் உண்டு. ஆனால் ஒன்றும் செய்ய முடியாமல் தன்கைகளைப் பிசைந்துகொண்டு நிற்கின்றான் அனுமன். ஏன்? முன் செய்த வஞ்சினம் தடுக்கின்றது. என்ன வஞ்சினம்? 'உன்னோடு யான் ஒருங்கு அமர் புரிகிலேன்' (யுத்தம்) என்ற வஞ்சினம். இதை நினைத்து, கும்பகருணனோடு போர் தொடுக்காத நிலையினன் ஆனான் அனுமன்.

'காலன், காலன் வாழ்பெருங்கரம்'-கவிதைக்குச் சுவையூட்டும் பகுதி. கருங்கடலைக் கடந்த வன்மை நிறைந்த கால்களை உடையவன்: எமன் வாழக் கூடிய கையை உடையவன். (காலன்-எமன்: கரம்-கை) அனுமனின் கைக்கு அகப்பட்டவர்கள் யாரும் எமனிடமிருந்து தப்பமுடியாது என்பது கருத்து.

இந்தவஞ்சினம், சுக்கிரீவனால், கும்பகருணனின் மூக்கு கடிபடும் நிலைக்கு உதவுகின்றது. அனுமனால் கும்பகருணன் தடுக்கப்படாத நிலையினைக் கண்ட வானரர்கள், தமது அரசனைக் காப்பதற்கு யாரிடம் செல்வது?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



காத்தல் கடவுளிடம் தானே செல்லவேண்டும்! அந்தக்கடவுள் இப்போது இராமபிரானாக அல்லவா வந்துள்ளான்! இதைத் தெரிந்தோ தெரியாமலோ, இராமபிரானைச் சென்று அடைந்தனர் வானர வீரர்கள். இதனைக்கவிதை இந்தப்பொருளில் தெரிவிக்கிறது.

**'ஆயிரம் பெயரவன் அடியில் வீழ்ந்தனர்:'**
பிறகு,
**'நாயகர் எமக்குஇனி யாவர், நாட்டினில்'** என்று கேட்டுக்கொண்டனர் வானர வீரர்கள்.

**இராமபிரான் அடைக்கலம் காத்தல் :**

சுக்கிரீவன் இராமபிரானைச் சரணம் அடைந்தவன், அடைக்கலம் அடைந்தவனைக் காப்பாற்ற வேண்டியது பெருமானுடைய கடமையல்லவா? உடனே புறப்பட்டான்.

அடைக்கலமானவனைக் காப்பாற்றுவது மட்டும் அல்ல! கும்பகருணனால் தூக்கிச் செல்லப்பட்ட அவமானத்தையும் போக்கவேண்டும். அவமானம் எப்படி நீங்கும்? யார் தனக்கு அவமானத்தை உண்டாக்கினானோ. அவனை இதைவிட பெரிய அவமானம் அடையச் செய்தால் போதும்.

அப்படி, காப்பாற்றப் படுகின்றான் குரக்கினத் தான். (சுக்கிரீவன்) இதற்கு ஏற்ற முறையில் போர்க்கள நிகழ்ச்சி தொடர்கின்றது. சுக்கிரீவனைச் சுமந்து சென்ற அரக்கன், இலங்கை நகர் வாயிலை நெருங்கும் முன்னம் இராமபிரான் வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகள் பலவாகத் தோற்றம் பெற்று வாயிலை நெருங்கிவிட்டன; அடைத்துவிட்டன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அடைபட்டுக்கிடக்கும் வாயிலைக்கண்ட கும்ப கருணன் திரும்பிப் பார்த்தான். திரும்பிய உடன், அவன் நெற்றிக்கு நேராகவந்தது ஒரு இராமபாணம்' அதன்பயன், நெற்றியிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்தது: இரத்தப் பெருக்கு, சுக்கிரீவன் மேல் வீழ்ந்தது. அதனால் இவன் மூர்ச்சை தெளிந்தான்: 'எங்கிருக்கின்றோம்' என்பதை உணர்ந்தான்.

அவனது உணர்ச்சி, தன்னை அவமானப்படுத்திய கும்பகருணனைப் பெருத்த அவமானத்துக்கு உள்ளாக்கியது. இந்த அரக்கனின் கவனம் முழுதும் தனது போக்கையும் நோக்கையும் தடுத்த இராமபிரான் பக்கம் திரும்பிவிட்டது. இதைக் கவனித்த சுக்கிரீவன், தனது வாயைத் திறந்தான்: கும்பகருணனது மூக்கையும் காதையும் திறந்த வாயினுள் அடைத்தான்.

சுக்கிரீவனை இலங்கை நகருள் அடைக்க எண்ணிச் செயல் பட்டான் அரக்கன். வாயில் இராமபிரான் அம்பினால் அடைபட்டது. அதன்பயன், அரக்கனின் மூக்கும் காதும் சுக்கிரீவனது வாய்க்குள் அடைபட்டது. 'நினைக்கும் கேடு தனக்கு' என்ற பழமொழி பொய்யாகுமா?

மூக்கையும் காதையும் கடித்தான் குரக்கினத் தான்: துடித்தான் அரக்கினத்தான். கடித்ததும் சுக்கிரீவன் அடித்துக் கொண்டு இராமன் பக்கம் வந்து சேர்ந்து கொண்டான். வானரவீரர்கள், தமது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


அரசன் வெற்றியுடன் மீண்டது கண்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தனர். போர்க்களத்தில் ஒரு பக்கம் மகிழ்ச்சி நிகழ்ச்சி என்றால், மறுபக்கம் இகழ்ச்சி நிகழ்ச்சிதானே! அரக்கர் பக்கம், அவலத்தைச் சுமந்தது.

சுக்கிரீவனைச் சுமந்து வந்த கும்பகருணன் இப்போது அவமானத்தைச் சுமக்கின்றான். முகத்தில் உள்ள மூக்குபோனபிறகு, மானம் ஏது? அதுவும் எதிரியினிடத்தில், முகத்து அழகுக்குரிய மூக்கைப் பறிகொடுத்தபிறகு. இவனது வீரத்துக்கு என்ன அழகு!

இருப்பினும், தனது வீரச்செயல்களை, இராமபிரானிடத்தில் காட்டத் தொடங்குகின்றான் அரக்கன். தொடக்கம், ஒரு பேச்சாக வெளி வருகின்றது.

**'உம்பியை முனிந்திலேன்; அவனுக்கு ஊர்தியாம்**
**தும்பியை முனிந்திலேன், தொடர்ந்த வாலிதன்**
**தம்பியை முனிந்திலேன் சமரம் தன்னில்யான்-**
**அம்புஇயல் சிலையினாய் - புகழ்அன்று ஆதலால்'**
**(7553)**

என்று இராமபிரானைப் பார்த்துக் கூறினான் கும்பகருணன். போர்க்களத்தில், இலக்குவன், அனுமன், சுக்கிரீவன் இவர்களோடு போர்செய்வதில் கும்பகருணனுக்குப் புகழ் இல்லையாம். இராமபிரானோடு போர்செய்தல்தான், இவனுக்குப் புகழாம். அதனால் 'தேடினென் திரிந்தனென் நின்னை' என்று இராமபிரானைப் பார்த்துக் கூறுகின்றான் கும்பகருணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


**தனித்து நிற்றல் :**

அரக்கன் ஆற்றல், இராமபிரானைத்தவிர மற்றைய எதிரிகளிடம் பயன்பட்டது. ஆனால் இங்கு, பலனளிக்குமா? கும்பகருணன் வாள்கொண்டும் போர் செய்தான்: வில்லாற்றலையும் காட்டினான். எதுவும் இந்த எதிரியிடம் பயன்படவில்லை. இராமபிரானது வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு ஒன்று, நூறாகி, பலவாகி, கும்பகருணனுக்குத் துணைக்குவந்த சேனைகள் அத்தனையையும் அழித்தது. கும்பகருணனுக்கு உதவிக்கு வந்த சேனை அழிந்தது மட்டும் அல்ல! அவன் ஏறிவந்த தேர், அதனை இழுத்து வந்த குதிரைகள், கையில் ஏந்திய போர்க்கருவிகள் அவ்வளவும் அழிந்து ஒழிந்தன.

இப்போது எந்தத்துணையும் இன்றித் தனித்து நிற்கின்றான் இவன். இராமபிரான் ஒரு அம்பு போட்டால், கும்பகருணன் கதை முடிந்துவிடும். ஆனால், யுத்ததருமத்தைக் கடைப்பிடிக்கும் இராமபிரான், கும்பகருணனுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கின்றான்.

முதல் நாள் போரில், எல்லாம் இழந்து தனித்து நின்ற இராவணனைப் போன்றுதான், தம்பி இன்று தனித்து நிற்கின்றான். அஃறு. அண்ணனுக்குச் சொன்னது போன்றுதான், இன்று தம்பிக்கும் சொல்கின்றான் இராமபிரான்.

சகோதரர்கள் இருவரையும் ஒன்று போலத் தான் மதிப்பிட்டான் இராமபிரான். ஆனால், வந்த பதில் அண்ணனைவிட, தம்பி, மானம் நிறைந்தவன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


என்பதைக் காட்டுகின்றது. அன்று இராவணனுக்குச் சொன்னதைவிட, இன்று கும்பகருணனுக்கு, விரிவாக விளக்கமாக எடுத்துக் கூறுகின்றான் இராமபிரான்.

**'ஏதியோடு எதிர்பெருந்துணை இழந்தனை;**
**எதிர்ஒரு தனி நின்றாய்;**
**நீதியானுடன் பிறந்தனை ஆதலின்,**
**நின்உயிர் நினக்கு ஈவென்;**
**போதியோ? பின்றை வருதியோ? அன்றுஎனின்,**
**போர்புரிந்து இப்போதே**
**சாதியோ? உனக்கு உறுவது சொல்லுதி,**
**சமைவுறத் தெரிந்து அம்மா.' (7594)**

'உனக்குப் பொருத்தமானதைப் பொருந்த ஆராய்ந்து சொல்க' என்று இராமபிரான் கும்பகருணனிடம் கேட்டான். கும்பகருணனுக்குப் பொருத்தமானது மூன்று கொடுக்கப்பட்டுள்ளது. இதில் எதனை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். அது அரக்கன் விருப்பத்துக்கு விடப்பட்டுள்ளது. ஒன்று: இலங்கைக்குத் திரும்பிப் போதல். (போதியோ) இரண்டு: மறுநாள் போருக்கு வருதல். (பின்றை வருதியோ) மூன்று இப்போதே போர்செய்து இறத்தல். (சாதியோ)

நீதியானாகிய வீடணனுக்குச் சகோதரனாகப் பிறந்திருப்பதால், கும்பகருணனுக்கு உயிர்ப்பிச்சை கொடுப்பதாக இராமபிரான் கூறுகின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


கும்பகருணன், தனது, கை வாளையும், தனக்கு வந்த பெரிய சேனை முழுவதையும் இழந்து தனித்து நிற்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஏதி-வாள்)

**கும்பகருணன் மான உரை :**

இராமபிரான் கேட்ட கேள்விகளுக்கு, தனக்குப் பொருத்தமானதைக் கூறுகின்றான் கும்பகருணன்.

'நோக்கு இழந்தனர் வானவர் எங்களால்,
அவ்வகைநிலை நோக்கி'
'தாக்குஅணங்கு அனையவள், பிறர்மனை' எனத்
தடுத்தனன்: "தக்கோர்முன்
வாக்குஇழந்தது" என்று அயர்வுறுவேன் செவி-
தன்னொடு மாற்றாரால்
மூக்குஇழந்த பின் மீளல் என்றால். அது
முடியுமோ? முடியாதாய்! (7597)

'போதியோ? வருதியோ? சாதியோ?' என்று கேள்விகேட்ட இராமபிரானுக்கு, 'முடியுமோ?', என்று கேள்வியாகவே தனக்குப் பொருத்த மானதைக் கூறினான் கும்பகருணன். இதில் அவனது தன்மான உணர்ச்சி வெளிப்படுகின்றது.

'அழிவில்லா தவனே! (முடியாதாய்) பகைவரால், காதும் மூக்கும் இழந்தபிறகு, இலங்கைக்கு மீளுதல் என்பது முடியுமா? முடியாது. ஏன்? அரக்கர்களாகிய எங்களது வன்மையால் தேவர்கள் தமது பெருமையை இழந்தனர். அத்தகைய பெருமை மிக்க எமது வாழ்வு சீர்குலையும் வண்ணம், எமது அண்ணன் தீயகாரியம் செய்து விட்டான். அதனைத் தடுப்பதற்கு. தெய்வம் போன்றவளான சீதாப் பிராட்டி பிறன்மனைவி-எடுத்துவரலாமா' என்று என் அண்ணனை வைதேன். 'உனதுசெயலால். தகுதியுடைய பெரியவர் முன்பு நமது பேச்சு மதிப்பிழந்தது' என்று எடுத்துக் காட்டினேன். எனது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



அறவுரை எதையும் அண்ணன் இராவணன் கேட்க வில்லை. அதனால் சோர்வுற்றவனாய்ப் போர்க்களம் வந்துள்ளேன். அரக்கர் குலத்துக்கு அண்ணன் ஏற்படுத்திய அவமானம் போதாதென்று, நானும் இந்த அவமானச் சின்னத்தோடு இலங்கைக்கு எப்படித்திரும்புவேன்' என்று தனது கருத்தைத் தெரிவித்தான் கும்பகருணன்.

இந்தப்பேச்சு, தனது அண்ணனைவிட இவன் மானத்தை மதிப்பவன் என்பதைக் காட்டுகின்றது. பிறகு 'என்ன செய்வேன்' என்பதையும் சொல்லி விட்டு, செயலில் இறங்கிவிட்டான் வீரக் கும்ப கருணன். 'உங்களை எதிர்த்துப் போர் செய்வேன்' என்பது அவனது வீரச்சொல். போர் செய்வதற்குத் தயாராக, இடக்கையில்நெடுஞ் சூலத்தை ஏந்துதலும், வலக்கையில் ஒரு மலையைப் பறித்து வைத்துக் கொள்ளுதலும் அவனது செயல்.

**பயனற்றவை :**

இராமபிரானது போராற்றலுக்கு முன்னால் இவைகள்யாவும் செயல் இழந்தன. ஆயுதம் அழிந்த பிறகு, அவனுடைய உடல் உறுப்புகள் ஒவ்வொன்றாக அறுபட்டுவந்தன. கால்கள், கைகள் போர்ச்செயலுக்கு உதவி வந்தன. இவைகள் ஒவ்வொன்றாக இராமபிரானது அம்பால் அறுபட்ட பிறகும் கும்பகருணன் தனது போர்ச்செயலை நிறுத்த வில்லை. வாயினால். மலையைக்கவ்வி எடுத்து எதிரியின் மேல் எறிந்தான் வீர அரக்கன்.

தோற்பதும், உயிர் போவதும் உறுதியானது தான் என்று தெரிந்த பிறகும், தனது போர்த்திறனை இவ்வளவு கடுமையாகக் காட்டுகின்றான் என்றால், இது கும்பகருணனது வீரத்துக்கும் மானத்துக்கும் அண்ணன்பால் கொண்ட பாசத்துக்கும் எடுத்துக் காட்டு. எதுவும் தன் வீரச்செயலுக்குப் பயன்படாது ஒழிந்ததை இறுதியில் உணர்ந்தான் வீர அரக்கன். உணர்ந்த பிறகு ஒரு தீர்மானத்துக்கு வந்தான்.

அது என்ன தீர்மானம்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# 9

# கும்பகருணன் விண்ணப்பம்

**சிந்தனை :**

மனிதன் செயலற்றுக் கிடக்கும் போதுதான் சிந்திக்கத் தொடங்குகின்றான். செயலற்றகாலத்துத் தோன்றுவது நற்சிந்தனையாகவே அமையும்.

புறவலிமையிருக்கும் வரை, தனது காரியத்தைச் சாதித்துக்கொள்வதற்கு, அதனைப் பயன்படுத்திப் பார்க்கின்றான். தனதுகாரியம் நல்லதோ கெட்டதோ எதுவாகயிருந்தாலும் அதனைச்சாதித்துக் காட்ட வேண்டும் என்று துடிக்கின்றான் மனிதன்.

அந்தக்காரிய நிறைவேற்றத்துக்குத் தடையாக இருப்பது, தன்னினும் பன்மடங்கு மிகுந்த சக்தி உடையதாக இருப்பினும், அதனையும் எதிர்த்துப் பார்க்கின்றான் மனிதன். எதிர்த்து நின்று தனது ஆற்றல் முழுவதும் பயனற்றுப் போனபிறகுதான். தனது அறியாமைச் செயலுக்கு வருந்துகின்றான். இந்த வருத்தம், அவனைச் சிந்தித்துப் பார்க்கத் தூண்டுகின்றது. இந்த நிலைக்கு வந்து விட்டான் போர்க்களத்தில் குற்றுயிருடன் கிடக்கும் கும்பகருணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'ஆவி அகத்ததோ புறத்ததோ' என்று அறியாத அழிவு நிலையில், கிடக்கும்போது இவன் பேசும் பேச்சுதான் அறிவுப் பேச்சாக அமைகின்றது. ஆவிபோகும் வேளையில் அறிவுவருகின்றது. இந்த அறிவுப்பேச்சை வெளியிடுவதற்குத்தான், இவனது ஆவி உடலில் சிறிது நேரம் நிற்கின்றது போலும்! இந்த இறுதிப் பேச்சுதான் இவன் தம்பிக்கும் இவனுக்கும் உறுதி (நன்மை) தருவதாக அமைகின்றது.

'யார் உளர்களை கண்?' என்ற உணர்வு மனிதனுக்கு வந்து விடுமானால், அவனது சொல்லும் செயலும்! பயன் தருவதாகவே அமையும். அவனுக்கு மட்டும் அல்ல! அவனது வம்சத்துக்கே பயன் அளிக்கும். அத்தகைய நிலையில் தெளிவான சிந்தனையோடு இராமபிரானைப் பார்த்து விண்ணப்பித்துக் கொள்கின்றான் கும்பகருணன், விண்ணப்பம், சாதாரணமானதல்ல! அது, அடிவீழ்ச்சி விண்ணப்பம்.

இத்தகைய விண்ணப்பத்தை யாரிடத்தில் சேர்ப்பிப்பது? இறைவனிடத்தில் அல்லவா! இப்போது, தனக்கு எதிரில் நிற்கும் இராமபிரானைத் தெய்வமாகக் காண்கின்றான்: விண்ணப்பம் கொடுக்கின்றான். 'அழிவில்லாதவனே! நின்னை வேண்டுகின்ற பொருள்' என்று கும்பகருணன் சொல்லிக் கொடுக்கும் விண்ணப்பத்தில் இரண்டு பகுதிகள் அடங்கியுள்ளன. ஒன்று தம்பியைப் பற்றியது. மற்றொன்று தன்னைப் பற்றியது தம்பியைப் பற்றியதுதான் முதலில், தன்னைப் பற்றியது பிறகு. இறுதி நேரத்தில் இவன் உரைத்த உரைதான், இவனை இன்னான் என்று உலகுக்குக் காட்டுகின்றது. சாகும்போது சொன்னசொல், கும்பகருணனை, எல்லார் உள்ளத்திலும் சாகா வண்ணம் நிறுத்திவைக்கின்றது. அப்படிச் சொன்னதுதான் என்ன?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


கும்பகருணனது இப்போதைய நிலையைப் பற்றி, இலக்கியத் திறனாய்வுச் செல்வராய வ.வே.சு அய்யர் கூறியிருப்பது அனைவருடைய சிந்தனையிலும் இருத்துவதற்குரிய தொன்றாகும். 'கும்பகருணன் இறக்கும் போது ஆன்மாவின் சத்துவ ஒளி ஏற்பட்டே இறந்தான்' - 'ஆம், மானவெள்ளம் மனத்தைவிட்டு வடிந்த பிறகு, அது மறைத்திருந்த சத்துவம் வெளிப்படுதல் இயற்கைதானே!' என்பது அய்யர் அவர்களின் கும்பகருண இறுதி நேர மதிப்பீடு.

**விண்ணப்பம்: தம்பியைப் பற்றியது:**

"புக்குஅடைந்த புறவுஒன்றின் பொருட்டாகத் துலைபுக்க
மைக்கடங்கார் மதயானை வாள்வேந்தன் வழிவந்தீர்!
இக்கடன்கள் உடையீர்! நீர் எம்வினை தீர்த்து உம்முடைய
கைக்கு அடைந்தான் உயிர்காக்கக் கடவீர், என்கடைக்கூட்டால்"

கும்பகருணன் தனது கடைசி விருப்பத்தை (கடைக்கூட்டு) முதலில் வெளியிடுகின்றான். தனது அன்புத் தம்பியைக்காக்க வேண்டியதை இராமபிரானது கடமையாகத் தெரிவிக்கின்றான் இவன். 'உம்முடைய கைக்கு அடைந்தான் உயிர் காக்கக்கடவீர்' என்பது வேண்டுகோள். 'உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்று என் தம்பி சொல்லிக் கொள்ள வேண்டியதை, நான் சொல்லிக் கொள்கின்றேன்' என்று தெரிவிக்கின்றான் கும்பகருணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'என் தம்பி வீடணன் எமது அரக்கர் குலத்துக்குரிய தீவினைகளை எல்லாம் அறவே ஒதுக்கி விட்டு, உம்மை வந்து சேர்ந்துள்ளான். அதனால், எங்களைப் போன்று அவன் தாக்கப் படுதற்குரியவனல்ல! காக்கப்படுதற்குரியவன்' என்ற கருத்தை 'எம்வினை தீர்த்து' என்ற தொடரின் மூலம் குறிப்பிடுகின்றான் கும்பகருணன். தம்மைச் சார்ந்தவரைக் காப்பது கடமை என்பதை, மரபின் வரலாற்றைச் சுட்டிக்காட்டி வற்புறுத்துகின்றான் இவன்.

'சாதாரணமான பகுத்தறிவற்ற பறவையாகிய புறா, தன்னிடம் வந்ததற்காக, அதைக்காப்பாற்ற, தனது உயிரையும் கொடுக்கத் துணிந்தான் சிபிச்சக்கரவர்த்தி. புறாவின் எடைக்கு எடை தருவதற்கு தராசுத்தட்டில் (துலை-தராசு) ஏறினான் அந்தப் பேரரசன். அப்படிப்பட்ட நீர், காத்தலைக் கடமையாகக் கொண்டவரல்லவா? அதனால் எமது தம்பியின் உயிர் காக்கக்கடவீர்' என்று வேண்டிக்கொண்டான் கும்பகருணன். (புறவு-புறா)

**தம்பியின் நெறி :**

தம்பி வீடணன், இராமபிரானிடம் அடைக்கலமாக வந்தான் என்பதற்காக மட்டும் காக்கப் படுதற்குரியவனல்ல! அவன் பின்பற்றிய நன்னெறிக்காகவும், அவன் காக்கப்படுதற்கு உரியவனாவான். அவன் பின்பற்றியது நீதிநெறி. அதற்கு ஆபத்துவரும். அதனால், அவனை எப்படிக் காக்கவேண்டும். ஆபத்துஎன்ன? என்பதை விரிவாகக் கூறுகின்றான் கும்பகருணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



'நீதியால் வந்ததுஒரு நெடுந்தரும நெறிஅல்லால்,
சாதியால் வந்தசிறு நெறிஅறியான் என்தம்பி;
ஆதியாய்! உனைஅடைந்தான்: அரசர்உருக்
கொண்டு அமைந்த
வேதியா! இன்னம்உனக்கு அடைக்கலம் யான்
வேண்டினேன்.'

தனது தம்பியைக் காப்பது, இராமபிரானது கடமை என்பதை மரபுவழியை எடுத்துக்காட்டிக் கூறியகும்பகருணன், அடுத்தபடியாக, இராமபிரானுடைய உண்மைச் சொரூபத்தை அறிந்து கொண்டு பேசுகின்றான்.

'பெருமானே! நீ முழுமுதற்கடவுள்: (ஆதியாய்) இப்போது அரசர் வேடம் கொண்ட அந்தணராக வந்துள்ளீர்: (வேதியா) உம்முடைய உண்மைச் சொரூபத்துக்கும், இப்போது கொண்ட கோலத்துக்கும் ஏற்றகடமைதான் காத்தல் என்பது நீர் உமது காத்தல் கடமையை ஏற்றுக்கொண்டால், அதனால், எனது தம்பி ஏற்றம் (உயர்வு) பெற்றுக் கொள்வான்.'

'தம்பிக்கு வரும் ஏற்றம், மற்றொன்றாலும் உண்டு. அது, அவன் வாழ்க்கையில் கடைப்பிடித்த நன்னெறி. அது நீதிநெறியாகும். அந்த நீதியால் வந்த ஒரு பெரும் அறவழியை அன்றி வேறு ஒன்றும் அறியான். அவன் பிடித்தது தருமநெறி. அந்தப் பெருநெறியைப் பிடிப்பதற்காக ஒரு சிறுநெறியை உதறித் தள்ளிவிட்டான். அந்தச் சிறுநெறி என்பது அழிந்து போகும் உடல் உறவைச் சாதியைப்பற்றியது;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'நான், அழியக்கூடிய சாதிநெறியாகிய சிறுமையைப் பற்றினேன். இந்நெறி புன்மையானது என்று தெரிந்தும் நான் இதை விடவில்லை. தம்பியோ, இந்தச் சாதிநெறியாகிய புன்னெறியை ஒதுக்கித் தள்ளிவிட்டு நீதிநெறியாகிய நன்னெறியைத் தழுவிக்கொண்டான் தம்பி.'

நீதி நெறியின் பெருமையாருக்குத் தெளிவாகப் புலப்படும்? எப்பொழுது புலப்படும்? சாதிநெறியையே உயர்ந்ததாகக்கருதி, பின்பற்றியபிறகு, அதன் இழிவைக் கண்டவர்க்குப் புலப்படும். சாதி நெறியில் அழிவைத்தவிர வேறு ஒன்றும் இல்லை என்று உணரும்போது புலப்படும் நீதிநெறியின் சிறப்பு.

அப்படி உணர்ந்து பேசுகின்றான் இப்போது கும்பகருணன். 'நீதியால் வந்தது ஒரு நெடுந்தரும நெறி' என்ற தொடரும், 'சாதியால் வந்த சிறுநெறி' என்ற தொடரும், இதனைக் கற்போரது உள்ளத்தை என்றும் தொடர்ந்து வரவேண்டியவைகளாகும்.

இந்த முழுக்கவிதையும் மனதில் இடம்பெறத்தக்க வகையில் கவிச்சக்கரவர்த்தி அமைத்துள்ளார் இக்கவிதையை. கம்பர் தன் உள்ளத்தில் இந்தக் கவிதை உருவாகிக் கொண்டிருக்கும்போது, பக்கத்தில் திருமங்கை ஆழ்வார் பாசுரம் ஒன்று மோதிக் கொண்டேயிருந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


கும்பகருணனது இப்போதைய நிலையைப் பற்றி, இலக்கியத் திறனாய்வுச் செல்வராய வ.வே.சு அய்யர் கூறியிருப்பது அனைவருடைய சிந்தனையிலும் இருத்துவதற்குரிய தொன்றாகும். 'கும்பகருணன் இறக்கும் போது ஆன்மாவின் சத்துவ ஒளி ஏற்பட்டே இறந்தான்' - 'ஆம், மானவெள்ளம் மனத்தைவிட்டு வடிந்தபிறகு, அது மறைத்திருந்த சத்துவம் வெளிப்படுதல் இயற்கைதானே!' என்பது அய்யர் அவர்களின் கும்பகருண இறுதி நேர மதிப்பீடு.

**விண்ணப்பம்: தம்பியைப் பற்றியது:**

"புக்குஅடைந்த புறவுஒன்றின் பொருட்டாகத்
துலைபுக்க
மைக்கடங்கார் மதயானை வாள்வேந்தன்
வழிவந்தீர்!
இக்கடன்கள் உடையீர்! நீர் எம்வினை தீர்த்து
உம்முடைய
கைக்கு அடைந்தான் உயிர்காக்கக் கடவீர்,
என்கடைக்கூட்டால்"

கும்பகருணன் தனது கடைசி விருப்பத்தை (கடைக்கூட்டு) முதலில் வெளியிடுகின்றான். தனது அன்புத் தம்பியைக்காக்க வேண்டியதை இராமபிரானது கடமையாகத் தெரிவிக்கின்றான் இவன். 'உம்முடைய கைக்கு அடைந்தான் உயிர் காக்கக்கடவீர்' என்பது வேண்டுகோள். 'உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்று என் தம்பி சொல்லிக் கொள்ள வேண்டியதை, நான் சொல்லிக் கொள்கின்றேன்' என்று தெரிவிக்கின்றான் கும்பகருணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'என் தம்பி வீடணன் எமது அரக்கர் குலத்துக்குரிய தீவினைகளை எல்லாம் அறவே ஒதுக்கி விட்டு, உம்மை வந்து சேர்ந்துள்ளான். அதனால், எங்களைப் போன்று அவன் தாக்கப் படுதற்குரியவனல்ல! காக்கப்படுதற்குரியவன்' என்ற கருத்தை 'எம்வினை தீர்த்து' என்ற தொடரின் மூலம் குறிப்பிடுகின்றான் கும்பகருணன். தம்மைச் சார்ந்தவரைக் காப்பது கடமை என்பதை, மரபின் வரலாற்றைச் சுட்டிக்காட்டி வற்புறுத்துகின்றான் இவன்.

'சாதாரணமான பகுத்தறிவற்ற பறவையாகிய புறா, தன்னிடம் வந்ததற்காக, அதைக்காப்பாற்ற, தனது உயிரையும் கொடுக்கத் துணிந்தான் சிபிச்சக்கரவர்த்தி. புறாவின் எடைக்கு எடை தருவதற்கு தராசுத்தட்டில் (துலை-தராசு) ஏறினான் அந்தப் பேரரசன். அப்படிப்பட்ட நீர், காத்தலைக் கடமையாகக் கொண்டவரல்லவா? அதனால் எமது தம்பியின் உயிர் காக்கக்கடவீர்' என்று வேண்டிக் கொண்டான் கும்பகருணன். (புறவு-புறா)

**தம்பியின் நெறி :**

தம்பி வீடணன், இராமபிரானிடம் அடைக்கலமாக வந்தான் என்பதற்காக மட்டும் காக்கப் படுதற்குரியவனல்ல! அவன் பின்பற்றிய நன்னெறிக்காகவும், அவன் காக்கப்படுதற்கு உரியவனாவான். அவன் பின்பற்றியது நீதிநெறி. அதற்கு ஆபத்துவரும். அதனால், அவனை எப்படிக் காக்கவேண்டும். ஆபத்துஎன்ன? என்பதை விரிவாகக் கூறுகின்றான் கும்பகருணன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



'நீதியால் வந்ததுஒரு நெடுந்தரும நெறிஅல்லால்,
சாதியால் வந்தசிறு நெறிஅறியான் என்தம்பி;
ஆதியாய்! உனைஅடைந்தான்: அரசர்உருக்
கொண்டு அமைந்த
வேதியா! இன்னம்உனக்கு அடைக்கலம் யான்
வேண்டினேன்.'

தனது தம்பியைக் காப்பது, இராமபிரானது கடமை என்பதை மரபுவழியை எடுத்துக்காட்டிக் கூறிய கும்பகருணன், அடுத்தபடியாக, இராமபிரானுடைய உண்மைச் சொரூபத்தை அறிந்து கொண்டு பேசுகின்றான்.

'பெருமானே! நீ முழுமுதற்கடவுள்: (ஆதியாய்) இப்போது அரசர் வேடம் கொண்ட அந்தணராக வந்துள்ளீர்: (வேதியா) உம்முடைய உண்மைச் சொரூபத்துக்கும், இப்போது கொண்ட கோலத்துக்கும் ஏற்றகடமைதான் காத்தல் என்பது நீர் உமது காத்தல் கடமையை ஏற்றுக்கொண்டால், அதனால், எனது தம்பி ஏற்றம் (உயர்வு) பெற்றுக் கொள்வான்.'

'தம்பிக்கு வரும் ஏற்றம், மற்றொன்றாலும் உண்டு. அது, அவன் வாழ்க்கையில் கடைப்பிடித்த நன்னெறி. அது நீதிநெறியாகும். அந்த நீதியால் வந்த ஒரு பெரும் அறவழியை அன்றி வேறு ஒன்றும் அறியான். அவன் பிடித்தது தருமநெறி. அந்தப் பெருநெறியைப் பிடிப்பதற்காக ஒரு சிறுநெறியை உதறித் தள்ளிவிட்டான். அந்தச் சிறுநெறி என்பது அழுந்தி [illegible] சாதியைப்பற்றியது;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


'நான், அழியக்கூடிய சாதிநெறியாகிய சிறுமையைப் பற்றினேன். இந்நெறி புன்மையானது என்று தெரிந்தும் நான் இதைவிடவில்லை. தம்பியோ. இந்தச் சாதிநெறியாகிய புன்னெறியை ஒதுக்கித் தள்ளிவிட்டு நீதிநெறியாகிய நன்னெறியைத் தழுவிக்கொண்டான் தம்பி.'

நீதி நெறியின் பெருமையாருக்குத் தெளிவாகப் புலப்படும்? எப்பொழுது புலப்படும்? சாதிநெறியையே உயர்ந்ததாகக்கருதி, பின்பற்றியபிறகு, அதன் இழிவைக் கண்டவர்க்குப் புலப்படும். சாதி நெறியில் அழிவைத்தவிர வேறு ஒன்றும் இல்லை என்று உணரும்போது புலப்படும் நீதிநெறியின் சிறப்பு.

அப்படி உணர்ந்து பேசுகின்றான் இப்போது கும்பகருணன். 'நீதியால் வந்தது ஒரு நெடுந்தரும நெறி' என்ற தொடரும், 'சாதியால் வந்த சிறுநெறி' என்ற தொடரும், இதனைக் கற்போரது உள்ளத்தை என்றும் தொடர்ந்து வரவேண்டியவைகளாகும்.

இந்த முழுக்கவிதையும் மனதில் இடம்பெறத்தக்க வகையில் கவிச்சக்கரவர்த்தி அமைத்துள்ளார் இக்கவிதையை. கம்பர் தன் உள்ளத்தில் இந்தக் கவிதை உருவாகிக் கொண்டிருக்கும்போது, பக்கத்தில் திருமங்கை ஆழ்வார் பாசுரம் ஒன்று மோதிக் கொண்டேயிருந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# 10

# நிறைவு

**செய்தி சேர்ந்தது :**

தம்பி இறந்த செய்தி அண்ணனுக்குச் சென்று சேரவேண்டுமே! இந்தத் துன்பச் செய்தியை அண்ணன் இராவணன் வாங்கிக் கொள்ளும் நிகழ்ச்சியை, கவிச்சக்கரவர்த்தி கதைக்களத்துக்குக் கொண்டு வந்து இணைக்கும் உத்தி, மிக அற்புதமானதொன்றாகும்.

கும்பகருணனைப் போர்க்களத்துக்கு அனுப்பிய பிறகு, இராவணன், சகோதரனது ஆலோசனையின் படி ஒரு வேண்டாத செயலில் ஈடுபட்டான். அங்கு போர்க்களத்தில் தம்பி கும்பகருணன் அண்ணனுக்காக உயிர் கொடுத்துப்போர் செய்து கொண்டிருக்கின்றான். இங்கு அரண்மனையில் இராவணன் தனது காமப்பசியைத் தணித்துக் கொள்வதற்கு ஒரு நாடக வேலையில் ஈடுபட்டுள்ளான்.

'மாயாசனகன் 'நாடகப்பாத்திரம். இவனைக் காட்டி சீதையை வசப்படுத்திவிடலாம் என எண்ணினான் அரக்கன், முடியவில்லை. முடிவதற்கு முன்பு வேடம் கலைந்துவிட்டது. வந்தவன் உண்மையான சனகன் அல்ல! வேஷதாரி என்று உணர்ந்து கொண்டாள் சீதை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


காரியம் கை கூடாததால், கோபம் கொண்டு சீதையை வெட்டி விடலாம் என்ற எண்ணத்தோடு இராவணன் கையில் வாளை வாங்கினான்; ஓங்கினான். இந்தச் சமயத்தில்தான், தூதுவர்கள் கொண்டு வந்த கும்பகருண மரணச் செய்தியை வாங்கினான்.

'நிரபராதியைக் கொல்ல நினைத்தால், அவனைச் சேர்ந்தவர்கொலை உண்ட செய்தி உடனே வரும்' என்ற இயற்கை நியதி எங்கும் எப்போதும் தப்பாமல் நடக்கக் கூடியதாகும்.

அப்படித்தான் இங்கும் நடந்தது. கதையைச் சுவையோட்டம் குறையாமல் நடத்திச் செல்லும் உத்தியாக 'மாயாசனக நாடகம்' என்ற ஒரு புதுமைப்படைப்பை அமைத்துக் கொண்டார் கவிச்சக்கரவர்த்தி.

தம்பி கும்பகருணன் இறந்த செய்தியைக் கேட்டு இராவணன் அழுகின்றான். அந்த அழுகைக் குரலைத் தாங்கிவரும் கவிதைகள் பத்து. அவனுக்குத் தலைகளும் பத்து தானே! இந்தக் கவிதைகள் தம்பியை, இராவணன் எதற்காக வளர்த்தான், அதனால் இவன் பெற்ற நன்மை என்ன என்பதைத் தெரிவிக்கின்றன.

'செங்தேன் பருகித் திசைதிசையும் நீ வாழ, உய்ந்தேன்' என்று இறுதியாகக் கூறி அழுகின்றான் இராவணன். கும்பகருணன் வாழ்ந்ததால்தான், தான் உய்ய முடிந்தது (பிழைக்க முடிந்தது) என்று உணர்கின்றான் இராவணன். இனி, பிழைப்பு ஏது இவனுக்கு? தனக்காகவே வாழ்பவனுக்குப் பிழைப்பு கிடைக்குமா? கிடைக்காது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இராவணன் தன் சுகத்தையே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்தான். வீடணன், உலக நன்மையையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தான் கும்பகருணன் அண்ணனுக்காகவே வாழ்ந்தான் வீழ்ந்தான். அன்பை தம்பிக்கே ஈந்தான். மூவர் நிலை இது. இம்மூவர் நிலையைக் காலத்தோடு ஒட்டியும் காணலாம்.

## மூவகை நிலை

ஒரு நாள், என்பது பகல்பாதி: இரவுபாதி. பகல், வெளிச்சமானது: இரவு, இருட்டானது. வெளிச்சத்தில், எதையும் பார்க்கலாம் இருட்டில்: எதையும் பார்க்க முடியாது. மாலை நேரம் பகலும் அல்ல! இரவும் அல்ல! வெளிச்சமும் இல்லை: இருட்டும் இல்லை. இரண்டும் கலந்த நிலை. சென்ற பகல் நேரத்தையும் வர இருக்கும் இரவு நேரத்தையும் அறிமுகம் செய்து வைக்கும் நேரம் மாலை நேரம். இந்த நேரம், பொருள்களைக் காட்டும். ஆனால் முழுமையாகக் காட்டாது.

இராவணன் இரவு: வீடணன் பகல்: கும்பகருணன் இரண்டையும் ஒட்டிக் கொண்டிருக்கும் மாலைப் பொழுது. இராவணன் செய்ய வேண்டியதைச் செய்யாமல் இருக்கின்றான். வீடணன் செய்ய வேண்டியதை அறிந்து திருத்தமாகச் செய்து கொண்டிருக்கின்றான். கும்பகருணன் செய்ய வேண்டியது இதுதான் என்று அறிந்தும் வேண்டாததைச் செய்தவன். இராவணன் தாமசகுணத்தினன். அதனால் கருமை: இரவு நேரத்தினன். வீடணன் சத்துவகுணத்தினன்: அதனால் வெண்மை: பகல் நேரத்தினன். கும்ப கருணன் இரசோ குணத்தினன்: அதனால் செம்மை: மாலை நேரத்தினன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


மூத்தவனுக்கு எந்த நெறியும் இல்லை. மற்றைய இரு சகோதரர்களுக்கும் அவரவர் மன நிலைகளுக்கு ஏற்ற நெறிகள் உண்டு.

**இருவர் நிலை :**

கடையில் நின்ற சகோதரன் வீடணன், நீதி நெறியினன்: அறஉணர்வினன்: குணங்களால் உயர்ந்தவன். அதனால் மற்றைய இருவர்களைக் காட்டிலும் மேல் நிலையில் நிற்கின்றான்.

சகோதரவரிசையில் இடையில் வந்த கும்ப கருணன், செயலாலும் இடையனாகவே (நடுநிலையாளன்) உள்ளான். சாதிநெறியினன்: மானஉணர்வினன். இரண்டும் பயனற்றது என்று தெரிந்தும் அதிலேயே நின்றான்.

**கவிச்சக்கரவர்த்தி சொல்வது.**

காப்பியம் படைத்த எந்தக் கவிஞரும், தமது படைப்பின் நோக்கத்தை வெளியிடாமல் இருக்க மாட்டார்கள். காப்பியச் சோலையுள் உலா வருகின்ற ஒவ்வொரு பாத்திரத்தின் மூலமும் மக்களுக்கு வேண்டிய நீதியைக் குறிப்பாகக் காட்டுவார்கள் கவிஞர்கள். மக்களுக்குத்தாம் சொல்ல நினைத்திருக்கும் நீதிகளை இந்த இரண்டு பாத்திரங்களின் மூலம் வெளியிட்டுள்ளார் கம்பர்.

கும்பகருணன் மூலம், 'அழிந்து போகக்கூடிய உடல்பிறப்பால் ஏற்படும் சாதியினரை வாழ்விப்பதற்குப் பின்பற்றப்படும் நெறி தாழ்ந்தது: இழிவானது, இந்த நெறியை வாழ்க்கையில் பின் பற்றியவரை, ஒரு சாது குலத்துக்கு இழுக்குவிடும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri


மேற்கொண்டு வளரவிடாது. அதனால் சாதிநெறி சிறுநெறிதான்: ஆகவே வாழ்க்கையில் தானும் உயர்ந்து உலகையும் உய்விக்க விரும்பினால் சாதியால் வந்த சிறுநெறியை ஒதுக்கியே ஆக வேண்டும்; என்ற அறம் உணர்த்தப்படுகிறது.

வீடணன் மூலம். நீதிநெறி மேன்மையானது: அழிவில்லாதது: உயர்ந்தது, இதனைப் பின்பற்றி னால் தானும் உயரலாம்: உலகையும் உய்விக்கலாம். உலக நலம் வேண்டுவோர் பின்பற்ற வேண்டியது நீதிநெறிதான்; இந்த நல்லறம் உணர்த்தப் படுகின்றது.

'கும்பகருணனைப் போன்று நன்மையை அறிந்தும் தீமையின் பக்கம் சார்ந்து நின்று வீழ வேண்டாம்: வீடணனைப் போன்று நீதி நெறியைப் பின்பற்றி வாழவேண்டும்; என்பது கவிச்சக்கர வர்த்தி கூறும் அறவுரையாகக் கொள்ளலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# கவிதைத் தொடர்கள்

## வீடணன்

1 வேந்தர் வேதியர் மேல்உளோர் கீழ்உளோர் விரும்பப் போந்த புண்ணியன் 4969

2 தருமம் அன்னான் 4970

3 குற்றம் இல்லதோர் குணத்தினன் 4977

4 வீடணநீதியான் 5914

5 நனி தீவினையை எல்லாம் வென்றவரின் நன்றுணரும் வீடணன் 6435

6 அறிஞரின் மிக்கான் 6169

7 அன்பின் ஒழியான் 61803

8 மேதாவிட்கு எல்லாம் மேலான மேன்மையான் 6364

9 உத்தமன் 6376

10 மறு இல் சிந்தையான் 6380

11 தகவுறு சிந்தையன் 6406

12 தரும நீதியான் 6406

13 வாய்மையான் 6406

14 வீடணப் பெயர் நளிர் மலர்க்கையினன் 6413

15 தூயவன் 6416

16 மேல் அரசு எய்துவான் 6453

17 கோது இலாதவன் 6481

18 மெய்யினுக்கு உறையுளான ஒருவன் 6482

19 திரிகின்ற உள்ளத்தான் 6483

20 கங்குலின் நிறத்தினான் 6486

21 தாழ் சடைக்கடவுள் உண்ட நஞ்செனச் சிறந்தோன் 6487

22 அஞ்சன மேனியான் 6505

23 தஞ்ச நல்துணைவன் 6505

24 தவறு இலாப்புகழான் 6505

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

25 விளைவினை அறியும் மேன்மை வீடணன் 6506
26 அந்தம் இல் குணத்தினான் 6513
27 செவ்வழி அறிஞன் 6529
28 வெவ்வழிவிலங்கி நல்நெறியை மேவினான் 6529
29 நீர்கெழு தன்மையான் (யாய்) 6530
30 முழுதுணர் புலவன் 6531
31 கேள்கொள் மேலையான் 6584
32 இலங்கையர் நாயகன் 6591
33 அரக்கர் கோமகன் 6674
34 பண்டுதான் பலநாள் செய்த நல்தவப்பயன்
தந்து உய்ப்ப முந்துறப் போந்த நம்பி 6768
35 நீரினை வேறு செய்யும் அன்னத்தின் நீரன் 6769
36 ஓர் உறுமனத்தன் 6769
37 இருவரை ஒருங்கு காணும் யோகி 6770
38 கல்விக்கண் மிக்கோன் 6774
39 நம்பரத்து அடங்கும் மெய்யன் 6826
40 நாவினில் பொய்யிலா தான் 6826
41 உம்பர் மந்திரிக்கெல்லாம் ஒருமுழம் உயர்ந்த
ஞானத் தம்பி 6826
42 பைம் பூண் வீடணன் 6937
43 வீடணன் ஒருவன் 7142
44 கவிஞரின் அறிவு மிக்கான் 7402
45 சாதியின் புன்மை தவிர்ந்தவன் 7406
46 தார்க்கோல மேனிமைந்தன் 7426
47 சேகு அறத்தெளிந்தோன் 7438
48 வெந்திறல் விறலினான் 7438
49 குணங்களால் உயர்ந்தான் 7437
50 பிள்ளைமை துறந்தான் 7440
51 நீதியோன் 7594
52 நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறி அல்லால்
சாதியால் வந்த சிறு நெறி அறியான் 7626

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# கவிதைத் தொடர்கள்

## கும்பகருணன்

1 மலையின் வைகும் கயக்கம் இல் துயர்சிக் கும்பகருணன் 4955
2 உன்ன அரும் தீவினை உருக்கொண்டென்னவே அரக்கர்கோன் 4957
3 குணம் இலி 4964
4 கொல்ஈரும் படைக் கும்பகருணன் 2844
5 கும்பகருணப் பெயரினான் 6117
6 தேவரைக்கு மைத்தான் 6563
7 இளைய கும்பகருணன் 7311
8 உறங்குகின்ற கும்பகருணன் 7316
9 இடைபேரா இளையான் 7326
10 வன்தொழிலால் துயில்கின்ற மன்னவன் 7327
11 இலங்கையர் வேந்தன் பின்னோன் 7329
12 குன்று அன கொள்கையான் 7340
13 வன்துணைப் பெரும் தம்பி 7343
14 மின்னின் அன்ன புருவமும் விண்ணினைத் துன்னுதோளும் இடம் துடியாநின்றான் 7348
15 தேரில் பொங்கிய ஏந்தல் 3780
16 கார் இயல் காலன் அன்னகழல் கும்பகருணன் 7385
17 கூரிய குலத்தான் 7385
18 ஊழிநாளும் உறங்குவான் 7388
19 ஊன் உயர்ந்த உரத்தினான் 7381
20 சிந்தையால் கனிக்கின்றான் 7400
21 மழையின் நீர் வழங்கு கண்ணான் 7401
22 உத்தம! நீதி அறத்தொடும் தழுவிநின்றாய் (வீடணன் கூற்று) 7411-12

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

23 தன் தறுகனூடு வெம்புணீர் சொரிய நின்றான் 7425

24 குலத்துமானம் தீர்ந்திலன் 7441

25 உதிரவேல் நோக்கியுள்ளான் 7453

26 அல்லினால் செய்த நிறத்தவன் 7507

27 உருக்கிய செம்புஅன உதிரக் கண்ணினான் 7536

28 மழையின் மேனியான் 7551

29 உதிரப் போர்வையான் 7567

30 தீயும் நெஞ்சினான் 7569

31 கந்தரப்பொன் கிரி ஆண்மைக் களிறு அனையான் 7623

32 குன்று அன நீண்ட கும்பகருணன் 7704

33 வானவர்தம் தாமரையின்காடு உழக்கும் தும்பி 7709

34 நான் முகத்தோன் சேய் மதலை தோன்றல் 7709

35 இந்திரனை நாமப்பொறி துடைத்த எம்பி 7709

36 மின் இலையவே லோன் 7710

37 மல் ஒன்று தோளான் 7712

38 மின் அஞ்சும் வேலோன் 7711

39 மதக்களிறு 7717

40 நெடு விண்ணிடைத் தொட உயர்ந்தவன் 7347

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# உதவிய நூல்கள்

1 கம்பராமாயணம் - சென்னைக் கம்பன் கழகம்

2 கம்பராமாயணம் - உரை. வை. மு. கோ.

3 கம்பராமாயணம் - உரை. அ. பல்கலைக் கழகம்

4 நெஞ்சில் நெருஞ்சி - புலவர். அ. அறிவொளி MA.

5 கம்பன் புதிய பார்வை - பேராசிரியர்.
அ. ச. ஞானசம்பந்தன்

6 காவ்யராமாயணம் - கே. எஸ். ஸ்ரீனிவாஸன்

7 ராமாயணப் பேருரைகள் - மகாகனம் ஸ்ரீநிவாச
சாஸ்திரியார்

8 திருக்குறள் - பரிமேலழகர் உரை.

9 புறநானூறு

10 திவ்யப் பிரபந்தம்.

11 அடைக்கலம் - மு. மு. இஸ்மாயீல்.

12 சீவகசிந்தாமணி.

13 தொல்காப்பியம்

"Forwarded free of cost, and
with the compliments of the
Department of Education,
Govt. of India, New Delhi."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# ஆசிரியரின் பிற நூல்கள் :

1 இராமாவதாரம்
2 ஓவியப் புரு
3 படிவங்கள் எப்படியோ?
4 வள்ளல் நாயகி
5 வைணவக் களஞ்சியம்
6 நெய்க்குடம்
7 என் சிந்தனைக் குறிப்பின் ஒப்புமை மலர்கள்
8 விவேகானந்தரும் தேசியமும்
9 பாரதி கண்ட பாரதத் தாய்
10 ஆழ்வார்களின் அருளிச் செயல்
11 தினசரி தியானம்
12 வாழித் திருநாமம் விளக்கம்
13 கம்பனும் சடையனும்
14 நாராயண கவசம்
15 தேசிய காப்பியம்
16 திருமணப் பாமாலை
17 ஆர்வவிளக்கு அம்மணியம்மாள்
18 தெய்வ மாக்கவிகள்
19 கீதாசாரத் தாலாட்டு
20 பிரபந்தசாரம் விளக்கம்
21 தேசிகர் அடிப்பொடி
22 எங்கள் குலவிளக்கு
23 பெருந்தெய்வம்
24 தேசிகர் நூற்றந்தாதி
25 ஞானநாயகன்
26 பெரும் புகழான்
27 வைணவ வாழ்வு

8281

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

GURUKUL KANGRI LIBRARY

Accession
Class
Cat on
Tag etc.
Checked
Any Other

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

# சாதிநெறியும் நீதிநெறியும்

மு. இராமசாமி

நெறி, நன்னெறி, தீது இல் நன்னெறி-விளக்கம். சாதிநெறி, நீதிநெறி: கீழ்மை மேன்மை. இந்த இருநெறியினர் யார்? அவர்களது இயல்புகள் எவை? இந்த வினாக்களின் விடைகள்.

இந்த நெறியினரின் சந்திப்பு, அதன் விளைவு, அது மக்களுக்கு உணர்த்தும் வாழ்க்கைத் தத்துவம். விளக்கம்.

புலத்தியன் மரபு, அரக்கர் குலம் இதன் வழி வந்த குடும்பத்தினர் மூவர். இவர்களது மூவகையான மனப்போக்கு.

சாதிநெறிக் கும்பகருணனும் நீதிநெறி வீடணனும் ஒரு குடும்பச் சகோதரர்கள் ஆனால் வேறுபட்ட இயல்பினர். ஏன்? விடை விளக்கம்.

அற இயல்புக்கு முன்னால், குலஇயல்பு, தன்னை நியாயப்படுத்திக் காட்டுகின்றது! எப்படி? விளக்கம்.

கும்பகருணன், வீடணன் பற்றிய கவிதைத் தொடர்கள் தொகுப்பு

---

விலை ரூ. 30-00

திருவரங்கம் பதிப்பகம்

சன்-மூன் பிரிண்டர்ஸ்,
17, குண்டுப்பிள்ளையார் கோவில் தெரு, சேலம்-3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar